Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 12 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 நவம்பர் 2021



மாவீரர் நாள் என்றால் என்ன?

தமிழீழ தேசிய தலைவர் மேதகு.வே.பிரபாகரன்

மாவீரர் நாள்
ஏன் கொண்டாடப்பட்டது ?
எதற்காக முன்னெடுக்கப்பட்டது ?

மாவீரர் நாளானது 1989ஆம் வருடத் திலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்த்தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் முதலாவது மாவீரர் நாளன்று நிகழ்த்திய உரை கீழே ...

எனது அன் பிற் கும் மதிப் பிற் கு முரிய தமிழீழ மக்களே ..

எமது போராட்டத்தில் இன்று ஒரு முக் கியமான நாள். இதுவரை காலமும் எமது புனித லட்சியமான தமிழீழ இலட்சியத் துக்காக உயிர்த்தியாகம் செய்த போராளி களை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள் ளோம். முதல் முறையாக இன்று இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள் ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட் டபடை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படைவீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களைக்கொண் டாடுவது வழக்கம் உங்களுக்குத் தெரி யும்... இதுவரை காலமும் எமது இயக்கத் தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம்.

ஆனால், இந்த வருடத்தில் இருந்து வீரச் சாவு அடைந்த எல்லோரையும் மொத் தமாக வருடத்தில் ஒருநாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கு இன் னுமொரு காரணம் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங் கரின் நினைவு தினமாக இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம். அத்தோடு வழமையாக எங் கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்தபதவிகள், வசதியானவர்கள் இப் படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப்பார்க் கும் பழக்கம் உண்டு. அதுபோல் , எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர் களை மட்டும் பிரித்து அவர்களது செய்கை களை மட்டும் பெரிதாகப்பார்க்கக் கூடாது என்பதற்காகவும், எல்லாப்போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட நாம் முடி வெடுத் துள்ளோம். அதாவது எமது போராளி களை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத் தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினை வு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக இன்று கொண்டாடுகி றோம்.

காலப்போக்கில் குறிப்பிட்ட சில ஆட் களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த மாவீரர்நாள் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களை யும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத இனம் ஓர் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்றநாடுகளுடன் ஒப் பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள். அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால், இன்று இந்த மாவீரர் நாளில் , ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட் டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கவுரவிக்கக் ஆரம் பித்துள்ளோம்.

இதுவரை காலமும் எங்களுடைய இனத் தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள் ளோம். எனவே எமது இனம் நிச்சயமாக அழியாது. இன்று எமது இனம் உலகி லேயே தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் அதற்கு காரணம் எமது 1307 போராளி களின் உயிர்த்தியாகம் தான். அவர்களு டைய வீரமான, தமது உயிரையே மதி யாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொணடாட ஆரம்பிக்க வேண் டும் என்றார்.

♦♦♦

மாவீரர் நாள் என்பது தாய் நாட்டின் விடதலைக்காகப் போராடி தமது இன் உயிரை ஈந்த வீரர்களை நினைவு கூர்ந்து வீர வணக்கம் செலுத்தும் ஒரு நாள் ஆகும்.

♦♦♦

**"மாவீரர் நாள்"
என்பதை நினைவெழுச்சி நாள்
என்று இருட்டடிப்பு செய்வதன் காரணம் யாது?
மாவீரருக்குரிய நாளை "மாவீரர் நாள் என்பது சரியானதும், தெளிவானதும். தொடர்ச்சியாக மாவீரர் நாளை நினைவெழுச்சி நாள் என்று கனடாவில் அடம்பிடிப்பது வரலாற்று தவறு. உரியவர்கள் திருத்துவது நல்ல விடையம், அடுத்த தலைமுறைக்கு தெளிவான வரலாற்றையே விட்டு செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்.**



தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்



MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404



For All Your Mortgage Needs
- Purchase
- Refinance
- First | Second Mortgage
- Equity Line of Credit

Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronto, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE



SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS



25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.



We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.

Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM

CAR & VAN
உங்கள் வீடு
தேடி வந்து
செய்து கொடுக்கப்படும்


விருகள், கொண்டோக்கள், வாடகை
வசியயிடங்கள், விட்டின் படிகள், தரை
விரிப்புகள், சோபாகள், மெத்தைகள்
வாகன உட்புறம்...



இந்த விளம்பரத்தாலோ எந்த
வேலைகளும் நிரந்தரமாகாது

416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.



MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங்க & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in
Jewellery Making & Tailoring
Classes Available
ONLINE CLASSES AVAILABLE



உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA
TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின்
மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு
$100 மட்டும்



சாரா தையல் பயிற்சி நிலைய
ஆசிரியர் திருமதி
சரஸ்வதி பாலராசா

Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD



PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
- All General Home Repairs
- Basement Renovation
- Carpet Installation
- Drywall Installation
- Hardwood Flooring Installation
- Washroom Remodeling
- Kitchen Cabinets
- Kitchen Cabinets Installation
- Painting
- Plumbing
- Tiling

100% SATISFACTION GUARANTEED
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We've definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச
ஆலோசனைகளும் வழங்கப்படும்



Nesan
Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)



RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது
அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
FOR SALE
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com



7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING



Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236



Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS



Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

முக்கிய அறிவித்தல்

உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள்
ஊடக மக்களிடம் சென்று அடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத் தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான். அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுகாலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்





சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி (TP)

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

முகநூல் (Facebook)

Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய் யப் படுகிறது. எந் தவொரு குறைபாடுகளுக் கும் பிழைகளுக் கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



வரலாறாய் வாழும் தமிழ்ச்செல்வன்

ச.பொட்டு

தமிழ்ச்செல்வனைப் பற்றியும் நினைவுக்குறிப் பொன்றை எழுத வைப்பதாக காலம் கட்டளை யிட்டு விட்டது. காலத்தின் ஓட்டத்தில் மாற்றங் கள் வரும். சில மாற்றங்களை நாம் கற்பனை செய்தும் பார்ப்பதில்லை. மாற்றம் நிகழ்ந்து விட்ட போதிலும் அந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் மனம் கிடந்து மறுகும். அப்படிப்பட்ட மாற்றம்தான் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் மறைவு.

சபையில் புன்சிரிப்பும், எம்மிடையே கல கலத்த அதிரடிச் சிரிப்புமாக உலாவந்த தமிழ்ச் செல்வன், பிரிகேடியர் தமிழ்ச்செல்வனாக வணக்கத்திற்குரியவனாகிவிட்டான்.

தமிழ்ச்செல்வனைப் பற்றி எதிலிருந்து தொடங் குவது?

அவனது வீரச்சாவிற்கு முந்திய பின்மாலைப் பொழுது..., அநுராதபுர எல்லாளன் நடவடிக் கையாளர்களுக்கான வீரப் பதக்கம் வழங்கும் நிகழ்வு..., தலைவர் உரையாற்றுகிறார்!

அவரது உரையில் தமிழன் சார்ந்த பெரு மிதம், தமிழினம் சுதந்திரம் பெறத் தகுதியான இனமாக, வீரமுள்ள இனமாக வளர்ந்து விட்டது என்ற நிம்மதி. எல்லோரும் மகிழ்ச் சியிலும், பெருமிதத்திலும் கலந்திருந்தோம்.

உணவுக்காகக் காத்திருந்த வேளையில் நீரிழிவு நோயால பாதிக்கப்பட்டிருந்த தமிழ்ச் செல்வன் உணவுண்ண தாமதிப்பது நல்ல தல்ல என தலைவர் சங்கடப்பட்டு அவசரப் படுகிறார்.

தனக்கென தனியாக அவசரமாகத் தருவிக்கப் பட்ட உணவைப் புறக்கணித்து, "எமது வான் புலிகளைச் சிட்டுக்குருவிக்கு ஒப்பிடுவதா? அல்லது வண்ணத்துப் பூச்சிகளுக்கு ஒப்பிடு வதா?" எனத் தலைவரின் உரையை மீள எடுத்துச் சொல்லி பெருமிதமும் பாராட்டும் இழையோட வான்புலிகளுடன் அன்பும், பம்பலுமாக தமிழ்ச்செல்வன் கேலி பேசுகிறார்.

கதைத்து - காத்திருந்து - உணவுண்ட பின் னரும் கதைத்திருந்தோம். நிகழ்வின் மகிழ் விலும், உணவின் சுவையிலும் இருந்த உரையாடல் தலைவரைப் பற்றியும், அவரது பாதுகாப்பு, ஆரோக்கியவாழ்வு என்பன பற்றிய தாகவும் அமைந்து விடைபெற்றபோது நாம் அறிந்திருக்கவில்லை அதுதான் எங்களது கடைசிச் சந்திப்பு என்று!

◆◆◆

எல்லாவற்றிலும் மாற்றம் வரும். ஆனால் சிலது மாறாது. காலமும், கோலமும் நவீன மானாலும், அறிவும் ஆற்றலும் மேம்பட்டு வளர்ந்தாலும், உடையிலும் பேச்சிலும் மெருகு பெற்றாலும், உள்ளத்தாலும் இன்னும் பலவற்றினாலும் மாறாமலிருந்தான் தமிழ்ச்செல்வன்.

தலைவருக்கு இப்போது தமிழ்ச்செல்வன் இளவயது மெய்க்காப்பாளனோ அல்லது இளம் போர்த் தளபதியாகவோ அல்ல. அவன் அரசியல் தலைவன். மக்களை வழிநடத்தும் மக்களின் தலைவன்! ஆனால் இவனோ இப்பொழுதும் அண்ணையின் குழந்தை யாகவே தன்னை நினைப்பான். தன் திரு மணத்தின்போது அண்ணை வரவேண்டும். ஆட்கள் வந்தால் அண்ணை வரமாட்டார். தமிழ்ச்செல்வனது திருமணச்செய்தியை நாம் கேள்விப்பட, அதற்கிடையில் தமிழ்ச்செல்வ னது கடிதம் திருமணஅழைப்பு என்றும் இல் லாது, செய்தியென்றும் இல்லாது வாழ்த்தும், ஆசியும் வேண்டி, சேதிசொல்லும் கடிதம்! மடல்கிடைத்து நாம் அங்குபோகையில் பாலா அண்ணை வீட்டில் தலைவரின் முன்நிலை யில் திருமணம்முடிந்து தம்வீட்டில் இருக் கிறார்கள் மாப்பிள்ளையும், பொம்பிளையும்.

ஒருநாள் கடற்கரையில் கடலலை கால்தொட பேரலையின் சத்தத்தில் பயந்துபோனாள் குழந்தை; "ஐயோ பெரியப்பா" என்றுசொல்லி தலைவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டாளாம் தமிழ்ச்செல்வனின் மகள் அலை; "என்னடா உன்ரை மகள் அலை கடலலைக்குப் பயப் படுகிறாள்" என பம்பலாய் சொன்ன தலை வரின் வார்த்தை தமிழ்ச்செல்வனுக்கு வேதம் - சவால் - செய்தி. சிலநாட்கள் கழித்து ரேகா சொன்னாள், "அலைக்கு இப்போ வீட்டில் கிணற்றடித் தொட்டியில் நீர்நிறைத்து நீச்சல்ப் பயிற்சி நடக்குது."



உலகத்திற்குத் தமிழ்ச்செல்வன் பிடிகொடுக் காத இராசதந்திரி. கதைத்துப்பேசி வாகாக உரையாடக் கூடிய ஆற்றலுள்ள பெரிய மனிதன். ஆனால் இவனோ இந்திய இராணுவ காலத்திலும், ஆனையிறவுக் களத்திலும், இன்னும்பல களங்களிலும் சுழன்றாடிய போராளி. எம்விடுதலைக்கு வழிவிடாது எம்மக்களைக் கொன்றுகுவிக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது வெஞ்சினம் கொண் ட அதேபோராளி.

தமிழ்ச்செல்வன் தங்கள் பக்கம் வருகிறார் என எங்காவது ஓரிடத்தில் அல்லது ஒரு முகாமில் தடல்புடல் உணவு தயாராகி யிருக்கும். ஆனால் இவனோ இந்தியன் ஆமிக்காலத்தில் அம்மை வருத்தக்காரரைச் சுகமாக்கித் தருகிற ஆச்சியிடம் - மந்துவில் ஆச்சியிடம் - பழஞ்சோற்றுக்குழையலுக்குப் போயிருப்பான்.

முக்கியசந்திப்பில் வெளி ஆட்கள் வந்துபேசி, பேசிமுடித்து உணவுநேரம்; ஆடம்பர மேசை யில் அறுசுவை உணவு காத்திருக்கும். கதைக்க இனி விடயம் இல்லையென்ற நிலை யிலிருந்து சந்தர்ப்பமும் சரியாக அமைந்து விட்டால், வனவள சத்தியின் இடத்தில் கூழ் - அதுவும் மட்டுவில் தலைவரின் கைவண்ணத் தில் கூழ் - நினைவுக்குவந்து ஆளை அங்கு இழுத்துப்போகும்.

ஆண்டின் முதலாம்நாள் - தன்மனதில் நினைத்த சிலவற்றை தலைவர் பகிர நினைக்க - எனக்குக் கிடைத்தது வாய்ப்பு; தலைவரிடமிருந்து காலை வேளை அழைப்பு; தலைவர் தனது எதிர்பார்ப்புக்களினை, எண் ணங்களினை எடுத்துச்சொல்கிறார். உரை யாடலுக்கிடையில் செய்தி, "தமிழ்ச்செல்வன் பிள்ளைகளுடன் வந்துள்ளார்." தமிழ்ச்செல் வனது மகன் ஒளிவேந்தனது பிறந்தநாள். தலைவரின் ஆசிவேண்டி பெரியப்பாவிடம் பிள்ளைகளை அழைத்துவந்திருந்தான். திடீர் வருகை, பிள்ளைகளுக்குப் பொருத்தமான உணவில்லை. பெரியவர்களின் உணவு தான். பேச்சுவாக்கில் தமிழ்ச்செல்வன் சொல் லிவிட்டார், "அலைக்கு இடியப்பம் அவ்வளவு விருப்பமில்லை, சாப்பிடமாட்டாள்." ஆனால் பிள்ளையோ இடியப்பத்தை விரும்பிச் சாப்பிட் டாள். 'நாஊறுபட்டுவிடக்கூடாது' கேட்டு வாங் கிச் சாப்பிட்டாள்.

"வீட்டில் அப்பா தாற இடியப்பம் வேறை, இது பெரியப்பா தாற நல்ல இடியப்பம்" என்று சொல்லி தலைவர தமிழ்ச்செல்வனின் புன் சிரிப்பு அசட்டுச்சிரிப்பாகி, "இனி இடியப்பம் அவிக்கவும் இஞ்சைதான் பழகவேணும்" என்று சொல்லிச்சிரித்தான்.

எல்லாம் சரிதான் தலைவருக்கு விட்டுக் கொடாமல் தமிழ்ச்செல்வன் போட்டிக்கு நிற் கும் வேளையும் ஒன்றுண்டு. அது கைத்துப் பாக்கிச் சூட்டுக்களம்.

தலைவர் சுடுவார். அநேகமாய் ரவைகள் பத்தும் பத்தில் (மையம் - புள்) படும். சில வேளை ஒன்பது அல்லது எட்டு ரவை மையத் தில் பட்டு மீதிரவை சற்று விலகிப் பட்டுவிட்டால் தொடங்கும் போட்டி.

"நீ ஒருக்கா சுட்டுப்பார்" என்று தமிழ்ச்செல் வனை அழைக்க, சிலவேளைகளில் அவன் பத்து ரவையையும் மையத்திற்குச் சுட்டு துப் பாக்கியில் பிழையில்லை என்று நிரூபிப்பான்.

அடுத்தசுற்றில் நான் சுடுகிறேன்பார் என்று தலைவர் தயாராக, கைத்தடியைப் பின்பக் கமாக முட்டுக்கொடுத்து காலை நிலத்தில் ஊன்றி தமிழ்ச்செல்வன் போட்டிக்குச்சுட களைகட்டும் போட்டி. அலெக்ஸ், ஆதவன் (கடாபி) என சூட்டுவிற்பன்னர்களுடன் களை கட்டும்போட்டி; இருள் சூழ்ந்தவேளையில் முடிவதும், அல்லது இருள் சூழ்ந்தபின்னரும் மின்சூழ் வெளிச்சத்தில் தொடர்வதுமாய் நடந் து முடியும் போட்டி.

தமிழ்ச்செல்வன் அடிப்படைப்பயிற்சி முகாமில் அடையாளம்காணப்பட்டதே அவனது சூட்டுத் திறனால் என்பர்.

உடற்பயிற்சியில் எல்லோரும் ஓடிப்பயிற்சி செய்ய, பயிற்சிப்பொல்லுடன் நடந்தேமை தானத்தை வலம் வருவார் தமிழ்ச்செல்வன். பயிற்சிநிறைவு நாளன்று சூட்டுப்பயிற்சியின் போது சுடக்கொடுத்த ஒரேயொரு ரவையை மையத்திற்குச்சுட வியந்தார் பொன்னம்மான். அது குருட்டாம்போக்கில் பட்டிருக்குமோ என் று அடுத்தது கொடுக்க அதுவும் மையத்தில்பட அடுத்தடுத்து ஒவ்வொன்றாகக் கொடுக்க அத் தனை ரவைகளும் மையத்தில் பட, 'இனி உனக்கு ரவையில்லை ஓடடா' என பொன் னம்மான் செல்லமாய், பெருமையாய் ஓட விரட்டியதில் அடையாளம் காணப்பட்டான் தமிழ்ச்செல்வன்.

அதன்பின்னர், பொன்னம்மான் தலை வருக்கு தமிழ்ச்செல்வனை அறிமுகம்செய் ததும், சிலகால மருத்துவப்பணிகளின் பின் னர் தலைவரின் உதவியாளராக ஆனதும் பழையகதை.

அடிப்படைப்பயிற்சிமுகாமில் செய்யாத அல்லது செய்யத்தவறிய உடற்பயிற்சிகளை தலை வரின் கவனிப்பில் செய்யவேண்டிவந்தது இன்னொரு பம்பல்கதை. பயிற்சிமுடித்து சொர் ணம், இம்ரான் ஆகியோரின் பொறுப்பி லிருந்த தலைவரின் மெய்க்காப்பாளர் அணி யில் செயற்பட்டதுமாக இருந்த அவன் தலைவர் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய போது யாழ்ப்பாணத்தில்.

1987 இன் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து தலைவர் நாடுதிரும்பி, வேலைகளை மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்திக்கொண் டிருந்தார். யாழ்மாவட்டத்தில் மகளிர்பிரி வானது "சுதந்திரப்பறவைகள்" எனும் பெயரில் அரசியல், சமூகப்பணிகளில் ஈடுபட்டிருந்தது. மகளிர் பிரிவினருக்கு யாழ்ப்பாணத்தில் இராணுவப்பயிற்சிகளை வழங்க முடிவெடுத் தபோது அதற்காக தலைவரின் நெறிப்படுத் தலில் ஆரம்பப்பணிகளை முன்னெடுத் தது தமிழ்ச்செல்வன்தான்.

தென்மராட்சி பொறுப்பாகவிருந்த கேடில்சின் வீரச்சாவைத் தொடர்ந்து தென்மராட்சிப்

பொறுப்பாக நியமிக்கப்பட்டதில் அடையாளப் டுத்ப்பட்டது தமிழ்ச்செல்வனது ஆளுமை! அளுயையும், அறிவும், அதிகாரமும் உயர்ந்து முன்நின்றபோதும் உள்ளிருந்த ஆத்மா அவனாகவேயிருந்தான். அதுவே தமிழ்ச் செல்வனது பெருமை!

◆◆◆



இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்காலம். நாம் திட்டமிடுவதற்கு அவகாசம் எதையுமே எமக் குத்தராத திடீர்நெருக்குதல். தேசத்தின் விடு தலைக்கான பற்றுறுதி, எதற்காகவும் விடு தலைப்போராட்டத்தை விட்டுக்கொடுக்காமல் இருப்பதை மட்டும் – முன்நிறுத்திய முடிவுகள்.

யாழ்ப்பாணம் – கொக்குவில், எமது தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே அவரைக் கொன்று விடும் முடிவில் தரையிறங்கினர் இந்திய இராணுவ அதிரடிப் பராத்துருப்பினர்.

இன்னொரு தளத்தில் நின்று விடுதலையை வழிநடாத்தவேண்டியது தலைவரின் கட்டாய மானது தலைவரிடமிருந்து மனைவியாரும், பிள்ளைகள் இருவரும் பிரிந்து, தனித்திருப்பது தவிர்க்கமுடியாத தானபோது அவர்களைப் பாதுகாக்கப் பொறுப்பேற்றது தமிழ்ச்செல்வன்.

ஆரம்பசிலநாட்கள் அவன் ஒழுங்குசெய்து கொடுத்த வீடுகளில் மாறிமாறி நின்றபோதும், இந்தியப்படை வெறியாட்டமாடி மக்களை அச் சுறுத்தி, தலைவரது குடும்பமென குறிப்பிட்டு தேடத்தொடங்க; மதியக்காவும், பிள்ளை களும் மிகவும் சிரமப்பட்டனர்.

மூன்றுவயதுக்குட்பட்ட குழந்தைகள் இருவ ருடன் தம்மையே குறிவைத்துநடந்த பெரும் தேடுதல்களில் சரியான உணவுமின்றி வீடு களில், வயல்களில், ஆளில்லாக்காணிகளில் என்று அவர்கள் அக்காலப்பகுதியில் ஆரு மின்றி அலையும்நிலை வந்தது. எல்லா ஊரையும் ஒரேவேளையில் வளைக்கும் பெரும்படைமுற்றுகை; ஏதாவதொரு ஊரக் குள் தலைவரின் குடும்பம் சுற்றிவளைக்கப்பட இன்னொரு ஊருக்குள் அதேமாதிரி தமிழ்ச் செல்வனும் அகப்பட்டிருப்பான்.

இந்தநேரம் பார்த்து அந்தப்பகுதியில் இந்தியப் பத்திரிகை நிருபர்கள் இருவர் ஆண்–பெண் ணாக நடமாட, அது தலைவரும், அவரது மனைவியும்தானென எண்ணி இந்தியப் படை தம்தேடுதலை உச்சமாக்க தலைவரின் குடும்பத்தினர் பட்டபாடு கொஞ்சமல்ல.

மதியக்காவும், பிள்ளைகளும் தங்கியிருந்த வீட்டின் தகவலறிந்து சென்றனர் இந்தியப் படையினர்; ஆட்களைப் பிடிக்கமுடியாவிட் டாலும் உண்மையான தகவலொன்றை அறிந்துவிட்டனர்.

தலைவரின்மகள் குழந்தை துவாரகா நோயுற் றிருந்த தகவல் அது; அவசரமருத்துவ உதவி தேவைப்பட்ட தீவிரநோயுற்ற பிள்ளையும், தாயும் தப்பிவிட்டதை அறிந்த படையினர் செய்தி வெளியிட்டுவிட்டனர்.

வயிற்றோட்டத்தால் மகள் துவாரகா இறந்து விட்டதாக இந்தியா வெளியிட்ட செய்தியின் உண்மை – பொய் தெரியாது கலங்கிநின்றது தேசம்; எல்லோருடனும் எல்லாத்தொடர்பு களும் பாதிக்கப்பட்டிருந்த நேரமது; பலநாட் கள் கழித்து தமிழ்ச்செல்வனின் சிறுகடிதக் குறிப்பிலேயே தன்மகள் உயிருடனிருப்பதை அறிந்தார் தலைவர்.

அக்காவும், பிள்ளைகளும் மட்டுவில் சென்ற பின்னர் காணிக்கை அண்ணரின் வீட் டடியைச் சுற்றியேசுழலும் தமிழ்ச்செல்வனின் மனம்; எம்நாட்டின் தலைவரின் வீட்டாரை காப்பாற்றித்தந்த பெருந்தகை காணிக்கை அண்ணர்; தலைவரது மனைவியும், பிள்ளை களும் அங்கேதான் நிற்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தித் தெரிந்தபின் அவர்களை நோக்கிய இந்தியத்தேடுதல் அதிதீவிரமான போதும் நெஞ்சுரத்துடன் கைகொடுத்த நாட்டுப் பற்றாளர் அவர்; தமது தேடுதலிலிருந்து தலைவரது மனைவி, பிள்ளைகளைக் காப்பாற்றி அனுப்பியது அவர்தானென்று தெரிந்தபோது இந்தியப்படையினர் தமது கைக்கூலிகளை ஏவிவிட்டு காணிக்கை அவர் களைச் சுட்டுக்கொன்றிருந்தனர்.

கிராமத்துச் சுற்றிவளைப்பில் இந்தியப்படை முற்றுகைக்குள் மதியக்காவும், பிள்ளைகளும் – முற்றுகைக்கு வெளியே நெஞ்சுபதறக் அவர் களைச் சந்திப்பதும் பிரச்சனை; அவர்களை அடையாளம் காட்டுவதாய் அமைந்துவிடும். விலகியே இருப்பான். ஆனால் விலகாமல் இருப்பான்.

“தமிழ்ச்செல்வன் வீரச்சாவடைந்த வேளை யில் அலெக்ஸ் போல்” – அந்தக் காலத்தில் அவனது நம்பிக்கைக்குரிய போராளி வின்சன் – கொங்காதரன் மாஸ்ரரின் மகன் – மட்டுவில் சென்று மதியக்காவையும், பிள்ளைகளையும் பார்த்துவிட்டு வரவேண்டும்.

இப்போது வந்துசேர்ந்திருக்க வேண்டுமே? காணவில்லையே? வின்சனுக்கு என்ன வானது? அக்காவிற்கு, பிள்ளைகளுக்கு என்னவானது? நெஞ்சுபதற அன்று தமிழ்ச் செல்வன் மனம் துடித்து நின்றதை இன்றும் மறக்கமாட்டார்கள் அவனது நண்பர்கள்.

ஆள்மாறி ஆள்விட்டு – அங்கும், எங்கும் விசாரித்தபோது வந்தது வின்சனின் வீரச் சாவுச் செய்தி!. மட்டுவில் செல்லப்பிள்ளையார் கோயிலடி சிலுவில் வயல்வெளியில், மதியக் காவும், பிள்ளைகளும் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் கிடந்தது வின்சனின் வித்துடல் இந் தியப்பத்திரிகை நிருபர் அனிதா பிரதாப் எழுதிய “இரத்தத்தீவு” (Island of Blood) எனும் நூலில் குறிப்பிடப்படும் வின்சன் இவராவார்.

அக்காவையும், பிள்ளைகளையும் காணிக் கை அண்ணரின் வீட்டருகில் இருந்த நடராசா ஐயாவின் வீட்டில் – மட்டுவில் மகேஸ் வீட்டில் – சந்தித்துவிட்டு திரும்பும் வேளையில் இந்தியப் படை எதிர்கொண்டது; தப்பும் முயற்சியும் முடி யாமல்போக, சயனைட் அருந்தி தலைவரின் குடும்பத்தையும், தமிழீழத்தின் மானத் தையும் காத்து தன்னுயிர் கொடுத்து நின்றான் வின்சன்.

வின்சன் வீரச்சாவடைந்த சோகமும், தலைவ ரின் குடும்பத்தைப் பாதுகாத்து விட்டான் என்ற நிம்மதியுமாக, அன்றைய தமிழ்ச்செல்வனின் உணர்வுகள் – அவனது நினைவில் அழி யாதவை.

இனிவேறுவழியில்லை என்றான போது குழந் தைகளைத் தனியாக வேறிடம் அனுப்புவதென்றும், தாயாரை தனியே நகர்த் துவதென்றும் முடிவானது. “தாயும் – இருபிள் ளைகளும்” என்ற அடையாளத்தைநோக்கி வேட்டையாட அலையும் இந்தியப்படைகளிட மிருந்து அவர்களைக் காப்பாற்ற இந்தமுடிவு தவிர்க்கமுடியாததானது.

இந்தியப்படை சூழ்ந்துநிற்க கச்சாய் – புங்கம் பிள்ளையார் கோயிலடிக்கரையில் கந்தண் ணை ஒழுங்குசெய்த மரத்தோணியில் ஏற்றி மதியக்காவை சொர்ணத்திடம் பொறுப்புக் கொடுத்தார்கள் தமிழ்ச்செல்வனும் அவனது அணியினரும்.

தென்மராட்சியில் இந்திய இராணுவத் தினருக்கு முகம் கொடுக்கத்தக்க, புடம்போடப் பட்ட போராளிகள் பலர் தமிழ்ச்செல்வனின் அணியில் இருந்தனர்.

தலைவரின்குடும்பம் தென்மராட்சியிலிருந்து இடம்மாறிய பின்னரும் அங்கு புலி அணி யினரைத் தேடிய பாரதப்படையினர் பாவம், பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

மிருசுவிலில் தினேசுடன் பரணியும், அம்மா வும், மகேந்தியும் நிற்பதாய் தேடிப்போவார் கள். எல்லாச் சோதனையும் முடிந்து ஊர்ச் சனத்தை வீட்டிற்கு அனுப்பிவிட்டு படையினர் முகாம் திரும்பும்வேளை, சுற்றிவளைப்புக்குப்



போகாத குடுகுடு ஆச்சியின் சோற்றுக் குழை யல் உருண்டையில் பசிபோக்கிக் கொண் டிருப்பார்கள் இவர்கள்.

மட்டுவிலில் புலிகள் நிற்பதாக அறிந்து ஊரை வளைத்திருப்பர் இந்தியப் படையினரும், அவர்தம் கைக்கூலிகளும். வயலிற்கு வேலை செய்யும் கணவனுக்கு என்று சொல்லி அந்த அம்மா கொண்டுவந்த கஞ்சியைக் குடித்துக் கண்பனிப்பர் குணாவும், பாப்பாவும்.

மந்துவிலில் ஆஞ்சியும் (இளம்பருதி), ரவி அண்ணையும் அப்போதும் கூடநிற்பதைத் தெரிந்துதான் பெரும் படையாய்ப் போனார்கள் இந்தியப் படையினர். வீதியின் முன்புறத்துச் சிறுவனும், தோட்டத்துப் பெரியவரும் முன் னரே சொன்னதால் சேற்றுநிலத்து கண்ணாப் பற்றைக்குள் இறங்கி – இந்தியப் படையை ஏமாற்றி – வருவார்கள் இவர்கள்.

சாதாரண கிரிக்கெட் விளையாட்டில் பாகிஸ் தானிடம் தோல்வியடைந்து போனமைக் காகவே தமிழர்களைக் கொல்வதற்காக பீரங்கிகளை இயக்க உத்தரவிடும் இந்தியப் படை அதிகாரிகள் போராளிகளிடம் ஏமாந்தால் விட்டுவிடுவார்களா என்ன?

போராளிகள் தப்பிவிட்டதனால் ஏற்பட்ட களைப்பும், கோபமும் எம்மக்கள் மீது திரும் பும்.

இந்தியப்படையினரால் எமதுதாய்நாடு முழு வதும் பட்டபாட்டிற்கு தென்மராட்சியும் விதி விலக்காகவில்லை.

எந்தவொரு யுத்தமுனைப்புமில்லாத சூழல். சாவகச்சேரி நகரத்து நவீனசந்தை. 1987 ஒக்ரோபர் 27 பகல் – பட்டப்பகல் – பதினொரு மணி; சந்தையில் திரளாகக் கூடிநின்ற எம்மக்கள்மீது உலங்குவானூர்தி மூலம் குண்டுவீசி ஆரம்பித்தது தென்மராட்சிக்கான படுகொலைப்படலம்.

காலை சாவகச்சேரி சந்தையில், அங்கேயே அன்றிரவு பஸ்சில், நுணாவில், கைதடியில், பளையில், மிருசுவிலில் என தென்மராட் சியின் நிலமெங்கும் எமதுமக் களது குருதி தெறிக்க வைத்தனர் இந்தியப்படைகள்.

எங்களது நாட்டிற்கு ஏனிவர்கள் வந்தார்கள்? ஏன் எம்மைக் கொல்கிறார்கள்? என்ற வினாக் களுக்கு விடைதெரியாமலேயே சாகும் எமது மக்களுக்காக அழுது கொதிப்பார்கள் தமிழ்ச் செல்வனும், அவனது தோழர்களும்.

அவர்களது கொதிப்பும், துடிப்பும் இந்தியப் படையினருடனான களங்களில் வெடிக்கும்.

இந்திய இராணுவ காலத்தின் 1988 இன் பிற்பகுதி; மணலாற்றுக் காட்டிலிருந்த தலை வர் என்னிடம் யாழ்மாவட்டப் பொறுப்பைத் தந்து வழியனுப்பிவைத்தார்.

தலைவரின் சொற்படி வல்வெட்டித்துறையில் எனது பாதுகாப்பிடத்தை அமைத்துக்கொண்ட பின்னர், நாம் ஆயுதஅணியாகச் சென்றது தென்மராட்சிக்குத்தான்.

யாழ்ப்பாணம் புறப்படும்போது தலைவர், “வல்வெட்டித்துறையில் நின்றுகொண்டு செயற்படு, அங்கேயுள்ள சனம் உனக்குப் பாதுகாப்பைத்தரும்” என்றும், புதியவர்கள் வந்தால் இலகுவாக அடையாளம் காணக் கூடியபடியாக அவ்வூரில் புவியியல், சமூக அமைப்புள்ளமை போன்றவிடயங்களைச் சொல்லித்தந்து வழியனுப்பினார். அவ் வேளையில் உடனிருந்த கிட்டண்ணை

“வல்வெட்டித்துறைக்குப் போகவேண்டா மென்று சொல்லவில்லை, அதற்குப்பிறகு நீ போய் தினேசைப் பிடி” என்றார். அதாவது தினேஸ் உங்களுடன் ஒத்துழைப்பான் என் பதும், தென்மராட்சியின் பெரும்தென்னை மரங்களும், மாஞ்சோலைகளும், புதர்க்காடு களும் நல்லபாதுகாப்பைத்தரும் என்பதும் கிட்டண்ணையின் கருத்தாக இருந்தது.

அங்கு தென்மராட்சியில் நாவற்குழியிலிருந்து பளைவரை இருந்த அனைவரையும் மிருசு விலில் ஒன்றாக்கித்தந்தான் தினேஸ்.

தென்மராட்சி அணியினரின் கைத்துப்பாக் கிகளுக்கும் ஓய்வுகொடுத்து பெரியசுடுகலன் களுக்கு (றைபிள்கள்) மாறினோம். அணியா னோம்.

தென்மராட்சி – மந்துவிலில் சிலகாலமும், வரணியில் ஏதோவொரு இந்துக்கோயிலின்

அருகாமையில் - அதற்கு பொற்கோயில் என பெயரிட்டு - பலமாதகாலமுமாக அணியாய் தளமமைத்துச் செயற்பட்டோமென்றால் அது தமிழ்ச்செல்வனது தளம்.

வரணியூரில் எமதுதேவைக்கு வசதியாக, வாகாக உணவுசெய்து தருவதற்கும், ஊர்ப் புதினம் பார்த்துச் சொல்லவுமாக விநாயகத் தை நியமித்து, தன்னுடன் நின்ற குணா, குணத்தார், செல்வராசா ஆகியோரை ஆமி பார்த்துச் சொல்ல காவல்விட்டு, ஆஞ்சி (இளம்பருதி), ரவியண்ணை, விநாயகம், ரவி, டானியல், ரட்ணா என தனது ஆளணி யை என்னோடுநிற்கவிட்டு தளமமைத்துத் தந்தான் தினேஸ்.

தென்மராட்சியில் தமிழ்ச்செல்வனது அணி யினரது வீரம்செறிந்தநாட்கள். வீரம் மட்டு மல்ல போரிடுவதில் போட்டியும், நகைச்சு வையும் கலந்திருந்த மறக்கமுடியாத நாட்கள் அவை.

வடமராட்சி நெல்லியடியில் டேவிட்டின் அணி பிறண் இலகு இயந்திரத்துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றிவிட்டது. மகேந்தியிடமிருந்து சில நாட்களில் பெருமிதத்துடன் தொலைத்தொடர்பு நடைபேசியில் ஒருசெய்தி. குணாவின் அணி கனகம்புளியடியில் பிறண் இலகு இயந்திரத் துப்பாக்கி ஒன்றை எடுத்துள்ளது. தினேஸ் என்றபெயர் எதிரிகட்கு தெரியுமென்பதால் அவ னோடு எப்போதுமிருக்கும் மகேந்தியின் பெய ரில் தான் தமிழ்ச்செல்வனின் தொடர்புகள்.

தமிழ்ச்செல்வனது திட்டப்படி வாகனமொன் றில் சென்ற அணி வெற்றிகரமான தாக் குதலைச் செய்திருந்தது. தக்காளி என்ற உறுப் பினர் பெண்உடையில் சென்றிருந்தார். பொம் பிளை உடுப்புப்போட்டு தக்காளி நடந்ததை யும், தக்காளியை பெண் என நினைத்து எதிரிகள் ஏமாந்ததையும் கதைக்க வெளிக் கிட்டால் சோறுதண்ணி தேவையில்லை.

நுணாவிலிலும் இப்படித்தான் கண்ணிவெடி வைக்கமுற்பட அதை இந்தியப்படை கண்டு பிடித்து விட்டது.

அப்போதைய கண்ணிவெடிநிபுணர் பரணி யை களத்திலிறக்கிவிட்டான் தமிழ்ச்செல்வன்.

கண்ணிவெடியை வைத்துவிட்டுவந்ததை யும், எதிரிக்குத் தகவல்சொல்பவர் இவராகவும் இருக்கலாம் என்று நம்பிய ஒருவரிடம், "கண்ணிவெடி வைத்திருக்கு. ஒருவரிடமும் சொல்லவேண்டாம். கொஞ்சம் விலகியிருங் கோ கவனம்" எனச் சொல்லிவிட்டு வந்த தையும், மேஜர் தாப்பா என்ற அதிகாரியும், இன்னும் பலபடையினருமாக சூழ்ந்துவந்து எடுக்க; எதனைச் செய்யவேண்டு மென எதிர் பார்க்கப்பட்டதோ அதனை அந்தக் கண்ணி வெடி செய்துமுடித்ததையும் அதாவது எடுக்க வெடித்ததையும் கூறும் போது அந்த இடம் கலகலத்து அதிரும்.

"சாரங்கட்டிய புலியென்று எதிரிநாடு சொன்ன தனால், சாரத்தைமாற்றி எல்லோரும் காற் சட்டைகளுக்கு மாறுவோம்." கதைத்துவிட் டோம். "ஜீன்சிற்கு மாறவிரும்புவோர் வாருங் கள்" என்றுசொல்ல அங்கிருந்த அணியில் கையை உயர்த்தியவர்கள் இரண்டு பேர்தான்; கொஞ்சநாட்களாக ஜீன்ஸ்போட கையை உயர்த்தியவர்களைப் பார்த்து ஒரே சிரிப்பு - அறுவை - பகிடி; இன்னும் கொஞ்ச நாள் கழித்து ஜீன்ஸ் போடாமல் சாரத்துடன் திரிபவர்களைப் பார்த்து அதே சிரிப்பு - அறுவை பகிடி ஆமி ஒருமுறை கலைக்க, அங்குநின்ற ஏழெட்டுப்பேர் ஒன்றாக ஓட ஒருவர் பின் ஒருவராய் ஓடிய எல்லோரும் இரும்புப்படலை ஒன்றை படாதபாடுபட்டு ஏறிக் கடந்து பாய்ந்தோட உயரமேறமுடியாத கடைசி ஆள் பதறிப்போய் தள்ள; படலை முன்னரே திறந்துதான் இருந்ததாம்.

கச்சாய் றோட்டுப்பக்கமோ அல்லது அந்தப் பகுதியில் எங்கோவோர் இடத்தில் கந்தண் ணையைக் கட்டிப்பிடித்த ஆமியை தோளி லிருந்த துவக்கால் அப்படியே சுட்டுச்சாய்த்து விட்டு எதிரியின் இரத்தம் தன்உடலெல்லாம் தோய, திரும்பிப்பார்க்காமல் ஒரேஓட்டமாய் ஓடிவந்ததை சொல்லும்போதும் அந்த இடமெல்லாம் சிரிப்பில் அதிரும்.

தமிழ்ச்செல்வன் மற்றும் தென்மராட்சி அணி யெல்லாம் நாமிருந்த பொற்கோயில் தேடிவந் தால் பம்பலில் கலகலப்பில், சிரிப்பில் அதிரும் எமதிடம்.

என்னுடன் அணிகளுக்குப் பொறுப்பாக விருந்த செல்வராசா மாஸ்ரர் - குளிக்கும் நேரம் தவிர மற்றநேரமெல்லாம் தன்னுடலில் இருக்கும் ரவைக்கூடுதாங்கியை (கோல்சர்) கழற்றமறுக்கும் செல்வராசா மாஸ்ரார் - வந் து முறைப்படுவார், "இவர்கள் வந்தால் ஒரே சிரிப்பும்சத்தமும். சொல்லுக்கேட்கிறார்கள் இல்லை" என.

நடேஸ், பாபுவின் வீரச்சாவிற்குப் பதிலடித்தாக் குதல். இந்தியப்படைகளுடன் சேர்ந்து எமது மக்களைக் கொன்றுகொண்டிருந்த கைக் கூலிகள் மீது புகையிரதநிலையத்தடியில், சங்கத்தானையில், உசனில் என பற்பல தாக் குதல்கள் நடந்திருந்தன. மேலும் ஆங்காங் கே இந்தியப்படையை எதிர்கொண்டு சுட் டதும். தேடிப்போய்ச் சுட்டதுமான பல தாக் குதல்கள் இருந்தாலும்கூட தென்மராட்சியில் தமிழ்ச்செல்வன் அணிக்கு மகுடமாய் அமைந் தது மிருசுவிலில் அமைந்திருந்த இராணுவ நிலையைத் தாக்கி அழித்ததுதான்.

◆◆◆

மிருசுவில் - கண்டிவீதி நெடுஞ்சாலையில் - தேவாலயசுற்றாடலில் அமைந்திருந்தது இந்தியப்படைநிலை; மேஜர் சிறி சாரதியாக வர, ரூபனை நடுவிலிருத்தி கைகளில் குண் டுகளேந்தி வெள்ளைச்சட்டை அணிந்து, வயதானவர்போல் தலைப்பாகைக்கட்டுடன், வஞ்சினம்பொங்கும் நெஞ்சுடன் முன்னிருக்

> "'தினேஸ் பின்வாங்க மறுக்கிறார்' என்று நடைபேசியில் செய்திவந்ததும், வரமாட்டேன்..... வரமாட்டேன்..... என்று குழறக்குழற ஆளைக் குண்டுக்கட்டாய்த் தூக்கிக்கொண்டுவந்து சேர்த்ததும் மாறாதநினைவுகள். களத்தில் தனது நுரையீரலைத் துளைத்த ரவையின் வலியையும் உணராது ரவைபட்டதே தெரியாமல் அவனைக் கட்டிவைத்ததுதான் என்ன? இதனை விளங்கிக்கொண்டால் தான் தமிழீழ அரசியலுக்கான தமிழ்ச்செல்வனின் தகைமையை விளங்கிக்கொள்ளலாம்."

கையில் அமர்ந்து சென்றான் தமிழ்ச்செல்வன்; அவனது தலைமையில் பாரஊர்தியொன்றில் சென்ற எமது அணியினரின் தாக்குதலை இந்தியப்படை எதிர்பார்க்கவில்லை. நாம் எதிர் பார்த்திருந்ததை விடவும் படையினரது எண் ணிக்கையும் அதிகம்தான்; நல்லவேளையாக பக்கஉதவியாக ரேகா, பாப்பாவையும் உட் படுத்திய அம்மாவின் அணியும் இன்னொரு பக்கத்தால் தாக்குதலைத் தொடுக்க; வெற்றி எமதானது.

நாம் தங்கியிருந்த பொற்கோயிலுக்கு நெஞ்சில் படுகாயமடைந்த ராகுலனுடன் சேர்ந்துவந்தது வெற்றிச்செய்தியுடன் கப்டன் கில்மனின் வீரச் சாவும், வித்துடல் விடுபட்டுவிட்டதென்ற சோகச் செய்தியும், எமது தரப்பில் கப்டன் கில்மன் வீரச்சாவடைய, ராகுலன், பரணி, வீமன் ஆகிய மூவர் காயமடைந்த அத்தாக் குதலில், அங்குநின்ற தமது நான்கு அணியி னரில் ஒரு அணியினர் முழுப்பேருமே ஒரு ரவைகூட திருப்பிச்சுடமுடியாமல் இறந்து போனதையும், மற்றைய அணியில்கூட ஒருவர்மட்டும் தப்பமுடிந்ததையும் சர்தேஸ் பாண்டே என்ற இந்திய இராணுவஅதிகாரி "யாழ்ப்பாணம் - இடுபணி"(Jaffna Assign ment) என்ற நூலில் விபரிப்பதிலிருந்தே தாக்குதலின் தீவிரத்தையும், திட்டத்தின் துணிகரத்தையும் புரிந்துகொள்ளலாம். அதில் கூட ஒரு வீரச்சாவு மற்றும் சிலகாயத்துடன் பெரியவெற்றி கிடைத்துவிட்டதனாலும், பிறண் இலகு இயந்திரத்துப்பாக்கி உட்பட பல ஆயதங் கள் கைப் பற்றப்பட்டதனாலும் நாம் பெருமை யும், மகிழ்ச்சியும் அடைந்தோம். இவர்களின், அதாவது தினேசின் அணியினரின் கவலை என்னவென்றால் "கால்கஸ்ரோ" அதாவது சுவீடன் நாட்டின் போர்பஸ் என்ற நிறுவன வடிவமைப்பான உந்துகணைசெலுத்தியை கைப்பற்றமுடியாமல் போனதுதான்; "சனியன் கால்கஸ்ரோக்காரன் ஓடிவிட்டானம்மான" என்பான் தமிழ்ச்செல்வன்.

மிருசுவிலில் நண்பர்களான இளைஞர் களைப் பிடித்து இந்தியப் படையினர் சுட்டுக் கொன்றிருந்தனர். அதிலொருவர் சிவஞான சுந்தரம் - சிவரஞ்சன் என்பவர்.

அக்காலப்பகுதியில் இந்தியப் படையினர் அப் பாவி இளைஞர்களை இவ்வாறு கொல்வது அவர்களது வழமையான நடவடிக்கையாக வே இருந்தது.

இதில் வழமையில்லாமல் நடந்தது என்ன வென்றால் படுகொலைக்குள்ளான இளை ஞனது அண்ணனான சிவசோதி தமிழ்ச்செல் வனைச் சந்தித்ததுதான்.

மாணவனாக இருந்த தனதுதம்பியின் படு கொலைக்காக பழிவாங்கத் துடித்துக் கொண் டிருந்தான் சிவசோதி என்ற இளைஞன்.

அவனைத் தயார்செய்து, இந்தியப்படையின ரது பலவீனமான நிலையைக் கண்டறிந்து, வேவுபார்க்க வென கற்பித்து அந்தத் தாக்கு தலுக்கான திட்டத்தைத் தானே தயாரித்த துடன், தானே நேரடியாக தலைமைதாங்கிக் களத்தில் இறங்கினான் தமிழ்ச்செல்வன்; அது வுமல்லாமல் தனதுசுடுகலனை வேறொரு போராளியிடம் கொடுத்துவிட்டு கையெறிகுண் டுகளுடன் எதிரியின் பிறண் இலகு இயந் திரத்துப்பாக்கி (LMG) நிலைக்குள் பாய்ந்து



நனகு அறியப்பட டெனசில கொப்பேகடுவ மற்றும் படைஅதிகாரிகள் மீதானதாக்குதலில் பங்குகொண்டு - பரிசுபெற்ற அணியை வழி நடத்திச் சென்றவன், அன்று சிவசோதியாக பின்னாளில் பீற்றர் அல்லது கார்வண்ணன் என அறியப்பட்ட போராளியே.

◆◆◆

யாழ்மாவட்டப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் மருத்துவப்பிரிவை விரிவாக்குவதிலும், மருத் துவர்களை உள்வாங்குவதிலும் தமிழ்ச்செல்வன் காட்டிய ஆர்வம் முக்கிய மானது.

ஜெயசிக்குறுக்களத்தில் எம்மை அழித்து விடலாம் என்ற மமதையுடன் சிங்களம் பெரும் போரைத் தொடுத்தது. இடைவிடாது தொடர்ந்து நடந்த இச்சமர்களில் காயமடையும் போராளிகளின் எண்ணிக்கை, நூறுகளைத் தாண்டி ஆயிரங்களாக அமைந்தது. இவ் வளவு பெரும் எண்ணிக்கையாக காய மடைந்த போராளிகளை இவர்கள் எவ்வாறு பராமரித்துக்கொள்கிறார்களோ என சிங்கள ஆட்சியாளர்களும், ஆய்வாளர்களும் ஆச் சரியப்பட்டுக் கொள்ளும் அளவுக்கு எமது மருத்துவப்பிரிவின் பணியானது அக்காலப் பகுதியில் இருந்ததை யாரும் மறுக்கமுடியாது.

தமிழ்ச்செல்வன் தான் வீரச்சாவடை வதற்கு சிலநாட்களுக்கு முன்னர் ரேகாவிற்குச் சொன் னானாம், "வைத்தியைக்காப்பாற்றியிருக் கலாம். அவனுக்குப் பொருந்திப்போகும் இரத்த வகை இருப்பில் இருக்கவில்லை" என.

பூநகரிப்பெருந்தளம் மீதான எமது தாக் குதலின் போது எதிரியின் விமானக் குண்டு வீச்சில் தமிழ்ச்செல்வன் பாரியகாய மடைந்த வேளை அவரைப் பாதுகாக்கும் முயற்சியில் காயமடைந்து வீரச்சாவடைந்த போராளி தான் வைத்தி; சிறந்தபோராளியாக, மிகச்சிறந்த மெய்ப்பாதுகாவலனாக தனது கடமையைச் செய்து தமிழ்ச்செல்வனின் உயிரைக்காப் பாற்றினான் அவன்; பதின்நான்கு வருடங்கள் கடந்தபின்னரும் மறவாதநினைவுடன் மருத் துவப்பிரிவின் தேவைபற்றியும், தன்னைக் காப்பாற்றி உயிர்கொடுத்த தோழனைப்பற் றியும் ஒருங்கேநினைக்கும் மனத்துடன் இருந்தான் என்பதுதான் தமிழ்ச்செல்வனை சராசரி மனிதர்களிலிருந்து வேறுபடுத்தி உயர்வானபோராளியாக நினைக்கவைப் பதாகும்.

◆◆◆

பல்முனைஆற்றல்கொண்ட தமிழ்ச்செல் வனின் ஆளுமையின் இன்னொரு வெளிப் பாடாக சூரியக்கதிர் நடவடிக்கைக்குப் பின் னான யாழ்ப்பாணச் செயற்பாடுகளைச் சொல் லலாம்.

எதிரியின் முற்றுகைக்குள் இருந்த யாழ்ப் பாணத்திற்குள் தேர்ந்தெடுத்த போராளிகளை நிலைப்படுத்திச் செயற்படுத்தினான். யாழ்ப் பாணத்திற்குள் வெற்றிகரமாக நின்றுபிடித்த அவனது போராளிகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக வரலாற்றில் பதிவாகிவிட்ட இரா ணுவவெற்றிகளைக்கூட மாணவர் சமூகத் தையும் ஒருங்கிணைத்து வெகுசனப்போராட் டத்தை அவர்கள் முன்னெடுத்தமையானது தமிழீழவிடுதலை வரலாற்றில் இன்னொரு மைல்கல்லாக பதிவான வெற்றியாகும்.

இந்த எழுச்சியானது எமது விடுதலைப்போரை பயங்கரவாதமாக உலகின்முன் சித்தரிக்க முனையும் சிங்களஅரசை நிலைகுலையச் செய்தது. மக்கள் அணிதிரண்டு பொங்கிப்பிர வாகித்த இந்நிகழ்வுகள் இலங்கைத்தீவையும் தாண்டி உலக அரங்கையே ஒரு கணம் எம்மக்களை நோக்கித் திருப்பியதெனலாம்.

தமிழ்ச்செல்வனின் பல்வேறு அரசியல், நிர் வாக, சமூகப்பொறுப்புகளின் மத்தியில்கூட தெரிவு செய்யப்பட்ட அவனது போராளிகளின் மூலமாக நாம் பெற்ற இவ்வெற்றிகள் அவனது முதிர்ந்த அனுபவத்தினதும், ஆளுமை யினதும் வழிநடத்தலின் பெறுபேறே.

தாயகத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்த எமது மக்களிடையேயும் கூட தமிழ்ச்செல்வனின் தொடர்புகளும், அணுகுதல்களும், கருத்தூட் டல்களும் எமது விடுதலைப்போருக்கான பய னுள்ள பின்புலத்தை ஏற்படுத்தியிருந்தது என் பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்படத்தக் கதாகும்.

◆◆◆

அது 1991 ஆ.க.வெ. சமரின் ஒரு கடினமான கட்டம். கடலால் இறங்கி தரையால் நகர்கின்ற எதிரியை வழிமறித்துச் சண்டையிடுகிறது தமிழ்ச்செல்வனின் அணி. கனரகவாகனம் - ஆயுதங்களுடன் நகரும் எதிரியை இலகுரக ஆயுதங்களுடன் வழிமறித்து நிற்கும் கடின மானசண்டை அது; வீரர்கள் வீழ்ந்துவிட் டனர். வியூகம் உடைந்துவிட்டது.

பின்வாங்கவேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்ட நிலைமை. அங்கு தமிழ்ச்செல்வன் - அப்போது தினேஸ் - தினேசாக இல்லை. ஆவேச நிலையில் தன்நிலை உணராது, எதிரியை எதிர்ப்பதில் மட்டும் குறியாகநின்று போரிடும் தினேஸ். "தினேஸ் பின்வாங்க மறுக்கிறார்" என்று நடைபேசியில் செய்திவந் ததும், வரமாட்டேன்..... வரமாட்டேன்..... என்று குழறக்குழற ஆளைக் குண்டுக்கட் டாய்த் தூக்கிக்கொண்டுவந்து சேர்த்ததும் மாறாதநினைவுகள். களத்தில் தனது நுரையீரலைத் துளைத்தரவையின் வலியை யும் உணராது ரவைபட்டதே தெரியாமல் அவனைக் கட்டிவைத்ததுதான் என்ன? இத னை விளங்கிக்கொண்டால்தான் தமிழீழ அர சியலுக்கான தமிழ்ச்செல்வனின் தகைமை யை விளங்கிக்கொள்ளலாம்.

தமிழனின் அடிமை வாழ்வை மாற்றி யமைக்க சரியான அரசியல் தலைமை இல் லாமல் போனதே எம்மினத்தின் இன்றுவரை யான அவலநிலைக்கான காரணம். எம் மினத்தின் அடிமைவாழ்வை உணர்ந்தும், தெரிந்தும் இருந்த எமது இனத்தின் மூத்த தலைவர்கள் கூட நிலைமையை மாற்றி யமைக்க சரியான, துணிவான முன்முயற் சிகளை செய்யத்தவறினர்.

கொடுங்கோலர்களால் புரிந்துகொள்ள முடியாத அகிம்சைவழிப்போராட்டம் தோல்வி அடைந்து, தமிழர்களுக்கு உரிமை தையும் வழங்கமுடியாதென்று சிங்களத் தலைமை கள் ஏமாற்றி மறுத்தபோது, தந்தை செல்வா கூட "தமிழினத்தை இனி கடவுள் தான் காப்பாற்றவேண்டும்" என ஆற்றாமையுடன் தான் உரைத்தாரே தவிர எம் உரிமையைப் பெறத் தீவிரவழியிலோ அல்லது இராசதந்திர

வழியிலோ காத்திரமாகப் போராடத்துணிய வில்லை.



"இந்த வல்வெட்டித்துறையிலிருந்து ஐம்பது இளைஞர்கள் முன்வாருங்கள்" என்று அங்கு சொன்னதுபோல் ஒவ்வொரு ஊரிலும் சொன்னார்கள். போராட்டத்தில் நாட்டை அமைப்பேன் என்றும் சொன்னார்கள். இயல்பாக கிளர்ந்த இளைஞர்களின் எழுச்சியைக்கூட வெற்றுக்கோசங்களால் திசைதிருப்பும் அரசியல் ஆக்கினார் அமிர்தலிங்கம்.

சுயாட்சி என்றும், ஐம்பதுக்கு - ஐம்பது என்றும் தமிழரின் வாழ்வும் அரசியலும், பேச்சிலும் எழுத்திலுமாக காலத்தைக் கழித்துவர - இனத்தை மாற்றியும், நிலத்தை விழுங்கியும், மொழியை, கல்வியை பாழ்படுத்தியும் சிங்களம் தன்னாதிக்கத்தைத் தொடர்ந்தது.

தமிழர்கள் தூங்கினர். அல்ல, அல்ல தமிழ் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் தூங்கினர். கியூபா, வியட்நாம், பங்களாதேஸ் வரிசையில் தமிழீழமும் விடுதலை பெறக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்பைக் கைநழுவ விட்டனர்.

கையாலாகாத் தனத்துடனான எம்மவரின் கயமை அரசியலைக் கண்முன்னே பார்த்துப் பார்த்து பக்குவப் பட்டு தேர்ந்துதெளிந்த தமிழனால் - ஆம் எங்கள் தலைவரால் - விடுதலைக்கான அரசியலுக்கு அடித்தளம் அமைந்தது. வீரமும், செயலூக்கமும் கொண்ட ஆயுதப் போராட்ட அரசியல் உருவானது.

உயிர் மீதான அச்சமே கோழைத்தனத்தை உருவாக்குகிறது என்றும், தேசத்தின் விடுதலையை நகர்த்த வேண்டிய பொறுப்பில் உள்ளோர் இந்த அச்சநிலையைக் கடந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் அடிக்கடி சொல்வார் தலைவர்.

இந்திய அரசு எம்மக்களது விடுதலையைப் பணயம்வைத்து ஆடிய நாடகத்தில் விட்டுக் கொடுத்து விடாமல் தலைவர் உறுதியாக நின்றதற்கு காரணம் உயிர்வாழ்வு பற்றிய நம்பிக்கை அல்ல - தேசத்தின் விடுதலை பற்றிய தெளிவு.

தமிழீழ விடுதலைக்குரிய அரசியலுக்கான தமிழ்ச்செல்வனின் தகைமையை அவனது துணிவுக் கூடாகவும், அர்ப்பணிப்புக் கூடாகவும் பார்த்தார் தலைவர்; தேசவிடுதலைக்கான அரசியல் பற்றிய பரந்துவிரிந்து விசாலமான தனதுகனவுகளை தமிழ்ச்செல்வனின் மனதில் பதியவைத்தார் தலைவர்.

◆◆◆

மக்கள்மயப்பட்ட அரசியல்அலகுகள் பற்றிய தலைவரின் எண்ணங்களை செயல்ப்படுத்துவதில் தமிழ்ச்செல்வன் மூச்சாகச் செயற்பட டான். வறுமைப்பட்ட மக்களின் குழந்தைகள் போசாக்கின்றி இருப்பதுபற்றி தலைவரும், தமிழ்ச்செல்வனும் கதைத்துக் கொண்டிருப்பர். கொஞ்சநாள்செல்ல மொழுமொழுவென்று அழகான குழந்தை யொன்றின் புகைப்படத்தையும், மிகவும் மெலிந்த இன்னொரு குழந்தையின் புகைப்படத்தையும் ஒன்றாகக் காட்டுவார் தலைவர்.

இந்தப் பிள்ளையைத்தான் எமது சிறுவர் போசாக்குப்பூங்கா பொறுப்பேற்று மொழு மொழு பிள்ளையாய் தாயிடம் திரும்பப் பொறுப்புக்கொடுக்கிறது என்று சொல்லும் போது தலைவரின் சொல்லில் மகிழ்ச்சி பொங்கும். குழந்தைகளுக்குச் சிறுவர் போசாக்குப்பூங்கா என்றால் ஆதரவற்ற முதிய வயோதிபர்களைப் பராமரிப்பதற்கென மூதாளர் பேணலகம் இன்னொரு தளத்தில் செயற்படும்.

இவ்வாறு ஒவ்வொரு வயதினருக்கும், சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்தினருக்கு மென ஆரோக்கியம் - சுகாதாரம் - கல்வி என ஒவ்வொரு தளத்திலுமாகக் கட்டு மானங்களை உருவாக்கி அரசியல் பணிசெய்த தமிழ்ச்செல்வனது ஆளுமை விசாலமானது.

யாழ்ப்பாணம் - வலிகாமத்தில் இருந்து ஒரு பொழுதில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தனர். நெருக்கடிகளைச் சந்தித்தோம் உண்மைதான். ஆனால் பட்டினிச்சாவோ அல்லது நோயுற்றதாலான சாவோ எதுவாயினும் ஒன்றேனும் நடந்ததாக யாரேனும் சொல்லமுடியுமா?

முழுப்பிரச்சனைகளையும் எமது இயக்கமே பொறுப்பேற்று தீர்த்துவைத்தது என்று சொல்ல முடியாதுதான். எமதுமக்களும், நிறுவனங்களும், சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் சேர்ந்து சுமந்ததால் வந்தவெற்றிதான் இது; இல்லை என்று கூறமுடியாது.

ஆனால் அதற்காக எம்சமூகத்தை ஒருங்கிணைத்து, நெறிப்படுத்தி, இரவுபகல் பாராது களத்தில் முன்நின்று வழிநடத்தி அரசியல் நிர்வாக ஆற்றலை வெளிப்படுத்தினான் தமிழ்ச்செல்வன்.

அதுபோல்தான் தென்மராட்சியிலிருந்து வன்னிக்கும், வன்னிக்கு உள்ளேயுமான இடம் பெயர்வுகளுமாக எம்மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு அலைந்துதிரிந்த பொழுதெல்லாம் அவர்களுடன் நின்றனர் எம் அரசியல்ப் போராளிகள்; எம்மக்களுக்கு சிறப்பாக வாழ்வளிக்க முடியாதுபோனாலும் சீரழிந்து போகாமல் பார்த்துக்கொண்டோமென்றால் அது நிர்வாகசேவை, பொருண்மியமேம்



பாட்டு நிறுவனம், தமிழீழ சுகாதாரசேவை, குழந்தைகள், பெண்கள் நலன்பேணல் அமைப்புகள் ஆகிய தமிழ்ச்செல்வனின் ஆளுகை யில் அமைந்திருந்த அரசியல் கட்டுமானங்களால்தான்.

கடல்பொங்கி ஆழிப்பேரலை கோரத்தாண்டவமாடியது. பாதிக்கப்பட்ட ஆசியாவின் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாம் சந்தித்த அழிவு கொஞ்சமல்ல. பேரழிவு.

மீளஎழுந்தோம். பேரினவாதஅரசு ஆழிப் பேரலை மீள்கட்டுமானத்திட்டத்தை செயற்பட விடாமல் முடக்கித் தடைசெய்த போதும் மீளஎழுந்தோம்.

விரைவான அனர்த்த முகாமைத்துவத்திற்காக உலக அரங்கில் நாம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களானோம் என்றால், அதுவும் உலக உயர்மட்டத்தில் ஆவணப்படுத்தப் பட்டு முறையாகப் பாராட்டப்படும் வகையில் செயற் பட்டுக் காட்டினோம் என்றால், எல்லா வளங்களும் கொண்ட நாடுகளை விட சிறப்பாக, வேகமாக இங்கு அவசர புனர்வாழ்வு மற்றும் சுகாதார, ஆரோக்கியப் பிரச்சனைகளைக் கையாண்டுள்ளோமென்றால் மேற்படி எமது தமிழ்ச்செல்வனின் ஆளுகையில் அமைந்த சமூக, அரசியல் கட்டுமானங்களால் தான்.

போரின் உச்சநெருக்கடியிலும்கூட, எதிரியின் பொருண் மியத் தடைகளின் போதும்கூட பிச்சை எடுக்கும் ஒருவரைக் கூட எம்மண்ணில் காணமுடியாதபடிக்கு சமூக மட்டத்தில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள தென்றால் அரசியல் வேலைத்திட்டங்களின் வீச்சைப் புரிந்துகொள்ளலாம்.

எமது அரசியல் வேலைத்திட்டங்களின் பின்னணியில் தலைவரது சிந்தனையும். வழிநடத்தலும் இருந்தது என்பது உண்மைதான். இன்னும் சொல்லப்போனால் தலைவரது எண்ணங்களின் செயல்வடிவங்கள்தான் இவை என்பதும் உண்மைதான்.

ஆனாலும் தலைவரின் எண்ணங்களையும், வழி நடத்தலையும் புரிந்து, தெளிந்து செயலில் நடைமுறைப் படுத்துவதற்கான அர்ப்பணிப்பு, அறிவு, திறமை, ஆளுமை என்பன ஒருங்கே பெற்ற ஆற்றலோனாகத் தமிழ்ச்செல்வன் மிளிர்ந்து, செயற்பட்டான் என்பதே உண்மை.

◆◆◆

விடுதலைக்கான அரசியல்பணி ஒருவகையில் சவாலானது. இறைமையுள்ள நாடு என்ற சொற்பதமானது ஆக்கிர மிப்பாளர்களது எல்லாக் கொடுமைகளுக்குமான கவசமாக அமைந்துவிடும். அதேவேளை விடுதலை வேண்டிப் போராடும் இனத்தின் தற்காப்பிற்கான போராட்டமானது பயங்கரவாத மாக முறையிடப்படும்.

இராசதந்திர அழுத்தத்திலிருந்து நாகரீகமற்ற நேரடி அச்சுறுத்தல்வரை பல பேச்சுமேசைகளில், பல படிமுறைகளில் இந்தியா எம்மை பணியவைக்க முயன்ற படிப்பினைகளையும், சிங்கள அரசு பேச்சுக்களின்போது எம்மை ஏமாற்ற முயலும் தொடர்ச்சியான அணுகுதல் பற்றியும் தலைவரிடமும், தேசத்தின்குரல் பாலா அண்ணை அவர்களிடமும் நிறையவே கற்றறிந்து புடம் போடப்பட்டவனாக இருந்தான் தமிழ்ச்செல்வன்.

எம்மக்கள் மத்தியில் இருந்த மெத்தப் படித்தவர்களது வலிமையற்ற பேச்சுக்கள், அதாவது சரணாகதிக்கான சமா ளிப்புகள் இராசதந்திரமாகக் கூறப்பட்டது ஒருகாலம் தமது இனத்தையே அடிமைகொள்ளவைக்கும் ஆக்கிரமிப் பாளர்களுக்குத் துணைபோய் காட்டிக்கொடுப் பதை இராசதந்திர மாகக் கூறப்பட்டது இன்னொருபக்கம்.

விடுதலைக்கான நியாயத்தை விட்டுக்கொடுக் காமல் இருப்பதிலும் சரி, அதேவேளை உரை யாடலைச் சிறப்பாக முன்னெடுத்து சபையின் நிலையை தனது ஆளுமைக்குள் எடுப்பதிலும் சரி தமிழ்ச்செல்வன் தேர்ந்த இராசதந்திரி யாகச் செயற்பட்டான்.

மறுத்துரைக்க முடியாதபடி முன்வைக்கப்படும் அவனது கருத்துக்களுடன், உலகம் முழுவதும் அறியப்பட்டு விட்டதான அவனது புன் சிரிப்பும் சேர்ந்து அவனைச் சந்திப்பவர் களைக் கட்டிப்போடும்.

ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அவன் கையாண்ட விதமும்கூட தேர்ந்து முதிர்ந்த அரசியல் தலைவனாக அவனை உலகிற்கு அடையாளம் காட்டிநின்றது.

எமதுமக்களின் துயரங்களைக் கருத்திலெடுக் கக்கூடாது என்ற தீர்மானமான முன்கூட்டிய முடிவுடன் வருபவர்களைத் தவிர மற்றெல் லோரும் தமிழ்ச்செல்வனின் சொல்வன்மை யினால் கட்டுண்டு எம் நியாயங்களை உணர்ந்து சென்றனர் என்பதே உண்மை.

தலைவர் உணர்வூட்டியது பாதி மற்றும் பாலா அண்ணையிடம் கேட்டறிந்ததும், தானாக



கற்றுணர்ந்ததும் மீதியாக முதிர்ந்த அரசியல் தலைவனாக, இராசதந்திரியாக, பேச்சு வார்த்தையாளனாக தமிழ்ச்செல்வன் பரிணமித்தான்.

தமிழ்ச்செல்வனது இராசதந்திரத்திறனானது அவனது சிறப்பாற்றலினதும், நேர்மையான விடுதலைப் பற்றினதும் வெளிப்பாடு என உறுதியாகக் கூறலாம்.

ஒடுக்கப்பட்டு விடுதலை வேண்டிநிற்கும் இனங்களின் சார்பிலும்கூட தமிழ்ச் செல்வனது இராசதந்திரத்திறனும், அணுகுதலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும்.

◆◆◆



தலைவர் அரசியல்பொறுப்பாளராக தமிழ்ச் செல்வனை மிக உயர்வாக மதித்தார். தமிழ்ச் செல்வனது கருத்தறியாது தலைவர் செயற் படுத்தும் விடயங்கள் அரிதாகவே இருக்கும்.

அதேவேளை நிர்வாக விடயங்களில் அல்லது மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் தவறு நிகழும்போது கண்டிக்கவும் தவறமாட்டார். பொதுமக்களுக்கு எங்காவது தொற்றுநோய் ஏற்பட்டிருப்பதாகவோ, எம்மால் தீர்க்கப் படக்கூடிய குறைபாடுகள் கவனிக்கப்படாமல் இருப்பதாகவோ, நிர்வாக விடயங்களில் நியாயமின்மை நிகழ்ந்ததாகவோ முறைப்பாடுகள் கிடைக்கும் வேளையில் தலைவரது கோபம் வெளிப்படும். தலைவரது இந்தக்கண்டிப்பை யாராவது வேறுவிதமாக விளங்கி தமிழ்ச் செல்வனை குறை சொல்லி அவனது பணிகளைப்பங்கப்படுத்த முற்பட்டாலும் உடனே தலைவருக்குக் கோபம்வரும்.

தமிழ்ச்செல்வனது செயற்பாடுகளின் தாக்கத்தையும், அவரது சாதனைகளையும் எடுத்துக் கூறவும் தயங்கமாட்டார் தலைவர்; அன்பும் - கண்டிப்பும், உறவும், உரிமையும், கோபமும் - பாசமும் கொண்ட அவர்களது உறவு அற்புதமானது.

எங்காவது, யாராவது ஒருபோராளி அல்லது பணியாளர் தவறுசெய்து அதுவொரு விடயமாக ஆகிவிட்டதென்றால் தலைவரிடம் வரும் போது சங்கடத்துடனும், சஞ்சலத்துடனு மிருப்பான் தமிழ்ச்செல்வன். தலைவரிடம் கதைத்துத் தெளிவு படுத்தியபின் புறப்படும்போது, "இடைக்கிடை பேச்சுவாங்கித் தெளிந்தால்தான் நல்லது" என சிரித்துக்கொண்டே சொல்வதைக் காணலாம்.

எம் இன விடுதலைவேண்டி உலகம் முழுக்க ஒலித்த அவனது குரல்... இன்னும் ஓய வில்லை, இனியும் ஓயாது, எம் விடுதலை வரை ஓயாது.

வாழ்ந்தபோது செய்ததையே அவன் வீழ்ந்த போதும் செய்தான். கைத்தடி தாங்கிய அந்தப் புன்னகைச்செல்வனின் முகம் உலகின் மனச்சான்றின் முன்னே, உலகத் தமிழினத்தின் முன்னே எழுப்பிய வினாக்களுக்கான விடையை, சிங்களம் சொல்லும்காலம் வரும்.

தமிழ்ச்செல்வன் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டான் என்பது எவ்வளவுதூரம் உண்மையோ, தமிழ்ச்செல்வன் எம்மை விட்டுப் பிரியமாட்டான் என்பதும் அதேயளவு உண்மை.

தமிழீழம் பற்றிய கனவாக, அந்தக்கனவின் செயல் வடிவத்திற்கான நிர்வாக அலகுகளாக, அந்த நிர்வாகங்களை இயக்குகின்ற ஆளமைகளாக வாழ்கிறான், வாழ்வான். என்றும் வரலாற்றில் வாழ்வான் - வரலாறாய் வாழ்வான்.

ஐப்பசி , கார்த்திகை, 2007- விடுதலைப் புலிகள் -



வாயினால் மட்டும் அமைச்சர் வேலை பார்க்கும் டக்ளஸ்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்

அக்டோபர் 16, 2021

அமைச்சர் டக்ளஸ்(Douglas Devananda) வாயினால் மாத்திரமே அமைச்சருக்கான வேலையினை செய்கின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் (Chanakyan Rajputhiran) தெரிவித்துள்ளார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக வாழைச சேனையில் வாழ்வாதார உதவிகளை வழங்கியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

“தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் காரணமாக வட பகுதி மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக அழிவடைந்து வருகின்றது. இதற்குரிய காரணம் எங்களது மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாயினால் மாத்திரமே அமைச்சருக்கான வேலையினை செய்கின்றார்.

அவருடைய வேலையினை அவர் பார்ப்பது இல்லை. கடந்த ஒரு வருடமாக நான் அவரிடம் முன்வைத்த எந்தக் கோரிக்கையினையும் அவர் நிறைவேற்றவில்லை. நாடாளுமன்றத்தில் அதை செய்கின்றேன். இதை செய்கிறேன் என தெரிவிப்பார். ஆனால் இதுவரை இந்திய மீனவர்களை தடுக்க முடியாத நிலையில் உள்ளார்.

உண்மையிலேயே இந்த அரசாங்கம் புத்திசாலித்தனமான அரசாங்கம். தமிழர் ஒருவரினை மீன்பிடி அமைச்சராக நியமித்து, தமிழகத்தில் உள்ள தமிழர்களையும் இலங்கையிலுள்ள தமிழர்களையும் மோத விட்டு சிரித்து கொண்டு இருக்கின்றது.

இதனை அமைச்சர் முதலில் உணர வேண்டும். அப்படி செய்ய முடியாவிட்டால் பதவியினை இராஜினாமா செய்ய வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

நான் சிங்கள மக்களுக்கு எதிரானவன் அல்ல உறுதிபட கூறும் யாழ். மாநகர முதல்வர்

அக்டோபர் 16, 2021

நாம் தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்கள மக்களுக்கும் எதிரானவர்களல்ல. மற்றைய இனத்தை அழிப்பதற்காக எமது உரிமையினை கோரவில்லை.

எமது உரிமை கோரிக்கையை வெல்வதற்கு பாரத தேசம் எமக்கு துணை நிற்க வேண்டும். எமது தந்தை நாடு என்ற அடிப்படையில் நமக்கு துணை நிற்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுப்பதாக யாழ்.மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ் பொது நூலகத்தில் இன்று இடம்பெற்ற அப்துல் கலாமின் 90ஆவது பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எம்மைப் பொறுத்தவரை பாரத தேசம் என்பது எமது தந்தையர் நாடு நாம் தந்தையர் நாடான பாரத தேசத்தினை பின்பற்றி செயற்படுகின்றோம். அதாவது தாய் தமிழகம் என்பது எமது தொப்புள்கொடி உறவுகளாக உள்ளனர்.

ஒருபோதும் பாரத தேசத்தினுடைய நலன்களுக்கு முரணாக நாங்கள் செயற்படப் போவதில்லை. நாங்கள் பாரத தேசத்தினுடைய உறவுகளாக தொப்புள்கொடி உறவுகளாக அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக அவர்களுடைய பொருளாதாரத்தை அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த கூடிய ஒரு தரப்பாக நாங்கள் இந்த தேசத்தில் இருப்போம்.

தென்னிந்தியா என்பது எமது தொப்புள் கொடி உறவுகள் வாழ்கின்ற இடமாகும் ஆகவே பண்பாட்டு ரீதியாகவும் பாரத தேசத்தை நாங்கள் பின்பற்றுகிறோம்.

எங்களுடைய அரசியல் கலாச்சாரத்திலும் பாரத தேசத்தினுடைய அரசியல் கலாசாரத்தை பின்பற்றுகின்றோம். பாரத தேசத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தினை பின்பற்றுகின்றவர்களை அங்கே நினைவு கூருவதை போல இங்கேயும் நினைவுகூரும் பண்பாட்டை பின்பற்றி வருகின்றோம்.

குறிப்பாக இன்றைய விஜயதசமி நாளில் அப்துல் கலாமினுடைய நினைவு தினத்தில் பாரத தேசத்திற்கு ஒரு கோரிக்கையையினை முன்வைக்க விரும்புகின்றேன்.

எமது நீண்டகால உரிமை கோரிக்கையினை பாரத தேசம் செவிசாய்க்க வேண்டும். நாம் தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்கள மக்களுக்கும் எதிரானவர்களல்ல நாங்கள் மற்றைய இனத்தை அழிப்பதற்காக எமது உரிமையினை கோரவில்லை.

நாங்கள் எம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக எம்மை வளர்த்துக் கொள்ள எமக்கு உரிமை வேண்டும் என கடந்த 60 வருடங்களாக போராடி வருகின்றோம்.

அந்த வகையில் பாரத தேசம் எமது கோரிக்கையினை நியாயமாக புரிந்து எமது கோரிக்கைகளை அடைவதற்குத் தன்னுடைய முயற்சி, அழுத்தங்களையும் அதனுடைய ஒத்துழைப்புகளையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பாரத தேசம் தரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம் ஏற்கனவே 13வது திருத்தச் சட்டத்தினை பெற்றுத்தந்தது இந்த பாரத தேசமே அந்த நன்றிக் கடன் எமக்குள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவுநாள் முன்னேடுப்பு

அட்டோபர் 21. 2021

யாழ். போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவு நினைவு நாள் முன்னேடுக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த 21 பேர் சுட்டு படுகொலை செய்யப்பட்டிருந்ததன் 34ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கூறப்பட்டது.

இந்த நினைவு தினமானது யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களின் ஏற்பாட்டில் இன்று (வியாழக்கிழமை) நடத்தப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினரால் வைத்தியசாலையில் கடமையிலிருந்த 21 பேர் சுட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இந்திய இராணுவத்தினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக, உயிரிழந்தோரின் உறவுகளால் பொது சுடர் ஏற்றப்பட்டு படுகொலை செய்யப்பட்டோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளை பேணி இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், வைத்தியசாலை ஊழியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.





பௌத்த விகாரைக்கு தமிழ் மக்களின் காணி சுவீகரிப்பு – மாபெரும் கவனயீர்ப்பு பேரணி!

அட்டோபர் 15, 2021

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் 64ம் கட்டை மலையில் அமைக்கப்பட உள்ள பௌத்த விகாரைக்கு பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்க எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை கண்டித்து மாபெரும் கவனயீர்ப்பு பேரணி நடைபெற்றது.

இந்த போராட்டம் இன்று வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது. காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகளை முழுமையாக கைவிடும் வரை எங்கள் போராட்டம் தொடரும், எங்கள் காணிகளுக்குள் விவசாயம் செய்ய எங்களிடம் வாடகை கோராதே, மூதூர் சிறுபான்மை மக்களின் காணிகளை அபகரித்து சிங்கள-பௌத்த காலனியாக்குவதை உடன் நிறுத்து என்கின்ற வாசகங் கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட் டத்தை முன்னெடுத்திருந்தனர்.


எங்கள் நிலம் எமக்கு வேண்டும், மாற்று காணி வேண் டாம் சொந்த நிலம் எமக்கு வேண்டும், காவல்துறையே அப்பாவி பொது மக்களின் காணிகளை அபகரிக்கும் அநீதிக்கு துணை போகாதே, அதிகாரங்களையும் அதிகாரிகங்களையும் வைத்து மக்களை விரட்டாதே, மூதூர் முஸ்லிம் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப் பதை நிறுத்துங்கள் போன்ற கோஷங்களை எழுப்பிய வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த ஆர்ப்பாட்ட பேரணியானது மூதூர் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக ஆரம்பித்து ஊர்வலமாக சென்று மூதூர் பிரதேச செயலகம் முன்றலில் நிறைவுற்றது. அதனைத் தொடர்ந்து காணி அபகரிப்பு தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையுடன் கிராம மக்களின் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்று பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டப் பேரணியில் மூதூர் வாழ் மக்கள், இந்து,கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.







District Secretary,
District Secretariat,
Trincomalee.

Date: 14.10.2021

Through,

Divisional Secretary,
Divisional Secretariat,
Mutur

Respected sir,

APPEAL TO STOP ILLEGAL LAND ALIENATION TO POOJA GRANT AT 64TH MILE, IRUTHAYAPURAM, KIRANTHIMUNAI SITUATED IN THE MUTUR DIVISIONAL SECRETARIAT AREA

With the great respect to your good office on the above subject, we, the undersigned land owners make this urgent appeal for your kind consideration and remedial action to stop the illegal and unnatural land allocation to **POOJA GRANT** to a Monk who is continuously preventing us from independently doing the developments into our above traditional lands.

We, the undersigned people acknowledged that the direction has been given by your good office to Divisional secretary of Mutur to immediately acquire around 96 to 186 acres of lands belonging to Muslims, Tamils and Christianity people who are living and cultivating agriculture crops and doing paddy cultivation in the above land since ancient periods.

We strongly object the direction of your good office and the steps of said Divisional secretary to remove us from acres of our farming and living lands and the undue involvement of said monk in our lands by using officers and it is still continuing.


In this regard, we already sent several objection letters to all respective departments explaining facts and figures, including your good office, the said letter dated 12.09.2020 to your office signed by 265 individuals but no sanitary response we received yet.

(**The said letter dated 12.09.2020 is hereby marked as** "A" **and annexed**).

In Addition to the above letter, we all individually and collectively declare and informed that we never ready to give any consent to this land alienation to this Monk by way of POOJA GRANT or any other alternative method whatsoever.

Meantime, we all here individually and collectively convey our strong objections to any proposal to provide alternative land to us at any other places to fill up the losses and we only need our above lands and never ready to give up our lands under any circumstances. We, unanimously declare that we will join together to protect our land under any circumstances and will pay any cost at any time until we received permanent solution.

As well, we ready to help hands to respected Monk, if he willing to amicably discuss this matter with our representatives. We never allowed in distributing our land any outsiders other than us and our children.



We bring the fact that the steps taken by your good office to issue **POOJA GRANT** is a so called illegal procedure and violation of humanitarian aspects. It is a violation of our land and living rights against the provisions of ICCPR act of Sri Lanka and its' international norms.

Therefore, sir, we kindly request your good office that while we are in crucial times to response international community regarding Improvement of Human rights achievements of our country, such this movement will make damage the reputation of our county at international level. We believe that your good office will bring the dispute to end.

Hence it is highly appreciated for your earliest steps sir.

Thanking you

Copies:

1. Hon. Governor, Eastern Province
2. Hon.Imran Mahroof (MP),Trincomalee District (to Speak at DCP Meeting)
3. Hon.Thowfique(MP),SLMC, Trincomalee District (to Speak at DCP Meeting)
4. Hon.Sampanthan(MP), TNA, Trincomalee District, (to Speak at DCP Meeting)
5. Divisional Secretary, Mutur
6. Hon. Chairman, Pradeshiaya Shaba, Mutur

No	Name	Land situated	Signature
இல	பெயர்		



மட்டக்களப்பில் தமிழர்கள் வாழக்கூடாது என்பதற்காக திட்டமிட்ட குறியேற்றங்கள்

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம்

அட்டோபர் 21, 2021 **(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லை கிராமமான புனானை காரமுனை பகுதியில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை செய்வது என்பது மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழக்கூடாது என்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபஷவின் தலைமையில் செயற்படும் பௌத்த ஆதிக் கத்தின் வெளிப்பாடாகும். எனவே இந்த சிங்கள குடியேற்ற நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள ஈ.பிஐஆர்.எல்.எப் பத்மநாபா மன்ற காரியலத்தில் இன்று வியாழக்கிழமை (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாங்கேணி கிழக்கு பகுதியின் மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லை கிராமமான புனானை காரமுனை பகுதியில் 200 சிங்கள குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 6 ஏக்கர் வீதம் சிங்கள மக்களுக்கு வழங்கி திட்டமிட்ட சிங்கள குடியேற் றத்தை செய்வதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கின் றது.

இந்த சிங்கள குடியேற்றத்தை செய்வதற்காக இலங்கை யின் பௌத்த ஆலோசனைக்குழுவின் நடவடிக்கையின் பயனாக ஜனாதிபதியின் துணையுடன் கொழும்பு காணி ஆணையாளரது வழிகாட்டலின் பெயரில் இன்று இந்த பகுதியில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நடாத்துவதற் காக பௌத்த தலைமையிலான குழுவினருடன் பார்வை யிட்டது என்பது மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழக் கூடாது என்பதை மத்திய அரசின் செயற்பாடு முன்நிறுத்து கின்றது.

இது தொடர்பாக அந்தபகுதியில் மக்கள் பிரதிநிதிகளும் அந்தபகுதிமக்களும் ஒரு வெகுஜன ரீதியான எதிர்ப்பு போராட்டம் செய்து எதிர்ப்பை தெரிவித்த இன்றைய தினத் தில் இந்த காணிகளை பாக்கச் சென்றவர்களுக்கு இதில் எதிர்ப்பு இருக்கின்றது என தெரியப்படுத்தியுள்ளது.

1983 ம் ஆண்டு 1985 ம் ஆண்டு கலவரங்களின் ஊடாக அந்த பகுதியில் குறிப்பிட்ட சில 4 அல்லது 5 சிங்கள குடும்பங்களும் தமிழ் குடும்பங்களும் முஸ்லீம் குடும்பங் களும் இடம்பெயர்ந்தது என்பது வரலாறு

இதற்கு 1982 ம் ஆண்டு வருடாந்த அனுமதிப்பத்திரம் இந்த பகுதியில் ஒரு குடும்பத்துக்கு 6 ஏக்கர் வீதம் 198 குடும்பங்களுக்கு இருந்ததாக பொய்யான வருடாந்த அனுமதிப்பத்திரத்தை தயாரித்து சம்மந்தப்பட்டோருக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த வருடாந்த அனுமதிப்பத்திரத்தில் கையொழுத்து வைத்த உத்தியோகத்தவர் என்பவர் எங்கள் அறிவுக்கு எட்டியவரை அப்படி ஒரு உத்தியோகத்தர் வேலை செய்ய வில்லை. ஆகவே காணி ஆணையாளா இந்த வருடாந்த அனுமதிப்பத்திரம் பொய்யா உண்மையா என இந்த விடயத் தை முதலில் விசாரணை செய்யவேண்டும்.

வருடாந்த அனுமதிப்பத்திரம் அந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அது இரத்து செய்யப்படும். ஆகவே ஒரு பொய்யான ஆவணத்தை தயாரித்ததாக ஒரு குற்றச் சாட்டை நான் முன்வைக்கின்றேன் அது மட்டுமல்ல கடந்த பதினைந்து இருவது வருடமாக கிழக்கு மாகாண சபையில் இந்த விடையத்தை 4 வது தடவையாக நான் இங்கு இன்று பேசுகின்றேன்.

இந்த குடியேற்றம் தொடர்பாக கடந்த வருடம் அதற்கு முந்தியவருடம் பல முயற்சிகள் செய்யப்பட்டு கிழக்கு மாகாண காணி ஆணையாளர் கிழக்குமாகாணசபை மக்கள் பிரதிநிதிகள் வாகரை பிரதேசத்திற்குட்பட்ட அதி காரிகள் பொதுமக்கள் பல ஆட்சேபனையை தெரிவித்து வந்தோம்.

மட்டக்களப்பில் தமிழர்கள் வாழக்கூடாது என்பதற்காக திட்டமிட்ட குடியேற்றங்கள்

ஆனால் மீண்டும் மீண்டும் மத்திய அரசாங்கமும் பௌத்த ஆலோசனைக் குழு சிங்கள மக்களை நாங்கள் குடியேற்றி ஆகவேண்டும் என இன்று இதனை கையில் எடுத்திருக்கின்றது என்பது இலங்கை அரசாங்கத்தின் ஒரு கேவலம் கெட்ட ஜனாதிபதி கோட்டபாய ராஜபஷவின் தலைமையில் செயற்படும் பௌத்த ஆதிக்கத்தின் வெளிப்பாடாகும.

எனவே இந்த திட்டமிட்ட குடியேற்றத்தை வன்மையாக கண்டித்து இன்று இந்த நிலைமையில் அந்த இடத்திற்கு சென்று மக்கள் பிரதிநிதிகள் ஆர்பாட்டம் நடாத்துவது என்பது வரவேற்கதக்க விடையம் இதை உணர்ந்து மத்திய அரசு இதனை நிறுத்துவதற்கான செயற்பாடுகளை செய்யவேண்டும் என அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால் தான் தமிழர் தாயகம் உய்யும். தற்போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கை போரின் பின் நிர்வகித்து வருகின்றது

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான சி.வ. விக்னேஸ்வரன்

அக்டோபர் 20, 2021

வட-கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால் தான் தமிழர் தாயகம் உய்யும். தற் போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு கிழக் கை போரின் பின் நிர்வகித்து வருகிறது என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,நீதியரசருமான சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன்று புதன்கிழமை (20) ஊடகங்களுக்கு வழங்கிய கேள்வி பதிலின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.
-அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு....

(1)-கேள்வி:- ஒற்றையாட்சியை தமிழ்க் கட்சிகள் விரும் பாததேன்?
பதில்:- ஒற்றையாட்சித் தலைமைத்துவம் பெரும்பான் மையினக் கட்சிகள் வசம் இருக்கும் போது சிறுபான்மை யினர் பாகுபாட்டுக்கு உள்ளாவார்கள் என்பதால்.

(2)-கேள்வி:- பெரும்பான்மையினக் கட்சிகளில் சிறுபான் மையினர் போதிய அளவு இடம் வகித்தால் இந்த நிலை மை எழாதல்லவா?
பதில்:- எழும். இலங்கை போன்ற நாடுகளில் எழும். இலங் கையில் பெரும்பான் மையினத் தலைவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு உட்பட்டுள்ளார்கள். தமது இனம் இலங்கை நாட்டில் பெரும்பான்மை என்றாலும் பக்கத்தில், தமிழ் நாட்டில், பல கோடி தமிழர்கள் வாழ்ந்து வருவதால் தமக்கு எக் காலத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற எண்ணத்தில் இலங்கை வாழ் சிறுபான்மையின ரைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றார்கள். தமது தாழ்வு மனப்பான்மையின் நிமித்தம் அவர்களை எழ விடாமல் தடுக்க வேண்டும் என்று சிந்திக்கின்றார்கள்.

அதனால் தம்முடன் சேரும் சிறுபான்மை இன மக்களை யும் அவர்களே வழிநடத்துகின்றார்கள். சிறுபான்மை உறுப்பினர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின் றார்கள்.

இதற்கு நல்ல உதாரணம் இதுவரை காலமும் பெரும்பான் மைக் கட்சிகளுடன் சேர்ந்து பயணித்த தமிழ்த் தலைவர் களே. பாகுபாட்டுக்குட்படும் சிறுபான்மையினரை அவர் களால் சட்ட ரீதியாகக் காப்பாற்ற முடியாது போய்விட்டது. தனிப்பட்டவர்களை அவர்கள் காப்பாற்ற முடியும். ஆனால் இனங்களின் உரித்துக்களைப் பெற்றுத் தரமுடியாது. எனவே ஒற்றையாட்சியில் பெரும்பான்மையினரின் சிந்த னைகளே மேலோங்கி நிற்பன.

ஆனால் சிந்திக்கும் திறன் கொண்ட, பாகுபாட்டு சிந்தனை களுக்கு இடம் கொடுக்காத, மனித உரிமைகள் மீது பற்றுக் கொண்ட, நியாய சிந்தனை பெற்ற பெரும்பான்மைத் தலைவர்கள் ஒரு நாட்டில் இருந்தால் அவர்கள் தாமாகவே சிறுபான்மை இன மக்களைக் காப்பாற்றும் வகையில் அவர்களின் உரித்துக்களைப் பாதுகாக்கும் வகையில் சட்டம் இயற்றுவார்கள். அதாவது அதிகாரப் பகிர்வை மேற்கொண்டு சிறுபான்மையர் பெருவாரியாக வாழும் இடங்களில் அவர்கள் தங்களைத் தாங்களே ஆள வழி வகுப்பார்கள். ஆனால் பொதுவாக இன்றைய சிங்கள மக்கள் தலைவர்கள் இன ரீதியான சிந்தனைகளிலேயே ஊறியிருக்கின்றனர்.

அதற்கு முக்கிய காரணம் சிங்களவர் பற்றிய உண்மை வரலாற்றை அவர்கள் உணராததாலேயே. தமிழ் மக் களின் தொன்மை பற்றி அவர்கள் அறியாததாலேயே. ஆகவே அவர்களின் தலைமைத்துவத்தில் செயற்படு கின்ற ஒற்றையாட்சி தமிழ்ப் பேசும் மக்களின் உரிமை களைப் பெற்றுக் கொடுக்காது. ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக நிலங்கள் பறிபோவன. தற்போது அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(3)-கேள்வி :- அதனால்த்தான் சமஷ்டி அரசைத் தமிழ்க் கட்சிகள் கோருகின்றனவா?
பதில் :- நிட்சயமாக! அதிகாரப் பகிர்வுக்கு செயல்வடிவம் கொடுப்பது சமஷ்டி அரச முறையே.

(4)-கேள்வி :- ஆனால் உங்கள் கட்சி கூட்டு சமஷ்டியை கோரியுள்ளதே?
பதில் :- ஆம்! கூட்டு சமஷ்டி முறை கூடிய அதிகாரங்களை அலகுகளுக்கு அல்லது பிராந்தியங்களுக்கு வழங்கும். அதாவது கூட்டு சமஷ்டி என்பது தனித்துமான நாடுகள் பலவற்றை நிரந்தரமாக சில காரணங்கள் கருதி ஐக்கியப் படுத்துவதேயாகும். தமிழ்ப் பேசும் பிரதேசங்ககள் 1833 வரை தனித்துவ ஆட்சிகளாகவே இருந்து வந்தன.

சமஷ்டி முறையில் மத்திய அரசின் உள்ளீடு வெகுவாக இருக்கும். ஆனால் கூட்டு சமஷ்டியில் தனி அலகுகள் தம்மைத் தாமே ஆண்டு கொண்டு ஒரு சில காரணங் களுக்காக மட்டுமே மத்தியுடன் ஒத்துழைக்கும் விதத்தில் அமைவன. சமஷ்டி, கூட்டு சமஷ்டி இடையேயான வேற்றுமைகளை கோடிட்டுக் காட்டுவது சிரமம். ஆனால் பொதுவாக மத்திய அரசாங்கமானது கட்டுப்படுத்தப்பட்ட குறைந்த அதிகாரங்களையே கூட்டு சமஷ்டியில் பெற் றிருக்கும். நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கை கள் மேலும் சில சில்லறை அதிகாரங்கள் போன்றவை மத்தியிடம் இருப்பன.

ஒரு விசேட அம்சமாக குறிப்பிடுவதென்றால் மத்திய அரசாங்கத்திற்கு கூட்டு சமஷ்டியின் கீழ் நேரடியாக இறைவரியை தனிக் குடிமக்களிடம் இருந்து பெற முடியாது. பதிலாக அவற்றை பிராந்திய அரசாங்கங்கள் மூலமாகவே பெற வேண்டியிருக்கும். நாட்டின் தனி மனிதர்களை ஆட்டிப்படைக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்காது.

தற்போது ஒற்றையாட்சியின் கீழ் எங்கள் வளங்கள் பறி போகின்றன. காணிகள் பறி போகின்றன. மக்கள் வறுமையின் விளிம்பில் நின்று தத்தளிக்கின்றார்கள். ஆனால் தாம் செய்த தவறுகளிற்காக இறைவரிகள் மூலமாக எம்மை வருத்தி வருகின்றனர். கூட்டு சமஷ்டி



முறை இவை யாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வரும்.

(5)-கேள்வி :- அப்படியானால் மத்திய இராணுவத்தை பிராந்தியங்களில் இருந்து வெளியேற்றலாமா?
பதில் :- கட்டாயமாக! வடகிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால் தான் தமிழர் தாயகம் உய்யும். தற்போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கை போரின் பின் நிர்வகித்து வருகின்றது. உள்நாட்டுப் பிராந்திய பாதுகாப்பு கூட்டு சமஷ்டியில் பிராந் தியங்களுக்கே வழங்கப்படும். நாம் எம்மைப் பாதுகாத் துக் கொள்ளும் காலம் வரும். போலிஸ் உரித்துக்கள், காணி உரித்துக்கள், பிராந்திய உள்நாட்டுப் பாதுகாப்பு அனைத்தும் பிராந்திய அலகுகளுக்கே வழங்கப்படும்.

இன்று படையினர் வடகிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் தொடர்ந்து இருப்பதால் பல பாதிப்புகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

1. எமது வாழ்வாதாரம் தடைப்படுகின்றது. எமது நிலங் களை இராணுவம் பயன்படுத்தி இலாபம் பெறுகின் றார்கள்.

2. எமது சுதந்திரம் தடைப்படுகின்றது. மக்கள் இராணு வம் முகாம் இட்டிருக்கும் இடங்களினூடாகப் பயணிக்க அஞ்சுகின்றார்கள். சுற்று வட்டார பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அச்சத்தில் வாழ்கின்றார்கள்.

3. தமிழர் தாயக நிலங்கள் பறிபோவதற்கு படையினரே உறுதுணையாக நிற்கின்றார்கள். பல்லாயிரம் ஏக்கர் நிலங்களைச் சுவீகரித்து உள்ளார்கள்.

4. திணைக்களங் களுடன் படையினர் சேர்ந் து பிறழ்வான வரலாற்றுக் காரணங்களை முன் வைத்து நிலங்களைக் கையேற்கின்றார்கள்.

5. புத்த பிக்குகளுடன் படையினர் சேர்ந்து நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர்.

6. பௌத்த வணக்கஸ்தலங்களை பௌத்தர்கள் அல்லாத இடங்களில் நிர்மாணிக்க படையினர் உதவி புரிந்து வருகின்றனர்.

7. படையினர் வடமாகாண மக்களின் நடமாட்டங்கள், எவர் எவருடன் அவர்கள் உள்ளூரில் தொடர்பு வைத்துள் ளார்கள், மற்றும் அவர்களுக்கு யார் யாருடன் வெளிநாட் டிலும் தொடர்பு இருக்கின்றது என்பவை சம்பந்தமான முழு விபரங்களையும் சேகரிக்கின்றார்கள். இவை உத்தி யோகபூர்வ காரணங்களுக்கே என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால் பணம் பறித்தல், கடத்தல் போன்ற பல காரியங்களுக்கும் இவ்வாறான தரவுகள் பாவிக்கப் படுகின்றன.

8. இங்குள்ளவர்கள் வெளிநாட்டுத் தமிழர்களுடன் தொடர்பு கொள்ளும் போது அவர்கள் புலிகள் இயக்கத் துடன் முன்னர் தொடர்புடையவர்கள் என்று கண்டால் உடனே இங்குள்ளவர் களை பயங்கரவாத தடைச் சட் டத் தின் கீழ் கைது செய்ய படை யினர் உதவுகின் றார்கள்.

9. உள்ளூர் மக்கள் பலரின் வறுமையைக் கருத்தில் கொண்டு அவர் களுக் கு சில நன்மைகளைச் செய்து அவர்களைத் தமது கையாட்களாக தமிழ் மக் களுக் கு எதிராக மாற்றுகின்றார்கள்.

10. இன்று மத் திய அரசாங்கக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளாக வட கிழக்கு மாகா ணங்களில் வலம் வரு பவர்கள் படையினர் இங் கு வேரூன் றி நிற்கின்றார் கள் என்ற ஒரே ஒரு பலத்தின் நிமித்தமாகவே அவ்வாறு வலம் வருகின்றார்கள். அரச பலம் என்பது இவர்களுக்கு இங்கு முகாம் இட்டிருக்கும் படையினர் மூலமே கிடைக் கின்றது. படையினர் வடகிழக்கில் இருந்து வெளியேறி விட்டால் அரச கட் சிகளின் பிரதிநிதிகளின் இருப் பு கேள் விக்கிடமாகிவிடும்.

அது மட்டுமல்ல. தெற்கிலிருந்து இழுவைப்படகுகள் இங்கு வந்து எமது கடல் வளங்களைச் சூறையாடுவது நின்று விடும். திணைக்களங்கள் எமது மக்களின் தாயக நிலங் களைக் கையேற்பது நின்று விடும். புத்த பிக்குகள் பௌத்த வணக்கஸ்தலங்களை ஏதேச்சாதிகாரமாக வடகிழக்கில் நிறுவுவது நின்று விடும். வடகிழக்கில் சிங்களக் குடியேற் றங்கள் நின்றுவிடுவன. இதுவரையில் கைப்பற்றப்பட்ட நிலங்கள் திரும்பப் பெற கூட்டு சமஷ்டி முறை வழி வகுக்கும்.

படையினர் தொடர்ந்து வடகிழக்கு மாகாணங்களில் இருப்பதால் இன்னும் எத்தனையோ விபரீதங்கள் நடைபெறுகின்றன. இவை யாவற்றையும் முறியடிக்க வேண்டுமானால் கூட்டு சமஷ்டி எமக்கு அவசியம். ஒற்றையாட்சியின் கீழ் “இராணுவமே வெளியேறு“ என் றால் அடுத்த நிமிடமே எம்மைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்து விடுவார்கள்.

ஏறாவூர் பொலிசார் இளைஞர்களை தாக்கிய சம்பவம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

அக்டோபர் 23, 2021



ஏறாவூர் பொலிஸார் பொதுமக்களை தாக்கிய சம்பவத் திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

நாட்டையும் நாட்டு பொதுமக்களையும் பாதுகாப்பாக வழி நடாத்துகின்ற இந்த பாதுகாப்பு தரப்புக்கள் இவ்வாறு மிருக்கத்தனமாக தாக்குதல் நடாத்தினால் பொதுமக்கள் யாரை நாடி போவது எனவே இத்தாக்குதலை வன்மை யாக கண்டிப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

ஏறாவூரில் இரு இளைஞர்களை மீது பொலிசார் தாக்குதல் நடாத்திய சம்பவத்தை கண்டித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் ஊடக அறிக்கை ஒன்றை இன்று சனிக்கிழமை (23) வெளியிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே ஏறாவூர் மைலம்பாவெளி பகுதியில் நேற்றைய தினம் இரு இளைஞர்கள் வீதி போக்குவரத்தை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டு போக்கு வரத்து பொலிசார் ஒருவரால் கண்மூடித்தனமாக தாக்குதல் மேற் கொண்டிருந்தார் உண்மையிலே இந்த மூர்கத்தனமான தாக்குதலை முதலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வன்மையாக கண்டிக்கின்றது.

அதேவேளை மாவட்டத்திலே அப்பாவிகள் மீது இப்படி பொலிசாருடைய அடாவடித்தனங்கள் இடம்பெற்று வருகின்றது அண்மையிலே வவுணதீவு பிரதேசத்தில் இரண்டு இளைஞர்கள் தாக்கப்பட்டனர் அதேவேளை இருதயபுரம் பகுதியில் ஒரு இளைஞன் தாக்கப்பட்டு உயிரி ழந்துள்ளார். இவ்வாறு சட்டம் இருக்கத்தக்கதாக மனித உரிமை மீறல்கள் மனித குலத்துக்கு எதிரான சம்பவங் களை பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்வாறே தொடர்ந்து பல சம்பவங்கள் இடம்பெற்றிருக் கின்றது இந்த தாக்குதல்களை பார்க்கும் போது சம்பவங் களை பொலிசார் கையாளத் தெரியாது தங்களுக்கு ஏற்ற விதத்தில் கையாளுகின்றார்கள்.

எனவே மாவட்டதிலுள்ள பொலிஸ் அதிகாரிகள் பொலி சாரை சிறந்த முறையில் வழிநடாத்த தவறியதலாலும் மனித உரிமையை பாதுகாத்தல், பொதுமக்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் தொடர்பாக பொலிசா ருக்கு பயிற்சி அளிக்கப்படாதனாலேயே இவ்வாறு பொலி சார் பொதுமக்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொள்ளுகின்றனர்.

வடக்கு கிழக்கிலே பொலிசார் நீண்ட நாட்களாக இப் படியான சம்பவங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக் கின்றது எனவே இப்படியான தாக்குதல்களை நிறுத்த வேண்டும். இந்த சம்பவத்தில் தொடர்புடையவருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் பாதிக்கப்பட இளைஞர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும்.

இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே ஜனாதிபதி செயலணி

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்

அக்டோபர் 27, 2021



சிங்கள பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நியமித்த ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் குறிக்கோளாகும். தமிழர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இனப்படு கொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி." - இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

"ஜனாதிபதி ஞானசார தேரரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒரு ஜனாபதி செயலணியை உருவாக்கியுள்ளார். அவருடைய நோக்கு ஒரு நாடு ஒரு சட்டம் என்பது இது பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்ற கேள்விக்கு ஊடகங்களிடம் பதிலளிக்கும் போதே விக்னேஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஜனாதிபதி பல்வேறு குற்றவாளிகளை இதுவரை தனது அதி காரங்களைப் பாவித்து சிறைகளில் இருந்து வெளிக்கொண்டு வந்து மன்னிப்பு அளித்துள்ளார். உதாரணத்திற்கு இரண்டு நீதிமன்றங்களால் கொலைக் குற்றவாளியாக காணப்பட்ட இரத் நாயக்க என்ற இராணுவ வீரர் அவர்களுள் ஒருவர், கொலைக் குற்றவாளியாகக் காணப்பட்ட துமிந்த சில்வா மற்றொருவர்.

அண்மையில் கரணகொட என்ற முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிராக இருந்த குற்றச்சாட்டுக்களை கைவாங்கி அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

போர்க்காலத்தின் போது பல குற்றங்களைப் புரிந்த இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற்ற பின் அவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு அரச உயர்பதவிகள் கொடுத்துள்ளார். ஆகவே, குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு சிறையில் இருந்த ஞானசார தேரரை தற்போது தமது ஜனாதிபதி செய லணிக்கு தலைவராக்கியமை எனக்கு வியப்பைத் தரவில்லை. அவருடைய அந்தச் செயலணியில் அங்கம் பெறும் அங்கத தவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களும் ஒரு சில முஸ்லிம் களும் ஆவர்.

வடக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு என்று தேசவழமை என்ற ஒரு சட்டம் டச்சுக் காலத்தில் இருந்து சட்ட ரீதியாக ஏற்றுக்கொள் ளப்பட்டு வருகின்றது. "ஒரு நாடு ஒரு சட்டம்" என்று கூறும்போது தற்போது வலுவில் இருக்கும் றோம டச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம், கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகியவற்றைப் புறக்கணித்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாகக் கணித்து ஒற்றைச் சட்டத்தைக் கொண்டு வரவே இந்தச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

"ஒரு நாடு ஒரு சட்டம்" என்று கூறும் பொழுது இந்த நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சிங்கள மாகாணங்களுடன் சேர்த்து அவை சிங்கள பௌத்தத்திற்குள் அடங்கியவை என்று எடுத்துக் காட் டவே இந்த இன ரீதியான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று நான் நம்புகின்றேன்.

கண்டியத் திருமணங்களில் ஃபின்ன, ஃதீக என்ற இரு விதமான திருமணங்கள் இருக்கின்றன. ஒன்றில் கணவனுடன் போய் மனைவி வாழ்வது மற்றையது மனைவி யின் முல்கெதரவில் சென்று கணவன் வாழ்வது.

இவையெல்லாம் பாரம்பரியமாக கண்டிய மக்கள் ஏற்றுக் கொண்ட திருமண முறைகள். இவற்றையெல்லாம் ருகணரட் டவில் (தென்மாகாணம்) இருந்து வரும் கோட்டாபய மாற்றி யமைக்க இருக்கின்றாரா?

கண்டிய மக்களின் தலைவர்களுடன் கண்டிய சட்டத்தை நீக்கப் போவதாகக் கூறி அவர்களின் சம்மதத்ததை ஏற்றுக் கொண்டுள் ளாரா?

முஸ்லிம் மக்களுடன் இதுபற்றிப் பேசி முஸ்லிம் சட்டத்தைக் கை விட முஸ்லிம் மக்கள் ஆயத்தமா என்று அவர்களுடன் கலந் துரையாடியிருக்கின்றாரா? தமிழ்ப் பேசும் மக்கள் என்ற முறை யில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருக்கும் அவர்களுக்குரிய சட்டத்தை மாற்றுவதோ தொடர்ந்து வைத்திருப்பதோ என்பது அவர்களின் பொறுப்பு. அது மத்திய அரசின் பொறுப்பல்ல.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் தான் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். 1833இல் வெள்ளை யர்கள் இலங்கை முழுவதையும் நிர்வாக ரீதியாக ஒன் றிணைக்கும் வரையில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசர்களாலும் தமிழ் சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்தன. தமிழ் மொழியே அவர்களின் மொழியாகவும் இருந்தது. கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் இன்னும் சில கண்டியத் தலைவர் ளும் பிரித்தானியர்களுடன் 1815ல் செய்து கொண்ட உடன்படிக் கையில் தமிழிலேயே கையெழுத்து இட்டார்கள். இவ்வாறு தமிழுக்கும் தமிழருக்கும் என ஒரு அடையாளம் இலங்கையில் பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகையில் ஒரு நாடு ஒரு சட்டம் என்பதின் அர்த்தம் என்ன? இலங்கை ஒரு நாடு அல்ல.

அது சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், மலையக மக்கள் மேலும் பல சிறிய இன மக்கள் வாழும் நாடு. அதுவும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்துள்ளார்கள். அரேபியாவில் இருந்தும் தென்னிந்தியாவில் இருந்தும் வந்து கிழக்கு மாகாணத்தில் குடியேறிய பின் தமிழ் மொழியையே அவர்கள் தம் தாய் மொழியாக ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு இருக்கையில் இலங்கையானது ஒரு நாடாக இல்லாது பல நாடுகளைக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி எவ்வாறு ஒரு நாடு பற்றி அறிவிக்கலாம்? மேலும் ஐந்து சட்டங்கள் நடைமுறையில் இருக்கும்போது இந் நாட்டில் எவ் வாறு ஒரு சட்டத்தை அமுல்படுத்த எண்ணலாம்? அத்துடன் இவை யாவற்றையும் சிறையில் இருந்து வந்த ஒரு குற்றவாளியைத் தலைவராகக் கொண்ட ஒரு செயலணியைக் கொண்டு எவ்வாறு நடைமுறைப்படுத்த இருக்கின்றார்? தேரருக்கு எந்தளவுக்கு சரித்திரம் தெரியும், சட்டம் தெரியும்?

ஜனாதிபதியின் போக்கு ஒன்றையே வலியுறுத்துகின்றது. இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்றும், அதன் அடிப்படையில் இந்த நாட்டை ஒரு நாடாக அடையாளப்படுத்த வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள்.

சிங்கள பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தச் செயலணியின் குறிக்கோளாகும்.

தமிழர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி.

சகல இன மக்களும் இவ்வாறான தான்தோன்றித்தனமான சிங்கள பௌத்த வெறி கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு" - என்றார்.

திலீபன் அழைப்பது சாவையா இந்த சின்ன வயதில் இது தேவையா-பாடிய குரல் ஓய்ந்தது!


தமிழ் இனத்திற்கா மொழிக்காக உரிமைக்காக உழைத்த கலைஞர்கள் மறைந்து கொண்டே செல்கின்றார்கள்.

கடந்த காலங்களில் தமிழ் இனத்திற்காக போராடியவர்களுடன் இணைந்த கலைஞர்கள் இன்றும் எம் நாட்டிலும் புலம்பெயர் நாட்டிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சிலர் திரைமறைவில் வாழ்ந்து கொண்டுவந்தாலும் கலைஞர் கள் தங்கள் கலை உணர்வுகளை வெளிப்படுத்தும் சந்தர்பங் கள் கிடைத்தவர்கள் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறானவர்களில் ஒரு பாடகிதான் மேரிநாயகி யாழ்ப் பாணம் நவாலியூரினை சேர்ந்த இவர் தமிழர்களின் உரிமைக் காக போராடிய காலகட்டத்தில் குறிப்பாக 80 காலப்பகுதிகளில் பல எழுச்சி பாடல்களைப் பாடியவரும்,

தியாக தீபம் திலீபன் அண்ணாவின் உண்ணாநோன்பின் போது, 'திலீபன் அழைப்பது சாவையா, இந்த சின்ன வயதில் இது தேவையா?' என்ற பாடலையும் பாடியிருந்த பெண் கவிஞரும் பாடகியுமாகியன திருமதி மரியதாஸ் மேரி நாயகி (நவாலியூர் நாயகி) அவர்கள் 26.10.21 இறைபதம் அடைந்து விட்டார் என்ற செய்தி எங்கள் மனங்களை உருக வைக் கின்றது.



ஐந்து வயது குழந்தையும் ஆயுதம் ஏந்தியதா? காணாமல் போனவர்களின் உறவுகள் கேள்வி

அக்டோபர் 30, 2021

வவுனியாவில் காணாமல் போனவர்களின் உறவுகளினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இன்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இதன்போது, "எங்கே எங்கே உறவுகள் எங்கே, கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே போன்ற கோசங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எழுப்பியிருந்ததோடு, உங்கள் இராணுவத்தின் உறுதி மொழியை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள், தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா, ஐந்து வயது குழந்தையும் ஆயுதம் ஏந்தியதா?" போன்ற பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் மூலமே எங்களுக்கு தீர்வு கிடைக்கும் என நம்பிக்கொண்டு இருக்கிறோம். எமக்கு சர்வதேசமே பதில் வழங்க வேண்டும். நாங்கள் ஒவ்வொரு மாதமும் வந்து ஒரு தெருக்கூத்து போடுவது போல் எண்ணலாம். ஆனால் நாங்கள் எங்கள் பிள்ளைகள், கணவன்மார், என பலரை கொடுத்து விட்டு வேதனைக்கு மத்தியிலேயே இவ்வார்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றோம். நாங்கள் கடந்த 12 வருடமாக வேதனையுடனும் கவலையுடனும்தான் இருக்கின்றோம்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.







வவுனியாவில் சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போராட்டம்



அனுராதபுரத்திற்குரிய பகுதியில் உள்ள மதவாச்சியில் இருந்து 1330 சிங்கள குடும்பங்களை வவுனியா வடக்குடன் இணைப்பதன் மூலம் இன வீதாசாரத்தை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படும் அரசின் இரகசிய நகர்வை எதிர்த்தே குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



கனடாவில் திரிபு படுத்தப்படும் "மாவீரர் நாள்"



தாயக மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் 4,00,000 ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் தாயக நினைவுகளை சுமந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தங்களையும் மிஞ்சி, எவ்வளவே குடும்பசுமைகளுக்கு அப்பாலும் (2004ற்கு முன்) தமிழனுக்கு நாடு வேண்டும், தமிழீழ விடுதலைப் போராட்டம் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் காலத்தில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவும் தங்களையும் மீறி தங்களுடைய சக்திக்கு மேலாகவும் உதவிகள் புரிந்தார்கள். ஆனால் அவற்றில் முழுமையாக சென்றடையாவிட்டாலும் 75 வீதம் சென்றடைந்ததாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் 2005ம் ஆண்டுக்குப்பின் கனடாவில் மக்களிடம் சேகரிக்கப்பட்ட பணத்தில் 20 வீதம் ஆன பணம் கூட நாட்டுக்கு சென்றடையவில்லை என்பதே உண்மை.

தற்போதைய விடயத்திற்குவருவோம்.

2009ம் ஆண்டுவரை ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் தமிழீழ விடுதலைக்காக தங்கள் இளமைக் காலங்களை துறந்த, தாய் தந்தையர் உறவுகளை விட்டு, சகல ஆசாபாசங்களையும் விட்டு விட்டு, உயிர் தமிழிற்காகவும் - உடல் மண்ணிற்காகவும் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனின் வழிகாட்டிலில் களமாடி வீரச்சாவை தழுவியவர்கள் எங்கள் மாவீரர்கள். அந்த வகையில் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் நாள் முதலாவது மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட்டது. 1989ம் ஆண்டு இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்பில் முழுத் தமிழீழ மண்ணும் இருந்த போதும் கூட மணலாற்றுக் காட்டில் வைத்து தலைவர் அவர்களால் தமிழீழ தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டே தமிழீழ மண்ணிற்காக வீரச்சாவை தழுவியவர்களுக்கான "மாவீரர் நாள்" வீர வரலாற்று முறை நடைமுறைக்கு வந்தது.

அந்தவகையில் உலகம் பூராகவும் தலைவர் காட்டிய வழியில் "மாவீரர் நாள்" என்ற சொற்பதத்துடனேயே ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27ம் நாளில் மண்ணிற்காக வீரச்சாவடைந்த மாவீரர்களின் நிளைவுகளை தாங்கி மாவீரர் நாள் நடை பெறுகிறது... ஆனால் 4,00,000 ஈழத்தமிழர்கள் வாழும் கனடாவில், நான்கு அல்லது ஐந்து பேர்களால் மட்டும் முடிவெடுக்கப்பட்டு "நினைவெழுச்சி நாள்" என்று 2009க்கு பிற்பட்ட காலத்தில் இச் சொற்பதம் இறுக்கமாக பாவிக்கப் பட்டு வருகிறது.

இந்த நாட்டில் "மாவீரர் நாள்" என்ற சொற்பதம் பாவிப்பதற்கோ அல்லது எமது பாரம்பரிய, தமிழருக்கே உரித்தான, தமிழரின் தேசியக் கொடியான புலிக் கொடியை ஏற்றி மாவீரர் நாள் மட்டுமல்ல எந்த செயற்பாட்டை செயவதாற்கும் இந்த கனடா நாட்டில் எந்த தடையும் இல்லை என்பதை ஆணித்தரமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். ஆகவே கனடா வாழ் தமிழ் மக்களை ஏமாற்றி, இவர்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தி தாங்கள் நினைத்தபடி மாவீர் நாளையும் கொச்சைப்படுத்தி நினைவெழுச்சி நாள் என்ற போர்வையில் மக்களையும், மாவீரர்களையும் ஏமாற்றாதீர்கள்.

நினைவெழுச்சி அகவம் கனடா என்று ஒரு குழுவை நியமித்து, அவர்கள் எடுப்பத தான் முடிவு என்றும் அதன்படி தான் செயற்படுவோம் என்று கூறுவதும் தமிழீழ மண்ணிற்காக வீரச்சாவடைந்த மாவீரர்களை சொச்சைப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

இப்படியான பெயர் மாற்றங்களும் - தான் தோன்றித்தனமான ஒரு சிலர் முடிவுகளும், தலைவரின் சிந்தனைகளுக்கும், தமிழீழத்திற்கும், மாவீரர்களின் கனவுகளுக்கும் செய்யப்படும் துரோகங்களாகவே கருத வேண்டியுள்ளது.

அகவம் என்ற போர்வையில் எடுக்கப்படுகின்ற முடிவுகள் நாட்டின் நலன் சார்ந்தவைகளாகவும், மாவீரர்களின் கனவுகளுக்கும், தலைவரின் சிந்தனைகளுக்கும் செயல் வடிவம் கொடுப்பவையாக இருக்க வேண்டுமே தவிர அவற்றை சிதைப்பவையாக இருக்கக்கூடாது என்பதே எமது வேண்டுகோள்.

இவ்வளவு காலமும் நாட்டிற்காக மக்களிடம் இருந்து பெறப்பட்ட பணம் எவ்வாறு நாட்டிற்கு போய் சேரவில்லையே அதேபோல், தலைவரின் பிறந்தநாள் விழா என்ற போர்வையில் சேகரிக்கப்படும் பணமாக இருந்தாலும் சரி, மாவீரர் நாளை நினைவெழுச்சி நாள் என்ற போர்வையில் கொண்டாடுபவர்களாக இருந்தாலும் சரி மக்களை ஏமாற்றாதீர்கள். மாவீரர் நாளில் சேரும் பணம் கொஞ்சமல்ல என்பதை கனடா வாழ் தமிழ் மக்களும் சரி, வியாபாரா நிலையங்களும் சரி புரிந்து கொள்ளுங்கள்.

ஆகவே, நினைவெழுச்சி அகவம் என்ற போர்வைக்குள் இருப்பவர்களே, மக்கள் மத்தியில் உங்கள் சுய இலாபத்திற்காக, சுய நலத்திற்காக மக்கள் மத்தியில் பய உணர்வை துாண்டாதீர்கள். கனடாவை பொறுத்தவரை எமது மாவீரர்களை கௌரவிப்பதையோ, தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வுகளை செய்வதற்கோ எந்தத் தடையும் இல்லை என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்கிறோம். ஆகவே 2021க்கான மாவீரர் நாளை "மாவீரர் நாள் 2021" என்ற பெயருடனே மாவீரர்களின் கனவை சுமந்தும், தமிழீழ மண்ணின் விடுதலைக்காக மடிந்த மாவீரர்களையும் கௌரவிப்போம். தமிழீழத் தேசியக் கொடி தமிழீழ மண்ணின் அடையாளம். தேசியக் கொடி ஏற்றத்துடன் நிகழ்வுகளை தொடங்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம். இவ் இரண்டையும் செய்ய முடியாதவர்கள் என்றால் எதுவுமோ செய்யாதிருங்கள். இவை இரண்டும் தமிழனுடைய அடையாளங்கள். தமிழனுடைய முகவரியை தொலைக்காதீர்கள். சிங்கள அரசின் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் குழுவாக செயற்படதீர்கள் என்பதே எமது வேண்டுகோள்.

-குமரன்-

கனடிய செய்திகள்

ஸ்காபரோ நிலக்கீழ் தொடர் வண்டிப் பாதை நீட்டிப்பு

21.10.2021

கனடிய வரலாற்றில் மிகப் பெரிய நிலக்கீழ் தொடர் வண்டிப் பாதை கட்டுமானமான, மூன்று தொடரி நிலையங்களைக் கொண்ட, ஸ்காபரோ தொடரி வழித்தட நீட்டிப்பினை ஒன்ராறியோ அரசாங்கம் அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளது. இப்புதிய நிலக்கீழ் வழித்தடமானது ஸ்காபரோ மக்களுக்கு வேண்டிய சிறந்த போக்குவரத்து வசதியினை வழங்கம்.

இத்திட்டத்தின் மூலம், இதன் கட்டுமான காலத்தில் ஆண்டு தோறும் 3000 வரையான வேலைவாய்ப் புகளை வழங்குவதுடன், இது முடிவடைந்த பின்னர் ஸ்காபரோ பகுதியிலிருந்து நகரத்தின் பிற பகுதிகளுக்கு வேலைக்கும் பள்ளிகளுக்கும் செல்வோருக்கு இலகு வான போக்குவரத்தினையும் வழங்கும் எனவும் மதிப் பிடப்பட்டுள்ளது.

மேற்படி நிலக்கீழ் வழித்தடத்தின் விரிவாக்கப் பணிகளின் முதற்கட்டமாக கெனடி தொடரி நிலையத்திலிருந்து மக்கோவன் வீதி - ஷெப்பேட் வீதி சந்திப்பு வரையான 7.8



கிலோ மீட்டர் நீட்டிப்புக்கான கட்டுமானப் பணிகள் இடம்பெறும். சமநிலை ஒப்பந்த வேலைகளின்படி கட்டமானப் பணிகள் இடம்பெறும்.

முதல்வர் போஃட் அவர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்துத் திட்டத்துக்கு கனடிய நடுவண் அரசு ஒப்புதல் அளித்ததுடன், ஒன்ராறியோ மாநிலத்தின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நான்கு நிலக்கீழ் வழித்தடத்திட்டங்களுக்கான செலவில் 40 சதவீதத்தினை - திகபட்சமான 10.7 மில்லியன் டொலர்களை வழங்குவதெனவும் ஒப்புக்கொண்டுள்ளது.



விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர்.
ஸ்காபரோ - றூஜ் பார்க்

தமிழீழத் தேசியக்கொடி நாளாக நவம்பர் 21 ஐ நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரகடனம்

அக்டோபர் 21, 2021

24-10-2021 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றிருந்த சிறப்பு அரச வை கூட்டத்தின் போது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிர தமர் வி.உருத்திரகுமாரன் அவர்களினால் இதற்கான தீர் மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக முரசறையப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மான நகலில் தெரிவிக்கப்பட்டதாவது,

நவம்பர் 21

தமிழீழத் தேசியக் கொடி நாள்

-

முரசறைவு

-

ஈழத்தமிழ் தேசத் தின் தேசியத்தை த தமிழீழத் தேசியக் கொடி வெளிப் படுத் துவத் தைக்கருத் தில் கொண்டு

- ஈழத்தமிழ் தேசத் தின் பண்பாட்டை, தமிழீழர் தேசியக்கொடி பிரதிபலிப்பதைக் கருத்தில் கொண்டு

- ஈழத்தமிழ் தேசத்தின் இறைமையை தமிழீழத் தேசியக்கொடி எடுத்தியம்புவதை நினைவில் நிறுத்தி

- நாளை மலர இருக்கும் தமிழீழத்தின் பொதுச் சின்னமாக தமிழீழத் தேசியக்கொடி மிளிர்வதை கருத்தில் கொண்டு

- தமிழீழத் தேசிய பண்பாட்டுக் கோவையில் நாடு உரு வாவதற்கு முன்பே நாட்டு மக்கள் முறைப்படி கொடிவணக்கம் செலுத்தி கொடிவணக்க பாடலை இசைத்து முதன்மை விழாக் களை, நிகழ்ச்சிகளை நடாத்துவத்தன் மூலம் தமிழீழ மண் தேசியக் கொடி வரலாற்றில் ஒரு புதுமை சேர்த்திருக்கின்றது என்ற கூற்றை கவனத்தில் எடுத்துக்கொண்டு

- தமிழீழத் தேசியக்கொடி மாவீரர்களின் குருதியால் நெய்யப் பட்டது என்பதையும் கருத்தில் கொண்டு

-தமிழீழத் தேசியக்கொடி, சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத்தை அமைப்பதில் எமக்குள்ள உறுதியை உலகிற்கு பறை சாற்றுவதை கருத்தில் கொண்டு

- கொடி வணக்கம் தேசப்பற்றுக்கு (Patriotism) வலுச் சேர்க்கும் என்பதையும் கருத்தில் கொண்டு

- நாளை மலரவிருக்கும் தமிழீழம் ஐக்கிய நாடுகள் சபை உட் பட அனைத்துலக பரப்பில் இறைமையினதும் சமத்துவத் தினதும் அடிப்படையில் மற்றைய நாடுகளுடன் நிமிந்து நிற்கும் என்ற செய்திக்கு கட்டியம் கூறுவதாக தமிழீழத் தேசியக்கொடி பறப்பதை கவனத்தில் கொண்டு

- எமது சுயநிர்ணய உரிமையையும், சுதந்திரத்தையும், இறையாண்மையையும் (to realize our sovereignty and L right to self determination) எமது போராட்ட வரலாற்றை இரண்டாம் தலை முறைக்கும் எதிர்கால சந்ததிகளுக்கும் எடுத்துச் செல்லும் சாதனமாக தமிழீழ தேசிய கொடி திகழ்வதை கருத்தில் கொண்டும்

- தாயகத்திலும் புலத்திலும் பரவி வாழும் ஈழத்தமிழர்களை ஒன்றுபடுத்தும் உன்னதமான கருவியாக தமிழீழத் தேசியக் கொடி திகழ்வதை கருத்தில் கொண்டும்

- ஓகஸ்ற் 31ம் தேதி, பிரித்தானிய உள்துறை அமைச்சால் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தடை தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிக்கும், தமிழீழத் தேசியக்கொடிக்கும் உள்ள வேறுபாட்டை குறிப்பதின் மூலம், தமிழீழ தேசிய கொடியின் தனித்துவத்திற்கு கிடைத்த உள்ளடக்கமான அங்கீகாரத்தை (implicit recognition) கவனத்தில் எடுத்துக்கொண்டு

- தமிழீழத் தேசியக் கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப் பிட்டவாறு எமது தேசியக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அழகுபடுத்துகின்றன. தனிப்பாங்கான தேசிய இனமான தமிழீழத் தேசிய இனம் தனது சொந்த மண்ணில் தன்னாட்சி அமைத்துக்கொள்ள விழைவது அதனது அடிப்படை அரசியல் உரிமையும் மனித உரிமையுமாகும். தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது, நியாயமானது என்பதையும் தமிழீழத்தேசம் எப்பொழுதும் அறத்தின் பக்கம் நிற்குமென்பதையும் மஞ்சள் நிறம் குறித்து நிற்கிறது என்பதை கருத்தில் கொண்டு

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட் டவாறு தேசிய விடுதலை பெற்ற தமிழீழத் தனியரசை அமைத்து விடுவதால் மட்டும் முழுமையான விடுதலையைப் பெற்றுவிட் டதாகக் கொள்ளமுடியாது. தமிழீழக் குமுகாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். சாதிய, வகுப்பு முரண் பாடுகள் அகற்றப்படவேண்டும். பெண்ணடிமைத்தனம் நீக்கப் படவேண்டும். இதற்குக் குமுகாய அமைப்பிற் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். சமன்மையும் சமதருமமும் குமுகாய நீதியும் நிலைநாட்டப்படவேண்டும். இத்தகைய புரட்சிகரமான குமுகாயமாற்றத்தை வேண்டி நிற்கும் எமது அரசியல் இலக்கைச் சிவப்பு நிறம் குறியீடு செய்கின்றது என்பதையும் கருத்தில் கொண்டு

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட் டவாறு விடுதலைப்பாதை கரடுமுரடானது சாவும் அழிவும் தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இவற்றைத் தாங்கிக் கொள்ளவும் விடுதலையடைந்தபின் ஏற்படப்போகும் நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு தேசத்தைக்கட்டியெழுப்பவும் பாதுகாக்கவும் உருக்குப் போன்ற உறுதியான உள்ளம் வேண்டும் அசையாத நம்பிக்கை வேண் டும் தளராத உறுதி வேண்டும். இவற்றைக் கறுப்பு நிறம் குறித்



துக் காட்டுகின்றது என்பதையும் கருத்தில் எடுத்து

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட் டவாறு விடுதலை அமைப்பும் மக்களும் தலைவர்களும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டு மென்பதை வெள்ளை நிறம் குறித்து நிற்கிறது என்பதையும் நினைவில் நிறுத்தி

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட் டவாறு எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பெற்ற புலிக்கொடி 1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவருகிறது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடி யிலுள்ள எழுத்துக்கள் நீக்கப்பெற்ற கொடி தமிழீழத் தேசியக் கொடியாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பெற்றது. தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர் நாளில் அதாவது 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் முதல் தடவையாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் அவரது பாசறையில் ஏற்றிவைக்கப்பெற்றது என்பதையும் நினைவில் நிறுத்தி

நவம்பர் மாதம் 21 ஆவது நாளை, தமிழீழத் தேசியக்கொடி நாளாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அசரவை ஒக் ரோபர் 24ம் நாளன்று முரசறைகின்றது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

தமிழக செய்திகள்



சிங்கள கடற்படையின் படகு மோதி தமிழக மீனவர் சாவு

அக்டோபர் 19.10. 2021

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த ராஜ்கிரண்(30), சுகந்தன்(30), சேவியர் (32) ஆகிய 3 மீனவர்ள் படகில் செவ்வாய்க்கிழமை காலை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, தங்கள் நாட்டு கடல் எல்லைக்குள் மீன்பிடிப்பதாகக் கூறி, இலங்கைக் கடற்படையினர் மீனவர் படகில் மோதி கடலில் மூழ்கடித்ததாக கூறப்படுகிறது. இதில் ராஜ்கிரண் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார். கடலில் தத்தளித்த சுகந்தன், சேவியர் ஆகிய இருவரையும் சிங்கள கடற்படையினர் கைது செய்தனர். ராஜ்கிரணின் உடலை தேடி வந்த நிலையில், அவரது சடலம் புதன்கிழமை அதிகாலை சிறீலங்கா கடற்பரப்பில் மீட்கப்பட்டது.



இந்நிலையில் ராஜ்கிரணின் உடலை தமிழகத்திற்கு கொண்டு வரவும், கைதான மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து மீன் வளத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், "புதிய தலைமுறை"க்கு அளித்த பேட்டியில் கூறுகையில், ""மீனவர் ராஜ்கிரண் உயிரிழந்த நிலையில் இலங்கையில் உள்ள அவரது உடலை தமிழகம் கொண்டுவர அனைத்து விதமான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அனைத்து பொறுப்பும் ஒன்றிய அரசிடம் உள்ளதால் அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறோம். இந்த விவகாரத்தில் நடவடிக்கைக் கோரி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

நானும் மத்திய இணை அமைச்சர் எல்.முருகனிடம் இறந்த மீனவரின் உடலை இந்தியா கொண்டு வரவும், சிறை பிடிக்கப்பட்டுள்ள இரண்டு மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் கோரிக்கை விடுத்துள்ளேன். இறந்த மீனவரின் சடலம் விரைவில் கோட்டைப்பட்டினம் கொண்டு வரப்பட்டு அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவித்தார்.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணவேண்டும்

இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக முதல்வர் கடிதம்

அக்டோபர் 01. 2021



இலங்கைக் கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவக் கப்பலை விரட்டிப் பிடிக்க முயற்சித்தபோது மூழ்கிப்போன கப்பலில் காணாமல் போன மீனவரை கண்டுபிடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு இன்று கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், "கடந்த 19.10.2021 அன்று மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் மீன்பிடிக் கப்பலை இலங்கை கடற்படையினர் துரத்தியபோது மூழ்கியது. அதிலிருந்து மூன்று மீனவர்களில் இரண்டு மீனவர்கள் காப்பாற்றப்பட்ட நிலையில், மீதமுள்ள ஒரு மீனவரை தேடும் பணி 19.10.2021 முதல் நடைபெற்று வருகிறது.

மீட்கப்பட்ட இரண்டு மீனவர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும், காணாமல் போன மீனவரை கண்டுபிடித்திடவும் உரிய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் இதுபோன்ற துயரச் சம்பவங்கள் நீண்டகாலமாக தொடர்ந்து நிகழ்ந்து வருவதால் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என வெளியுறவுத்துறை அமைச்சரை முதலமைச்சர் மு.க.

கீழடி கண்டுபிடிப்புகளை டிஜிட்டல் முறையில் தெரிந்து கொள்ளும் திட்டம், தொடங்கி வைத்தார் மு.க.ஸ்டாலின்

தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கீழடி விசைப்பலகை, தமிழி-தமிழிணையம் ஒருங்குறிமாற்றி, இ-முன்னேற்றம், தகவல் தொழில்நுட்ப நண்பன் உள்ளிட்ட திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (அக்.22) தொடங்கி வைத்தார்.

இந்த கீழடி விசைப்பலகை திட்டத்தின் மூலம் கீழடியில் தொல்லியல் ஆய்வின் மூலம் கிடைக்கப் பெற்ற தொன்மை வாய்ந்த கண்டுபிடிப்புகளை டிஜிட்டல் முறையில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களை மீளாய்வு செய்ய உதவும் வகையில் இ-முன்னேற்றம் திட்டமும், தகவல் தொழில்நுட்பத் துறையின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையிலும், தொழில்நுட்பத் துறையின் புதிய கண்டுபிடிப்புகள் அறிந்து கொள்ளவும் 'ஐடி நண்பன்' திட்டமும் உதவும்.



சிறீலங்கா சிங்கள கடல்படை கப்பல் மோதி மீனவர் உயிரிழப்பு சடலத்தை மீட்டுத்தர மீனவர்கள் போராட்டம்



அக்டோபர் 22, 2021

சிறீலங்கா சிங்கள கடற்படை ரோந்து கப்பல் மோதியதில் தமிழக மீனவர் உயிரிழந்ததை கண்டித்தும், உயிரிழந்த மீனவரின் சடலத்தை தமிழகத்திற்கு எடுத்து வரக் கோரியும் மீனவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் இருந்து கடந்த 18 ஆம் தேதி ராஜ்கிரண், சுகந்தன், சேவியர் ஆகிய மூன்று மீனவர்களும் மீன்பிடிக்கச் சென்றனர். அப்போது நடுக்கடலில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்களை கைது செய்ய முயன்றதாக கூறப்படுகிறது.

இதனால், இலங்கை கடற்படையினருக்கு அஞ்சி மீனவர்கள் கரை திரும்ப முயன்றபோது, ரோந்துக் கப்பல் மோதியதில், மீனவர்களின் மீன்பிடிப் படகு நடுக்கடலில் மூழ்கியுள்ளது. அதில் இருந்த சுகந்தன், சேவியர் ஆகிய இரு மீனவர்களை மீட்டு இலங்கை கடற்படையினர் கைது செய்த நிலையில், மாயமான மீனவரின் உடல் நெடுந்தீவு அருகே கரை ஒதுங்கியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள மீனவர்கள், கோட்டைப்பட்டினத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறி வருவாய் கோட்டாட்சியர் உறுதியளித்த போதும், அதை ஏற்க மறுத்து மீனவர்கள் போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

உயிரிழந்த மீனவரின் உடலை தமிழகம் கொண்டு வர வேண்டும் என்றும், கைதான இரு மீனவர்களும் நலமான இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், ராஜ்கிரணின் உடல் சொந்த ஊருக்கு வந்து சேரும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் உயிரிழந்தமீனவர் ராஜ்கிரணின் உடல் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு அடக்கம் செய்வதற்காக நேரடியாக இடுகாட்டிற்கு எடுத்து செல்லப்பட்டது









பிறப்பால் தமிழர் என்பதால் கர்நாடகாவில் எனக்கான அங்கீகாரம் மறுக்கப்படுகிறது

இயக்குனர் கு. கணேசன்

அக்டோபர் 22ஈ 2021



பிறப்பால் தமிழர் என்பதால் கர்நாடகாவில் எனக்கான அங்கீகாரம் மறுக்கப்படுகிறது - சர்வதேச திரைப்பட விழாவில் சாதித்த இயக்குநர் வேதனை.

பதினாறு திரைப்படங்களை இயக்கி சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் கர்நாடகாவில் புறக்கணிக் கப்படுவதாக இயக்குனர் கு.கணேசன் வேதனை தெரிவித் துள்ளார்.

இன்வெஸ்கோ மற்றும் அமெரிக்க திரைப்பட மையம் சார்பில் நடத்தப்பட்ட சர்வதேச திரைப்பட விழாவில் பல் வேறு நாடுகளில் இருந்து ஆயிரம் திரைப்படங்கள் திரையிடப்பட்டது. இதில் குழந்தைகள் எவ்வாறு கடத்த படுகின்றனர்? அவர்கள் படும் துயரங்களையும் உண் மை சம்பவங்களுடன் தத்ரூபமாக காட்சி படுத்தப்பட்ட "நம்ம மகு" என்ற திரைப்படம் முதலிடத்தை பெற்றது.

கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூருவை சேர்ந்த கு.கணேசன். என்பவர் இயக்கிய இந்த திரைப்படம் பல் வேறு நாடுகளில் நடைபெற்ற திரைப்பட விழாவில் 23 சர்வதேச விருதுகளையும் பெற்றது. இந்த விருதினை பெற்ற குழுவினருக்கு அமெரிக்கா திரைப்பட ஜாம்ப வான்கள் உயரிய மரியாதையினை வழங்கினர். இது தமிழர்களுக்கு கிடைத்த அங்கீகாரம் என்று மகிழ்ச்சி யுடன் தெரிவித்தார்.

மேலும் இது பற்றி கூறிய அவர், என் தந்தையின் பூர்வீகம் திருவண்ணாமலை என்ற பேதிலும் கர்நாடகத் தமிழ ரான நான் பிறந்து வளர்ந்தது முழுவதுமே தலைநகரான பெங்களூரில் தான். சினிமா மற்றும் சமூகத்தின் மீது அக்கறை கொண்ட காரணமாக, சமூக அக்கறையை வெளிப்படுத்தும் 16 திரைப்படங்களை தமிழ் மற்றும் கன்னட மொழிகளில் இயக்கினேன். சமீபத்தில் நான் இயக்கிய "நம்ம மகு" என்ற குழந்தைகள் நலன் குறித்த திரைப்படம் 23 சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பலரது பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

இன்வெஸ்கோ மற்றும் அமெரிக்க திரைப்பட மையம் சார்பில் நடத்தப்பட்ட சர்வதேச திரைப்பட விழாவில் 1000-ம் படங்களில் போட்டி போட்டு இந்த படம் திரையிடப்பட்டு முதலாவது இடத்தை பிடித்துள்ளது அதில் குழந்தைகள் நலன் சார்ந்த பல்வேறு விஷயங்களை சமூக அக்கறை யுடன் இத்திரைப்படம் வெளிப்படுத்தியுள்ளது. முதலா வதாக விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இந்தத் திரைப்படத்தை கர்நாடக திரைத்து றையைச் கர்நாடக அரசு அங்கீகரிக்க வில்லை என்பது தமிழர் என்ற ஒரு காரணமாக கூட இருக்கலாம். கர்நாடகாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் இத்திரைப்படத்தை திரையிட கூட அனுமதிக்கப்பட வில்லை. இது எனக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை தந்தது. இதற்கு காரணம் பிறப்பால் தமிழர் என்பதால் கர்நாடகா வில் தனக்கான முக்கியத்துவம் மறுக்கப் படுகிறது. இதுபோன்று எவ்வளவு பிரச்சினைகள் சவால்கள் வந்தாலும் சமூக நலனுக்காக தொடர்ந்து இதுபோன்ற திரைப்படங்களை எடுத்துக் கொண்டு இருப்பேன்.

மேலும் என்னுடைய சர்வதேச பாராட்டுகள் அனைவ ருக்கும் சென்று சேரவும் சிறந்த படைப்பு மக்களை சென்று சேரவும் இதனை வெளியிட பொருளாதாரத்தில் முன்னே றிய நல் உள்ளம் படைத்தவர்கள் உதவிட வேண்டுகி றேன். இது பற்றி கர்நாடகா முதல்வரை சந்தித்து திரைப் படம் வெளியாக உதவி கோர இருப்பதாக தெரிவித்த அவர், இத்திரைப்படத்தை தமிழில் மனிதம் என்ற பெயரில் தயார் செய்து சென்சார் சான்றிதழ் பெறப்பட் டுள்ளது. விரைவில் திரையிட உள்ளதாகவும் விநியோ கஸ்தர் முன்வந்தால் இப்படத்தை இலவசமாக திரையிட வழங்குவதாகவும் கூறினார்.

உலக செய்திகள்

ஆப்கானிஸ்தானில் தற்கொலைத்தாக்குதல் பெருமளவானனோர் பலி

அக்டோபர் 16, 2021

ஆப்கானிஸ்தானில் பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற தற் கொலைத் தாக்குதலில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள் ளதாகவும் பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்துள் ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலிபான்களின் கோட்டையாக விளங்கும் கந்தகார் நகரில் உள்ள ஷியா பிரிவு பள்ளிவாசலில் இந்த தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

கண்ணால் கண்ட சாட்சிகளின்படி இந்த தாக்குதலை மூன்று தற்கொலைதாரிகள் நடத்தியதாக ரொய்ட்டர் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

ஒருவர் கதவருகே குண்டை வெடிக்க வைத்ததுடன் மற்றைய இருவர் பள்ளிவாசலுக்குள் குண்டை வெடிக்க வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வெள் ளிக் கிழமை தொழுகை ஆதலால் பள் ளிவாசல் முழ மையாக வழிபாட் டாளர்களால் நிரம்பி யிருந்தது. குறைந் தது 15 அம்புலன்ஸ் வாகனங்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக AFP செய்தியாளர் கூறினார்.

தலிபான் சிறப்புப் படைகள் அந்த இடத்தைப் பாதுகாத்துள்ளன மற்றும் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவ இரத்த தானம் செய்யு மாறு மக் களைக் கேட் டுக் கொண் டதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரமும் வெள்ளிக்கிழமையன்று குந்தூஸ் நகரில் ஷியா பிரிவு பள்ளிவாசல் மீது ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் சுமார் 50 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.



"அமெரிக்க நகரங்களை அழிக்கும் அதி நவீன அணு சக்தி ஏவகணைகள் எங்களிடம் உள்ளன" பகிரங்க மிரட்டல் விடுத்த ரஸ்யா

அக்டோபர் 16, 2021

ரஸ்யாவின் புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஹைப்பர்சோனிக் அணு ஏவுகணைகள் அமெரிக்க நகரங்களை அழிக்கும் திறன் கொண்டவை என்று அதிபர் விளாடிமிர் புடின் எச்சரிக்கை செய்துள்ளார்.

மாஸ்கோவில் எரிசக்தி மன்றத்தில் உரையாற்றிய ரஸ்ய அதிபர்,

அமெரிக்காவில் உருவாக்கப்பட்டதை விட ஐந்து மடங்கு வேகமாக பறக்கும் ஆயுதத்தை, தனது நாடு உருவாக கியிருப்பதாக கூறினார்.

அதே நேரத்தில், ரஸ்யா யாருக்கும் தீங்கு செய்ய விரும்பவில்லை என்றும் கூறினார்.

"மேக் 3 (Mach 3) அல்லது அதற்கு மேற்பட்ட வேகத்தில் செல்லும் ஆயுதங்கள் அமெரிக்காவில் உருவாக் கப்படுகின்றன. எங்கள் அமைப்புகள் மேக் 20 -க்கு மேலான வேகத்தில் பறக்கின்றன.

இவை வெறும் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் அல்ல, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், இவை உங்களிடம் உள்ளதை விட மிக வலிமையான ஆயுதங் கள்" என புடின் குறிப்பிட்டார்.

இத்தகைய நவீன ஆயுத அமைப்புகள் ஏற்கனவே ரஸ்யாவிடம் உள்ளன என்பதோடு இதே போன்ற அமைப் புகள் மற்ற நாடுகளில் உருவாக்கப் பட்டு வருகின்றன, என விளாடிமிர் புடின் அவர் மேலும் கூறினார்.

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

அனைத்தையும் அடுத்துவரும் கல்வியாண்டிலேயே மீள்பதிப்பு செய்யவும் நடவடிக்கை எடுத்துவருகிறது. அத்துடன் உடனடியாக மேற்கொள்ளப்படக்கூடிய வகையில் இருந்த மாற்றங்களும் கூடுதல் விளங்கங்களும் சுற்றறிக்கை மூலம் கல்விக்கழகங்களுக்கு அறியத்தரப்பட்டுள்ளது. வரலாறு சார்ந்த பகுதிகள் பாடநூல்களின் பிற்பகுதியில் வருவதனால் அவை இரண்டாம் அரையாண்டிலேயே கற்பிக்கப்படவுள்ளன ஆகையினால், அதற்கு முன்னரே அதாவது இவ்வாண்டு இறுதிக்கு முன்னரே ஈழத்தமிழர் வரலாறு சார்ந்த பகுதிகளைச் செப்பனிட்டுக் கல்விக்கழகங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பாடநூல்களை மேலும் மேம்படுத்துவதற்கான கருத்துகளை **info@icedt.education** எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பியுதவும் வண்ணம் அனைவரையும் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எங்களுடன் இணைந்து தமிழ்க்கல்விப்பணியாற்ற முன்வருமாறு தமிழறிஞர்கள், கல்விமான்கள், மொழிப்பற்றாளர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கிறோம்.

தமிழீழ விடுதலைக்காக காலங்காலமாக உழைத்தவர்களை அணியாகக்கொண்ட அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை எப்போதுமே தமிழீழ விடுதலைக்கெதிரான எந்த ஒரு செயற்பாட்டையும் சகித்துக்கொள்ளாது என்பதுடன் தவறுகள் நடந்திருப்பின், உடனடியாக அவற்றைத் திருத்திக்கொள்ளவும் தயங்காது என்பதனையும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது தாய்மொழிக் கல்வியை மேலும் மேம்படுத்த அனைவரது ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கிறோம்.

நன்றி.

இவ்வண்ணம்.

அ. ஜெயராகவன்.
இணைப்பாளர்.
அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை.
13.10.2021.

கல்விக்கழகங்களின் பெயர்கள்:
1. தமிழ்க் கல்விக் கழகம், பேர்மனி
2. தமிழ்க் கலைக்கூடம், பெல்ஜியம்
3. அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், நோர்வே
4. இத்தாலி தமிழ்க் கல்விச்சேவை, இத்தாலி
5. அன்னை பூபதி கலைக்கூடம், பின்லாந்து
6. கரிகாலன் அறிவாலயம், சுவீடன்
7. மாலதி தமிழ்க் கலைக்கூடம், டென்மார்க்
8. தமிழ்க் கல்விச்சேவை, சுவிற்சர்லாந்து
9. தமிழ்க் கல்விச்சேவை, கனடா
10. திருவள்ளுவர் தமிழ்க்கல்வி கலைக்கழகம், நெதர்லாந்து
11. தமிழ் மொழி பண்பாடு மரபுரிமை மேம்பாட்டுக் கூட்டணி, பிரித்தானியா
12. தமிழ்க் கல்விச்சேவை, நியூசிலாந்து

தமிழால் இணைவோம்!
Email: info@icedt.education | coordinator@icedt.education

"தமிழீழ விடுதலைக்கு எதிரான எந்த ஒரு செயற்பாட்டையும் சகித்துக்கொள்ளோம்" வெளிவந்துள்ள அறிக்கை

அக்டோபர் 14. 2021

தமிழீழ விடுதலைக்காக காலங்காலமாக உழைத்தவர் களை அணியாகக் கொண்ட அனைத்துலக தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவை, எப்போதும் தமிழீழ விடுதலைக்கு எதிரான எந்த ஒரு செயற்பாட்டையும் சகித்துக்கொள்ளாது என்பதுடன், தவறுகள் நடந்திருப்பின் உடனடியாக அவற் றைத் திருத்திக்கொள்ளவும் தயங்காது என்பதை உறுதி யாக தெரிவித்துள்ளது.

12 நாடுகளின் கல்விக் கழகங்களுடன் ஒன்றிணைந்து, புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மாணவர்களின் தமிழ் மொழிக் கல்விக் கொள்ளைகளை வகுப்பது தொடர்பில் வெளிவந்த அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

தாய்மொழிக் கல்வியை மேலும் வலுப்படுத்த அனை வரதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ள அவர்கள், தங்களுடன் இணைந்து தமிழ் கல்விப் பணியாற்ற முன்வாருமாறு தமிழறிஞர்கள், கல்விமான்கள், மொழிப் பற்றாளர்கள் ஆகியோருக்கு அழைப்பும் விடுக்கப்பட் டுள்ளது.

இது தெடார்பில் அனைத்துலக தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது,

இலங்கை ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளர் உட்பட முக்கிய தலைவர்களை மனித குலத்திற்கு எதிரான குற்றத்திற்காக விசாரணை செய்யக்கோரும் மனு

– சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் தாக்கல்

அக்டோபர் 27, 2021

உத்தியோகபூர்வ சாராம்சம்

இந்த முறைப்பாடானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு நடத்துபவர் (Prose cutor of the Internatinal Criminal Court (ICC), ஏன் இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்த (சேர்ந்திருந்த) பின்வரும் நபர்களை புலனாய்வு செய்து, உரிய நேரத்தில் கைது செய்து, குற்றவிசாரணை செய்யவேண்டும் என்பதற்கான அடிப்படைகளைக் கொண் டிருக்கிறது.

1. கோத்தபாய ராஜபக்ச, சிறிலங்காவின் தற் போதைய ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப் புச் செயலரும்.

2. கமால் குணரட்ண, சிறிலங்காவின் தற் போதைய பாதுகாப்புச் செயலரும் சிறிலங்கா இராணுவத்தின் (SLA) முன்னாள் இரா ணுவத் தளபதியும்.

3. ஜகத் ஜெயசூரியா, சிறிலங்காவின் முன் னாள் இராணுவத் தளபதியும் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியும்.

4. 2002ம் ஆண்டு முதல் சிறிலங்கா பொலி ஸின் (SLP) பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி வகித்து வந்தவர்கள்.

5. சிசிர மென்டிஸ், சிறிலங்கா பொலிஸின் குற்ற விசாரணைப் பிரிவு (CID) மற்றும் பயங்காரவாத விசாரணைப் பிரிவுகளின் (TID) பிரதிப் பொலிஸ்மாஅதிபர்.

6. 2002ம் ஆண்டு முதல் சிறிலங்கா பொலி ஸின் விசேட அதிரடிப்படைப்பிரிவின் (STF) கட்டளை அதிகாரிகளாக செயற்பட்டவர்கள்.

Global Rights Compliance

சிறிலங்காவிலும் பிரித்தானியாவிலும் வாழும் ஏராளமான பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எதி ராக மேற்கொள்ளப்பட்ட (ஆட்கடத்தல்கள், சட் டவிரோதமான தடுத்துவைப்புக்கள், சித்திர வதைகள் ஆகிய செயற்பாடுகள் ஊடாக) வலுக் கட்டாயமாக நாடுகடத்தல், தாயகத்திற்கு திரும் பிச் செல்வதற்கான உரிமையினை மறுதலித் தல், துன்புறுத்துதல் ஆகிய மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு (Crimes against humanity of deportation (through under - lying acts of abductions, unlawful de - tention and torture), deprivation of right to return and persecution) மேலே குறிப்பிடப் பட்டுள்ள நபர்கள் பொறுப்பாக இருந்தார்கள் என்ற முடிவுக்கு வருவதற்கான நியாயமான அடிப்படையைக் காட்டிலும் மேலதிகமான ஆதாரங்களை இந்த முறைப்பாட்டில் உள்ள விபரங்கள் வழங்குகின்றன.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிரான, மிக மோசமான "வெள்ளை வான் கடத்தல் கள்" உட்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங் களைப் புரிவதில் நேரடியாக ஈடுபட்ட (குற்ற விசாரணைப் பிரிவு, பயங்கரவாக விசா ரணைப் பிரிவு, விசேட அதிரடிப்படை உட் பட்ட) சிறிலங்கா பொலிஸ் மற்றும் சிறிலங்கா இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் படைகள் மீது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அதி காரத்தினைச் செலுத்தும் பதவிகளை வகித் திருந்தார்கள் என்பதனை இந்த ஆதாரங்கள் காட்டுகின்றன.

அவர்களது செயற்பாடுகள் மற்றும் செயற்பாடு தவிர்ப்புக்கள் மூலமாக இந்த மாபெரும் கொடு ரங்கள் நடைபெறுவதற்கு இச்சந்தேகநபர் களே நேரடியாகப் பொறுப்பானவர்களாவர். இருந்தபோதிலும், இவர்களில் ஒருவர் கூட, இந்தக் குற்றங்களின் தீவிரத்தன்மை பாரதூர மானதாக இருந்தும், சிறிலங்காவில் குற்ற விசாரணைக்கோ அல்லது வழக்கு விசாரணைக்கோ உட்படுத்தப்படவில்லை.



இந்த அடிப்படையில், சர்வதேச நீதிமன்றுக்கு பொருத்தமான இந்த வழக்குகள் சர்வதேச நீதி மன்றத்தில் விசாரணைக்கு ஏற்றுக்கொள் ளப்படக் கூடியவை.

பாதிக்கப்பட்ட 200 இலங்கைத் தமிழர்கள் சார்பாக Global Rights Compliance LLP (GRC) என்ற சட்டவல்லுனர் அமைப்பினால் ரோமச் சட்டத்தின் 15ஆவது சரத்தின் (Article 7 of the Rome Statute) கீழ் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு நடத்து பவருக்கு இத்தொடர்பாடல் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. மேலும் இது தொடர்பான விசா ரணையினை ஆரம்பித்து, 2021 ஒக்ரோபர் 31 முதல் 2021 நவம்பர் 12 வரையில் கிளாஸ் கோவில் (Glasgow) நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 2021 காலநிலை மாற்ற மாநாட்டில் (COP26) கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படும் சிறிலங்கா ஜனா திபதி கோத்தபாய ராஜபக்சா மற்றும் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இதர நபர்களில் சிலர் உள்ளிட்ட சிறிலங்கா அதிகாரிகளை சர்வதேச அதிகார வரம்பு கொள்கையின் கீழ் கைது செய்வதற்கான பிடிவிராந்தை வெளியிடு வதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு பிரித்தானிய தேசியப் பொலிஸ் அதிகாரி களுக்கும் Global Rights Compliance LLP பிரதிநிதித்துவங்களை அனுப்பி வைத்துள் ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதர வாளர்கள் அல்லது உறுப்பினர்கள் என்று சிறிலங்கா அரசாங்கத்தால் கருதப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிராக, குறைந்தது 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சிறிலங்காவிலும் பிரித் தானியாவிலும் பரவலாகவும் திட்டமிட்ட ரீதி யிலும் மேற்கொள்ளப்பட்ட வலுக்கட்டாயமாக நாட்டை விட்டு வெளியேற்றுதல், மனிதா பிமானமற்ற ரீதியில் திரும்பிச் செல்வதற்கான உரிமையினை மறுதலித்தல், துன்புறுத்துதல் ஆகிய மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக முக்கியமான தகவல்களின் சுரக் கத்தினை இந்த முறைப்பாடு வழங்குகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான போர் நடந்து கொண்டிருந்த காலத்திலும் 2009 இல் அது முடிவுக்கு வந்தபின்னரும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக் குச் சொந்தமான சிறிலங்கா அரசாங்கத்தின் அதிகாரிகளால் ஆயிரக்கணக்கான உண்மை யான தமிழ் ஆதரவாளர்கள் அல்லது ஆதர வாளர்கள் என்று கருதப்பட்டவர்கள் அல்லது தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் திட்ட மிட்ட ரீதியில் கடத்தப்பட்டும், சட்டத்திற்குப் புறப் பாகத் தடுத்துவைக்கப்பட்டும் அல்லது சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டும் வந்துள்ளார்கள். இந்த முறைப்பாடானது பாதிக்கப்பட்ட 200 பேரின் சார்பாகவே மேற்கொள்ளப்படுகின்றது என்றாலும், இவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங் களானது மேலும் பல்லாயிரக்கணக்கானோர் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என் பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. இவ்வாறாக, சிறிலங்காவிலும் பிரித்தானியாவிலும் தமிழ் ஆண்கள், பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட, தொடர்ந்து மேற்கொள் ளப்பட்டுவருகின்ற கொடூரமான குற்றங்களின் ஒரு பகுதியையே இப்பாதிக்கப்பட்ட 200 பேரும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளமைப்பிற்குள்ளும் அதன் ஆதரவளர்களுக்குள்ளும் வேரூன்றிப் போயுள்ள தமிழ்ப் பிரிவினைவாதத்தினை எந்த வழியிலாவது இல்லாதொழிப்பதே இக் குற்றங்களைப் புரிந்த சிறிலங்கா அதிகாரி களின் முக்கிய நோக்கமாக இருந்துள்ளது / இருக்கின்றது. எனினும் ந்த அரசியல் நம்பிக் கையுடன் இருப் பவர்களுக்கும் அமைதி யையும் பாதுகாப்பையும் தாயகம் என்று தாம் அழைக்கும் ஒரு இடத்தினையும் தவிர வேறெ தையும் விரும்பாத ஆயிரக்கணக்கான சிறி லங்காவின் ஆண்கள், பெண்கள், சிறுவர் களுக்கும் இடையில் சிறிலங்கா அரசாங்கம் எந்த வொரு வேறுபாட்டையும் காட்டுவ தில்லை.

இவ்வாறாக, இன மற்றும் அரசியல் அடிப்படை யில் இக்குற்றச்செயல்களை சிறிலங்கா அர சாங்க அதிகாரிகள் மேற்கொள்கையில், உண் மையில் அவர்கள் இனப்பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் நடவடிக்கைகளையே புரிந்திருக் கின்றார்கள். தாங்கள் எதிர்கொண்ட துன்புறுத் தல்களின் கொடூரத்தன்மை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் சிறிலங்காவை விட்டு வெளியேறி, பிரித்தானியாவில் புகலிடம் கோருவதைத் தவிர அவர்களுக்கு வேறெந்தத் தெரிவையும் விட்டுவைக்கவில்லை. அதன் தொடர்ச்சியாக, கோத்தபாய ராஜபக்சாவாலும் கமால் குணரட்ணவாலும் வழிநடத்தப்படும் சிறிலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்புப் படை களின் அச்சுறுத்தல்கள், சித்திரவதைகள், துன் புறுத்தல் கொள்கைகள் காரணமாக பாதிக்கப் பட்டவர்கள் திரும்பவும் தங்கள் சொந்த தாயகத்திற்கு திரும்பிச்செல்வதற்கான அவர் களது உரிமையினை அவர்களிடமிருந்து பறித்தொடுக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் மறுத லிக்கப்படுகின்றது. இந்த நபர்களும், ஒட்டு மொத்தமாக சிறிலங்கா அரசாங்கமும் ஆரம் பித்துள்ள கொள்கைகள் இன்றுவரை பாதிக் கப்பட்டவர்கள் தங்கள் சொந்த தாயகத்திற்கு செல்வதைத் தடுத்துக்கொண்டிருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களோ இல்லையே, அவர்கள் சிறிலங்காவுக்குத் திரும்பிச்சென்றால், அவர் கள் சித்திரவதை, காயங்கள் மற்றும் மரணத் தைச் சந்திக்கக்கூடிய ஆபத்தினை எதிர் கொண்டுள்ளார்கள். சிறிலங்காவிலுள்ள பாதிக் கப்பட்டவர்களின் குடும் பங்களுக்கு இழைக் கப்படும் தொல்லைப் படுத்தல்கள் மற்றும் அச் சுறுத்தல்களால் மட்டு மன்றி, பிரித்தானியாவி லேயே அவர்கள் மீது தொடர்ந்து மேற் கொள் ளப்படும் கண்காணிப் புக்கள், தொல்லைப்படுத் தல்கள், துன்புறுத்தல்கள் காரணமாகவும் பாதிக் கப்பட்டவர்கள் தொடர்ந் தும் துன் பத் துக் கு ஆளாகிவருகின்றார்கள். மேற் சொன் ன துன் பங்களுடன் சேர்ந்து, தங் களது வீடுகளை, கலாச்சாரத்தை, குடும்பங் களை இழந்து வெளிநாடு ஒன்றில் தங் களது வாழ்க்கையினைப் புதிதாக ஆரம்பிப்ப தி லுள்ள வேதனைகள் உட்பட, பிரித்தானி யாவில் அகதியாக இருப்பதிலுள்ள அவமதிப் புக்கள் மற்றும் சிரமங்களும் பாதிக்கப்பட் டவர்களுக்குக் கடுமையான மனப்பாதிப்புக் களை ஏற்படுத்தியுள்ளன. தொடர்ந்து ஏற்படுத் திவருகின்றன.

இந்தவகையில், இந்த நடவடிக்கைகள் மூல மாகத் தற்போதைய சிறிலங்கா அரசாங்கத் தினால் பிரித்தானியாவிலுள்ள பாதிக்கப்பட் டவர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தலுக்கு உள்ளாகிவருகின்றார்கள் என்பதே முக்கிய கரிசனையாகும். இந்த நடவடிக்கைகளும், தொடர்ந்துவரும் அக்கொடூரத்தனமும் பிரித் தானியாவிலுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட, தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதகுலத்திற்கு எதிரான மூன்று தனித்துவமான குற்றச்செயல் களுக்கு (வலுக்கட்டாயமாக நாட்டை விட்டு வெளியேற்றுதல், மனிதாபிமானமற்ற ரீதியில் திரும்பிச் செல்வதற்கான உரிமையினை மறு தலித்தல், துன்புறுத்துதல்) வலுச்சேர்ப்பதா கவே அமைகின்றன. ரோமச் சட்டத்தின் அரச பங்காளிகளாக ஐக்கிய இராச்சியம் திகழ் வதால், அது சர்வதேச குற்றவியல் நீதிமன் றத்தின் அதிகார வரையறைக்குள் வருவ துடன் மட்டுமன்றி, இன்னொரு அடிப்படை யிலும் – உலகளாவிய சட்டவரம்புக் கொள்கை களின் அடிப்படையிலும் – ஐக்கிய இராச்சியத் திற்கு வரும்போது அவர்களைக் கைதுசெய் வதற்கான அதிகாரத்தினைப் பிரித்தானியா வுக்கு வழங்குகின்றது.

இந்த முறைப்பாடு சுட்டிக்காட்டுவதுபோன்று, இரண்டு காரணங்கள் முக்கியமனவை. முத லாவது, வலுக்கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற்றுதல் என்பது தொடர்ந்து நடை பெறும் ஒரு குற்றச்செயலாகும், அதாவது மேலே குறிப்பிடப்பட்ட நபர்களின் செயற் பாடுகள் காரணமாகவும், சிறிலங்கா அதிகாரி களின் தொடர்ச்சியான துன்புறுத்தல் செயற் பாடுகள் காரணமாகவும் பாதிக்கப்பட்டவர் களை சிறிலங்காவிலுள்ள தங்களது தாயகத் திற்கு திரும்பிச் செல்வதைத் தடுப்பது தொடர்ந் து நடைபெறும்வரைக்கும் இக்குற்றச்செய லானது ஐக்கிய இராச்சிய நிலப்பரப்பிலேயே நடைபெறுக்கின்றது என்றே பொருள்கொள் ளப்படும். இரண்டாவது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதித்துறையால் அண்மை யில் உறுதிப்படுத்தப்பட்டது போன்று, தங் களது தாயகத்திற்கு திரும்பிச் செல்வதற்கான உரிமை மறுக்கப்படும் குற்றச்செயலானது பாதிக்கப்பட்டவர் தற்போது அகதியாக எங்கே இருக்கின்றாரோ அங்கேயே நடைபெறு வதாகவே கொள்ளப்படும், அதாவது இவ் விடயத்தில் அது ஐக்கிய இராச்சியத்தில் நடை பெறுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் கடத்தப் பட்டு, தடுத்துவைக்கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, துன்புறுத்தலுக்கு ஆளாக்கப் பட்டு (சிறிலங்காவிலும் பிரித்தானியாவிலும்), அதன்மூலமாக அவர்களது இன மற்றும் அரசியல் அடையாளங்கள் காரணமாக தங் களது தாயகத்திற்குத் திரும்பிச்செல்லும் உரி மை பறிக்கப்பட்டநிலையில் இருக்கின்றார் கள்.

மேலே குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படை



யில், இக்குற்றங்கள் தொடர்ந்தும் நடப்பதைத் தடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது தாயகம் திரும்பிச் செல்வதற்குரிய அவர் களுக்குள்ள உரிமையினை உறுதிப்படுத்து வதற்கும், உண்மையைத் தெரிந்துகொள் வதற்கும், தங்களைச் சித்திரவதைக்கு உள் ளாக்கியவர்கள் நீதிவிசாரணையை எதிர் கொள்வதைக் காண்பதற்கும், தங்களது இழப்பீட்டுத்தொகையினைப் பெற்றுக்கொள் வதற்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தின் வழக்கு நடத்துனரால் விசாரணை ஆரம் பிக்கப்படுவது அத்தியாவசியமானது என பாதிக்கப்பட்டவர்கள் வாதிடுகின்றனர்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private 1st Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

Manaja

manajaskitchen.ca

MANAJA'S KITCHEN

A Fusion of Indian & Sri Lankan Cuisine



மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.

Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party



அனைத்து தாயக சைவ
மற்றும் அசைவ உணவுகளுக்கு
உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட
நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்

FREE Delivery for orders over $150 in GTA

75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4

905.427.8263



BOROS CANADIAN
PAPER CONVERTING INC.



Alan Maniam
Director

647 299 2450

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

மாவீரர் நாள் பதாகைகளும் பிற வெளியீடுகளும்

**“நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்,
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்,
மாண்ட வீரர் கனவு பலிக்கும்,
மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்.”**
- தமிழீழ எழுச்சிப்பாடல் வரிகள்.
மாவீரர் நாள் போஸ்ரர்கள் பலவற்றில் இவ்வரிகளைக் காணலாம் -

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

ஒரு விற்பனைபொருள், நடக்க விருக்கும் நிகழ்ச்சி அல்லது வரவிருக்கும் முக்கிய நாள் பற்றிய செய்தியைப் பொது மக்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கும் அச்சு ஊடகம் என்று போஸ்ரர் (POSTER) வரையறை செய்யப் படுகிறது. இவ்வாங்கிலச் சொல்லிற்கு பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள விளம்பரங்கள், சுவரொட்டிகள் என்று தமிழில் விளக்கம் தரப் படுகிறது. போஸ்ரர், விளம்பரம் என்ற நிலை யைக் கடந்து தனியொரு கலைப் பிரிவாக இன்று இயங்குகிறது. பரந்துபட்ட ஓவியக் கலையின் ஒரு பகுதியாகவும் போஸ்ரர் கலை கணிப்பிடப்படுகிறது. பொதுவாகச் சுவரொட் டிகள் உயிரற்றவையாகவும், தற்காலிக மானவையாகவும் இடம்பெறுகின்றன. போஸ் ரர்கள் மூச்சும் வீச்சும் கொண்ட கலை வடிவ மாகத் திகழ்கின்றன.

போஸ்ரர் என்ற சொல்லிற்கு அர்த்த முள்ள தமிழ்ச்சொல் உருவாகும் வரை நாம் போஸ் ரர் என்று கூறுவோம். போஸ்ரர் பற்றிய ஆரம்ப வரலாறு கிடைக்கவில்லை, நிட்சயம் அது அச்சுக்கலையுடன் தொடர்புடையது என் பதை மாத்திரம் கூறிவைக்கிறோம். ஆகக் குறைந்தளவு சொற்களைப் பயன்படுத்திய வாறு படத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது போஸ்ரரின் இயல்பு. பார்வையாளர் மீது கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் போஸ்ரர் படம் தீட்டப்பட வேண்டும். படத் திலும் கூடிய கவன ஈர்ப்பைப் போஸ்ரரில் பொறிக்கப்பட்ட சொற்கள் பெறுமாயின் அது போஸ்ரரின் இலக்கை மழுங்கடித்துவிடும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு காலத்தில் மேற் கு நாடுகளில் தொழிற்புரட்சி ஆரம்பித்தபோது தொழிற்சாலை ஆக்கங்களைச் சந்தைப் படுத் துவதற்காக நவீன போஸ்ரர் கலை உரு வாகியது. பலவர்ண லிதோகிராபி அச்சுக் கலையின் தோற்றம் போஸ்ரர்களின் தரத்தை யும் கவர்ச்சியையும் தூக்கி நிறுத்தின. பிரான்சு நாட்டு ஓவியர் ஹென்றி தி தூலோஸ் லோத்றெக் (HENRE DE TOULOUSE - LAUTREC 1864-1901) தீட்டிய போஸ்ரர்கள் கலை உலகில் நிலையான இடம்பிடித்துள் ளன. ஜேன் அவ்றில் என்ற பிரெஞ்சுப் பாட கியை அவர் போஸ்ரர் ஓவியமாகத் தீட்டி தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் அழியாப் புகழ் தேடியுள்ளார்.

வையிடலாம். 1917ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவம் வெளியிட்ட போஸ்ரர் பற்றி இன் றும் பேசப்படுகிறது. இதில் மூன்று வண்ணங் கள் - கறுப்பு, சிவப்பு, வெள்ளை என்பன மாத் திரம் உள்ளன. போஸ்ரரைப் படிப்பவர்களை நோக்கி அமெரிக்க அரசை உருவகப்படுத்தும் “சாம் மாமா வின்“ (UNCLE SAM) உருவம் சுட்டுவிரலைக் காட்டிய படி “அமெரிக்க இராணுவத்திற்கு (நான்) உன்னை வா என்கி றேன்“ என்கிறது. இந்தச் செய்தி பெரிய கொட் டை எழுத்துக்களிலும், அண்மையிலுள்ள ஆட்சேர்ப்பு மையம் என்ற சொற்கள் சிறய எழுத்துக்களிலும் அதில் காணப்படுகின்றன. ஒரு உருவமும் பத்து ஆங்கிலச் சொற்களும் கொண்ட இப்போஸ்ரர் போஸ்ரர் ஓவியர்களுக் கு வழிகாட்டியாக அமைகிறது.

பொதுவுடமை நாடுகளிலும் சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகளிலும் மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் பிரசாரப் போஸ்ரர்கள் நிரந்தரமாக வைக்கப்படுகின்றன. முன்னாள் சோவியத் ஒன்றியம், செஞ்சீனா ஆகியவற்றில் இந்த வழமை இருப்பது கண் கூடு. எளிதாகப் பார்க்கக்கூடிய உயரத்தில் இப்போஸ்ரர்கள் பொருத்தப்படுவதால் அவற்றைப் பார்க்காமல் செல்வது கடினமாக இருக்கும். இதை ஒரு வகை மூளைச்சலவை என்றும் சொல்லலாம். “உலகத் தொழிலாளர்களே ஒன்றிணையுங் கள், கொமியூனிசத் தலைமை யைப் போற் றுங்கள்”, “தேசிய நலனுக்காகச்சேமியுங்கள்“, “ஒன்றுபட்டால் உண்ட வாழ்வு“ போன்ற செய் திகள் இப்போஸ்ரர்களில் பொதுவாகக் காணப் படுகின்றன. மக்கள் சமுதாயத்தை ஒன்றி ணைக்கும் வலு புகைப்படத்திற்கும் போஸ்ரர் களுக்கும் இருப்பதாக ஆய்வாளர்கள் கருது கின்றனர். இந்த நோக்கில் போஸ்ரர்கள் “சமுதாயச் சித்திரம்“ (SOCIAL ARTS) என்று அழைக்கப்படுகின்றன.

ஆசியாவில் எவ்வாறு விளம்பரம் செய்கிறார் கள் என்ற ஆய்வுநூலில் ஆசியாவின் 90 நாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டன. (HOW ASIA ADVERTIES BY JIM AITCHISON) இந்த நாடுகள் செய்யும் விளம்பரங்களின் தரம், கைக்கொள்ளும் வழிமுறைகள், சர்வ தேச பாணிகளுடன் ஒப்பீடு போன்றவை இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. “சிறீலங்கா வில் செய்யப்படும் வர்த்தக விளம்பரங்களில் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகச் செய்யும் பிரசாரத்திற்கு வலுவூட்டும் விதத்தில் அது மக்கள் பார்வைக்கும் பொது இடங்களில் வைக்கும் பிரசாரப் போஸ்ரர்கள் இடம்பெறு கின்றன. சிறீலங்காவில் உள் நாட்டுப்போர் நடந்த காலத்தில் சிங்கள இராணுவத்திற்காக ஒரு விளம்பர நிறுவனத்தால் நடத்தப்பட்ட பல தரப்பட்ட பிரசாரம் இராணுவத்தின் விம்பத்தை உயர்த்தியதாக மேற் கூறிய நூல் கருத்துத் தெரிவிக்கின்றது.

> *போஸ்ரர் ஒரு வாய்பேசாத தொடர்பு சாதனம் (NON ORAL COMMUNICATION TOOL). அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தைப் பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிகளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர்மமோ புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக்கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலிகளின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.*

தமிழீழ விடுதலைப்புலிகள் கிரமந்தவறாது முக்கிய நாட்களில் வெளியிடும் போஸ்ரர்கள் அனைத்துலக மட்டத்தில் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளன. எதிர்வரும் நிகழ்ச்சியை பொது மக்களுக்கு இப்போஸ்ரர்கள் நினைவுறுத்து கின்றன என்பது உண்மையே. ஆனால் மிகப் பெரியதொரு இன்னு மோர் விளக்கம் இது பற்றிக் கூறப்படுகிறது. விடுதலைப்புலிகள் நடாத்தும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போரில் மக்கள் யாபேரையும் உள்வாங்கும் நோக்கத் துடனும் இதற்கான கருத்தூட்டலுக்குமாகவே இவை வெளியிடப்படுகின்றன. விடுதலைப் புலிகள் தலைமையில் தமிழீழ மக்கள் நடாத் தும் விடுதலைப்போரின் முக்கிய குறியீடாக இப்போஸ்ரர்கள் கணிப்பிடப்படுகின்றன. மே லும் மக்களிடையே கலை உணர்வை ஏற் படுத்தும் நோக்கையும் அவை கொண்டுள் ளன. போர்ச் சூழலிலும் எம்மத்தியில் கலை வளரமுடியும் என்பதற்குச் சாட்சியமாக அவை அமைகின்றன. மக்கள் உணர்வுகளைச் சரி வரப் புரிந்துகொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் வெளியிடும் போஸ்ரர்கள் ஊடாக உணர்வுக்கு உருவமும் கலை வடிவமும் கொடுத்துள்ளனர்.



1986ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் முதன்முதலாக வெளியிடப்பட்ட போஸ்ரர்

முதலாம் உலகப்போர் காலத்தில் படைக்கு ஆட்சேர்க்கும் போஸ்ரர்கள் மேற்குநாடுகளில் வெளியிடப்பட்டன. அரும்பொருள் காட்சியகங் களில் அவற்றில் சிலவற்றை இன்றும் பார் ஒன்று மாத்திரம் உலக தரத்திற்கு இருக்கிறது. சிறீலங்கா இராணுவத்தின் ஆட் சேர்ப்பு மற் றும் சிறப்புச் செய்தி பற்றிய பிரசார விளம்பரங் கள் தான் அந்த ஒன்றாகும்” இராணுவம் அச்சு தமது இத்தகைய வெளியீடுகள் மூலம் தமிழீழத்தில் புதிய தொரு மரபைப் புலிகள் உருவாக்கியுள் ளனர். ஒவ்வொரு மரபும் ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பொதுத் தேவைக்காகவே உருவாக்கப்படுகின்றது. கலைப் படைப்புகளும் இந்த நியதிக்கு உட் படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் ஈழத் தமிழினத்தின் பொதுத் தேவைக்காகப் புலிகள் அவற்றை உருவாக்கியுள்ளனர். இதை THE COLLECTIVE EXPRESSION OF A PEOPLE DURING A PARTICULAR PERIOD IN HISTORY என்று ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் ஒரு மக்கள் இனத் தின் வெளிப்பாடாக அவை இடம்பெறுகின் றன. அவற்றை யார் தீட்டினார்கள் அல்லது வடிவமைத்தார்கள் என்று பார்க்க வேண்டிய தில்லை. எந்த இன மக்கள் வெளியிட்டார்கள், எப்போது, எதற்காக என்பதுதான் முக்கியம்.

இன்று போஸ்ரர் ஒரு தனித்துவமான கலை வடிவமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. போஸ்ரர் கலையின் சாரம் யாதெனில் அதை பார்ப்பவர் களுக்கு உடனடிப் புரிதல் ஏற்படுகின்றது. தமது தேவைகளுக்காகப் புலிகள் அதைத் தெரிவு செய்ததற்கு இது முக்கிய காரணமாக இருக்கலாம். புலிகளுடைய போஸ்ரர்கள் தத் ரூப ஓவியம் (REALISTIC ART) அல்ல. எதற் காக அது அச்சிடப்படுகிறதோ அந்த இலக்கை எட்டுவதற்காகவே அது வரையப்படுகிறது. போஸ்ரர் ஒரு வாய் பேசாத தொடர்பு சாதனம் (NON ORAL COMMUNICATION TOOL). அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தை பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிக ளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின் றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர் மமோ, புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக் கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலி களின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.

வருடா வருடம் கிரமம் தவறாது பின் வரும் தேசிய நிகழ்ச்சிகளைப் புலிகள் சிறப் பிக்கிறார் கள்:

1. கேணல் கிட்டு நினைவு நாள் - சனவரி 16
2. அனைத்துலகப் பெண்கள் நாள் - மார்ச்சு 05
3. அன்னை பூபதி நினைவு நாள் - ஏப்பிரல் 19
4. தமிழீழ மாணவர் நாள் - சூன் 06
5. கரும்புலிகள் நாள் - சூலை 05
6. தியாகி திலீபன் நினைவு நாள் - செப்தெம்பர் 26
7. பன்னிரு வேங்கைகள் நினைவு நாள் - ஒக்தோபர் 05
8. மாலதி, தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் - ஒக்தோபர் 10
9. மாவீரர் நாள் - நவம்பர் 27

இவற்றுள் மாவீரர் நாள் கூடுதல் முக்கியத்தும் வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதற் கு இரு காரணங்கள் உண்டு. அன்று மாவீரர் களின் துயிலும் இல்லம் சென்று சுடர் ஏற்றும் நாள். அடுத்தது தேசியத் தலைவர் அவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றும் மாவீரர் நாள் உரை அன்று வெளியாகிறது. மிகக் கூடுத லான போஸ்ரர்கள் வெளியிடப்பட்ட தேசிய



327 மாவீரர்களின் நினைவாக 1986 யூலை, 25இல் பொதுவாக வெளியிடப்பட்டது

தினமாக நவம்பர் 27 இடம் பெறுகிறது. மாவீரர்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட முதலாவது பொதுவான போஸ்ரர் 1986 சூலை 25ஆம் நாள் வெளிவந்தது. பெரியதொரு கடதாசியின் மேற் புறத்தில் நீலவண்ணமும் அதன்மேல் சிவப்பு எழுத்துக்களில் "தமிழீழ விடிவிற்காக இன்று வரை தம்மை அர்ப்பணித்துக்கொண்ட எமது இயக்கத்தின் தியாகச் சுடர்கள் முன்னூற்றி இருபத்தியேழு" என்ற வாசகம் காணப்படுகிறது. இதே போஸ்ரரில் நடு நாயகமாகப் பெரியளவில் தோளில் தொங்கும் ஆயுதத்துடன் ஒரு புலிவீரன் ஒவ்வொரு கையில் ஒரு சிறுவனையும் சிறுமியையும் அழைத்துச் செல்லும் காட்சி கறுப்பு மையால் தீட்டப்பட்டுள்ளது. போஸ்ரரின் அடிப்பகுதியில் பெரிய எழுத்துக்களில் "இது அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல உறுதியின் உறைவிடம் இது" என்ற உணர்ச்சி பொங்கும் வாசகம் 327 என்ற பெரிய வெள்ளை வண்ண எண்ணின் மேல் பொறிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் எண்ணிக்கையை புலிகள் ஒருபோதும் குறைத்தோ கூட்டியோ வெளியிட்டதில்லை. அவர்கள் செய்த தியாகத்தை உரிய முறையில் புலிகள் கௌவித்து வருகின்றனர். இது சம்பந்தமாக திகதியிடப்படாத போஸ்ரர் ஒன்றை வெள்ளைக் கடதாசியில் நீல எழுத்துக்களில் தேசியத் தலைவரின் படம் மற்றும் வாசகத்துடன் புலிகள் வெளியிட்டுள்ளனர். தேசியத் தலைவரின் வாசகம், "இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்ற பெற்றோர்களே! உங்களது குழந்தைகள் சாகவில்லை, சரித்திரமாகிவிட்டார்கள" என்கிறது. நவம்பர் 27 மாவீரர் நாளாகக்கொள்ளப்படுவதற்கு எமது விடுதலைப்போரில் களப்பலியான முதலாவது மாவீரன் லெப். சங்கர் காரணமாவர். இவர் வீரச்சாவடைந்த தினம் 1982 நவம்பர் 27. இவருடைய படம் தாங்கிய முழு அளவு போஸ்ரரை, வெளியீட்டுத் திகதி இடாமல் புலிகள் பிரசுரித்துள்ளனர். அதில் பின்வரும் வாசகம், "முற்றுகையில் முன் நின்றாய், முதற்சாவு நீ கண்டாய். லெப்டினன்ட் சத்திய நாதன் (சங்கர்/சுரேஷ்) தோற்றம் 19.06.1961, வீரமரணம் 27.11.1982" என பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்தும் மாவீரர் நாள் போஸ்ரர் 1990இல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இலங்கைத்தீவின் வரைபடம் பொறிக்கப்பட்டுள்ளது. அதை ஆண் பெண் போராளிகள் கடப்பாரை, சுத்தி போன்ற ஆயுதம் கொண்டு இரு கூறாக்கு கிறார்கள். இக்கறுப்பு வெள்ளைப் படத்தின்கீழ் கவிதை வடிவில் இவ்வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன:

செந்தமிழ்த் திசைகள் யாவும் சிவக்கும்,
இந்து மாகடலில் இன்னொரு நாடு பிறக்கும்.

அதே வருடம் நவம்பரில் இன்னு மோர் அதி முக்கியத்துவம் வாய்ந்த போஸ்ரர் வெளிவந்தது. இதில் வரிச்சீருடை தரித்த ஆண் பெண் போராளிகள் முன்னேறிச் செல்கிறார்கள். அவர்களுக்குப் பின்புறத்தில் எரிந்து கொண்டிருக்கும் சிதை ஒன்று காணப்படுகிறது. முன்னேறும் போராளிகளின் வலது புறத்தில் கல்லறைகள் தெரிகின்றன. வித்துடல்களை எரியூட்டும் மரபை விடுத்து கல்லறைகளைத் துயிலும் இல்லங்களில் எழுப்பும் பழந்தமிழர் மரபைக்கைக்கொள்ளும் மாற்றத்தை இது காட்டிநிற்கிறது.

மாவீரர் நாள் போஸ்ரர்களில் மிகப் பழையதும் முன்னோடியுமானதாக 1989 நவம்பர் வெளியீடு கருதப்படுகிறது. இப்போஸ்ரரில் கறுப்பு வண்ணம் ஆதிக்கம் செலுத்துகிறது. போஸ்ரரின் வலது மேற்புறத்தில் மஞ்சள் வண்ணத்தில் விடுதலைப்புலிகளின் உத்தி யோகபூர்வ இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இடதுபக்க கீழ்ப்புறத்தில் பச்சைவண்ண இலைகளுடன் கூடிய பெரிய சிவப்புநிற றோஜாப்பூ படம் பொறிக்கப்பட்டுள்ளது. போஸ்ரரின் வலது பக்கத்தில் மேலிருந்து கீழாகப் பின்வரும் கவிதை வரிகள் தரப் பட்டுள்ளன:

"களம் கண்ட தோழர்களே!
உலக வரலாற்று நியதியின்
ஒப்பற்ற சுதந்திரச் சிற்பிகளே!
எமது மக்களின் விடிவிற்காக
பயத்தை வென்றீர்கள், சுயத்தைக் பயத்தை
வென்றீர்கள்,
சுயத்தைக் கொன்றீர்கள்,
தர்மம் நீதி சொல்லும்
சரித்திரம் உங்கள் இலட்சியத்தைச்
சாகவிடாது,
உங்கள் உன்னதப் பாதையில் எமது
வீரப்பயணம் தொடர்கிறது,
பிறக்கப்போகும் புதிய நாட்டிற்கு,
புலிகளின் கல்லறைகள்
அத்திவாரமாகத் திகழும்'

மாவீரர்களின் கல்லறையை மையப்படுத்தும் முதலாவது போஸ்ரர் நவம்பர் 1991இல் வெளிவந்தது. இதில் ஒரு இளம் பெண், ஒரு மூதாட்டி, ஒரு சிறுவன் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தும் படம் வரையப்பட்டுள்ளது. கல்லறையில் சாற்றப்பட்டுள்ள துவக்கை சிறுவன் எட்டித்தொடுகிறான். கல்லறையில், "எம் மண்ணின் விடிவுக்காகப் போராடிய மாவீரர்கள் இங்கே விதைக்கப்பட்டுள்ளனர். எமது தாயகத்தின் பிறப்புக்காக வேங்கைகளின் இறப்புக்கள் தொடருகின்றன. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற வரிகளுடன் இக்கட்டுரையின் தலைப்பில் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்று தொடங்கும் கவிதையும் பொறிக்கப்பட்டுள்ளன. இதே வருடம் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மக்கள் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, மாவீரனின் வித்துடலை புலி வீரர்கள் சுமந்து செல்லும் ஓவியம், குத்தியதுவக்கு தொப்பி இராணுவ மரியாதைச் சின்னம் ஆகியவற்றுடன் ஒரு சிறந்த போஸ்ரரை வெளியிட்டுள்ளது. மேலும் அதே வருட மாவீரர் நாளுக்கெனத் தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்த விசேட செய்தியும் பிறிதோர் போஸ்ரராக வெளியிடப் பட்டுள்ளது.

"இழப்புக்களும் அழிவுகளும்
எமது ஆன்ம உறுதிக்கு
உரமாக அமைந்துவிட்டால்,
உலகத்தில் எந்த சக்தியாலும்
எம்மை அடக்கிவிட முடியாது."

இப்போஸ்ரரையும் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ளனர்.

1992ஆம் ஆண்டு மாவீரர் நாளைச் சிறப்பிக்கும் விதமாக ஐந்திற்கும் மேற்பட்ட போஸ்ரர்கள் வெளியிடப்பட்டன. முதலாவதில்

"அங்கம் முழுவதும் துடிக்கும் – புலி
ஆக்கினிக் குழியிலும் குதிக்கும்
சிந்தும் குருதி தெறிக்கும் – அதில்
செந்தமிழீழம் பிறக்கும்"

என்ற கவிதை வரிகள் அச்சிடப்பட்டுள்ளன. இரண்டாவதில் கல்லறைகளுக்கு நடுவே வானளாவிய குன்றுபோல் கையில் ஆயதத்தோடு ஆண் பெண் இருபாலாரும் உயர்ந்து நிற்கிறார்கள். உச்சியில் ஒரு மரக்கன்று தழைக்கின்றது அதன்கீழ்:

" வாழையடி வாழை என
மாவீரர் வழிவந்தோம்
விழவிழ எழுந்து – நம்
தமிழீழ மண் மீட்போம்"

என்ற பாடல் வரிகள் காணப்படுகின்றன. மூன்றாவது போஸ்ரர் மட்டக்களப்பில் வெளியிடப்படுகிறது. இதில் "தமிழீழ தேசிய வீரர் நாள், தமிழீழ எழுச்சி நாள், தமிழீழ விடுதலையின் வீரமிகு திருநாள், தாய் மண்ணின் விடுதலைக்காய் வீரகாவியமான மா வீரர்களே உங்கள் வரலாறு என்றும் நிலையானது" என்ற நீண்ட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

1992ஆம் ஆண்டின் நான்காவது போஸ்ரர் மிகவும் புதுமையானது. பூகோள உருண்டையில் இருந்து தமிழீழம் பிறக்குமாப் போல் சித்திரம் இதில் வரையப்பட்டுள்ளது. ஒரு ஆண் ஒரு பெண் போராளிகள் உயர்த்திய சுடுகலன்களுடன் நிற்கிறார்கள். சிவப்பு வர்ணத்தில் "செந்தமிழீழத் திசைகள் யாவும் சிவக்கும், இந்து மாகடலில் இன்னொரு நாடு பிறக்கும்" என்ற வரிகள் போஸ்ரரின் மேற் பகுதியிலும், "உலகமே எங்கள் உணர்வைப் புரிந்து கொள்" என்ற சொற்கள் அதன் கீழ்ப் புறத்திலும் தீட்டப்பட்டுள்ளன. ஐந்தாவது மிகவும் எளிமையாக வெள்ளை சிவப்பு வண்ணங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. உயரத்தில் தெரியும் நட்சத்திரங்களை நோக்கி மனிதப் பாதச்சுவடுகள் செல்கின்றன. நடுவே நீல வண்ணத்தில் ஆயுதமேந்திய கரம். அதன் கீழ் மீண்டு மொரு பாதச்சுவடு, அதில் மூன்று புலி வீரர்கள் நடந்துசெல்கிறார்கள்.



தமிழீழ வரைபடமும், நிறுத்தியவாளும், உயர்த்திய முஷ்டியும் படமாக வரையப்பட்டுள்ளன. ஆதன்கீழ்:

"நம்புங் கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் போஸ்ரரின் அடிப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள் ளது.

கடந்த தொண்ணூறுகளில் தமிழீழத் தேசியக் கொடியின் வண்ணங்களான மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நாநிறங்களை முக்கிய கவனமெடுத்து மாவீரர் நாள் போஸ்ரர்களில் பயன்படுத்தும் வழமை தோன்றியது. மஞ்சள் எமது விடுதலைப்போரின் நியாயப் பாட்டையும், சிவப்பு எமது சமுதாயத்தில் செய்யப்படவேண்டிய புரட்சிகர மாற்றங்களையும், கறுப்பு விடுதலை இலட்சியத்தில் எமது உறுதிப்பாட்டையும், வெள்ளை எமது அமைப்பு, எமது போராட்டம் ஆகியவற்றின் தூய்மையையும் காட்டுகின்றன.

முதலாவது போஸ்ரரில் கல்லறைகள் வரையப்பட்டுள்ளன. சில கல்லறைகள் திறந்தபடி விடப்பட்டு அதில் சீருடைதரித்த மாவீரர் உறங்கும் மெய்சிலிர்க்கும் காட்சி சித்திரமாக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் தீபங்கள் எரிகின்றன. போஸ்ரரின் அடிப்பகுதியில் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்று தொடங்கும் பாடல் வரிகள் அச்சிடப்பட்டுள்ளன. இரண்டாவது போஸ்ரரில் நான்கு கல்லறைகள், ஏழு தீபங்கள், சீருடை தரியாத ஒரு ஆண் ஒரு பெண் இளவயதினர், உயர்த்திப் பிடித்த தீப்பந்தங்கள் என்பன கூட்டாக வரையப்பட்டுள்ளன. இப்போஸ்ரரில் பின்வரும் பாடல்வரிகள் பதிவாகியுள்ளன:

"அதிர்வோடு மணியோசை நள்ளிரவு கேட்கும்,
தீச்சுடர்கள் உயர்ந்து உங்கள்
இலட்சியத்தைக் காட்டும்,
கனவோடு சென்றவரே உங்கள் வழி
தொடர – புலுக்
கால்கள் வந்தெங்கள் அணியுடன்
சேரும்."

மார்க் தோபி (MARK TOBEY) என்ற கலை விமர்சகர் கூறுவதுபோல் ஒரு ஓவியத்தின் உட்பொருள் காலம், இடம், வரலாறு என்பனவோடு பிணைந்துள்ளது. அது மனித குலத்தின் உள்ளார்ந்த நம்பிக்கைகளோடு தொடர்புபட்டது. புலிகளுடைய மாவீரர் நாள் போஸ்ரர்கள் இவ்வுண்மைகளை உணர்த்துகின்றன. அவை எமது இனத்தின் வரலாறாகவும், சமூகச் சித்திரமாகவும் இடம் பெறுகின்றன. எளிமையும் அத்தியாவசியங்களுக்குள் சுரக்கப்பட்ட சிக்கனமும் கொண்டவையாக அசாதாரண கலையுணர்வோடு அவை மிளர்கின்றன. அவற்றின் கற்பனைகளும் உருவங்களும், குறியீடுகளும் எமது விடுதலைப் போரில் இருந்தே பெறப்பட்டன. அவற்றைப் போரியல் ஆவணமாகக் கருதுவதில் தவறில்லை.

ஒரே செய்தியைச் சொல்லும் மூன்று போஸ்ரர்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை 1994இல் வெளியிட்டுள்ளது. முதலாவது போஸ்ரரின் வலது மேற்பகுதியில் ஒலிக்கும் மணியின் படமும், இடது மூலையில் தமிழீழ வரைபடமும், நடுப்பகுதியில் ஒரு தொகுதி தீபங்களும், தீபச்சுவாலையில் மாவீரர் முகங்களும் காணக் கூடியதாக இருக்கிறது. இதில் பின் வரும் பாடல் பொறிக்கப்பட்டுள்ளது:

"விடியும் வரையும் விடியும்
வரையும் தொடரும்
எங்கள் பயணம்
சுடரில் தெரியும் முகங்கள்
நினைவில் இரவில்
மணிகள் அசையும்"

இரண்டாவது போஸ்ரரில் மலர்தூவிய ஒற்றைக் கல்லறையும், முன்னேறிச் செல்லும் பள்ளிச்சிறுவர்களும், தமிழீழ வரைபடமும் தீட்டப்பட்டுள்ளன. பின்வரும் வரிகள் சிவப்பு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. "ஒளிகள் சுடரும் வழியில் இனியும் பயணம் தொடரும், விடியும் பொழுதில் இளைஞர் உலகம் சரிதம் எழுதும் எழுதும." மூன்றாவது மிகப் பிரமாண்டமான போஸ்ரராக இடம்பெறுகிறது. திறந்த கல்லறையில் சீருடையுடன் உறங்கும் புலி வீரர் படமும், குத்திய துவக்கும் அதன்மேல் தொப்பியும், கரம் உயர்த்திய உருவங்களும், தீபங்களும் இதில் காணப்படுகின்றன. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்று தொடங்கும் பாடல் அதில் பிரசுரமாகியுள்ளது.

1995ஆம் ஆண்டிற்குப்பின் தமிழீழ வரலாறு புதிய திருப்பம் காண்கிறது. இடப் பெயர்வும் போர் அனர்த்தங்களும் எம்மைவாட்டுகின்றன. என்றாலும் நாம் உறுதி தளரவில்லை. இதை 1996ஆம் ஆண்டின் மாவீரர் நாள் போஸ்ரர் எடுத்துக் காட்டுகிறது. மஞ்சள் வட்டத்திற்குள் வானுயர்ந்து நிற்கும் எமது தேசியக் கொடியின் படம் இதில் கண்ணைக் கவருகிறது. போஸ்ரரின் நடுப்பகுதியில் கல்லறைகளும், எழும்பி நிற்கும் மனிதக்கரங்களும், எரியும் தீபங்களும் காட்சி தருகின்றன. கீழப்பகுதியில் புலி இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் இதில் மீண்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 1996 தொடக்கம் எமது தேசியப் பத்திரிகையான ஈழநாம் மாவீரர் நாளைச் சிறப்பிக்கும் விதத்தில் பத்திரிகை இணைப்புக்களாக சிறிய போஸ்ரர்களை வெளியிடுகின்றன.

1998 இல் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் இரு வெளியீடுகள் தோன்றின. பிரகாசமான பல வண்ணங்களின் கலவையில் தீட்டப்பட்ட ஒரு வித்தியாசமான போஸ்ரரை மட்டு – அம்பாறை அரசில்துறை வெளியிட்டது. இதில் தடித்த நீலம், பச்சை, கறுப்பு, மஞ்சள் வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலே பறக்கும் புலிக்கொடி, தமிழீழ வரைபடம், நடுவே கல்லறைகள், குத்திய துவக்கின்மேல் தொப்பி, கீழே "மாவீரர்களின் இரத்தத்தால் எமது வரலாறு எழுதப்படுகின்றது" என்ற பெரிய சிவப்பு எழுத்துக்களும் காணப்படுகின்றன. இரண்டாவது 1998 ஆண்டுப் போஸ்ரரின் நடுவே பச்சை நிறத்தில் ஒரு மாபெரும் விருட்சமும் அதில் தமிழீழ வரைபடமும் இடம்பெறுகின்றன. கறுப்பு வெள்ளை வண்ணத்தில் மாவீரர் கல்லறைகளும், தீபங்களும், கல்லறைகள் மீது சிவப்பு மலர்களும் போஸ்ரரின் நடுப்பகுதியில் தீட்டப்பட்டுள்ளன. புலி இலச்சினையுடன் பின்வரும் வரிகள் கீழே காணப்படுகின்றன:

"வேராக விழுதாக விடுதலைப் போர்
தாங்கும் – மாவீரர்
உம் கனவுகள் விரைவில்
நிறைவேறும்"

தமிழீழ விடுதலைப்புலிகள் 1999 ஆம் ஆண்டின் மாவீரர் நாளுக்காக வெளியிட்ட போஸ்ரர் நாம் விமானப்படைப் பலத்தை பெறும் கட்டத்தை நெருங்கும் செய்தியைக் கூறுகிறது. நீல வானத்தில் பறக்கும் விமானத்தில் இருந்து இரு புலிப்போராளிகள், ஒரு பெண் ஒரு ஆண், மாவீரர் கல்லறைகள் மீது பூச்சொரியும் காட்சி இதில் வரையப்பட்டுள்ளது. கல்லறைக்கு இரு பக்கமும் ஆயுதம் தரித்த இரு போராளிகள், ஒரு ஆண், ஒலு பெண் காவல் நிற்கின்றனர். கல்லறைகள் தமிழீழ வரைபடத்தின் மீது எழுப்பப்பட்டுள்ளது. தீபங்கள் பிரகாசமாக எரிகின்றன. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் வரிகள் இதில் அச்சிடப்பட்டுள்ளன.

"நெய் விளக்கு ஏற்றி
நினைவுக்குப் பூச்சொரிந்து
கைகூப்பித் தொழுது
கல்லறையில் தாழ் பணிவோம்"

என்று கூறி நிறைவு செய்கிறோம். வளப் பற்றாக்குறையாலும் போஸ்ரர்கள் வரையப்பட்ட கடதாசியின் தரக்குறைவாலும் எமது வெளியீடுகள் பல சிதையும் தறுவாயில் இருக்கின்றன. எமது வரலாற்றுச் சான்றுகளை இவற்றை நுண்படப் பிரதிகளாக்கிப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு.

-விடுதலைப்புலிகள் - கார்த்திகை 2004

தமது இத்தகைய வெளியீடுகள் மூலம் தமிழீழத்தில் புதியதொரு மரபை புலிகள் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மரபும் ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பொதுத் தேவைக்காகவே உருவாக்கப்படுகின்றது. கலைப்படைப்புக்களும் இந்த நியதிக்கு உட்படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் ஈழத்தமிழினத்தின் பொதுத் தேவைக்காகப் புலிகள் அவற்றை உருவாக்கியுள்ளனர். இதை THE COLLECTIVE EXPRESSION OF A PEOPLE DURING A PARTICULAR PERIOD IN HISTORY *என்று ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் ஒரு மக்கள் இனத்தின் வெளிப்பாடாக அவை இடம்பெறுகின்றன.*



முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த
இனப்படுகொலைகளின் நினைவு
நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும்
மற்றும் எழுத்தார்வம் மிக்க
வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம்,
சமூகம், இலக்கியம் சார்ந்ததாக
இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com









மனித வரலாறும் நினைவுச் சின்னங்களும்

புவி வரலாற்றோடு ஒப்பிடுகையில் தனி மனித ஆயுட்காலம் ஒரு நொடிப் பொழுதிற்குச் சம மானது. இருப்பினும் இக்குறுகிய காலத் திற்குள் அவன் நாட்டிய சாதனைகளும் படைத்த ஆக்கங்களும் காலத்தை வென்று நிற்கின்றன. அவை மனித வரலாற்று நிலை யைக் கடந்து புவி வரலாறாக இடம் பெறு கின் றன. மனிதன் ஆக்கியவை இரு வகைப் படுகின்றன. ஒன்று அவன் தனித்தோ கூட் டாகவோ தனது வாழ்நாளில் உருவாக் கியவை. இரண்டு அவன் இல்லாக் காலத்தில் அ வ ன் நி னை வ ா க ப் பி ற ர் உருவாக்கியவை. புவியில் பரந்து பட்டுச்செறிந்து காணப்படும் மனித ஆக்கச் சான்றுகள் இவ்விரு தலைப் பின் கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன. முன் னைய மனிதன் கட்டிய பல வழிபாட்டுத் தலங்கள், அரண்மனைகள், நிர்வாக மையங் கள், கல்லறைகள், நினைவுத் தூபிகள் போன் றவை இன் றும் நிலைத்து நிற்கின்றன. அதே போல் அவன் படைத்த இலக்கியங்கள், தீட்டிய ஓவியங்கள், செதுக்கிய சிற்பங்கள் மற்றும் இன்னோரன்ன கைவினைப் பொருள்கள் மனித ஆக்கத் திறனுக்குச் சான்



று

பகர்ந்த வாறு நிலை பெறுகின்றன. ஆக்கங்களுக் கான மூலப்பொருள்களை மனிதன் களிமண், கல், சுதை, உலோகம், மரம் ஆகியவற்றி லிருந்து பெற்றுள்ளான்.

கிறிஸ்து சகாப்தத் திற்கு முந்திய புராதன காலத்தில் வாழ்ந்த மனிதன் உருவாக்கிய அதிசயங்கள் ஏழு என்று வழமை யாகப் பட்டியலிடப்படுகிறது. அவற்றுள் ஒன்றுமாத் திரம் இன்றும் நிலைத்து நிற்கிறது. ஏனை யவை அழிந்துவிட்டன. கீசா பிரமிட் (GIZA PYRAMID) என்று அழைக் கப்படும் இப் பிரமாண்ட அமைப்பு எகிப்து மன்னன் கூபு (KHUFU) வின் கல்லறையாகக் கட்டப்பட்டது. இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட இப் பிரமிட் உலகின் மிகப் பெரிய கல்லறை என்று சிறப்பிக்கப்படுகிறது. பிரமிட் என்பது சதுர வடிவிலான அடித்தளத்தில் நான்கு பக்கமும் முக்கோணமாக உயர்ந்து உச்சியில் ஒன்று சேரும் உருவ முடையது. இப்பிரமிட்டின் அடித்தளம் 13 ஏக்கராகும். 2,500,000 நன்கு வெட்டிச் செதுக்கப்பட்ட கற்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. இதன் உயரம் 451 அடி. ஒவ்வொரு கல்லின் எடை இரண்டரைத் தொன். எகிப்தின் கீசா என்ற இடத்தில் இருப்பதால் அது கீசா பிரமிட் எனப் படுகிறது.

அடுத்த அதிசயம் பபிலோனின் தொங்கு தோட்டம் (THE HANGING GARDENS OF BABYLON) என்று அழைக்கப்பட்டது. 2,500 வருடங்களுக்கு முன்பு இரண்டாம் நெபுட் சாட்நெசர் மன்னன் (NEBUDCHADNE

ZZAR - II) தனது இளம் மனைவியின் மகிழ்ச் சிக்காக இதை அமைத்தார். யூபிரேட்டிஸ் நதியோரத்தில் 350 அடி உயர மண் குன்றை எழுப்பி அதில் வெட்டிய படிக்கட்டுகளில் ஒரு பூந் தோட்டத்தை உருவாக்கி அதற்கான நீர்ப் பாசன வசதியையும் செய்வித்தான். காலப் போக்கில் இத்தோட்டம் முற்றாக அழிந்து விட்டது. ஆனால் 1920 இல் ஜேர்மன் புதை படிவ ஆய்வாளர் றொபேட் கோல்டேவே (ROBERT KOLDEWEY) தோட்டம் இருந்த இடத்தை அடையாளம் கண்டுள்ளார்.

கிறித்தவத்திற்கு முந்திய கிரேக்க மதத்தின் முழுமுதற் கடவுளர் சொயிசின் (ZEUS) 40 அடி உயரமான சிலை கி.மு 456 இல் கிரேக்க நாட்டின் ஒலிம்புஸ் என்னும் இடத்தில் நிறுவப் பட்டது. மரத்தால் செய்யப்பட்ட இச்சிலை தங்கத்தகடுகளால் போர்த்தப்பட்டது, வைரக் கற்களால் அணி செய்யப்பட்டது. கி.பி 475 இல் பெருந் தீயினால் பாதிக்கப்பட்டு அழிந்து விட்டது. சிலையின் அடிப்பாகம் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் திடலுக்கு அருகாமையில் காணப்படுகிறது. இன்றைய துருக்கி நாட்டின் கரையோரத்தில் வேட் டைக்காரர்கள், காட்டுவாசிகள், கன்னிப் பெண்கள் ஆகியோரின் காவல் தெய்வமான டயானாவின் கோயில் கி.மு. நாலாம் நூற் றாண்டில் கட்டப்பட்டது. இப் பெண் தெய்வத் தின் அணிகலன்களாகப் பெருமளவு தங்க, வைர நகைகள் சாற்றப் பட்டிருந்தன. புராதன உலகின் நான்காவது அதிசயமான டயானா வின் கோயில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

மத்தியதரைக் கடலின் ஒரு பகுதி யான ஏ ஜி ய ன் (AEGEANSEN) கடலிலுள்ளதில் 100 அடி உயரமான வெண் கலச் சிலை சூரியக் கடவுளுக்கு கி.மு 280 இல் எழுப்பப்பட்டது. இது 56 வருடங்கள் மாத்திரம் தனது பீடத்தில் நின்றது. கி.மு.224 இல் நிகழ்ந்த நில நடுக் கத்தின் போது அது தரையில் வீழ்ந்தது. பல நூற்றாண்டு காலமாக அப்படியே கிடந்த சிலை யை கி.பி.7 ஆம் நூற்றாண்டில் உலோக வர்த் தகர்கள் பகுதி பகுதியாக விற்று விட்டார்கள். வெளிச்ச வீடுகளின் முன்னோடி என்று வர் ணிக்கப்படும் எகிப் தின் அலெக்சாந் திரியா துறைமுகத் திற்கு அருகாமையி லுள்ள பாரொஸ் (PHAROS) தீவில் கி.மு 285க்கும் கி.மு 247 க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப் பட்டது. 400 அடி உயரமான அதன் உச்சியில் இரவு பகலாக வெளிச்சம் எரிந்தபடி இருக்கும். ஒளியை வெகுதூரம் பரப்புவதற்காக உலோக அடிகள் பொருத்தப் பட்டிருந்தன. கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை அது கடலோடிகளுக்கு உதவிக் கொண்டிருந்தபின் பாரொஸ் தீவு ஒரு நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டபோது கடல் நீரில் மூழ்கிவிட்டது.

> களத்தில் வீழ்ந்த எதிரிநாட்டுப் படையினருக்குப் பூரண இராணுவமரியாதை அளிப்பதும், உடலைப் பக்குவமாக அவன் நாட்டிற்கு அனுப்பிவைப்பதும் உலகின் போரியல் மரபு. அதே போல் ஒரு நாட்டை ஆக்கிரமிக்கும் இராணுவம் அங்கிருக்கும் இடு நிலங்களையும் போர் வீரர்களின் கல்லறைகளையும் குறை விடாது பாதுகாக்கவேண்டிய பொறுப்புடையதாகும்.

சிறந்த வேலைப்பாடுகள் நிறைந்த பாரிய கல்லறையை மொசோலியம் (MAUSOLE UM) என்று அழைப்பது உலக வழமை. உலகின் மிக அழகான கட்டடம் எனப்படும் இந்தியாவின் தாஜ்மகால் அப்படியான தொன் று. இன்றைய துருக்கி நாட்டின் உட்பகுதியில் ஒரு சிறிய துறைமுக நகரான கலிகார்னேசஸ் (HALICARNASSUS) என்னும் இடத்தில் கி.மு 353 அளவில் கட்டப்பட்ட கல்லறையில் இருந்து மொசோலியம் என்ற சொல் உரு வாகியது. இப்பகுதியை ஆட்சி செய்த மொ சோலுஸ் (MAUSOLUS) மன்னன் இறந்த பின் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருடைய மனைவி ஆர்ட்டிமிசியா (ARTE MISIA) ராணி ஒரு ஒப்பற்ற கல்லறையைக் கட்டு வித்தார். இக்கல்லறை இன்று சிதைந்து விட்டது. அதன் மீட்கப்பட்ட பாகங்கள் சில இலன்டன் அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கல் லறையின் பருமன், அழகிய வேலைப்பாடு போன்ற விவரங்களை நிபுணர்கள் கணிப்பீடு செய்துள்ளனர்.

இதில் கூறப்பட்ட புராதன கால அதிசயங்கள் அனைத்தும் எகிப்து, கிரேக்கம், துருக்கி ஆகிய இன்றைய நாட்டுத் தரைப்பரப்பில்

மனித வரலாறும்

காணப்பட்டன. வேறு இடங்களில் அது போன்றவை இல்லையா என்ற கேள்வி எழுகிறது. தெற்கு இங்கிலாந்தின் சோல்ஸ்பெரி பெருவெளியில் (SALISBURY PLAIN) புராதன கால நடுகற்கள் காணப்படுகின்றன. உள் வட்டம் வெளி வட்டமாக மிக உயரமான வெட்டுக் கற்கள் நடப்பட்டு அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக் கற்கள் வைக்கப்பட்டுள்ளன. இவை ஸ்ரோன் கென்ஜ் (STONEHENGE) என்று அழைக்கப்படுகின்றன. 3500 - 4000 வருடங்களுக்கு முன் செல்ற்ஸ் (CELTS) என்ற ஆதி மக்கள் இனம் இதை அமைத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அமைப்பின் நோக்கம் பற்றிய தர்க்கம் நிலவுகிறது. இறந்தோரைப்புதைக்கும் இடமாகவோ அல்லது இறந்தோருக்கான வணக்கத்தல மாகவோ இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. நேரக் கணிப்பிற்காக இக்கற்கள் வட்டம் வட்டமாக நடப்பட்டிருக்கலாம், அத்தோடு கோள்களின் நகர்வை அவதானிப்பதற்காகவும் இருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். இன்றும் இவை நிலைத்து நிற்கின்றன.

கல்லறைகளைப் பொறுத்தளவில் மிகப் பிரமிப்பூட்டும் வகையானதொன்று 1974 ஆம் ஆண்டு சீனாவின் சான்க்சி (SHAANXI) மாகாணத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கிணறு வெட்டும் போது 7400 வரையிலான சுட்ட மண் போர் வீரர்கள் மற்றும் குதிரைகள், போருக்குப் பயன்படுத்தும் தேர்கள் (CHARIOTS) என்பன மண்ணில் புதைக் கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றார்கள். அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் சீன அதிகாரிகள் இத்தனையையும் மீட்டார்கள். துண்டு துண்டாகப் பல மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட சீனாவை முதன் முதலாக ஒன்றிணைத் தவர் சீனச்சக்கரவர்த்தி யிங்செங். அவர் முழுச் சீனாவையும் தனது ஆட்சிப் பிடியில் கொண்டு வந்தபின் தனக்குத் தானே சூட்டிய பட்டம் குவின் சீ குவாங் டீ (QIN SHI HUANG DI)அதாவது குவின் வம்சத்தைச் சேர்ந்த முதலாவது சீனச் சக்கரவர்த்தி என்று பொருள். இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த பேரரசர்களும் இப் பட்டத்தைத் தமதாக்கியுள்ளனர். பல நூற்றாண்டுகளாக நிலவிய சீன அரசு முறையை நிறுவியவர் என்று முதலாவது குவின் சீ குவாங் டீ சிறப்பிக்கப்படுகிறார். முழு நாட்டிற்கும் ஒரே சீன எழுத்து, சட்டம், நாணயம், நெறுத்தல் அளவை ஆகியவற்றைப் புகுத்தியவரும் அவர்தான். இவருடைய அதிகார வீச்சு கி.மு. 246 இல் ஆரம்பிக்கிறது.

தனது ஆட்சிக் காலத்தில் அவர் தனது எதிரிகளையும் ஆணையை மீறு வோரையும் மிகவும் கொடூரமாகத் தண்டித்தார். உயிரோடு மண்ணில் புதைக்கும் தண்டனை வழக்கத்தை அறிமுகம் செய்தார். கி.மு.260இல் சாயோ (ZHAO) மன்னனைப் போரில் வென்றபின் அவனுடைய 400,000 படையினரை உயிரோடு புதைத்தார் என்று சீன ஏடுகள் செப்புகின்றன. அவர் தன்னுடைய கல்லறையை உருவாக்கும் போது இந்த முறையைப் பின்பற்றவில்லை. மாறாக சுட்ட மண் சிலைகளைச் செய்து தனது கல்லறைக்கு அரு காமையில் புதைக்க உத்தரவிட்டார். இரு பெரிய நீள் சதுரக்கிடங்குகளில் 7400 படையினர் போருக்குத் தயாரான நிலையில் நிறுத்தப்பட்டனர். ஒவ்வொரு மண் சிலையின் உயரம் 5 அடி 11 அங்குலம். குதிரைகளும், தேர்களும் அவ்வாறு தத்ரூபமாகச் செய்யப்பட்டன. இவற்றை செய்து முடிக்க முப்பத்தியாறு வருடம் பிடித்தது. 7000 வரையிலான தொழிலாளர்கள் உருவாக்கப் பணியில் ஈடுபட்டனர். பணி காலத்தில் இறந்தோரின் சடலங்கள் சற்றுத் தூரத்தில் புதைக்கப்பட்டன. இதில் வியப்பு என்ன வென்றால் 1974 இல் தற்செயலாகக் கண்ட பிடிக்கப்படும் வரை சுட்டமண் போர்வீரர்கள் பற்றிய செய்தியை ஒருவராவது அறியாதிருந்ததுதான். நிகழ் உலகின் அதிசயமான சீனப் பெருஞ்சுவருக்கு நிகரான புகழ் இதற்கு உண்டு. ஏறத்தாழ 2000 வருடங்களுக்கு முன் இந்தச் சிலைக்குத் தீட்டப்பட்ட வர்ணங்கள் இப்போதுதான் சற்று மங்கியுள்ளன. இதுவும் இன்னுமோர் அதிசயம்.

ஏறக்குறைய 2500 வருட வரலாறு உடைய தமிழ் இலங்கியத்தில் கி.மு. 500 தொடக்கம் கி.பி. 200 வரையான காலத்தை சங்க இலக்கியகாலம் என்கிறோம். சங்க இலக்கிய காலத்தில் இறந்தோரைப் புதைத்தார்கள் அல்லது எரித்தார்கள் என்பதை இலக்கியக் குறிப்புக்கள் மூலம் அறிகிறோம். களத்தில் வீழ்ந்த வீரருக்கு நடுகல் நாட்டி தெய்வமாக வழிபடும் வழக்கும் தமிழரிடம் இருந்தது. நடுகல்லில் வீரன் பெயரும் வாழ்க்கைக்குறிப்பும் பொறிக்கப்பட்டன. நடுகல் நாட்டி வழிபாடு நடத்துவது பற்றி அகநாநூறு, பாடல் 67

“நல்லமர்க் கடந்த நானுடை மறவர்,
பேரும் வீடும் எழுதி அதர்தோறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்” என்று கூறுகிறது.

வீழ்ந்த வீரன் பற்றிக் கூறும் புறப்பொருள் வெண்பாமாலை “எய்போல் கிடந்தான் என் ஏறு” என்கிறது. (எய் - அம்பு) சங்க இலக்கியம் குறிப்புணர்த்தும் நடுகல் இப்போதுதான் முதன் முறையாகக் கிடைத்துள்ளது. தேனீ மாவட்டத்திலுள்ள புலிமான் கோம்பை எனும் சிற்றூரில் மூன்று சங்க கால நடுகற்கள் எடுக்கப் பட்டன. 2300 வருடப் பழைமைவாய்ந்த தமிழ்ப் பிரம்பி எழுத்தில் அதில் வீரரின் பெயர் முதலியன பொறிக்கப்பட்டிருந்தன. ஒரு கல்லில் ‘கூடல் ஊரில் நடந்த ஆகோள் போரில் உயிரிழந்த பேடு தீயின் அந்தவன்’ என் பானுக்கு எடுத்த கல் என்ற செய்தி பழைய தமிழில் சொல்லப் பட்டுள்ளது. இந்திய உப கண்டத்தில் கிடைத்த நடுகற்களில் இம் மூன்றும் மிகப் பழையனவாகக் கருதப் படுகின்றன.

களத்தில் வீழ்ந்த எதிரிநாட்டுப் படையினருக்குப் பூரண இராணுவ மரியாதை அளிப்பதும், உடலைப்பக்குவமாக அவன் நாட்டிற்கு அனுப் பிவைப்பதும் உலகின் போரி யல் மரபு. அதே போல் ஒரு நாட்டை ஆக்கிர மிக்கும் இராணுவம் அங்கிருக்கும் இடு நிலங் களையும் போர் வீரர்களின் கல்லறைகளை யும் குறைவிடாது பாதுகாக்கவேண்டிய பொறுப்புடையதாகும். முதலாம் இரண்டாம் உலகப் போர்களில் பெல்ஜியம், பிரான்சு ஆகிய நாடுகளில் இறந்த ஜேர்மன் படையாட்களின் கல்லறைகள் காணப்படுகின்றன. ஜேர்மன் படைகள் வெளியேற்றப்பட்டாலும் அவர்கள் விட்டுச்சென்ற கல்லறைகள் மிகவும் நேர்த்தியாக இந்த நாடுகளால் பேணப்படுகின்றன. தமிழீழ மண்ணை றிவிரச இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமித்த சிங்களப் படைகள் முதல் வேலையாக புலி மாவீரர்களின் துயிலும் இல்லங்களையும் நினைவுத்தூபிகளையும் சேதப் படுத் தினார் கள். சமாதான காலத் தில் விடுதலைப் புலிகள் அவற்றை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவந்துள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒரு பக்கலில் குவிக்கப்பட்ட கல்லறைச் சிதைவுகளின்மேல் பின்வரும் வாசகம் தமிழ், ஆங்கில மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. “1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பின்னர் சிறிலங்காப் படையினர் இங்கே உறங்கிய எம் மாவீரச் செல்வங்களின் கல்லறைகளைச் சிதைத்து அழித்தனர். அந்தக்கல்லறைச் சிதைவுகள் இங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. சில நொடிப் பொழுதுகள் சிரம் தாழ்த்துவோம்” சிறிலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித் தனமும் வெறிப்போக்கும் இன்னும் ஓயவில்லை. வடமராட்சி எள்ளன்குளம் மாவீரர் துயிலும் இல்லம் 2006 செப்ரம்பரில் மூன்று தடவை சேதமாக்கப்பட்டுள்ளது. சுற்றுமதிலில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்கள் அடித்து நொருக்கப்பட்டன. துயிலும் இல்லத்தின் பெயர்ப்பலகை உடைத்து எறியப்பட்டது. நுழைவாயில் கதவு நிரந்தரமாக இராணுவத்தினரால் திறந்து விடப்பட்டுள்ளது. கட்டாக் காலி மாடுகள் துயிலுமில்லப் பூந்தோட்டத்தை அழித்துவிட்டன.

அத்தோடு நின்றுவிடாது சிலை உடைப்பு, சிதைப்பு ஆகியவற்றிலும் சிங்களப் படையினர் இன்னும் வது கரும்புலி மாவீரன் கப்டன் மில்லரின் திரு உருவச் சிலை உடைத்து வீழ்த்தப்பட்டுள்ளது. 2006 ஆகஸ்து 23 ஆம் நாள் இரவு 11.30 மணியள வில் உட்புகுந்த படையினர் இந்த அநாகரிகச் செயலைச் செய்துள்ளனர். செப்ரம்பர் 4 ஆம் நாள் வல்வை ஆதி கோவிலடியில் நிறுவப் பட்ட தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆர் சிலை மீது இரவு ஊரடங்கு அமுலில் இருந்தவேளையில் கழிவு



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Certified Insolvency Counsellor

DSC DEBT SOLUTION CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4


Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

மனித வரலாறும்

எண்ணெய் ஊற்றியுள்ளனர். இந்தியத் தூத ரகம் ஊடாக விடுக்கப்பட்ட எச்சரிக்கைக் குப்பின் அதே படையினர் ஆதி கோவிலடி மக்களைக்கொண்டு எம்.ஜி.ஆர் சிலையைச் சுத்தப்படுத்தியுள்ளனர். அண்மையில் சம் பூரை ஆக்கிரமித்த சிங்களப் படையினர் அனைத்து இந்து, கிறிஸ்தவ ஆலயங்களை யும் நிர்மூலமாக்கியுள்ளனர். சம்பூரில் புதிதாக ஒரு புத்தர் சிலையும் அரசமரக்கன்றும் நாட்டப் பட்டுள்ளன.

களத்தில் இறந்த சிங்களப் படையினரின் உடல்களை ஏற்க மறுப்பது அல்லது ஏற்கத் தயங்குவது பற்றிய சர்ச்சை சிறீலங்காவில் நிலவுகிறது. சிறீலங்கா வெளிவிவகார அமைச்சக முன்னாள் அதிகாரி கே. கொடகே, டெயிலி மிரர் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் (DAILY MIRROR 2005 FEBRUARY 21) "புலிகள் எம்மை மீண்டும் மீண்டும் கேட்ட போதும் நாம் ஆனையிறவுச் சமரில் இறந்த எமது படையினரின் உடல்களை ஏற்கமறுத் துள்ளோம். இது பற்றி நான் ஒரு மூத்த அரசியல் வாதியைக் கேட்டபோது, அவ்வளவு எண்ணிக்கையில் உடல்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டால் அரசு விழ நேரிடும் என்று பதிலளித்தார். இறந்தோர் காணாமல் போனோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர் களுக்கு பன்சகுல மதச்சடங்குகள் ஒன்றுமே கிடைக்காது."

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் இதுவரை கொரியா ஆகிய நாடுகள் இதற்குக் கடும் ஆட்சேபம் தெரிவிக்கின்றன. முன்னாள் ஜப்பான் பிரதமர் கொய்சுமி வணக்கம் செலுத் துவதற்காக அங்கு அடிக்கடி சென்று வந்தார். இதனால் சீன ஜப்பான் உறவுகள் கசப்படைந் தன. நான் அங்கே செல்லுவது எனது நாட்டின் உள்விவகாரம், அதில் வெளியார் தலையீடு இருக்கக் கூடாது என்கிறார் கொய்சுமி. யசுக் குனி என்றால் ஜப்பான் மொழியில் அமைதி நிலவும் இடம் என்று பொருள். கூஜின்ரோ மத ஆசாரப்படி பேணப்படும் யசுக்குனி ஆலயம் உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் கடும் உணர்வலைகளை எழுப்புகிறது. 1868 ஆம் ஆண்டு தொட்டு கூஜின்ரோ ஜப்பானின் தேசிய மதமாக இடம் பெறுகிறது. ஜப்பான் நாட்டு வர்த்தப் பிரமுகர்கள் சீனாவில் பெருமளவு முதலீடுகள் செய்த கார ணத்தால் அதனோடு நல்லுறவைப் பேண விரும்புகின்றனர். யசுக்குனி கோயிலை டோக்கியோவிலிருந்து பிறி தோர் உட்புற நகருக்கு மாற்றும் யோசனை





கலாநிதி க.சோமாஸ்கந்தன்


அவர்கள் முன்வைக்கின்றனர். சில அரசியல் வாதிகளும், பத்திரிகை முதலாளி களும் இதற்கு ஆதரவளிக்கின்றனர். கூஜின் ரோ மதபீடம் சாதகமான பதில்தரவில்லை.

நாசி ஜேர்மனி படுகொலை செய்த ஆறு மில் லியன் யூதர்களுக்கான உத்தி யோகபூர்வ நினைவாலயம் இஸ்ரேல் அரசினால் ஜெருச லேம் நகரில் திறக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் யாத் வாசெம். பைபிள் வாசகம், இசையா, அத்தியாயம் 56, பாடல் 5 இல் "நான் அவர்களுக்கு எனது வீட்டில் எனது சுவர்களுக்குள் ஒரு நினைவாலயமும் பெயரும் தரு வேன்" என்ற வரி வருகிறது. நினைவுச் சிற்பம், கலைக்கூடம், ஆவணக்காப்பகம், நாசிகள் கொன்ற யூதர்களின் விவரம் அடங் கிய பகுதி, கல்வி நிலையம், ஆராய்ச்சி நிலையம் என்பன யாத் வாசெ மில் அடங்குகின்றன. உயி ராபத்தையும் பொருட்படுத்தாது யூதர்களைக் காப்பாற்றிய யூதர் கள் அல்லாதோரின் பட்டியல் இங்கு வைக்கப்பட்டுள்ளது. இப் பெருமக்கள் "தேசங்களின் நீதியானோர்" (RIGHTEOUS AMONG THE NATIONS) என்று கௌரவிக்கப்படுகி ன்றனர். இஸ்ரேலுக் குச் செல்லும் உலகத் தலைவர்கள் யாத் வாசெம் சென்று மரியாதை வணக்கம் செலுத் துகிறார்கள். பல நூற்றாண்டு காலம் நிலவிய கிறிஸ்தவ - யூத முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் 2000 மார்ச்சு 23ஆம் நாள் இரண்டாம் அருளப்பர் சின்னப் பர் யாத் வாசெமுக்கு வருகைதந்தார். 1948 இல் இஸ்ரேல் நாடுநிறுவப்பட்டபோது கத்தோ லிக்க மதபீடம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது நினை விருக்கலாம். பாப்பரசின் விஜயத்தோடு முரண்பாடுகளுக்கு முடிவு கட்டப்பட்டது.

வியட்நாம் போரில் உயிரிழந்த அமெரிக்கப் படையினருக்குத் தலைநகர் வாஷிங்ரனில் ஒரு பிரத்தியேக நினைவுச் சின்னம் எழுப்பப் பட்டுள்ளது. 1982 நவம்பர் 13 ஆம் நாள் அது நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. தலைநகரின் முக்கிய பூங்கா ஒன்றில் மூன்று ஏக்கர் நிலம் நினைவுச் சின்னம் வைப்பதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. தமிழ் ட எழுத்துப்போல் இரு கருங் கற் சுவர்கள் நினைவுச் சின்னமாக நிறுத்தப் பட்டுள்ளன. திறந்த வெளியில் நிற்கும் இரு சுவர்களின் மொத்த நீளம் 246 அடி 9 அங் குலம். சுவர்களுக்கான கருங்கற்கள் இந்தியா வின் கர்நாடகா மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு அமெரிக் காவின் வேர்மொன்ற் (VERMONT) மாநிலத் தில் செப்பனிடப்பட்டுள் ளன. உயிர்நீத்த 58,159 படையினரின் பெயர்கள், இறந்த திகதி வாரியாகச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய இராணுவ அணி, பதவி, விருதுகள், பதக்கங் கள் போன்ற விவரங்கள் இதில் பொறிக்கப்பட வில்லை. இரு சுவர்களும் அடுத்துக் காட்டும் பளிங்குபோல் மினுக்கப் பட்டுள்ளன. சுவரிலுள்ள பெயர்களைப் படிப்போரின் விம் பம் சுவரில் நன்கு தெரியும் விதத்தில் சுவரைப் பளிங்காக்கி உள்ளனர். பெயரைப்படிப்ப வரும் பெயருக்குரியவரும் ஒருவரே என்ற தத்துவ விளக்கமாகப் பளிங்குச்சுவர் விளங் குகிறது. நினைவுச் சின்ன வரலாற்றில் வியட் நாம் வீரர்களுக்கான நினைவுச் சுவர் மிகவும் வித்தியாசமானது.

விடுதலைப்புலிகள் ஏடு - ஐப்பசி - கார்த்திகை, 2006





TAX ANALYST

ACCOUNTING | BOOKKEEPING | & MORE



- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
taxmatters@kannantax.com

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

இப்போது வந்துவிட்டது!

தற்போதைய வைரஸ் தொற்று காலத்தில்

உங்கள் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைத்து நோய்களிலும் இருந்து உங்களைப் பாதுகாக்க வெளிவந்துவிட்டது

"3 Spoon 100 ஆயுள்"

உள் அடங்கும் பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்

இவை அனைத்தும் ஆயுள்வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதன் மருத்துவ குணங்கள் சொல்லில் அடங்காது.
அதிகாலை 3 கரண்டி அருந்தி அனைத்து நோய்களில் இருந்து விடுதலை பெறுங்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அருந்தலாம்.
சுவையானது, கனேடிய அங்கீகாரம் பெற்றது. இப்போது அனைத்து தமிழ் குரோசரி (Grocery) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: Raj - 416.388.5054

நீங்கள் எதிர் பார்த்திருந்த பானம்!

Benefits:

1. இரத்தக்குளாய் அடைப்பை நீக்குகிறது
2. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது
3. நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் உகந்தது
4. உடலில் உள்ள தேவையற்ற கழிவை அகற்றி குடலை சுத்தமாக்குகிறது
5. உடல் பருமனை குறைக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
6. மலச்சிக்கலை அறவே நீக்குகிறது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்
7. தூக்கமின்மையை இல்லாமல் ஆக்குகிறது.
8. உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பினைக் குறைக்கிறது
9. உடல் சோர்வை நீக்குகிறது

பருகும் முறை:

நன்றாகக் கலக்கி ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மூன்று கரண்டி அருந்தவும்.
பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
Note: நீங்கள் இரத்தக்குழாய் அடைப்பிற்காக மருத்துவரால் சத்திர சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், 6 மாத காலத்தில் இரத்தக் குழாய் அடைப்பை அறவே நீக்குகிறது.

3 ஸ்பூண்
100 ஆயுள்
3 Spoon100 Life

(சுவையானது)

ஒவ்வொருவரும் அருந்த வேண்டிய பானம்

ஆயுள் வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது.

மருந்து உணவல்ல, உணவே மருந்து.

Heart Attack இல் இருந்து பாதுகாக்கிறது.

NOW $ 20
$ ~~35~~



1. Removing the blood vesse blockae.
2. regulates bood flow
3. Good for diabetes people
4. Remove your body's unnecessary wast
5. Reduces obesity and increases resistance
6. Eliminate constipation, cures ulcer
7. Reject lack of sleep
8. Excess fat in the body dissolve
9. Elima=inate body fatigue


Ingredients: Garlic, Lemon, Vinegar, Ginger, Honey and Black Jeera

Buying Locations: For Distribution Call **416-388-5054** / Montreal No: **514-589-7617**
Soon all Grocer Stores: Scarborough -Markham - Mississauga - Brampton - Ajax

Now Available Stores: **New Spiceland, Pasumai Santhi, Suncity Supermarket, Poorani Villas, Vasantham Super Market**

தமிழ்ச்செல்வன்

– க.வே.பாலகுமாரன் –



ஒடுக்குமுறைக்கு எதிரான மானிடத்தின் நெடு நீண்ட வரலாறு பலியெடுப்புக்களால் நிரம் பியுள்ளது. இப்பலியெடுப்புக்கள் ஒரு போதும் போராட்டங் களைப் பலவீனப்படுத்தாது, மாறாகவலிமையான முன் னெடுப் புக் களாக மாறும் என்பதனைத் தனது சாவின் பின்னர் நூற்றுக்குநூறு விழுக்காடு நிரூபித்தது மட்டு மன்றி காலந்தோறும் தன் புகழைப் பன்மடங் காகப்பெருக்கும் "சே"யின் மறைவின் நினை வினை உலகம் அண் மையில் தான் மலர்த் தி முடித் திருந் தது. இவ் வேளையில் இப்பொழுது இன்னொரு பலியெடுப்பு. இன்னொரு கொடுங் கோன்மை அரசால் பொலி வியாவின் வலே கிராண்ட் பகுதியில் இருந்து தமிழீழத்தின் கிளிநொச்சி வரை நீளுகின்ற பலியெடுப் புக் களிவை. ஆனால் ஒரு உயரிய போராளிக்குக் கிடைக்கக் கூடிய ஆகக்கூடிய மதிப்பு எதிரியால் கொல்லப் படுவதுதான். அத்தகைய போராளி யான பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் வாழ்வும், வரலாறும் பிறருக்காக உழைத்து அவருக் காகவே மகிழ் வோடு மடிந்த வரலாற் று மனிதர்களின் வரலாற்றுத் தடங்களோடு இணைந்துவிட்டது. சர்வதேச ரீதியிலான சமூக ஒடுக் குமுறைக் கு எதிரான கு றி யீ டாக இன் று "சே" பார்க்கப்படுகின்றார். தமிழின எழுச்சியின் வெளிப்பாடாக இன்று தமிழ்ச் செல்வன் கணிக்கப்படுகின்றார். இப்படிப் பட்டவர்கள் வரலாறுகளாலே ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் அதற்குரிய தகமை களைப் பெறுவதும் அதன்வழி இறுதி யில் வெல் வதும் நிகழ் கின் றது. அந் த வகையில், தான் வாழும் சூழலில் பாதிப் படைந் து போராளியாகி அத்தடைகளைத் தாண் டுவதின் மூலம் சிறப்பான ஆளுமையை வெளிப்படுத்தி இறுதியில் அப்போராட்டத் திற்கே உரமான தமிழ்ச்செல்வன் தமிழ் கூறும் நல்லுலகின் மதிப்பைப் பெறுகின்றார்.

1967 இல் பரமு விசாலாட்சி இணைக்கு தமிழ்ச்செல்வனாகி, 1984இல் விடுதலைப் புலிகளுக்குத் தினேஸ் ஆகி, 2007 இல் தமிழ்மக்களுக்கு தமிழ்ச்செல்வமாகிய கதை தான் இது. 1984 - 2007 வரை 23 ஆண் டுகள் தன் இளமைப் பருவம் முழுவதை யும் விடுதலைக்கு ஒப்புக் கொடுத் த அவரது போராட் டம் முப்பரிமாணம் கொண்ட தளத் திலே இயங்கியதாக கணிக்கமுடியும். அவரது போராட்ட வாழ்வு விடுதலையமைப்பின் வளர் நிலையின் படி மலர்ச் சிப் பாதையோடு ஒத்தது. மூன்று கால கட்டங்கள், மூன்று வெவ்வேறு சூழல்கள் - இவற்றிற்கு முதலில் இசைவாக் கம் பெற்றும் பின்னர் பெயர் தமிழ்ச்செல்வன் என்பதும் அவரது புன்சிரிப்பும், மலர்ந்த முகமும் இயல்பிலேயே உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. "இளவயதிலும் சரி இப்போதும் சரி எதையும் தனக்கெனச் சேர்த்து வைக்கும் பழக்கமற்றவன்" என அவரது மூத்த சோதரரில் ஒருவர் கனடாவில் துயர் பகிர்வின் பொழுது நா தழுதழுக்கக் கூறினார். உண்மையில் இப்போது எண்ணிடும் பொழுது அவரை பிற் காலங்களில் சந்தித்த எவரும் ஏதாவது பயன்களை அவரிடம் இருந்து பெறாமல் சென்றதில்லை என்பதும் எம் நெஞ்சின் நீங்காத பதிவுகளாய் உள்ளது.

விடுதலைப் புலிகள் கரந் துறைப் போர்முறை யினைக் கைக்கொண்ட வேளையில் அவர் இயக் கத் தில் இணைகின்றார். இயக்க மரபிற் கேற்ப தனியாகவும், குழுவாகவும் வீர உணர் வுள்ள போராட்டச் செயற்பாடுகளில் அவர் அதன் விளை வாகத் தேசியத் தலைவர் பிற்காலத்தில் தான் சந்திக்கப் போகும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கத் தக்க தொரு நம்பகமான துணைவனைப் பெற்றதும் நாம் கவனிக்கத்தக்கது. 1987 - 1990 வரை இந் தியப் படைகளுக்கு எதிரான துணிகர மான, இடைவிடாத தாக்குதலை நடத்திய உணர்ச்சிகரமான போராளியாக அவர் அறியப்படுகின்றார். கரந் துறைப் போர் முறைக் கால கட்டத்திலே போராளிகளின் இருப்பும், பாதுகாப்பும் மக்களின் கைகளிலேயே இருக் கும். "சே" முன் பொருக் கால் எழுதினார். "ஒரு புரட்சிக்காரனுக்குத் தேவையானவை எவை? வலிய கால்கள், பிச்சைக்காரன் வயிறு, எளிய சுமை". தமிழ்ச்செல்வன் வெறும் கால்களுடன் தென்மராட்சி மண் ணிலே இந்தியப் படையோடு மோதிய காலத் தில் அலைந்துதிரிந்தார். தென்மராட்சி மக் களின் அபிமானம் பெற் ற "செல்லப் பிள் ளை யாக", "எங் க வீட் டுப் பிள் ளை யாக" அவர் ஆகிவிடுகின்றார். எத்தனை அன்னையர் அவருக்கு உணவூட்டியும், கண்போலக் காத் தும் நின்றனர். பிற்காலத்தில் எத்தனை உயர்நிலைக்குச் சென்றாலும் தனக்குதவிய மக்கள் நெருக்கடிகளுக்கு உட் பட் ட பொழு து முடிந் த ளவு உதவிகளைச் செய்ய அவர் தயங்கவில்லை. அவரது நன்றிமறவா இப் பண்பு உயரியது. அவ் விளவயதில் கபடமற்ற மனதோடு தன்னோடொத்த தோழரோடு போராடிய காலம் அவர் வாழ்வின் பொற்கால மாக அவர் மனதில் பதிந்திருந்தது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளராக அவர் பதவி யேற்ற பின் அடிக்கடி அவர் அசைபோடும் மலரும் நினைவுகளாகவும், மக்கள் உறவில் கவனமின்றி செயற்படும் போராளிகளுக்கு அறிவுரையாகவும் இந் நினைவுகளை மீட்டுக் கொள் வார். அப்போது அவர் மலர்ந்த முகம் மேலும் மலரும்.

இப்போது இரண்டாம் காலகட்டம். இந்தியப் படை வெளியேற்றத்தின் பின்னான கட்டம். விடுதலைப்புலிகள் நகர்வுப் படையணியாகி மரவுவழிப் படையணியாகப் படி வளர்ச்சி கண்ட காலம். ஒருபுறம் பாரிய படைநடவடிக் கைகள் மறுபுறம் அரசியல் நிருவாக அலகுகள் கட்டமைப்பு என இருவேறுபட்ட பணிகளோடு மருத்துவத் துறையில் மறைவான ஆனால் நிறைவான வளர்ச்சிக்கான ஏற்பாடுகளென அவர் பணியாற்றினார். 1995இல் சந்திரிக்கா அரசோடான பேச் சுக் களிலும் தலைமைதாங் கித் தனக் கான பட்டறிவையும் பெற்றுக்கொள் கின்றார். 1995 ஏப்பிரலின் பின் மீண்டும் போர் வெடித் தமை, இடப் பெயர் வு, வன் னிவாழ் வு, முல் லைச் சமர், ஜெயசிக்குறு, ஓயாத அலை கள் என வரலாற்று நிகழ்வுகளால் எம் வரலாறு நிரம்பிவழியும் போதெல்லாம் தமிழ்ச் செல்வன் தலைவர் அருகில் சிறப்புடனும், சிரிப்புடனும் நின்றார். ஒரு மனிதனால் இத்தனை பணிகளையும் சுமந்திட முடியுமா என மற்றவர் ஏங்கிடுமளவு பளுச்சுமந்தார். தலைவன் முகமறிந்து - மனமறிந்து - விருப்பு வெறுப்பறிந்து - ஓயாத சிந் தனையின் பொழுது தலைவரிடமிருந் து வெளிப் படும் அறிவுறுத் தலறிந்து அவற்றினை நடை முறைச் செயற் பாடாகமாற்ற அவர் பட்டபாடு, தலைவரின் சுருக்கமான ஆனால் மிக அடர்த்தியான கூற் றுக்களை விரிவான பேச்சுக்களாக மொழி பெயர்த்து அவர் பாரதி பாடிய கண் ணனின் (கண்ணன் என் தோழன் - என் சேவகன், என் சீடன்) பல்வேறு அவதாரம் எடுத்தார்.



இக் கட்டத்திலே
எங்கிருந்தோ வந்தான்
இடைச்சாதி நானென்றான்
இங்கிவனை யான் பெறவே என்னதவம்
செய்துவிட்டேன்
கண்ணன் என்னகத்தே கால்வைத்த
நாள்முதலாய்

ஒடுக்குமுறைக்கு எதிரான மானிடத்தின் நெடு நீண்ட வரலாறு பலியெடுப்புக்களால் நிரம் பியுள்ளது. இப்பலியெடுப்புக்கள் ஒரு போதும் போராட்டங்களைப் பலவீனப்படுத்தாது, மாறாகவலிமையான முன்னெடுப்புக்களாக மாறும் என்பதனைத் தனது சாவின் பின்னர் நூற்றுக்குநூறு விழுக்காடு நிரூபித்தது மட்டு மன்றி காலந்தோறும் தன் புகழைப் பன்மடங் காகப்பெருக்கும் "சே"யின் மறைவின் நினை வினை உலகம் அண்மையில் தான் மலர்த்தி முடித்திருந்தது. இவ்வேளையில் இப்பொழுது இன்னொரு பலியெடுப்பு. இன்னொரு கொடுங் கோன்மை அரசால் பொலி வியாவின் வலே கிராண்ட் பகுதியில் இருந்து தமிழீழத்தின் கிளிநொச்சி வரை நீளுகின்ற பலியெடுப்புக் களிவை. ஆனால் ஒரு உயரிய போராளிக்குக் கிடைக்கக் கூடிய ஆகக்கூடிய மதிப்பு எதிரியால் கொல்லப்படுவதுதான். அத்தகைய போராளி யான பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் வாழ்வும், வரலாறும் பிறருக்காக உழைத்து அவருக் காகவே மகிழ்வோடு மடிந்த வரலாற்று மனிதர்களின் வரலாற்றுத் தடங்களோடு இணைந்துவிட்டது. சர்வதேச ரீதியிலான சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான குறியீடாக இன்று "சே" பார்க்கப்படுகின்றார். தமிழின எழுச்சியின் வெளிப்பாடாக இன்று தமிழ்ச் செல்வன் கணிக்கப்படுகின்றார். இப்படிப் பட்டவர்கள் வரலாறுகளாலே ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் அதற்குரிய தகமை களைப் பெறுவதும் அதன்வழி இறுதி யில் வெல்வதும் நிகழ்கின்றது. அந்த வகையில், தான் வாழும் சூழலில் பாதிப்படைந்து போராளியாகி அத்தடைகளைத் தாண் டுவதின் மூலம் சிறப்பான ஆளுமையை வெளிப்படுத்தி இறுதியில் அப்போராட்டத் திற்கே உரமான தமிழ்ச்செல்வன் தமிழ் கூறும் நல்லுலகின் மதிப்பைப் பெறுகின்றார்.

1967 இல் பரமு விசாலாட்சி இணைக்கு தமிழ்ச்செல்வனாகி, 1984இல் விடுதலைப் புலிகளுக்குத் தினேஸ் ஆகி, 2007 இல் தமிழ்மக்களுக்கு தமிழ்ச்செல்வமாகிய கதை தான் இது. 1984 - 2007 வரை 23 ஆண்டுகள் தன் இளமைப்பருவம் முழுவதை யும் விடுதலைக்கு ஒப்புக் கொடுத்த அவரது போராட்டம் முப்பரிமாணம் கொண்ட தளத் திலே இயங்கியதாக கணிக்கமுடியும். அவரது



போராட்ட வாழ்வு விடுதலையமைப்பின் வளர் நிலையின் படி மலர்ச்சிப் பாதையோடு ஒத்தது. மூன்று கால கட்டங்கள், மூன்று வெவ்வேறு சூழல்கள் - இவற்றிற்கு முதலில் இசைவாக் கம் பெற்றும் பின்னர் பெயர் தமிழ்ச்செல்வன் என்பதும் அவரது புன்சிரிப்பும், மலர்ந்த முகமும் இயல்பிலேயே உள்ளதென்பதும் குறிப் பிடத் தக்கது. "இளவயதிலும் சரி இப்போதும் சரி எதையும் தனக்கெனச் சேர்த்து வைக்கும் பழக்கமற்றவன்" என அவரது மூத்த சோதரரில் ஒருவர் கனடாவில் துயர் பகிர்வின் பொழுது நா தழுதழுக்கக் கூறினார். உண் மையில் இப் போது எண் ணிடும் பொழுது அவரை பிற் காலங்களில் சந்தித்த எவரும் ஏதாவது பயன்களை அவரிடம் இருந்து பெறாமல் சென்றதில்லை என்பதும் எம் நெஞ்சின் நீங்காத பதிவுகளாய் உள்ளது.

விடுதலைப்புலிகள் கரந்துறைப் போர்முறை யினைக் கைக்கொண்ட வேளையில் அவர் இயக்கத்தில் இணைகின்றார். இயக்க மரபிற் கேற்ப தனியாகவும், குழுவாகவும் வீர உணர் வுள்ள போராட்டச் செயற்பாடுகளில் அவர் அதன் விளை வாகத் தேசியத் தலைவர் பிற்காலத்தில் தான் சந்திக்கப் போகும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கத் தக்க தொரு நம்பகமான துணைவனைப் பெற்றதும் நாம் கவனிக்கத்தக்கது. 1987 - 1990 வரை இந்தியப்படைகளுக்கு எதிரான துணிகர மான, இடைவிடாத தாக்குதலை நடத்திய உணர்ச்சிகரமான போராளியாக அவர் அறியப்படுகின்றார். கரந்துறைப் போர்முறைக் கால கட்டத்திலே போராளிகளின் இருப்பும், பாதுகாப்பும் மக்களின் கைகளிலேயே இருக்கும். "சே" முன்பொருக் கால் எழுதினார். "ஒரு புரட்சிக்காரனுக்குத் தேவையானவை எவை? வலிய கால்கள், பிச்சைக்காரன் வயிறு, எளிய சுமை". தமிழ்ச்செல்வன் வெறும் கால்களுடன் தென்மராட்சி மண் ணிலே இந்தியப் படையோடு மோதிய காலத் தில் அலைந்துதிரிந்தார். தென்மராட்சி மக் களின் அபிமானம் பெற்ற "செல்லப்பிள்ளை யாக", "எங்க வீட்டுப்பிள்ளையாக" அவர் ஆகிவிடுகின்றார். எத்தனை அன்னையர் அவருக்கு உணவூட்டியும், கண்போலக் காத்

மக்களுக்காகத் தன்னையே உருக்கி உழைத்த இலட்சிய நெருப்பு



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.
03/11/2007.

எனது அன்பான மக்களே!

சமாதான வழியில், நீதியான முறையிலே எமது மக்களது தேசியப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணுமாறு அனைத்துலகம் அடுத்தடுத்து அழைப்பு விடுத்தபோதும், சிங்கள தேசத்திலிருந்து நல்லெண்ணம் வெளிப்படவில்லை. பௌத்தத்தின் காருண்யத்தைக் காணமுடியவில்லை. சிங்கள தேசம் தனது இதயக் கதவுகளைத் திறந்து, சமாதானத் தூதும் அனுப்பவில்லை. மாறாக, போர்க்கழுகுகளை ஏவி, இராட்சதக் குண்டுகளை வீசியிருக்கிறது. எமது அமைதிப் புறாவைக் கொடூரமாக, கோரமாகக் கொன்றழித்திருக்கிறது.

தமிழுலகமே ஆழமாக நேசித்த ஒரு அரசியல் தலைவனைச் சிங்கள தேசம் இன்று சாகடித்திருக்கிறது. தமிழீழ மக்களின் மனங்களை வென்ற ஒரு தன்னிகரற்ற தலைவனைச் சிங்களம் பலிகொண்டிருக்கிறது. எமது சுதந்திர இயக்கத்தின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனையும் ஏனைய ஐந்து போராளிகளையும் இழந்து இன்று தமிழீழ தேசம் வரலாற்றில் என்றுமில்லாத ஒரு பேரிழப்பைச் சந்தித்திருக்கிறது. இந்த மாபெரும் சோக நிகழ்வு எம்மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது.

தமிழ்ச்செல்வன் எமது சுதந்திர இயக்கத்தில் இணைந்த காலத்திலிருந்தே என்னோடு ஒன்றாக, நெருக்க மாக வாழ்ந்தவன். நான் அவனை ஆழமாக அறிந்து, ஆழ மாகவே நேசித்தேன். எனது அன்புத் தம்பியாகவே வளர்த் தேன். அவனது அழகிய சிரிப்பும் அதனுள் புதைந்த ஆயிரம் அர்த்தங்களையும் அவனுள் அடர்ந்து கிடந்த ஆற்றல்களை யும் ஆளுமைகளையும் நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். இலட்சியப்போராளியாக, தலைசிறந்த தானைத் தளபதியாக, மாபெரும் அரசியல் பொறுப்பாளனாக, அனைத் துலகோடும் உறவாடிய இராஜதந்திரியாக, பேராற்றல்மிக்க பேச்சுவார்த்தையாளனாக அவனை வளர்த்தெடுத்தேன்.

தான் நேசித்த மண் விடுதலை பெறவேண்டும், தான் நேசித்த மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாது காப்பாக வாழவேண்டுமென்று சதா சிந்தித்தான். தான் நேசித்த அந்த மக்களது விடுதலைக்காக, விடிவிற்காகத் தன்னையே ஊனாக உருக்கி, உறுதியாக உழைத்த ஒரு இலட்சிய நெருப்பு அவன்.

நீண்ட நெருப்பு நதியாக நகரும் எமது விடுதலை வரலாற்றில் அவன் ஒரு புதிய நெருப்பாக இணைந்திருக் கிறான். இந்த இணைவிலே, எமது கனத்த இதயங்களில் ஒரு பெரும் இலட்சிய நெருப்பை மூட்டியிருக்கிறான். எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றியிருக்கிறான். இந்த உறுதி யில் உரம்பெற்று, நாம் எமது இலட்சியப் பாதையில் தொடர்ந்தும் உறுதியோடு பயணிப்போம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

30.10.1995

26 வருடங்கள் கடந்த வரலாற்றில்

மிகப் பெரும் அவலம் நிறைந்த வலிகாம இடப்பெயர்வு



மக்கள் அளித்த மாபெரும் பங்களிப்பு

(1995) வரலாற்றுப் பதிவாகிவிட்ட மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வு.

தமிழீழ மக்களின் சமூக கலாச்சார பொருளாதார மைய மாகவும் தளராத கோட்டையாகவும் பொங்கிப்பிரவாகிக்கும் விடுதலைத் தீயின் பிறப்பிடமாகவும் இருந்து யாழ்ப பாணத்தில் மண்ணும் மக்களும் எனப்பிணைந்து போயி ருந்த உறவின் தொப்பிள்கொடியறுத்து ஐந்தரை இலட்சம் மக்களை ஓரிரு இரவில் குடிபெயரவைத்தது சிங்களத்தின் "சூரியகதிர்"

நல்லைக்கந்தன் முற்றத்திலிருந்து செம்மணி வெளி நிறைந்து நாவற்குழிப் பாலம் நிரம்பி இறுக்கி முட்டி மோதி யது மனிதத் தலைகள் .ஒருகாலடி எடுத்துவைக்க குறைந் துத 30 நிமிடங்கள் பிடித்தது. இது மிகையல்ல .நிஜம். ஏனெ னில் இம் மக்கள் வெள்ளத்தில் நானும் ஒருத்தன்.



மழை பெய்துகொண்டிருந்தது"'ஆட்லறி"எறிகணைகள் மக் களைக்கடந்து சென்று அருகில் விழுந்து வெடித்துக்கொண் டிருக்க மேலே எதிரியின் "புக்காரா"குண்டுவீச்சு விமானம் வட்டமடித்து எந்நேரத்திலும் குண்டுகளை வீசக்கூடியதாக பறந்து கொண்டிருந்தது. வயோதிபர்கள் சிலர் அந்த இடங்களிலேயே விழுந்து இறந்து கிடக்க பிரசவங்களும் அவ்விடத்திலேயே நிகழ்ந்தேறின பிறந்த குழந்தையும் உப்பு நீரில் குளித்து மழைநீரை குடித்து பாலம் கடந்தது. தமிழ்மானம் உயர்ந்தது. இது எனது அனுபவத்தின் ஊடான மனப்பதிவின் சில பதிவுகள் மட்டுமே.இன்னும் எத் தனையோ சொல்லொணாத் துன்பங்கள் அனுபவித்து தமது நிலபுல சொத்துசுகங்களை கைவிட்டு உடுத்த உடுப்புடன் கையில் எடுத்த பொருட்களுடன் எதிரியின் எண்ணத்துக்கு வேட்டு வைத்து தம்மண்ணைவிட்டு வெளியேறி விடு தலைக்கு உரம் சேர்த்தனர் எம்மக்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கூட அந்த வரலாற்று இடப்பெயர்வு குறித்து கூறும்போது "இது எம்மக்கள் அளித்த



ஒரு உயர்ந்த பட்ச பங்களிப்பு. அது எங்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக ஐந்து இலட்சம் மக் களும் செய்த ஒரு பெரிய பங்களிப்பு" என்று குறிப் பிடுகின்றார்.

"யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்யப்போகின்றோம் அவர்களிற்கு விமர்சனமளிக்கப்போகின்றோம்.அவர்கள் விடுதலைத்புலிகளின் பிடிக்குள் இருந்து கஸ்ரப்படுகிறார் கள்.அவர்களிற்கு மீண்டும் சுதந்திரத்தை பெற்றுக்பொடுப்



பதே எமது பணி "எனக்கூறிக்கொண்டு 40000 படைகளை களத்தில் இறக்கி பன்மடங்காக ஆயுத பலத்தை பெருக்கிக் கொண்டு "சூரியகதிர்" படைநடடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியது. இருந்தும் என்ன பயன் சிறீலங்கா அரசுக்கு பறை சாற்றிய எம்மக்கள் புலிகளை ஆதரித்து அவர்கள் பின்னே சென்றனர். முகத்தில் கரிபூசிக்கொண்டது சிங்கள அரசு. விடுதலைப்புலிகளும் மக்களும் ஒன்றே என்றும் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக சிங்கள அரசை வெறுக் கிறார்கள் விடுதலைப்புலிகளையே தமது தலைமையாக ஏற்றுக்கெ ணண்டுசெ யற்படுகிற ார் க ள் என் பதை யும் முழு உலகிற்கு மே தெரி யப்படுத்தி யது இந்த மாபெரும் வரலாற்று இடப்பெய ர்வு.

யாழ்குடா வில் இன் று வ ரை ஆயிரக்க ணக்கான ம க் க ள் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்து வருகின்றனரே என சிலர் நினைக்ககூடும். ஆனால் அன்றைய தினத்தில் தரை வழியாக ஓர் ஒற்றையடிப்பபாதையாகிலும் அம்மக்களுக்கு கிடைத்திருக்குமாயின் இன்று வரை யாழ்ப்பாணத்தில் இராணுவம் "இலையான்"தான் கலைத்துக்ககொண் டிருக்கும். என்பது அவர்கள் அறிய வேண்டிய உண்மை யாகும். ஓருவேளை அப்படி நடைபெற்று இராணுவம் மட்டுமே யாழ்குடாவில் இருந்திருக்குமாயின் எப்பொழுதோ இலகுவாக எந்தச்சிக்கலுமின்றி விடுதலைப்புலிகள் யாழ்குடாவை மீட்டிருப்பார்கள் என்பது உறுதி.

இப்படை நடவடிக்கையானது சிங்கள அரசின் அரசியல் தந்திரோபாயத்திற்கும் நோக்கத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி என்பதை உலக நாடுகளே சுட்டிக்காட் டியிருந்தன. தம்மிடம் இருந்த மிகப்பெரிய பலமான ஆட் பலத்தை வைத்துக்கொண்டு ஆயுத பலத்தின் உதவியுடன் விடுதலைப்புலிகளை வலிந்து சண்டைக்கிழுத்து அவர் களை பலவீனப்படுத்தி விடுவதென்று சமரை ஆரம்பித்த





திணணம். அது யாதெனில் "பெரும்படையை திரட்டி நிலத்தை கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினமான காரியம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப்பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக்கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது என்பதே.

இவரது ஐந்து வருடத்திற்கு முந்தைய கூற்று இன்று செயல் வடிவம் பெற்று பெருவெற்றியைக் கண்டுவருவதானது "புலிகள் சொன்னதை செய்வார்கள்"என்பதை கட்டியங்கூறி நிற்கிறது.

நிலங்களை இழப்பதும் பின் அவற்றை மீட்பதும் உலக விடுதலைப்போராட்டங்கள் அனைத்துமே சந்தித்த சந்திக் கின்ற ஒரு பொதுவான நிகழ்வதான் .1943இல் "மாவோ சேதுங்"கின் "செஞ்சேனைப்" படைகள் "யேனான்" எனும் பகுதியை விட்டுப் பின்வாங்கள்ப்பின் அதை மீட்டெடுத்த வரலாற்று வெற்றி. 1974இல் எரித்திரிய விடுதலை இயக்கம் "அஸ்மாறா"எனும் தனது தலைநகரை இழந்து சில வருடங் களின் பின்னர் மீண்டும் அதை மீட்ட வரலாறு. வியட்நாம் விடதலைப்போரில் நடைபெற்ற நில ஆக்கிரமிப்பு நிலமீட்புச் சம்பவங்கள் போன்று இன்னும் எத்தனையோ சம்பவங்கள் இதற்கு உதாரணம்.

வெளியீடு-எரிமலை இதழ் ஒரு பகுதி நினைப்பகிர்வு

பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது போகும் இடம் அறியாமல்...

பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது
போகும் இடம் அறியாமல் - இங்கு
சாகும் வயதினில் வேரும் நடக்குதே
தங்கும் இடம் தெரியாமல்.

கூடு கலைந்திட்டகுருவிகள் - இடம்
மாறி நடக்கின்ற அருவிகள்.

ஒற்றை வரப்பினில் ஓடம் இவர்களின்
ஊரில் புகுந்தது ஆர்மி - ஒரு
குற்றம் செய்யாதவர் முற்றத்திலாயிரம்
குண்டகள் வீழுதே சாமி

சோகத்தின் கோடுகள் முகத்தில் - இங்கு
சொந்தங்கள் சேருமா நிலத்தில்?

கூடி மகிழ்ந்திட்ட கோயில் வயல்வெளி
யாவும் இவர் இழந்தாரே - நேற்றுப்
பாடி மகிழ்ந்திட்ட ஊரைத் துறந்துமே
போகும் திசை யறியாரே

நெஞ்சில் வழிவதோ துயரம் - வழி
நீளும் திசையிவர் பயணம்

தாயின் மடியினில் ஆசையுடன் தலை
சாய்த்து உறங்கிய நேரம் - வந்த
பேய்கள் கொளுத்திய தீயில் எரிந்தவர்
போகும் வழியெல்லாம் ஈரம்

மாடுகள் கூடவா அகதி?- தமிழ்
மண்ணிலே ஏனிந்தச் சகதி?

பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது
போகும் இடம் அறியாமல் - இங்கு
சாகும் வயதினில் வேரும் நடக்குதே
தங்கும் இடம் தெரியாமல்...

-புதவை இரத்தினதுரை



சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு



நம்மை சுற்றியுள்ள உயிருள்ள உயிரற்றப் பொருள் களை தான் நாம் சுற்றுச்சூழல் என்கிறோம். ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சுற்றுச்சூழல் பெரும் பங்கு வகின்றது. ஆனால் இப்பொழுது பல அறிவியல் மாற்றங்களால் இயற்கைக்கு மிகப்பெரிய தீமை மட்டும்தான் இது இயற்கைக்கு மட்டும் இல்லை நமக்கும் சேர்த்துதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சுற்றுச்சூழல் மாசடையும் முறைகளும் அதன் விளைவுகளும்:

காற்று மாசுபாடு
நீர் மாசுபாடு
மண் மாசு
பாடு ஒலி,ஒளி மாசுபாடு, உணவுபொருட்கள் மாசுபாடு என வரிசை நீண்டு கொண்டே செல்லும்...

நமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அனைத் தையும் நாமே மாசுபடுத்தி கொண்டு மருத்துவமனை வாசலில் நிற்கிறோம். அக்கால மக்கள் சுற்றுபுறத்தை மாசுபடுத்தினாலும் அதனை சரி செய்வதற்கான வழி களையும் கடைப்பிடித்தனர், இயற்கையை கடவுளாக வணங்கினார்கள் ஆனால் நாம் அதனைப்பற்றி கவலைக்கொள்வதே இல்லை. பருவநிலை மாறுதல் களின் விளைவை உணர்ந்த முதல் தலைமுறையாக நாம்தான் இருக்கிறோம், அதனை சரி செய்யும் கடைசி தலைமுறையாகவும் நாம் தான் இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார் ஜே இன்ஸ்லீ. ஆம் இப்பொழுது இயற்க்கையை நாம் பாதுகாக்காவிட்டால் நமது சந்ததி யினர்க்கு அதன் பயன்கள் கிடைக்காது ஹாலிவுட் படங்களில் வருவதுப்போல அவர்கள் வேறு கிரகங் களுக்கு தான் செல்ல வேண்டும்.

டெல்லி காற்று மாசுப்பாடு பற்றி நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான், மாசுபட்ட காற்றை சுவாசிப்பது புகைப்பிடிப்பதற்கு சமம் என்று அறிக்கைகளும் வெளியானது. அந்த நிலை நாம் வாழும் ஊர்களில் வருவதற்கு சில காலங்களே போதுமானது. வாகனங் களிலிருந்து வெளிவரும் புகை ஒரு அரக்கன் போல் நம்மை அச்சுருத்திகிறது.

ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, இயற்கையை இழந்து செயற்கையாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சென்னை போன்ற பெரு நகரங்களில் காலை பணிக்கு செல்வோர்களை பாருங்கள் எறும்பு போல சாலை எங் கும் இரண்டு சக்கர வாகனம், கார்கள் அதில் ஒருவர் மட்டும் பயனிப்பதுதான் கொடுமை இதனால் வாகன நெரிசல் ஒலி மாசு, காற்று மாசடைகிறது. இதற்கு மாற்றாக பேருந்து, புகைவண்டி பயன்படுத்தலாம் தினமும் முடியாவிட்டாலும் வாரத்திற்கு இரு முறை என்று நீங்களே முடிவெடுத்து முயற்சி செய்வதால் சிறிதளவாவது மாற்றம் எற்படும்.

எதிர்கால சந்ததிக்கும் பொருள் சேர்த்து வைக்கும் மனிதர்கள் கொஞ்சம் சுத்தமான காற்றையும் விட்டுச் செல்ல எண்ண வேண்டும். தமது சந்ததியினருக்கு பொன், பொருள் சேர்த்துவைப்பதை விட்டு கொஞ்சம் சுத்தமான காற்று, நல்ல நீர் , இயற்க்கையை சேர்த் துவைக்கலாம், ஒரு ஒருவரும் இதனை செய்ய ஆரம் பித்தால் இயற்கைக்கும் நலம் நமது வாழ்க்கைகும் நன்மை, கடவுள் நம்மை பாதுகாக்க அனுப்பிய



காவலர்கள் இயற்கை அவர்களை நாமே சாகடித்து ஆபத்தை தேடிக்கொள்வது எவ்வளவு அபத்தமானது.

ஜூன் 5 உலக சுற்றுச் சூழல் தினமாக கடைபிடிக்கப் படுகிறது, அன்று பள்ளிகளில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு விழாக்கள் நடந்துவார்கள், மணவர்கள் அதனை ஒரு நாள் மட்டும் கடைப்பிடிக்காமல் தினமும் கடைபிடிக்க வேண்டும்.

கல்வி நிறுவனங்கள் இப்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறைகள், கல்வி, சுற்றுச்சூழல் மேலாண்மை என பல படிப்புகள் வழங்குகின்றன. மாணவர்கள் சிறு வயதி லிருந்தே சுற்றுசூழல் மீது அக்கறை உடன் வளர்ந்தால் அது நாட்டுக்கும் நல்லது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின்

பங்கு சுற்றுச்சூழல் இது நீங்களும், நானும், இன்ன பிற உயிர்களும் வாழத் தேவையான முக்கியமான நாடி. நிலம், நீர், காற்று, வெளி, நெருப்பு, உணவுச் சுழற்சி, வன உயிர்கள், விவசாயம், பருவ நிலை ஆகியவை வலையைப்போல சுற்றுச்சூழலில் பிணைக்கப்பட்டு இருக்கிறது. இவற்றில் எந்த ஒரு சிறு இடத்தில் அது நமக்கும். நம்மைச் சார்ந்த, சாராத உயிரினங்களுக் கும் பெரும் கேடு விளைவிக்கும்.

சுற்றுச்சூழல் பாது காக்க சில எளிய குறிப்புகள்:

வீடு கட்டும் போது முழக்கவும் கான்க்ரீட்டால் கட்டாமல், வீட்டின் பின்புறம் சிறு தோட்டம் அமைத்து செடிகள் வளர்க்கலாம்!

வீடுகளில் சேரும் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று தனியாகப் பிரித்துவைக் கலாம்!

கூடுமானவரை சொந்த வாகனங்களைத் தவிர்த்து, பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தலாம். சைக்கிள் உபயோகிப்பது இன்னும் சிறப்பு!

கடைகளுக்குச் செல்லும் போது பை எடுத்துச் செல்லலாம். அங்கு சென்று பிளாஸ்டிக் பைகளை வாங்கி பயன்படுத்துவதைத் தவிர்த்துவிடுங்கள்!

கணினியில் பிரின்ட்-அவுட் எடுக்கும்போது ஒரு தாளின் இரண்டு பக்கத்தையும் பயன்படுத்தலாம். இதனால் பேப்பர் பயன்பாடு குறையும்!

பள்ளி, கல்லூரி, அலுவலகம் ஆகியவற்றில் சிறு குழுக்களை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்பு உணர்வு நிகழ்ச்சிகளை நடத்தலாம்!

இயற்கை அன்னை தன் தனத்தில் சுரக்கும் தாய் பாலை மழை நீராக தருகிறாள் மாறாக நாமோ அவளுக்கு விஷத்தை பரிசளிக்கிறோம் அது மீண்டும் நம்மையே சேரும் என்பதை மறந்து. இயற்கையை வாழவைத்தும் நாமும் வாழ்வோம்...

நன்றி: The Subeditor Tamil

With Best Wishes From

KENNEDY LAW OFFICE

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....

கெனடி சட்ட அலுவலகம்

- ☑ REAL ESTATE LAW காணி, வீடுகள் - வாங்கல், விற்றல், அடமானம்
- ☑ BUSINESS LAW வணிகச் சட்டம்
- ☑ CRIMINAL LAW குற்றவியல் சட்டம்
- ☑ FAMILY LAW குடும்பச் சட்டம்
- ☑ IMMIGRATION LAW குடிவரவுச் சட்டம்
- ☑ ODSP APPEALS
- ☑ SMALL CLAIMS
- ☑ WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- ☑ NOTARIZING & COMMISSIONING





W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC


Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com

2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)

WEXFORD
WELLNESS CARE INC.







We treat all car accident injuries!

- ✶ Massage Therapy
- ✶ Physiotherapy
- ✶ Orthopaedic
- ✶ Acupuncture
- ✶ Chiropractic
- ✶ Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203



வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

முள்ளிவாய்க்காலில் இருந்து...



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

திருமலை – மூதூர் கடற்கரைச்சேனைப் படுகொலை 08, 09, 10. நவம்பர் 1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம், ஒன்பதாம், பத்தாம் திகதி களில் கறடபடையினர், விமானப் படையினர், இராணுவத்தினர் கூட்டாக இணைந்து மூதூர் கடற் கரைச்சேனைப் பகுதி மீது தாக் குதல் நடத்தினார்கள். இத்தாக் குதலில் தரை வழியாற் சென்ற இராணுவத்தினரால் ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் மோசமாகத் தாக்கப்பட்டார்கள். வீடுகளிலிருந்த பலர் இராணுவத் தினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரி ழந்தார்கள். உயிரிழந்தவர்களின் உடல் களை இராணுவத் தினர் வீடுகளுடன் சேர்த்து எரியூட்டினர். ஆலயங்களிற் தங்கியிருந்த எழு பதிற்கும் மேற் பட்டவர் களைக் கைது செய்து அழைத்துச் சென் றனர். இவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை. மூன்று நாள் தாக் குதலில் இருபதிற்கும் மேற்பட்டவர் கள் உயிரிழந்தார்கள். பலர். காயம டைந்திருந்தனர். நூறிற்கும் மேற் பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன.

தம்பலகாமம் படுகொலை 12.11.1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி திருகோண மலை மாவட்டத்தின் தம்பலகாமத் தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒன்பது தமிழர்கள் சுடப்பட் டனர். தம் பலகாமத் தில் இதே இடத்தில் நவம்பர் மாதம் இருபத்த ாறாம் திகதி (1985) அன்று இராணு வத்தினர் மூன்று விவசாயிகளைச் சுட்டனர். பின்னர் அவர்கள் எரியூட் டப்பட்டனர்.

தம்பலகாமம் கோயிலடியில் நடந்த வேறொரு சம்பவத்தில் ஐந்து தமிழர் கள் கடையினுள் வைத்து உயி ருடன் எரிக் கப் பட்டனர். இதில் குபேந்திரன், நவரட்ணம் என்போர் உயிரிழந்தனர். மிகுதி மூவரும் எரிகாயத்துடன் மீட்கப்பட்டனர்.

கந்தளாய் படுகொலை 09.11.1985

கந்தளாய்ப் பிள்ளையார் கோயில டியில் வசித்த திரு. மயில்வாகனம் என்பவரது வீட்டிற்கு 09.11.1985 அன்றிரவு ஆயுதம் தரித்த சிங்கள இராணுவ படைகள் சென்று வீட்டி லிருந்த ஆறு பேரையும் ஆயுத முனையில் கடத்திச் சென்றார்கள். பின்னர் இவர்களின் உயிரற்ற உடல்கள் அல்லை வீதியில் நான் காம் கட்டைப் பகுதியில் மிகவும் மோசமான நிலையிற் காணப் பட்டன. கடத்திச் செல்லப்பட்ட ஆறு பேரில் மயில்வாகனத்தின் இரண்டு மகள்களும் அடங்குவர். இவர்கள் இரண்டு பேரின் பிரேத பரி சோத னையின் படி இவர்கள் மோசமான முறையில் பாலியல் வல்லுறவிற் குட் படுத் தப் பட்ட பின் னரே படு கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவந்தது.

மூளாய் வைத்தியசாலைப் படுகொலை 05.11.1987

மூளாய்க் கிராமம், யாழ். மாவட் டத்தில் வலிகாமம் மேற்கு சங் கானைப் பிரதேசசெயலர் பிரிவினுள் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு மருத்துவ வசதியினை வழங்கும் இடமாக மூளாய் வைத்தியசாலை அமைந் துள்ளது.

பெரும் இன்னல்களுக்கும், பெரும் மருத்துவ நெருக்கடிகளுக்கும் மத் தியில் வாழ்ந்த மூளாய்க் கிராமத்து மக்கள், 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி சிகிச்சைக்காக மூளாய் வைத்தியசாலையில் இருந் தபோது இந்திய இராணுவத்தின ரின் பீரங்கித் தாக்குதலிற்குள்ளா கினர். ஐந்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்ததுடன், பலர் காய மடைந்தார்கள். மருத்துவமனை யும் சேதமடைந்தது.

05.11.1987 அன்று மூளாய் வைத் தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. நாகர் மகேந்திரன் (44)
2. கந்தையா மகாதேவன் (48)
3. கந்தசாமி சிறீதரன் (18)
4. ஜயாத்துரை போரின் ப நாயகம் (58)
5. யோசேப் யோகராசா (35)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 11.11.1987

வவுனியா மாவட்டத்தின் வடக்கே அமைந்துள்ள வவுனியா வடக்குப் பிரதேசசெயலர் பிரிவின் பிரதான நகரமாக நெடுங்கேணி உள்ளது. இங்க வாழ்கின்ற மக்கள் பெரும் பாலானோர் விவசாயத் தையும் கூலித் தொழிலையுமே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் விடுதலைப்புலிகளிற் கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் மோதல் தொடங்கிய பின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள ளியவளை, தண்ணீரூற்றுப் போன் ற பிரதேசங்களில் இந்திய இராணு வத்தின் இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போது, அக்கிராமங் களைச் சேர்ந்த மக்கள் பெருமள வானோர் இடம்பெயர்ந்து நெடுங் கேணியிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சமடைந்த மக்கள் பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்கள் என்பவற்றில் தங்கினார் கள். மக்கள் செறிவாகத் தங்கியி ருந்த கட்டிடங்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்குவானூர் திகள் நடத்திய றொக்கற் தாக்குத லில் பதினைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபத் தைந்திற் கும் மேற் பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நெடுங்கேணி, மாறாஇலுப் பையைச் சேர்ந்த ட. தவமணி சம்பவம் பற்றி விபரிக்கையில்:

"என்னுடைய மகள் நந்தினிக்கும் சுகயீனம் என்ற காரணத்தால் நெடுங்கேணி வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறவேண்டி வந்தது. அதனால் நானும் அங்கு நின்றிருந்தேன். அன்றைய நாள் மாலை 05 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் எம்.ஐ.ரக உலங்கு வானூர்தி ஒன்று வைத்தியசாலை யைச் சுற்றி வந்தது. அங்கு கூடி நின்ற மக்கள் அனைவரும் வைத் தியசாலை என்பதால், குண்டு போட மாட்டார்கள் என்ற எண்ணத்தில் வைத்தியசாலைக்குள் ஓடி வந்தார் கள். அதை அவதானித்த உலங் குவானூர்தி வைத்தியசாலையின் முன்பக்கத்தில் குண்டுகளை வீசி யது. இதனால் குண்டுச் சன்னங்கள் எங்கும் பட்டு கண்ணாடி யன்னல் கள் அனைத்தும் நொருங்கி வீழ்ந் தது. அந்த நேரந்தான் எனக்குத் தலையிற் காயம் பட்டது. இதன் போது காயமடைந்தவர்கள் விழ ஏனையோர் கலவரப்பட்டு ஓடினார் கள். மகளைக் கூட்டிக்கொண்டு பின்புறமாக ஓடலாமென எத்தனித்த போது மகளின் காலால் இரத்தம் வழிவதை அவதானித்தேன். அத் துடன் மகளும் மயக்கமுற்று வீழ்ந் துவிட்டார். பின்னர் துணைக்கு எவரும் இல்லாத நிலையில் கை யில் அகப்பட்ட துணியால் நானே மகளின் காலுக்குக் கட்டுப்போட்ட டன், எனது காயத்திற்கும் கட்டுப் போட்டேன். வைத்தியசாலையி லிருந்த மருத்துவர்கள் அனை வரும் பாதுகாப்புத் தேடி ஓடிவிட் டதால் மருந்து கட்டக்கூட ஒருவரும் இருக்கவில்லை. இதனால் தனியார் மருத்துவமனை வைத்தியரின் உதவியுடன் இரவு 10:00 மணி யளவில் எங்களுக்கு மருந்து கட்டப் பட்டது. அதன்பின்னர் அடுத்தநாள் ஊரடங்குச் சட்டம் போடப்பட் டிருந்ததால், வாகனங்கள் எதுவும் இருக்கவில்லை. பின்னர் பயணி கள் பேருந்து ஒன்றின் மூலமாக வவுனியா மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டோம். அதன் பின்னர் மூன்று மாதங்கள் தங்கிச் சிகிச்சை பெற்றோம். தற்போது கூட எனது தலையில் குண்டுச் சன்னம் உள்ள தால் பெரியளவில் ஒருவித வேலை யும் செய்யமுடியாதுள்ளது. அதே போன்று தான் மகளின் நிலையும் உள்ளது. மேற்படி சம்பவத்தின் போது நெடுங்கேணி வைத்திய சாலையில் நின்றிருந்த பதினைத்து பேர் இறந்தனர், இருபத்தைந்து பேர் காயமடைந்ததாகக் கேள்விப்பட் டோம்."

இச்சம்பவம் தொடர்பாக முள் ளியவளையைச் சேர்ந்த சிவ ராசா யோகரத்தினம் தெரிவிக் கையில்:

"1987 ஆம்ஆண்டு இந்திய இராணு வம் தண் ணீ ரூற் று முள் ளிய வளைப் பிரதேசத்தில் தாக்குதல் களை மேற்கொண்ட நேரத்தில் அங்கிருந்த மக்கள் பீதி காரணமாக இடம் பெயர்ந்துகொண்டிருந்தார் கள். அந்த நேரம் எமது கிராம சேவையாளராக இரந்த சிதம்பரப் பிள் ளைக் கு உதவியாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். இந்தவேளை இடம்பெயர்ந்த மக் களுக்கு எங்களால் முடிந்த வாகன உதவிகளைச் செய் து நெடுங் கேணிக்கு கொண்டுசென்று பாட சாலைகளிலும் ஆலயங்களிலும் தங்க வைத்து நிவாரணப் பணிகள் செய்துகொண் டிருந் தோம். அன் றைய நாள் மாலை 5:00 மணி யிருக்கும் இந்திய இராணுவத்தின் முதலைக் கெலி என்றழைக்கப்படும் எம். ஐ. 24 ரக உலங்குவானூர்தி வானத்திற் சுற்றிக்கொண்டிருந்தது. இதனாற் பயமடைந்த நாங்கள் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண் டோம். அந்த நேரம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு முன்னால் முதலாவது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. அதன்போது இடம்பெயர்ந்த மக் களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக அகப்பை வாங்க வந்த எமது பகுதி இலங்கை போக்கு வரத்துக் கழக பேருந்துச் சாரதியான பொன்னம்பலம் இராமநாதன் என் பவர் அவ்விடத்திலேயே கொல்லப் பட்டார். நெடுங்கேணி உதவி அர சாங்க அதிபர் காரியாலயத் தில் வேலை செய் த மகாதேவன் என்பவரின் மகன் மகேந்திரன் ஒரு உழவு இயந்திரத்தில் வந்துகொண் டிருந்தார். அவரும் அவ்விடத்தி லேயே மரணமானார். அதே போன்று குளவிசுட்டானைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் காரியா லயத்தில் வேலைசெய்யும் சிவராசா என்பவரின் சகோதரன் தம்பிஜயா அண் ணை என் பவரும் இடம் பெயர்ந்த மக்களை வாகனத்தில் ஏற்றியிறக்க உதவிபுரிந்த பாரவூர் திச் சாரதி துரைச்சாமி என்பவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட் டார்கள். அதன்பின்னர் இரண்டா வது தாக்குதல் இடம்பெயர்ந்து வந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத் தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது நடத்தப்பட்டது. இதன்போது பல பொதுமக்கள் உடல்சிதறிய நிலை யில் இறந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதன்பின்னர் இற்ந்தவர்

நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 11.11.1987

கள் காயமடைந்தவர்களென அனைவருக்கும் நெடுங்கேணிப் பகுதியில் தனியார் வைத்தியசாலை நடத்தி வந்த வைத்தியர் ஜெய நாதன் மற்றும் வைத்தியர் கஜேந் திரா என்பவர்களுடன் அரச வைத் திய அதிகாரியும் இணைந்து சிகிச் சை செய்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவிற்கும் இறந்தவர்களை வீடுகளிற்கும் அனுப்பி வைத்தோம். இச்சம்பவம் நடந்து பல வருடங்கள் கடந்த நிலையிலும் , அதனை நினைக்கும்போது அனைத்துச் சம்பவங்களும் நேற்றைய தினம் நடந்ததுபோல் கண்முன்னே வருமள விற்கு அந்த நிகழ்ச்சி எனது மனதில் மாறாவடுவாகவுள் ளது."

11.11.1987 அன்று நெடுங் கேணிச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. கந்தையா சிறிதரன் (22)
2. கதிர்காமு கார்த்திகேசு (44)
3. தம்பையா நற்குணம் (31)
4. மகாதேவன் மகேந்திரன் (31
5. முகமதுசரிபுறகீம் (26)
6. முத்தையா துரைராசா (64)
7. அப்துல்காதர் முகமது லிமாஸ் (24)
8. பொன்னம்பலம் இராம நாதன் (-)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான சுப்பசொனிக் விமானக் குண்டு வீச்சு - 13.11.1996

குருநகர்க் கிராமம் யாழ்ப்பாண நகரத்திலிருந்து தெற்குப் புறமாக இரண்டு மைல் தூரத்தில் கடற் கரையோரமாக அமைந்துள்ளது. குருநகர்ப் பகுதியில் 1861 ஆம் ஆண்டு அடிக்கல் நட்டப்பட்டு 1881 ஆம் ஆண்டு புனித யாகப்பர் ஆல யம் அமைக்கப்பட்டது. இவ்வாலயச் சூழலில் 1973 ஆம் ஆண்டு இறந்த "அருட்திரு யோசவ் றேயை" அவர் கள் ஆலயத்தில் அடக்கம் செய்யப் பட்டநினைவுக்கல்லும் உள்ளது.

13.11.1993 அன்று சனிக்கிழமை காலை 7:20 மணிக்கு அவ்வூர் மக்கள் இறைவழிபாட்டுக்காக ஆல யத்தில் ஒன்று கூடியிருந்த நேரம் குடாநாட்டு வான்பரப்பிற்குள் பிர வேசித்த சிங்கள விமானப்படை யின் சீன நாட்டுத் தயாரிப்பான "சுப்பர்சொனிக்" விமானங்கள் இரண்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது இரு குண்டுகளை வீசின. இவ்வாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்தவர்களில் பதின்மூன்று பேர் உயிரிழக்க, இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர் கள் காயமடைந்ததுடன், தேவாலய மும் சேதமடைந்தது.

குருநகர் புனித யாகப்பர் தே வாலயம் மீதான தாக்குதலை அரசி யற் தலைவர்களோடு உலக நாடுகள் பலவும் கண்டித்திருந்தன. தேவாலயத்தின் மீதான் குண்டு வீச்சினால் மண்டபத்தினைத் தாங்கிய தூண்கள் துண்டங் களாகின. அந்தத் தூண்கள் இன் றும் யாகப்பர் சிலையின் அருகே ஞாபகச் சின்னமாக வைக்கப்பட் டுள்ளன. புனித யாகப்பர் ஆலயத் தில் உயிர் நீத்த மக்களின் நினை வாக குருநகர் மக்களால் ஆலயப் படிக்கட்டில் "நீதிக்கான நினை வாலயம்" என்னும் நினைவுச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

13.11.1996 அன்று புதிய யாகப் பர் தேவாலயத்தில் படுகொலை யில் கொல்லப்பட்டோர் விப ரம்:

1. குரூஸ் அக்கினேஸ் (60)
2. கபிரியஸ் அன்ரன் (48)
3. அன்ரன் புஸ்பலீலா (41)
4. அன்ரன் அஞ்சலா (40)
5. அக்கினேஸ் குருசுப் பிள்ளை (80)
6. ஆரோக்கியநாதர் சில் வன் சஜீவன் (18)
7. ஜோன்லூத்து சேவியர் (45)
8. தோமஸ் பெனடிற் (55)
9. மேரி ஜெயசீலி தாசியஸ் (50)
10. மேரிசிந்துயா மதுர நாயகம் (2.5)
11. மேரிவெண்ணிலா அந் தோனிப்பிள்ளை (27)
12. சிங்கராயர் ஜானி கனோஜி (08)
13. சிங்கராசா யூஜின் காமலிற்றா (15)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

பாலிநகர் படுகொலை 03.11.1999

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் வவுனிக்குளத்தினை அண்மித்த பகுதியிற் பாலிநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயம் மற்றும் வியா பாரத் தொழில்களில் ஈடுபட்டுவந் தனர். பாலிநகரைப் பொறுத்தவரை அது 1999 ஆம்ஆண்டு காலப்பகுதி களில் அதிகளவு மக்கள் தொகை யை கொண்டிருந்தது. அம்மக்களில் பெரும்பாலனோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந் துவந்தவர்களாவர். பாலிநகர்ச் சந்தி இக்காலப் பகுதியில் சிறு நகரப் பண்பு கொண்டதாகவும், அதிக மக்கள் செறிவைக் கொண்ட தாகவும் காணப்பட்டது.

03.11.1999 அன்று பாலிநகர் மக்கள் தமக்கு நடக்கவிருக்கும் அவலத்தை அறியாதவர்களாக தமது வழமையான செயற்பாடு களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் கள். அன்று காலை பாலிநகர்ச் சந்தியில் மக்கள் தமது பல்வேறு பட்ட தேவைகளுக்காகக் கூடிநின்ற போது, காலை 11:30 மணியளவில் சிங்கள விமானப்படையின் "கிபிர்" வமானங்கள் குண்டுத்தாக்குதல் களை நடத்தின.

பாலிநகர்ச் சந்தி யில் விமானம் குண்டத்தாக்குதலை மேற்கொண்டு விட்டது என்பதை அறிந்த மக்கள், தமது உறவினர் களைத் தேடித் தாக்குதல் நடந்த இடத்துக்கு ஓடிச் சென்று கொண்டிருந்தபோது அம் மக்கள் மீதும் "கிபிர்" விமானங்கள் மீண்டும் தாக்குதலை நடத்தின. அன்றைய விமானத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் உடல் சிதறி உயிரிழந்ததுடன், எட்டுப் பேர் காய மடைந்தனர்.

03.11.1999 அன்று பாலிநகர் படுகொலையில் கொல்லப்பட் டோர் விபரம்:

1. பெருமாள் சுரேஸ்குமார் (18)
2. வீரையா துரைராசா (55)
3. தாமோதரம் பிள்ளை கிருஸ்ணராசா (60)
4. வைத்திலிங்கம் சுதாகர் (17)
5. கிருஸ்ணராசா ஜெய சீலன் (-)
6. குமாரவேலு புண்ணிய லிங்கம் (42)

குறிப்பு:- இச்சம்பவத்திற் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

கிளிநொச்சி மருத்துவமனை அருகாமைப் படுகொலை 02.11.2006

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை வளாகத்தை அண்மித்த பகுதிகளில் சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் 2006 நவம்பர் 02 ஆம் நாள் பிற்பகல் 2 மணியளவில் நான்கு தடவைகள் குண்டத் தாக் குதல்களை மேற்கொண்டன. அதன்போது 16 குண்டகள் வீசப் பட்டன. இவற்றில் 15 குண்டுகள் வெடித்துள்ளன. இதன்போது பொது வைத்தியசாலைக்கு அருகிலிருந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர். உயிரி ழந்தவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள். குண்டு வீச்சுத் தாக்குதல் காரணமாக உயிரிழந் தவர்களின் வீடு முழுமையாகச் சிதைவடைந்ததுடன் மேலும் கால்நடைகள் பலவும் பலியாகிய தோடு பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்தன.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனை வளாகத்தில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக் குதலில் வைத்தியசாலை பலத்த சேதமடைந்தது. இங்கு வைத் தியசாலை ஊழியர்கள் மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற் றுவந்த மூன்று நோயாளர்களும் காயமடைந்துள்ளனர். விமானக் குண்டுச் சன்னங்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக் கட்டடத் தின் நோயாளர் விடுதிகளையும் தாக்கியுள்ளன. வைத்தியசாலை யின் கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ விடுதி மற்றும் குழந்தை களுக்கான விடுதிகள் என்பவற்றை குண்டுச் சன்னாங்கள் தாக்கியுள் ளன. அதனால் அவற்றின் கூரைப் பகுதிகள் மிக மோசமாகச் சேதடைந் துள்ளன. இதேவேளை சத்திர சிகிச்சைக் கூடம் உட்பட வைத்திய சாலையின் பல்வேறு பகுதிகளிலும் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

இத்தாக்குதலையடுத்து வைத்திய சாலை விடுதிகளிற் தங்கிநின்று சிகிச்சைபெற்றுவந்த 300 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள், வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென வந்த 700 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் வைத்தியசாலை வளாகத்தை விட்டுச் சிதறி ஓடினர். நடக்கமுடியாத நோயாளரை உறவி னர்கள் வந்து கூட்டிச்சென்றனர். இத்தாக்குதலையடுத்து வைத்திய சாலையின் செயற்பாடுகள் அனைத் தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இத்தாக்குதலின் காரணமாக பாடசாலை மாணவர்கள், மக்கள் என்ப் பலரும் பெரும் அச்சத்துடன் வீதிகளிற் சிதறி ஓடினர். கிளிநொச்சி நகரப் பகுதி உட்பட கிளிநொச்சிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் அச்ச மடைந்து வீதிகளிற் சிதறி ஓடினர். இதன் காரணமாக ஏ-09 நெடுஞ் சாலை மற்றும் உள் வீதிகள் அனைத்திலும் சன நெருக்கடி அதி கரித்திருந்தது. தாக்குதல் நடை பெற்ற இடத்தையும் இறந்தவர் களின் உடல்களையும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிறீலங்கா விற்கு நிதி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியம், ஐப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா) தூதுவர்கள் தமது கவலையினை வெளியிட்டுள் ளனர்.

இதில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:

1. முருகேசு சண்முகரத் தினம் (56)
2. சண்முகரத்தினம் சசி (20)
3. சண்முகரத்தினம் கிரிசாந் (18)
4. முருகேசு மார்க்கண்டு (62)
5. இரத்தினம் சரஸ்வதி (-)

அம்பாறை றொட்டை செம்மணிக்குளம் படுகொலை 09.11.1985

அம்பாறையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான கண்ணகிபுரத்திலிருந்து சிறீலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியான றொட்டை செம்மணிக்குளம் 2007.11.11 ஆம் நாள் மாலை 5:00 மணியளவில் நோக்கி உழவியந்திரத்தில் சென்ற மூன்று பொதுமக்களை சிறீலங்கா அதிரடிப் படையினர் கடத்திச் சென்ற பின் சுட்டுக்கொலை செய்துள்ளனர். மறு நாள் பொத்துவில் மருத்துவ மனையில் மூன்று விடுதலைப்புலிகளின் உடல்கள் எனக் கூறி ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதன்போது கொல்லப்பட் டவர்கள்:

1. சாமித்தம்பி செல்வராசா
2. எஸ். குணரத்தினம்
3. க.சுதாகரன்

பிரித்தானிய காலனித்துவ காலத்திலேயே தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டனர்



இலங்கையின் கரையோரங்களை 1796-ம் ஆண்டில் கைப்பற்றிக்கொண்ட பிரித்தானியர் 1915-ம் ஆண்டு மலையகப்பகுதியை பிடித்ததோடு தீவு முழுவதையும் தம்வசப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட இவர்களுக்கு பொருளாதாரச் சுரண்டலுக்கு ஓர் அரசியல் கட்டமைப்புத் தேவைப்பட்டது. அதன் முதல் பரிமாணமாக 1833 - ம் ஆண்டு கோல்புறூக் யாப்பு விளங்கியது. இதன்படி பிரித்தானியர் தமிழர்களை யாப்பியல் ரீதியாக ஓரங்கட்டியே வந்தனர். ஆனால் ஆரம்பத்தில் ஆதரித்தனர்.

இதில் இன்னோர் விடயத்தையும் அவதானிக்க வேண்டும். பிரித்தானியா ஏனைய தமது காலனித்துவ நாடுகளில் சிறுபான்மையினரை ஆதரித்து பெரும்பான்மையினரைத் தோற்கடித்து தமது பிரித்தாளும் தந்திரத்தில் வெற்றி கொண்டனர். உதாரணமாக இந்தியாவில் பௌத்தரை மையமாகக் கொண்ட பர்மாவையும் முஸ்லீம்களையும் மையமாகக் கொண்ட பாகிஸ்தானையும் ஏற்படுத்தினர். ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் இது மாறுபாடாய் அமைந்திருந்தது. ஏனெனில் இலங்கையின் அரசியல் சூழ்நிலை பிரித்தானியாவின் ஏனைய காலனித்துவ நாடுகளைப் போல் அமைந்திருக்கவில்லை. காரணம் தமிழர்களின் அரசியல் ரீதியான எழுச்சியும் அவர்கள் அண்டை நாடான இந்தியாவோடு இணைந்து தமக்கெதிராக ஓர் பெரும் புரட்சியை உண்டுபண்ணி அது தென்னாசியா முழுவதும் பரந்து விடுமோ என பயந்ததன் விளைவாக இருக்கலாம். இதற்காகத்தான் 1920 ஆம் ஆண்டின் பின்பு தமிழர்கள் பிரதிநிதித்துவ ரீதியாக ஓரம் கட்டப்பட்டு சிங்களவர் அரவணைக்கப்பட்டும் வந்தனர்.

பிரிதிநிதித்துவ ரீதியாக இனவாரியில் தமிழர்களும் சிங்களவர்களும் சமத்துவமாகவே கணிக்கப்பட்டனர். இனவாரி பிரதிநிதித்துவத்தில் சொத்து கல்வி அடிப் படையிலேயே வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்த அடிப் படையில் விகிதாசார ரீதியில் தமிழர்கட்கே கூடுதலாக வாக்குப்பலம் கிடைத்தது. 1912 இல் படித்த இலங்கை யர்க்கான பிரதிநிதித்துவம் என்பதில் சேர் பொன் இராம நாதனே தெரிவு செய்யப்பட்டார். இவரது வெற்றிக்கு இரண்டு காரணங்களை அடையாளம் காணலாம்.

1. அப்போது தமிழர்கள் வாக்குரிமை அடிப் படையிலும் பொதுச் சேவைப்பகுதியிலும் உயர் வான இடத்தில் இருந்துள்ளனர்.

2. இராமநாதனை எதிர்த்துப் போட்டியிட்டவர் மார்க்கஸ் பெர்ணாண்டோ எனும் கரையோரச் சிங்களவர்; அத்துடன் கிறிஸ்தவரும் கூட. அன்று இலங்கையில் ஆதிக்கம் செலுத்தியது சாதி அமைப்பு. பெர்ணாண்டோ ஒரு கரை நாட்டுச் சிங்களவராதலால் கண்டிச் சிங்களவரால் நிராகரிக் கப்பட்டார்.

இராமநாதன் உயர் இந்து வேளாளர் குடியினராயினும் இவர் பௌத்தருக்கு சார்பான பல கருத்துக்களை கொண டிருக்கத் தவறவில்லை. இவை எல்லாம் இணைந்தே இவரின் வெற்றிக்கு காரணமானது. 1912 இல் அறு இலட்சம் (6000000) தமிழர்களின் கல்வித் தகமை அடிப்படையில் வாக்குரிமை பெற்றவர்கள் 1346 பேர். சமகாலத்தில் இதே அடிப்படையில் இருபத்தெட்டு இலட்சம் (2800 000) சிங்களவர்களில் 1748 பேரே வாக்கு பெற்றிருந்தனர். இவை எல்லாம் அன்று தமிழர்களின் அந்தஸ்த்து எவ்வாறு இருந்தது என்பதை காட்டுகின்றது.


இவ்வாறாக நிலைமைகள் இருந்த வந்தபோதும் 1915 ஆம் ஆண்டு சிங்ள முஸ்லிம் கலவரத்தை அடுத்து 1919 இல் சேர் பொன் அருணாசலம் தலைமையில் இலங்கைத் தேசியக் காங்கிரஸ் வேறுபாடுகட்கு அப்பால் அமைக்கப்பட்டமை இலங்கைத் தேசிய வாதத்தின் முக்கிய ஒரு கட்டமாக கருதப்பட்டது. இக்காலத்தில் இலங்கையில் சேனாதிபதியாக இருந்தவர் வில்லியம் மனிங் என்பவராவர். பிரித்தானியர் பிரித்தாளும் தந்திரத்தில் வல்லவர்கள். இதில் மனிங் பிரபு பிரித்தாளும் தந்திரத்தில் முடிமணியாகத் திகழ்ந்தார். இலங்கையர்களின் ஒருமைப்பாடு பிரித்தானியருக்கு பல முறைகளிலும் அச்சுறுத்தியது. இப்போதுதான் இனங் களைப் பிரிக்கவேண்டிய அவசியம் பிரித்தானியருக்கு ஏற்பட்டது. கண்டிய சிங்களவர், கரையோச் சிங்களவர், இலங்கைத் தமிழர் என மனிங் தயவு தாட்சண்யம் இன்றி உடைத்தெறிந்தார். இதில் நிரந்தரமாகப் பழிவாங் கப்பட்டவர்கள் தமிழர்கள். இவ்வாறு தமிழர்கள் பழிவாங் கப்பட்டதற்குத்தான் முன்கூறிய காரணங்களுடன் 1919-ல் அருணாசலம் தலைமையிலான அகில இலங்கைத் தேசிய காங்கிரஸ் உதயம், 1920-களில் யாழ் வாலிப சங்கத்தால் உருவாக்கப் பட்ட வாலிபர் சங்கம் என் பனவும் காரணமாயின.

தமிழர்களை இன்னும் சிறுமைப்படுத்தும். சின்னமாக 1931-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட டொனமூர் திட்டம் இருந்தது. இது கடந்தகால சம்பவங்களுடன் 1927-களில் இந்தியத் தேசிய காங்கிரஸ் தலைவர்களின் இலங்கை விஜயமும், யாழ் வாலிபர் சங்கத்துடனான நெருக்கமான உறவும் பிரித்தானிய அதிகாரிகட்கு இன்னும் சந்தேகத்தைக் கூட்ட அவர்கள் தமிழர்களை அரசியலில் இன்னும் ஓரம் கட்டவே செய்தனர்.

இதற்குப் பதிலாக சிங்களவர்களை இன்னுமாக அர வணைத்துக் கொண்டனர். இதன் பிரகாரம்தான் சர்வஜன வாக்குரிமையும் பிரதேசவாரி பிரதிநிதித்துவமும். சர்வஜன வாக்குரிமை நல்லதோர் அம்சம்தான். அது வழங்கப்பட்ட கட்டம் தான் தமிழர்கட்கு சாபக்கேடானது. இதற்கு ஒரு உதாரணம், அமெரிக்க சுதந்திரப் போராட்ட காலத்தில் வட அமெரிக்க குடியரசுகளில் இருந்து தென் அமெரிக்க அரசுகள் பிரிந்து செல்ல முற்பட்டபோது அதனை தடுக்கமுடியாது திண்டாடிய அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், தென்னமெரிக்க குடியரசுகளின் பண்ணைகளில் அடிமையாக வேலை செய்த கறுப்பு இனத்தவர்களுக்கு விடுதலை அளித்தல் மூலம் தென்னமெரிக்க குடியரசுகளின் பிரிவினையை முடிவுக்குக் கொண்டவந்தார். ஆனால் லிங்கன் கறுப்பருக்கு விடுதலை அளித்த பெருமைகக் குரியவராக வரலாற்றிலே போற்றப்படுகின்றார். டொனமூர் பிரபுவும் எங்களை சிங்களவர்கட்கு அடமானம் வைத்து விட்டு இலங்கையர்கட்கு சர்வஜன வாக்குரிமை வழங் கியவர் எனும் வரலாற்றுப் பெருமையைத் தட்டிக் கொண்டார். மேலும் இந்தியா தொடர்பான அச்சுறுத்தலும் பிரித்தானியரால் அவ்வப்போது உணரப்பட்டது. சேர் ஜவர் ஜென்னிங்கின் கருத்தானது - இந்தியாவை விட இலங்கை யின் வாழ்க்கைத் தரமும் எழுத்தறிவும் உயர்வானது. இந்தியர்கள் இலங்கையில் குடியேற்றத்தடைகள் எதுவும் இல்லாவிட்டால் கடும் உழைப்பாளிகளான இலங்கைத் தமிழர்களாலும் இந்திய வணிகர்களாலும் சிங்களவர்கள் மூழ்கடிக்கப்பட்டு விடுவார்கள்.

இவ்வாறான எண்ணப்பாடுகள் பிரித்தானியர் மட்டுமல்ல சிங்களவரும் தமிழர் மீது கொண்ட சந்தேகத்தை உறுதிப் படுத்துவதாயிற்று.

டொனமூர் திட்டத்தை இராமநாதன் எதிர்த்து லண்டன் பரை சென்று வந்தார். யாழ் வாலிபர் சங்கம் இத்திட்டத்தின் கீழான அரசாங்க சபை தேர்தலை பகிஸ்கரித்தது. இதனால் சட்டசபையிலும் தமிழர் புறக்கணிக்கப்பட்டதால் 1936-ல் தனிச்சிங்கள மந்திரி சபை அமைய காரணமாகியது. 1947 — ல் சோல்பரி யாப்புக்கூட சிங்களவரை மையமாகக் கொண்டே தயாரிக்கப்பட்டது. காரணம் இது 1943-ம் ஆண்டு சிங்கள மசோதாவை மையமாகக் கொண் டதாகவும் இதில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட காப்பீடு ஒரு வரலாற்று ஏடு மட்டுமே. ஏனென்றால் 1949-ல் நிறைவேற்றப்பட்ட இந்திய — பாகிஸ்தானிய சட்டமும் 1956-ல் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களவர் சட்டமும் நிறைவேற்றப்பட்டபோது காப்பீடு என்ன செய்தது? ஆகவே தமிழர்களை ஓரம்கட்டிய பிரித்தானியரின் தொடர்ச்சியை சிங்கள தலைவர்களும் தொடரலாயினர். 1933-1947



வரையான பிரதிநித்துவம் பின்வருமாறு அமைந் திருந்ததை ஒருகணம் நோக்குவோம்.

இவ்வாறாக அன்று காலனித்துவ வாதிகளால் சுயலாபத் திற்காக ஓரம் கட்டப்பட்ட தமிழர்கள் தொடர்ந்து அதிகாரத்தை கைமாற்றிக் கொண்ட பூர்சுவாக்கத்தில் வளர்ந்த சிங்கள ஆளும் வர்க்கத்தால் நிரந்தரமாகவே முழுமையாக ஓரங்கட் டப்பட்டுவிட்டனர். இதற்காக தமது நலன்களையும் அந்தஸ் தையும் பேணிக்காத்துக் கொள்ள 1972-லும் 1978-லும் இரண்டு யாப்புப் புத்தகங்களை மாறி மாறி வரைந்து கொண்டனர். இந்நிலையில் அன்று இழக்கப்பட்ட எமது சம உரிமையைப்பெற இன்று போராடுவது தவிர்க்க முடியாத வரலாற்று உண்மையாகும்.

நன்றி : நடா. கருணாகரன் - "சுதந்திரப் பறவைகள்'

கல்லறைக் கதவுகள் திறக்கும் காணிக்கைத் திருநாள்

சாமம் பேயுலவும் சவக்காலை
என்ற பழிச்சொல்
போய் மறையலானது.
வீரர் துயிலுகின்ற இல்லம்
என்ற புனிதச் சொல்
வாய் நிறையலானது.
கார்த்திகை மாதத்திலேன் கனத்தமழை?
ஏனிந்தப் பச்சைவிரிப்பு?
நிலமேன் நெக்குருகிக் கிடக்கிறது?
காற்றேன் ஓவென்றிரைகிறத?
சூரியனேன் சுட்டெரிப்பதில்லை?
அயர்ந்துறங்கும் ஆலகண்டருக்கு
இயற்கையின் இந்தமாத அஞ்சலியிது.

ஓவென்றிரையும் ஊதற்காற்றே!
வேகம் குறைதது வீசு,
தேவகுமாரர்கள் இங்கே தூங்குகின்றனர்.
துயில் கலைத்துத் தொலைக்காதே.
கல்லெறியும் பொல்லாக் கனத்த மழையே!
மெல்லப் பூவெறிதல் போலப்பொழிக.
இங்கே ராஜகுமாரிகள் உறங்குகின்றனர்.
தொட்டெழுப்பித் தொலைக்காதே.
நிலமே! மழைநீரைக் குடிக்காதே
உள்ளே சில்லிட்டுப் போகும் அவர்தேகம்.
அதிர நடப்பவரே கவனம்
பிள்ளைகளின் ஆனந்தசயனம் கலையக்கூடும்.
பூக்களெனினும் மெதுவாகப் போடுங்கள்
தூக்கம் கலைந்து போகலாம்.
காலப்பணியில் கண்துஞ்சாதிருந்தவர்கள்
கால் நீட்டிக் கொஞ்சம் களைப்பாறுகின்றனர்.
வாழ்வின் வசந்தம் யாவையும்
தாயக வேள்வியில் தர்ப்பணம் செய்தவர்
நீள்துயிலிற் கிடக்கின்றார்
என் எழுப்ப வேண்டும் அவர்களை?

கார்த்திகை இருபத்தேழு
எம் காவற்தெய்வங்களுக்கான காணிக்கைப் பெருநாள்.
துயிலுமில்லத்தின் தூமணிக்கபாடங்கள்
அன்று அகலத்திறந்திருக்கும்.
ஊர்கூடி விதைத்த வயல்தேடி வந்திருக்கும்.
சிறகெடுத்த பறவைகளின் உறவங்கு திரண்டிருக்கும்.
தனித்த குரலில் ஒரு தாய்ப்பறவை கதறியழும்.
“மகனே!
பால்தந்த பாவி பூக்கொண்டு வந்துள்ளேன்.
கால்கொண்டுதைத்து நிலம் கிழித்து
வாமகனே வெளியே.
ஏன் கையணைப்பில் உன்னை நொடிப்பொழுதாயினும்
ஆரத்தழுவ அனுமதிப்பாய் என் மகனே”
உயிர் பிழிந்து கசியும் உதிரம்.
திக்குற்றுப்போகும் திரண்டிருக்கும் உறவுகள்.
பக்கத்துக் குழியருகும் பாடும் துயர்ப்பாட்டொன்று
விக்கலுடன் எழும்.
அங்குமொரு தாய்ப்பறவை அழும்.
“அம்மாவென அழைத்த அழுதவாய் திறந்தின்று
இன்னோர் முறையென்னை எழுந்தழைக்க மாட்டாயோ?
கனவிற் தினம் வந்து கட்டியெனை அணைக்கின்ற
மகளே! ஒரு தடவை மார்பணைக்க வாராயோ?”
சொல்லியழும் குரலில் கல்லும் கசிந்துருகும்.
கேட்கும் செவியெல்லாம் கிறுகிறுத்துப் போகும்.
உள்ளே நரம்பெல்லாம் தீமூண்டு நடுங்கும்.
ஆறாத் துயர்வெள்ளம் அணையுடைத்துப் பாயும்.

அப்போதுதான் கல்லறையின் கதவுகள் திற்பதாய்
ஒரு காட்சி விரியும்
உள்ளே முகம் தெரியும்.
விழிகள் திறந்து பேசத்துடிப்பதாய் வாயசையும்.
மெல்லச் சிரிப்பொலியும் கேட்கும்.

“அம்மா!
என்னை இழந்ததாய் ஏன் புலம்புகிறாய்.
எனக்கா சாவு வரும்?
உள்ளே உயிர்கொண்டே உறங்குகின்றேன்.
தமிழீழம் வரும்வரை எனக்குச் சாவில்லை
அதன் பின்பும் எனக்கு அழிவில்லை.
இது பீஷ்மரின் படுக்கை
காத்திருக்கும் கண்ணுறக்கம்.”
என்றோர் அசரீரி எல்லாச்செவிகளிலும் கேட்கும்.
கோயில் மணிகள் அசையக் குழிவிழிகள் மூடிவிடும்.
கல்லறைக் கதவுகளில் பூட்டு விழும்.
காணிக்கைத் திருநாளுக்கான பூசைமணியசைய
சுற்றுப் பிரகாரம் சூடு பெறும்.
நெய்விளக்குகள் நிமிர்ந்து சுடர்பிடித்தெரியும்.
திருப்பலிப்பாடல் தொடங்கும்.

“மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி”

பாடல் தொடங்கவே நெஞ்சு பாரம் சுமக்கும்.
விழிநீர் சொரியச் சொரியப் பாடும் போது
நெஞ்சுள்ளே கிளறும் உணர்வில் நெருப்புமூளும்.
கல்லறையில் விழும் கண்ணீர்த்துளிகளால்
வெள்ளையடித்த சுண்ணாம்பு கரைந்தொழுகும்.

இது வீர வழிபாடு.
பழைய மரபொன்றின் புதிய வடிவம்
வீரர்களைத் தெய்வங்களாக்கும் விதிமுறை.
ஈழமத்தாழி.
நடுகல்.
வெறியாட்டு
இதுவெ முததமிழர் காலத்து வழித்தடம்.
தீயிடும் ஆரிய மரபழித்து
மீண்டும் வேரிலிருந்து பூக்கிறது வீரப்பூ.

மாவீரர் நாள்
செத்த பிணங்களுக்கு சாப்பிணங்கள் கதறுவதாய்
சித்தர்கள் பழித்துரைத்த நிருநாளல்ல.
வல்லமையை எமக்கு வழாங்குங்கள் என்று
கல்லறைக்கு முன்னே கைகூப்பும் நாளாகும்.
உங்கள் பணிமுடிக்க உள்ளோம் நாம்
எனச்சொல்லி
பொங்கும் மனத்திடத்தைப் பெறுகின்ற நாளாகும்.
மாறாமனத்தை அருள்வீர்
நீர்பெற்ற
மானத்துக்கான மரணத்தை எமக்களிப்பீர்.
என்றோர் வரம் கேட்க எழுகின்ற நாளாகும்.

இது அருச்சுனன் தபசு.
காண்டீப நாதத்துக்கான கடும்தவம்.
கார்த்திகை மாதம் கூத்திடும் காலம்
ஊழிக் கூத்துக்கான ஒத்திகை.
உமக்கருகில் எமக்குமொரு குழி என
போருக்குப் போகின்ற புனிதநாள்.
அடியே கொற்றவைக் கிழவி!
ஆயிரம் யானைகளின் பலமளிப்பாய்.
எதிர்வரும் பகைரதங்கள் யாவும்
எம் மூச்சுப்பட்டழியும் வரமளிப்பாய்.
துயிலுமில்லக் கதவுகளே! திறந்தேயிருப்பீர்.
வெற்றிபெற்றவந்து கல்லறைக்கு மாலையிடுவோம்.
இல்லையேல்
வித்துடலாய் வந்து உனக்குள்ளே காலைவிடுவோம்.

உலகக்களம் – விபாசன்

சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302

Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

Aruvucholai Boys Child Development Center
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483

Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427

Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095

Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721

St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049

Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685

Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494

Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

கனேடிய ஒன்ராரியோ மத்திய கால்பந்தாட்ட தொடரில் மீண்டும் சாதனை படைத்த பாலச்சந்திரன் விளையாட்டு கழக 18 வயது அணியினர்



20.10.2021

கடந்த வாரம் நிறைவடைந்த கனேடிய ஒன்ராரியோ மத்திய கால்பந்தாட்ட தொடரில் சாதனை மீண்டும படைத்த பாலச்சந்திரன் விளையாட்டு கழக 18 வயது சிறப்பு அணியினர். இவ்வருடம் நடைபெற்ற கால்பந்தாட்ட அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று தமிழராக சாதனை படைத்தனர்.

வேற்று இன மக்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் திகைக்கும் வண்ணம் அனைத்து போட்டிகளையும் வென்றனர்.

இறுதியாக நடைபெற்ற போட்டியிலும் அனைவரும் திகைப்படையும் சாதனை படைத்தனர்.

பாலச்சந்திரன் கழக இவ் சிறப்புமிக்க கால் பந்தாட்ட அணியினர் இதற்கு முந்தைய கனேடிய கால்பந்தாட்ட வரலாற்றில் தமிழ் கால்பந்தாட்ட அணியாக மற்றைய இன மக்களுடன் விளையாடி அனைத்துலக தமிழர்க்கும் பெருமை சேர்த்தனர்.

கனேடிய அமெரிக்க மண்ணில் சாதனை களை நிகழ்த்திய இவர்கள் எதிர்வரும் காலங்களில் கனேடிய தேசிய கால் பந்தாட்ட மற்றும் எங்கள் தமிழீழ அணியி லும் பங்குபற்றி சாதனை படைக்க வேண்டும் என்பது அனைவரும் வேண் டுவது போல்.



காலங்களிலும் பல்வேறு கால்பந்தாட்ட போட்டிகள் அமெரிக்க மற்றும் கனேடிய போட்டிகளில்வெற்றி கிண்ணத்தை வென் றது தமிழ் மக்களுக்கும் கனேடிய மக் களுக்கும் பெருமை சேர்த்தனர்.

நாங்களும் வாழ்த்துகிறோம்.

கனேடிய மண்ணிலும் உலகளாவிய ரீதிலும் பல சாதனைகளை நிகழ்த்த அனைவரும் வாழ்த்துவோம். நன்றிகள்.







விலகாத மர்மங்கள்: கடலுக்குள் புதைந்திருக்கும் உலகின் எட்டாவது கண்டம்



நீருக்குள் புதைந்திருக்கும் 8-ஆவது கண்டத்தைக் கண்டுபிடிப்பதற்கு விஞ்ஞானிகளுக்கு 375 ஆண்டுகள் ஆகின. ஆனால் அதற்குள் இருக்கும் மர்மங்கள் இன்னும் தெளிவாகப் புலப்படவில்லை.

அது 1,642-ஆவது ஆண்டு. உலகின் எட்டாவது கண்டத்தைத் தேடும் பணியில் டச்சு மாலுமியான ஏபெல் டாஸ்மென் ஈடுபட்டிருந்தார். பூமியின் தெற்கு அரைக் கோளத்தில் ஒரு பரந்த கண்டம் இருக்கிறது என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

அந்தக் காலகட்டத்தில் தெற்கு அரைக்கோளப் பகுதி ஐரோப்பியர்களுக்கு மர்மமாகவே இருந்தது. வடக்கேயுள்ள தங்களது கண்டத்தை சமநிலைப் படுத்தும் வகையில் தெற்கே ஒரு நிலப்பரப்பு இருக்க வேண்டும் என்று அவர்கள் கணித்திருந்தார்கள். அதற்கு டெர்ரா ஆஸ்ட்ராலிஸ் என்று பெயரும் வைத்தார்கள்.

இந்தோனீசியாவின் ஜகார்த்தாவில் உள்ள தனது நிறுவனத்தின் தளத்திலிருந்து இரண்டு சிறிய கப்பல்களுடன் புறப்பட்டு மேற்கு, பின்னர் தெற்கு, பின்னர் கிழக்கு நோக்கிப் பயணித்து இறுதியில் நியூசிலாந்தின் தெற்கு தீவைச் சென்றடைந்தார் டாஸ்மேன். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அங்கு குடியேறிய தாகக் கருதப்படும் உள்ளூர் மவோரி மக்களுடனான அவரது முதல் சந்திப்பு கசப்பாக முடிந்தது. மோதல் ஏற்பட்டது.

அடுத்த நாளில் டச்சு கப்பல்களுக்கு இடையில் செய்திகளை அனுப்பும் ஒரு சிறிய படகு மீது அவர்கள் படகைக் கொண்டு மோதினார்கள். அதில் நான்கு ஐரோப்பியர்கள் இறந்தனர். ஐரோப்பியர்கள் பதிலுக்கு தங்களுடைய எறிகணைகள் மூலம் உள்ளூர் மக்களின் துடுப்புப் படகுகளைத் தாக்கினர். அதன் பிறகு என்ன ஆனது என்று தெரியவில்லை. ஆனால் டாஸ்மனின் ஆய்வுப் பயணம் முடிவுக்கு வந்தது.

மோதல் நடந்த இடத்துக்கு மூர்டேனர்ஸ் - கொலைகாரர்கள் - என்று பெயரிட்டார். புதிய நிலத்தில் கால் வைக்காமல் சொந்த நாட்டுக்குத் திரும்பினார். பிரும்மாண்டமான தெற்குக் கண்டத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக நம்பினாலும், அவர் அந்த இடத்துக்கு மீண்டும் திரும்பி வரவேயில்லை.



ஏபெல் டாஸ்மேனின் நினைவாக வெளியிடப்பட்ட அஞ்சல்தலை

அந்த நேரத்தில் ஆஸ்திரேலியக் கண்டம் ஏற்கெனவே அறியப்பட்டிருந்தது. ஆனால் அதுதான் தாங்கள் தேடிய தெற்குக் கண்டம் என்று ஐரோப்பியர்கள் கருதவில்லை. பின்னர் மனம் மாறி அதற்கு ஆஸ்திரேலியா என்ற பெயரை வைத்துவிட்டார்கள்.

2017-ஆம் ஆண்டில் புவியியலாளர்கள் குழு புதியாக ஸீலாண்டியா என்ற புதிய கண்டத்தைக் கண்டுபிடித்தாக அறிவித்தது. அந்த அறிவிப்பு தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தது.

மடகாஸ்கரைப் போல ஆறு மடங்கு பெரிதாக சுமார் 49 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்டதாக அது இருக்கும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

ஆனால் கலைக்களஞ்சியங்களும், வரைடங்களும், தேடுபொறிகளும் இதை ஏற்கவில்லை. உலகில் ஏழு கண்டங்கள்தான் இருக்கின்றன என்பதில் அவை பிடிவாதமாக இருந்தன. அது தவறு என புவியியலாளர் குழு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

புதிய கண்டம் மற்ற அனைத்துக் கண்டங்களையும் விடப் புதியது, சிறியது, இளையது என்று கவர்ச்சிகரமாகக் கூறப்பட்டது. இந்தக் கண்டத்தின் 94 சதவிகிதப் பரப்பு நீருக்குள் மூழ்கியிருக்கிறது. நியூசிலாந்து போன்ற சில தீவுகள் மட்டும் கடல் மட்டத்துக்கு மேலே இருக்கின்றன.

இந்தக் கண்டுபிடிப்பு ஒரு சிறிய தொடக்கம் தான். நான்கு ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும் இந்தக் கண்டத்தைப் பற்றிய விவரங்கள் இன்னும் புதிராகவே உள்ளன. அதன் ரகசியங்கள் 6,560 அடிக்குக் கீழே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அது எப்படி உருவானது, அங்கு யார் வாழ்ந்தார்கள், எவ்வளவு காலமாக அது நீருக்கடியில் இருக்கிறது என்பதெல்லாம் இன்னும் மர்மம்தான்.

ஒரு கடினமான கண்டுபிடிப்பு

உண்மையில், ஸீலாண்டியா பற்றி ஆய்வு செய்வது எப்போதும் கடினமாகவே இருந்து வந்திருக்கிறது.

1642-ஆம் ஆண்டில் டாஸ்மேன் நியூசிலாந்தைக் கண்டுபிடித்து ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு பிரிட்டிஷ் வரைபடத் தயாரிப்பாளர் ஜேம்ஸ் குக் தெற்கு அரைக்கோளம் நோக்கி அனுப்பப்பட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை, பூமிக்கும் சூரியனுக்கும் இடையே வெள்ளி கடந்து செல்லும்போது அதைக் கண்காணிக்க வேண்டும் என்பதே. அதன் மூலம் சூரியன் எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது திட்டம்.

ஆனால் அவருக்கு மற்றொரு ரகசியப் பணியும் இடப்பட்டிருந்தது. சீல் வைத்து மூடப்பட்டிருந்த ஓர் உறையில் அந்தப் பணி பற்றிய விவரம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் முதல் பணி முடிந்த பிறகுதான் இதைத் திறக்க வேண்டும் என்பது கட்டளை. அது புதிய கண்டத்தை நோக்கிய பயணத்துக்கான உத்தரவு. அதன்படியே ஜேம்ஸ் குக் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

ஸீலாண்டியா என்றொரு கண்டம் இருக்கிறது என்பதற்கான உண்மையான தடயங்கள் சேகரிக்கப்பட்டது ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த இயற்கை ஆர்வர் ஜேம்ஸ் ஹெக்டர் என்பவரால்தான். அது தொடர்ச்சியான மலையைக் கொண்டிருக்கிறது என்றும் நீருக்குள் மூழ்கியிருக்கிறது என்றும் 1895-ஆம் ஆண்டில் அவர் அறிவித்தார்.

இத்தகைய முன்னேற்றங்கள் இருந்தபோதும், ஸீலாண்டியா பற்றிய அறிவு தெளிவற்றதாக இருந்தது. 1960-வரை பெரிய தரவுகள் கிடைக்கவில்லை. அப்போதெல்லாம் ஒரு கண்டம் என்பதற்கான தெளிவான வரையறையே கிடையாது.

1960-களில்தான் ஒரு கண்டம் என்றால் என்ன என்பதற்கான வரையறையை இறுதி செய்ய புவியியலாளர்கள் ஒப்புக் கொண்டனர். அதிக உயரம் கொண்ட புவியியல் பகுதி, பரந்துபட்ட பாறைகள், அடர்த்தியான புவி மேலடுக்கு ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். அதுவும் பெரியதாக இருக்க வேண்டும் என்று கண்டத்துக்கான வரையறை வகுக்கப்பட்டது. இது ஆய்வுக்கான புதிய வாய்ப்புகளை வழங்கியது.



இருப்பினும் ஸீலாண்டியாவைத் தேடும் பணி நிறுத்தப்பட்டது. காரணம் ஒரு கண்டத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது செலவு மிக்கது என்று கருதப்பட்டது. அதைத் தேடுவது ஒன்றும் அவசரமான வேலையில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது.

புதிய கண்டத்தின் நவீன கால அறிமுகம்

1995-ஆம் ஆண்டில் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட பகுதியை ஸீலாண்டியா என்று வரையறுத்தார் அமெரிக்க புவியியலாளர் ப்ரூஸ் லூயென்டிக்.

ஏறக்குறைய அதே நேரத்தில், "கடல் சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் உடன்பாடு" நடைமுறைக்கு வந்தது. அதில் நாடுகள் தங்களது கரையில் இருந்து 200 கடல் மைல் தொலைவைத் தாண்டியும் தங்களது எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளலாம், அங்கிருக்கும் கடல் செல்வங்களை உரிமை கோரலாம் எனக் கூறியது. இது கடல் ஆய்வுகளுக்கு உத்வேகத்தை அளித்தது.

ஒருவேளை நியூசிலாந்து, தான் ஒரு பரந்த கண்டத்தின் ஒரு பகுதி என்பதை நிரூபிக்க முடிந்தால் தனது நிலப் பரப்பை ஆறு மடங்கு விரிவுபடுத்திக் கொள்ளலாம். அதனால் திடீரென கடல் ஆய்வுகளுக்கு ஏராளமான நிதி ஒதுக்கப்பட்டது, ஆதாரங்கள் படிப்படியாகச் சேகரிக்கப்பட்டன. அதனால் ஸீலாண்டியா பற்றிய ஆர்வம் அதிகரித்தது.

கடைசியாக செயற்கைக் கோள் தரவுகளில் இருந்து நல்ல செய்தி வந்தது. அதன் மூலம் ஸீலாண்டியா என்பது ஆஸ்திரேலியாவை விடவும் பெரியதான ஒரு பரப்பு என்பது தெளிவாகத் தெரிந்தது.



கிவி

நியூசிலாந்தில் வாழும் பறக்க இயலாத கிவி பறவைகளுக்கு மடகாஸ்கரில் வாழ்ந்து அழிந்துபோன பெரும் யானைப் பறவையுடன் மரபியல் ரீதியிலான தொடர்பு இருக்கிறது.

இந்தக் கண்டம் இறுதியாக உலகுக்கு அறிவிக்கப்பட்டபோது, அது உலகின் மிகப் பெரிய கடல் பிரதேசம் ஒன்றுக்கான வாய்ப்பாக மாறியது. நியூசிலாந்தைத் தவிர ஸீலாண்டியாவில் கேலிடோனியா தீவு, சிறிய ஆஸ்திரேலியத் தீவுகள் ஆகியவை அடங்கியிருக்கின்றன.


ஒரு மர்மமான நீட்சி

சுமார் 55 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவான கோண்ட்வானா என்ற பண்டைய பெருங் கண்டத்தின் ஒரு பகுதியாக ஸீலாண்டியா இருந்திருக்கிறது. கிழக்குப் பகுதியில் ஆஸ்திரேலியா, அண்டார்டிகா ஆகியவற்றை எல்லைகளாக் கொண்டிருந்தது.

சுமார் 10.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக கோண்ட்வானா கண்டம் தனித்தனியே பிரிந்தபோது, ஸீலாண்டியாவும் வெளிப்புறம் நோக்கி இழுக்கப்பட்டிருக்கிறது என்கிறார் ஆய்வாளர் துல்லோக்.

கண்டங்களின் மேலோடு பொதுவாக 40 கி.மீ. ஆழத்தில் இருக்கும். ஆனால் ஸீலாண்டியாவின் மேலோடு அதிகமாக இழுக்கப்பட்டதால் வலுவிழந்து 20 கி.மீ. ஆழத்துக்கு வந்துவிட்டது. இறுதியில் கண்டத்தின் பெரும்பகுதி நீருக்குள் மூழ்கிவிட்டது.

மெல்லியதாகவும், நீருக்குள் மூழ்கியும் இருந்தாலும்கூட அங்குள்ள பாறைகள் காரணமாக அதைக் கண்டமாகவே கருத வேண்டும் என புவியியலாளர்கள் கூறுகிறார்கள்.



ஆனால் இன்னும் பல அறியப்படாத புதிர்கள் ஸீலாண்டியாவில் உள்ளன. எட்டாவது கண்டத்தின் அசாதாரண தோற்றம் புவியியலாளர்களுக்கு குறிப்பாக புதிராகவும், கொஞ்சம் குழப்பமாகவும் இருக்கிறது. உதாரணமாக, மெல்லியதாக இருந்தும், சிறிய கண்டங்களாக சிதறாமல் எப்படி ஒன்றாக இருக்க முடிந்தது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

ஸீலாண்டியா எப்போது நீருக்கு அடியில் மூழ்கியது என்பது அடுத்த மர்மம். அது எப்போதாவது பெரும் நிலப்பரப்பைக் கொண்டிருந்ததா என்ற கேள்வியும் இருக்கிறது. ஏனென்றால், தற்போது கடல் மட்டத்திற்கு மேலே உள்ள பகுதிகள் பசிபிக் மற்றும் ஆஸ்திரேலிய கண்டத் தட்டுகள் மோதி நொறுங்கியதால் உருவான முகடுகள் மட்டுமே.

ஸீலாண்டியா கடலுக்கு மேலே இருந்திருந்தால், அங்கு என்ன வாழ்ந்தது என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

கோண்ட்வானா ஒரு பரந்த அளவிலான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இருப்பிடமாக இருந்தது. முதல் நான்கு கால் நில விலங்குகள், நீண்ட காலம் பூமியில் வசித்த டைட்டனோசர்கள் ஆகியவை அங்கு வசித்தன. அதனால் ஸீலாண்டியாவில் இவற்றுக்கான எச்சங்கள் கிடைக்கலாம் என்று கருதப்படுகிறது.

டைனோசர்களும் ஸீலாண்டியாவும்

தெற்கு அரைக்கோளத்தில் புதைபடிவ நில விலங்குகள் அரிதானவை. ஆனால் 1990களில் நியூசிலாந்தில் ஒரு பெரிய, நீண்ட வால் மற்றும் நீண்ட கழுத்து டைனோசரின் எலும்பு உட்பட பலவற்றின் எச்சங்கள் கிடைத்தன. இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து பல வகையான டைனோசர்கள் மற்றும் பிற வகை விலங்குகளி புதைபடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கோண்ட்வானாவில் இருந்து ஸீலாண்டியா பிரிந்ததற்கு பிந்தையது என்பதும் தெரியவந்திருக்கிறது.

ஆயினும் ஸீலாண்டியாவில் டைனோசர்கள்


சுற்றித் திரிந்தன என்று இதற்கு அர்த்த மில்லை. டைனோசர்கள் நீரில் மூழ்கிய போது, இந்தத் தீவுகள் பிற டைனோசர்களின் புகலிடமாக இருந்திருக்கலாம். இது தொடர பாக நீண்ட விவாதம் நடந்து கொண்டிருக் கிறது. தொடர்ச்சியான நிலம் இல்லாமல் விலங்குகளால் நீண்ட காலம் வாழ்ந்திருக்க முடியுமா என்பது அதில் முக்கியமான கேள்வி.

நியூசிலாந்தில் வாழும் பறக்க இயலாத கிவி பறவைகளும் புதிரை மேலும் சிக்கலாக் குகின்றன. ஏனெனில் மடகாஸ்கரில் வாழ்ந்து அழிந்துபோன பெரும் யானைப் பறவையுடன் அவற்றுக்கு மரபியல் ரீதியிலான தொடர்பு இருக்கிறது.

மடகாஸ்கரில் வாழ்ந்து அழிந்துபோன பெரும் யானைப் பறவையின் எச்சம்

கோண்ட்வானாவில் வாழ்ந்த ஒரு பொது வான மூதாதையரிடமிருந்து இரு பறவை களும் உருவானதாக விஞ்ஞானிகள் நம்பு வதற்கு இந்த கண்டுபிடிப்பு வழிவகுத்தது.

கோண்ட்வானா முழுமையாகப் பிரிவதற்கு 13 கோடி ஆண்டுகள் ஆனது. அது நடந்தபோது தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், அண்டார்டிகா, ஆஸ்திரேலியா, அரேபியத் தீபகற்பம் , இந்தியத் துணைக் கண்டம்,




ஸீலாண்டியா என அது உலகம் முழுவதும் சிதறிய துண்டுகளாக மாறியது.

அதனால் தற்போது நீருக்கடியில் இருக்கும் ஸீலாண்டியாவின் ஒரு பகுதியாவது கடலுக்கு மேலே நீண்ட காலத்துக்கு இருந்திருக்கலாம் என்று புரிந்து கொள்ள முடிகிறது.

ஸீலாண்டியாவின் கடற்பரப்பில் இருந்து புதைபடிவங்களை நேரடியாகச் சேகரிப்பது சாத்தியமில்லை என்றாலும், விஞ்ஞானிகள் துளையிடுவதன் மூலம் ஆய்வு செய்து வருகிறார்கள்.

2017 ஆம் ஆண்டில், ஒரு குழு இதுவரை இப் பகுதியின் மிக விரிவான ஆய்வை மேற் கொண்டது. 6,101 அடிக்கு மேல் (1,250 மீ) ஆறு வெவ்வேறு இடங்களில் கடற்பரப்பில் துளையிட்டது. நில தாவரங்களிலிருந்து மகரந் தங்கள், சூடான, ஆழமற்ற கடல்களில் வாழும் உயிரினங்களின் ஓடுகள் போன்றவை அவர் களுக்குக் கிடைத்தன. 10 மீட்டர் அதைப் போன்ற ஆழத்தில் கடல் நீர் இருந்தால் அதைச் சுற்றி நிலம் இருப்பதற்கான வாய்ப் புகள் மிகவும் அதிகம் என விஞ்ஞானிகள்



கூறுகிறார்கள்.

இன்னொரு மர்மம்

ஸீலாண்டியாவின் வடிவமும் ஆராய்ச்சியாளர் களுக்கு புதிய முடிச்சைப் போடுகிறது.

மிகப் பரந்த கண்டமான ஸீலாண்டியா வினோ தமாக வளைந்திருக்கிறது. பசிபிக் மற்றும் ஆஸ்திரேலிய கண்டத் தட்டுகள் சந்திக்கும் ஒரு கிடைமட்ட கோட்டால் இரண்டும் இரண் டாகப் பிரிக்கப்படுகின்றன. இந்த துல்லியமான கட்டத்தில், ஏதோ ஒன்று கீழ் பாதியை எடுத்து அதை முறுக்கியது போன்று காட்சியளிக்கிறது.


கண்டத் தட்டுகள் நகர்ந்து, எப்படியோ அவற் றை சிதைத்திருக்கலாம் என்று இதற்கு விளக் கமளிக்கலாம். ஆனால் இது எப்படி அல்லது எப் போது நடந்தது என் பது இன் னும் முழுமை யாக தீர்க்கப்படவில்லை.

இப்போதைக்கு நமக்கு உறுதியாகத் தெரிந் தது, எட்டாவது கண்டம் ஒன்று இருக்கிறது என்பது மட்டும்தான். ஆனால் டாஸ்மேன் கண்டுபிடித்து சுமார் 400 ஆண்டுகள் ஆன பிறகும் அதில் உள்ள மர்மங்கள் மட்டும் விலகவில்லை.

நன்றி - பிபிசி தமிழ்

19.10.2000 அன்று ஒட்டுக்குழுக்களால் கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் நினைவில்...

பி.பி.சி. வானொலியின் தமிழ்-சிங்கள சேவைகளின் குடா நாட்டுச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் 19.10.2000 அன்று ஆக்கிரமிப்பாளர்களின் அடிவருடிகளால் அவரது இல்லத்தில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளார்.



பத்துவருடகாலமாக பத்திரிகைத்துறையில் பணியாற்றி சிறந்ததொரு செய்தியாளராகப் பரிணமித்த அவர், தனது பணியில் காட்டிய கடமையுணர்விற்கும் நேர்மைப்பண்பிற்கும் வெகுமதியாக, கொலைஞர்கள் அவருக்கு மரணத்தைப் பரிசளித்துள்ளனர்.

பத்திரிகையாளர் நிமலராஜன் கொல்லப்பட்ட செய்தி தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த மனவேதனையையும் அளித்துவிட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக சிங்கள இராணுவத்தின் கிடுக்கிப் பிடிக்குள் சிக்கி அவலவாழ்வை அனுபவித்துவரும் யாழ்ப் பாணமக்களது துன்ப-துயரங்களையும் இந்த இராணுவ ஆட்சியை மூடிமறைக்க சிங்கள அரசு எடுக்கும் கண்துடைப்பு அரசியல் நடவடிக்கைகளையும் வெளிஉலகிற்கு அம்பலப் படுத்துகின்ற அரியபணியை நிமலராஜன் ஆற்றிவந்தார்.

தமிழ் - சிங்கள மொழிகளில் நல்ல தேர்ச்சிபெற்றிருந்த அவர் பி.பி.சியின் தமிழோசை மற்றும் அதன் சிங்கள மொழி ஒலிபரப்பான சந்தேசிய உட்பட வெளிநாட்டுத் தமிழ் வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராக திறம்படப் பணியாற்றி- மக்களின் அபிமானத்தையும் பெற்றிருந்தார்.

கணீரென்ற வெண்கலக்குரலில் குடாநாட்டு நிலவரங்களை செய்தியாகத் தொகுத்து நிமலராஜன் வழங்கும் விதம் அலாதி யானது. அவர் வழங்கும் செய்திகள் தகவல்கள் தெளிவுடன் இருக்கும். எந்தவிதமான பூடகத்தன்மைகளும் இல்லாது வெளிப்படையாக செய்திகளைக் கொடுப்பது அவர் கடைப்பிடிக்கும் தனித்துவமான பாணி. அவர் வழங்கும் செய்திக் கண்ணோட்டங்களில் நேர்மையான விமர்சனம் இருக்கும். குடாநாட்டு மக்கள் சந்திக்கும் அவலவாழ்வை அம்பலப்படுத்தும்போது அவரது குரலில் தார்மீகக் கோபம் கொப்பளிக்கும். அதுமட்டுமல்ல அவரது செய்திகளிலும்-அரசியல் கண்ணோட்டங்களிலும்-அம்பலப்படுத்தல்களிலும் தமிழ்த்தேசிய உணர்வு மையசக்தியாகத் திகழும். மக்களின் துன்ப-துயரங்களை எடுத்துக்கூறி, அவற்றிற்குக் காரண மானவர்களை சுட்டுவிரல் நீட்டி பகிரங்கமாகவே குற்றம் சுமத்தும்போது அவரது கருத்துக்கள் மௌனமாக உள்ள குடாநாட்டு மக்களது மனச்சாட்சியின் குரலாக ஓங்கி ஒலிக்கும்.

இவை காரணமாக நிமலராஜனுக்கு தமிழ்மக்கள் மத்தியில் பேரபிமானமும் சந்தேசியவின் சிங்கள நேயர்கள் மத்தியில் பிரபலமும், படையினர் மற்றும் அடிவருடிகள் மத்தியில் வெறுப்புணர்வும் இருந்து வந்தது.

சர்வதேச வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராக நிமலராஜன் பணிசெய்யத் தொடங்கும் வரை குடாநாட்டு மக்களின் துயரவாழ்க்கை வெளி உலகிற்கு சரியாகத் தெரியவரவில்லை.

யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சிக்குப் பதிலாக சிவில் நிருவாகம் அமைக்கப்பட்டு மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது என்றும், தமிழ்க்கட்சிகள் அங்கே ஜனநாயகமுறையில் அரசியல் வேலைத்திட்டங்களைத் தொடங்கிவிட்டன என்றும் குடாநாடு புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செயப்படுகின்றது என்றும் சிங்கள அரசு வெளியிட்ட செய்திகள் மட்டுமே வெளிவந்து கொண்டிருந்தன.

ஆனால், நிமலராஜனூடாக யாழ்ப்பாணத்தின் உண்மை நிலவரங்கள் படிப்படியாக வெளிவரத்தொடங்கின. படை யினரின் அட்டூழியங்கள் அம்பலத்துக்கு வந்தன. தமிழ்க் குழுக்களின் அராஜகங்கள் வெளிக்கொணரப்பட்டன. சிங்கள அரசின் கண்துடைப்பு அரசியல் தோலுரித்துக்காட்டப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்வியல் அவலங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

ஆனையிறவுத்தள அழிப்புடன் தென்மராட்சிப் பகுதிக்குள் சண்டை பரவியபோது அங்கிருந்த மக்களின் உயிர்ப்பாதுகாப் பிற்காக இடம் பெயர்ந்து செல்லுமாறு புலிகள் இயக்கம் வேண் டுகோள்விடுத்தது. ஆனால் படையினர் தமது பாதுகாப்பிற்காக அம்மக்களை வெளியேறவிடாது தடுத்து அவர்களுக்கு ஒரு பேரழிவினை உண்டுபண்ண முயன்றபோது அம்மக்களின் நிலையை உலகறியச் செய்விப்பதற்காக உயிராபத்தையும் பொருட்படுத்தாது நிமலராஜன் நேரடியாகவே அப்பகுதி களுக்குச் சென்றார். அந்த மக்களுடன் உரையாடி அங்கிருந்து நிலைமைகளை வானலைகளில் பரப்பி இராணுவத் தலைமைப்பீடத்தை நெளியவைத்து-சிங்கள அரசைச் சிக்கலுக்குள்ளாக்கினார்.

இவரது செய்திகளால் உத்வேகமடைந்த உலக மனிதஉரிமை அமைப்புக்கள் சிங்கள அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து மக்களின் சுதந்திரமான இடப்பெயர்வுக்கு வழிசமைத்தன.

தனி ஒருவனைக்கொண்ட படைபோல நிமலராஜன் தனித்து நின்று குடாநாட்டு நிலவரங்களை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப் பாளர்களுக்கும்-அவர்களது அடிவருடிகளுக்கும் சிம்மசொப் பனமாகத் திகழ்ந்துவந்தார்.

யாழ்ப்பாணத்தில் சாதாரண இளைஞர்களைச் சுட்டுக்கொன்று விட்டு, கொல்லப்பட்டவர் புலி உறுப்பினர் என படையினர் விளக்கம் சொல்லி செய்தி வெளியிடுவது வழமை. ஆனால், இராணுவத்தின் அந்தச் செய்தியையும் வானலைகளில் பரப்பி கொல்லப்பட்டவர் ஒரு மாணவர் அல்லது ஒரு அப்பாவி இளைஞன் என நிரூபணங்களையும் எடுத்துக்கூறி அது ஒரு மிலேச்சத்தனமான படுகொலை என உலகிற்கு நிமலராஜன் ஒப்புவிக்கும் விதம் அவரது செய்தி வழங்கும் பாணியின் தனிரகமானது.

இவைகாரணமாக படையினரின் எச்சரிக்கைகளுக்கும் - பயமுறுத்தல்களுக்கும் நிமலராஜன் பலதடவை உள்ளாகியி ருந்தார்.

படையினரின் இரும்புப்பிடிக்குள் நடைபெறும் யாழ்ப்பாணத் தின் "ஜனநாயக அரசியலையும்" அதை நடாத்தும் தமிழ்க் குழுக்களின் அடாவடித்தனங்களையும் மிகத் தெளிவாகவே, அவர் உலகிற்கு எடுத்துக்கூறினார். அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்கூத்தில் தமிழ்க்கட்சிகள் குறிப்பாக ஈ.பி.டி.பி யினர் தீவகத்தை ஒரு அடிமைத்தீவாக வைத்திருக்கின்றனர். அங்குள்ள மக்களை அடிமைகள் போல தம்விருப்பப்படி ஆட்டுவிக்கின்றனர் என விமர்சனம் செய்தார். படையினரின் பாதுகாப்பில் இந்தத் துரோகிகள் நடாத்தும் கேலிக்கூத்தான அரசியலை எள்ளிநகையாடி, நிமலராஜன் செய்திகளை வெளியிட்டார்.

இதனால் தமிழ்க்குழுக்களின் குறிப்பாக ஈ.பி.டி.பியினரின் கொலை மிரட்டல்களுக்கு இவர் உள்ளானார்.

எனினும், இந்தவகை மிரட்டல்களைக்கண்டு நிமலராஜன் தனது பணியில் தடுமாறவில்லை. தனி ஒருவனைக்கொண்ட படைபோல நிமலராஜன் தனித்துநின்று குடாநாட்டு நிலவரங் களை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கும்-அவர் களது அடிவருடிகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்து வந்தார்.

யுத்தகளத்திற்கு நேரடியாகச் சென்று போர்ச்செய்திகளைத் திரட்டும் பத்திரிகையாளர்கள் ஒருவகை. ஆக்கிரமிக்கப் பட்ட பகுதிக்குள் வசித்தபடி, ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுள் ஒருவராக இருந்துகொண்டே-அரசியல், இராணுவ நிலவரங்களை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்கள் வேறோருவகையினர். முதல்வகைச் செய்தியாளர் களுக்குச் சாவு ஒருதடவைதான் வரும். ஆனால் அடுத்த வகைச் செய்தியாளர்கள் சாவை சதா சந்தித்தபடியே வாழ்க்கையை ஓட்டுவார்கள். நிமலராஜன் இந்தவகைச் செய்தியாளராகவே பணியாற்றினார். பலமுனை களிலிருந்தும் சாவை சதா சந்தித்தபடியே-சாவுக்குப் பயப்படாது அவர் துணிச்சலுடன் பணியாற்றினார்.

ஒரு செய்தியாளன் என்ற நிலைக்கும் அப்பால்-குடா நாட்டுமக்களின் அவலவாழ்க்கையை துணிச்சலுடன் உல கிற்கு எடுத்துக்கூறும் ஒரு மக்கள் பிரதிநிதி போலவே நிமலராஜனின் செயற்பாட்டை தமிழ்மக்கள் கருதினர்.

அதனாலேயே, கொலைஞர்களின் குண்டுக்கு அவர் பலியானபோது குடாநாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழீழ மக்கள் அனைவருமே தங்களது குரலை இழந்துவிட்டதுபோலத் துயரப்பட்டனர்.அவரது சாவுக்கு அஞ்சலி செலுத்தி இரங்கல் கூட்டங்களை நடாத்தினர். அவரின் உயிரைப் பறித்த கொலைஞர்களைக் கண்டனம் செய்து-தமது கோபத்தை வெளிப்படையாகக் காட்டினர்.

குடாநாட்டுச் செய்தியாளராக நிமலராஜன் பணியாற்றிய காலம் தமிழ்மக்களால் என்றும் நினைவுகூரப்படும். நிமலராஜன் என்ற செய்தியாளனும் தமிழரின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் நிலையான இடத்தைப் பெறுவார்.



-விடுதலைப்புலிகள் (குரல்:96 ,ஐப்பசி, கார்த்திகை 2000)

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

2022 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

www.itouchcarwash.com
I TOUCH CAR WASH LTD
Professional Auto Detailing
HAND CAR WASH

WE SPECIALIZE IN:
. Interior / Exterior
. Wash & Vacuum
. Interior Shampoo
. Leather Treatment
. Engine Shampoo
. High Speed Buff
. Waxing / Polishing
. Headlight Restoration
. Auto Tinting
. Ceramic Pro
. Insurance Approved

புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND AUTOMOTIVE INC.
www.grandautomotive.ca
ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS
உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்குகள்
Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)
GOOD NEWS
Touch-up & Body Work on lease return cars
All kind of Mechanical Work, Call Us

Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6


HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end
products on all our vehicles

BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

GTA CHIROPRACTIC CENTRE

We are specialized in

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



Health is Wealth

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486

GTA Square Mall 5215 Finch Ave, E#206

Scarborough, ON, M1S 0C2

www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com

ஒரு விராட் விஸ்வப் பிரம்மனே முயலு

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171

S.மூர்த்தி

Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

FRONTLINE COMMUNITY CENTRE

குடிவரவாளர்களுக்கான சேவைகள்

பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு

வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை

பொதுவான திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்

வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்

முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்

தன்னார்வத் தொண்டாற்றல்

(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9

Frontline Community Centre

frontlinecommunitycentre

http://fcccanada.org/

Nickon Photo & Video

நிக்கொன் போட்டோ & வீடியோ

Digital Album

டிஜிட்டல் அல்பம்





உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...



Call: Vijay

416.554.8899

Facebook ID:
Nickon Studio



ஈழத் தமிழரின் தொன்மை

ஈழம், இலங்கை, லங்கா, சிறீலங்கா, சீலான், சீலாவோ, சிலோன் முதலிய பல வேறு பெயர் களைக்கொண்ட நாடு இந்துப் பெருங்கடலில் உள்ள ஒரு சிறு தீவாகும். இத்தீவு இந்தியா அல்லது பாரதம் எனப்படும் ஒரு பெருநாட்டின் கீழ்ப்பகுதியில் அதனோடு ஒரு நெருங்கிய தொடர்பு கொண்டதாக அமைந்துள்ளது. ஈழத் தில் தமிழர், சிங்களர் என்ற இரு மொழிபேசும் மக்கள் வாழ்கின்றனர். இவர்களோடு நெருங் கிய தொடர்புகொண்ட மக்களே இந்தியா விலும்

இவ்விரு நாடுகளும் 4,300 ஆண்டுகளுக்கு முன்னர்வரை ஒரு பெருநாட்டின் பகுதிகளாக இணைந்து இருந்தன. மூன்று முறைகள் ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்த கடல் பர வலின்முன் கடலற்ற பகுதியில் தெற்குநோக் கிப் பரந்த பெருநாடாக இருந்தது. ஞாயி றினின்று சிதறி விழுந்த அனற்பிழம்பே பின் பூமியானது. அதில் முதலில் குளிரத் தொடங் கிய நிலம் பற்றி பேராசிரியர் மது.ச. விமலானந் தம். பின்வருமாறு விளக்கம் தருகிறார்:

“முதன்முதலில் குளிர்ந்தது உலகின் மேற் பரப்பே. அந்நிலம் தமிழ் நிலமே. இப்பகுதி அப்படி முதல் நிலமாக அமையக்காரணம் உலகின் நடுக்கோட்டிற்கு அணித்தாய் இருந்த மையே. அம்முதல் நிலமே குமரிக்கண்டம். குமரிமலை ஆறுகொண்டு குமரிநாடு என்று பெயரிட்டனர். இதன் வடக்கே குமரியாறு; தெற்கே பஃறுளியாறு என்பவற்றின் இடையே கீழ்மேலாக எழுநூறு காவதம் பரப்பாக நீண்டு கிடந்தது. இது நாற்பத்தென்பது நாடுகளாகப் பிரிக்கப்பெற்றிருந்தது. ஏழ்மதுரை நாட்டுக்குத் தென்பால் இருந்த காரணத்தால் மதுரை “தென்மதுரை“ எனப்பட்டது. இதனை அரசிருக் கையாகக் கொண்ட ஆண்டவன் ஆழிவடிவம் பலம் நின்ற பாண்டியன் என்ற முதலாம் நலம் தரு திருவிற்பாண்டியன்...”

— தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், தொகுதி 2, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை 1987. ப.1670.

இவ்வாறு தோன்றிய பரந்த தமிழ்நாடு பெரு மளவில் கடலகோளுக்குட்பட்டது. இளங் கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இப்பேரழிவைப் பின்வருமாறு பாடுகின்றார்:

> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள

இறையனார் களவியலுரையும் இளம்பூரணர் தொல்காப்பிய உரையும் பிறவும் இக்கடல் கோளைக் குறிப்பிடுகின்றன. தமிழ்நிலத்தின் தென்பகுதி கொடிய கடலாற்கொள்ளப்பட்ட போதிலும் நலைபேறடைந்த வடபகுதி தமிழை அழியாது காத்தது. இந்த வடபகுதி இன்றைய தென்தமிழ்நாடு மட்டுமன்று அதற் கு மேலேயிருந்த வடபகுதியுமாகும். இப்பேர ழிவில் அழியாது தப்பிய தமிழ்ப்பகுதியாக ஈழ மும் அமைந்தது. தொடர்ந்த இக்கடல் கோளைப் போராசிரியர் மா. இராசமாணிக் கனார் பின்வருமாறு விளக்குகின்றார்:

“இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்படும் மூன்று கடல்கோள்களுள் முதலாவது கடல் கோள் கி.மு. 2387 இல் நிகழ்ந்தது. இது இலங்கையை இந்தியாவிலிருந்து பிரித்தது. இரண்டாவது கடல்கோள் கி.மு. 504 இல் நிகழ்ந்தது. இரண்டாம் கடல்கோளில் பேர ழிவு நிகழவில்லை. மூன்றாவது கடல்கோள். கி.மு. 306 இல் நிகழ்ந்தது. இக்காலத்தில் தேவநம்பியதீசன் இலங்கையை ஆண்டான். இது பாரத வரலாற்றில் அசோகன் காலமாகும். இம்மூன்றாவது கடலகோளினால் ஒரு நூறா யிரம் (இலட்சம்) கிராமங்களும் தொளாயிரத் துப் பத்த மினவர் சிற்றூர்களும் முத்துக்குளிப் போர் வாழ்ந்த நானூறு ஊர்களும் கடலுள் மூழ்கின... இறையனார் அகப்பொருள் உரை யில் ஒரு கடல்கோள் தென்மதுரையையும் இன்னொரு கடல்கோள் கபாடபுரத்தையும் அழித்தன என்று குறிப்பிட்டார்”

– The Date of Tolkappiyam, Annals of Oriental Research, University of Madras, Vol XIX Part II, 1964. Reprint P.16-17.

மேற்கூறிய கருத்தின்மூலம் பெருந்தீவாக இருந்த தமிழ் ஈழம் சிறிய தீவானது எனலாம்.

இப்பேரழிவு பற்றி விளக்கும் மது. ச. விமலா னந்தம் பின்வருமாறு மேலதிக விளக்கம் தருகிறார்:

“கடல்கொண்ட இதே சமயத்தில்தான் கடலுள் அமிழ்ந்து கிடந்த இமயம் மேலெழுந்தது. தெற்கே கடல்கொள்ள வடக்கே நீர்வடிந்து இமயம் தோன்றியது.”

— மேலது.ப. 1671

இப்பரந்த குமரிக்கண்டம் முழுவதும் ஒரு காலத்தில் தமிழர் வாழ்ந்த நாடாகும். இத் தொடர்பினாலேதான் பின்வந்த ஆரியமொழி யின் தாக்கத்தால் இந்தியாவின் மேற்பகுதி ஆரிய நாடாக, தென்பகுதியில் தமிழ்மொழி ஆரியத்தாக்கத்தால் பல திராவிடமொழிகளா னது. (மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு, பிராகி, சிங்களம்...) மேலே குறிப்பிட்ட திராவிட மொழிகள் மட்டுமின்றி ஆரியமொழி களும் தமிழ்ச்சார்புடைய திராவிட மொழிகளே என்பது தமிழக மொழியில் அறிஞர் முனைவர் கு. அரசேந்திரன் கருத்தாகும். அது வருமாறு:

“இந்திய ஆரியமொழிகள் என்பன உண்மை யில் கொடும் திராவிட மொழிகளே. ஆரியர் இந்தியம் புகுந்த கி.மு. 1500 இன் முன் இந்தியா முழுமையும் வழங்கிய மொழி தமிழே. தமிழ் மிகப்பல கிளைமொழிகளாக வடக்கே செல்லச்செல்ல திரிந்துபோயிற்று. பாவாணர், பன்மொழிப்புலவர் அப்பாத்துரை யார் போன்றோர் இவற்றை விளக்கியுள்ளனர். வடவிந்திய மொழிகளை உடைத்துப்பார்த் தால் அவற்றின் உள் ஊற்றாகத் தமிழ் இருப்பது தெரியும். இந்த உண்மை உலகிற் குத் தெரியாமல் இருப்பதற் காரணம் தமிழின் வன் கொடுத்திரிபான சமற்கிருதக் கந்தற்பாய் இந்திய மொழிகளின் மேல் பரப்பப்பட்டிருப்ப தேயாகும்.”

- தமிழால் தழைத்த சிங்களம், ப.77.

ஈழம் முழுமையும் தொன்மையான தமிழ் ஈழம் என்பது இதுவரை கூறியவற்றால் புல னாகும். ஈழத்தில் சிங்களம் ஒரு மொழியாக உள்ளது. இது பொதுவாக ஆரிய மொழி யென்று சிங்கள மக்களால் கூறப்படுகிறது. இது பொருத்தமான கருத்தா என்பது ஆராயப் படவேண்டும். தென்னிலங்கையின் தொன் மையான வரலாற்றை ஆராய்வதன் மூலம் இதன் உண்மை தெளிவாகும்.

தென்னிலங்கையின் தொன்மையான வர லாற்றைக் கூறும் இரண்டு பாளி நூல்கள் முதலில் எழுந்தன. அவற்றுள் ஒன்று பலர் தொடர்ந்து எழுதியதாகக் கருதப்படும் தீபவம் சம் (கி.பி.4). இரண்டாவது நூல் மகா நாயக தேரர் என்ற பௌத்தபிக்கு எழுதிய மகாவம்சம் (கி.பி. 6). மகாவம்ச நூலாசிரியர் அதன் முன்னோடி நூல் பற்றிப் பின்வருமாறு ”புத்தர் வருகை” என்ற முதல் இயலின் தொடக்கத்தில் கூறுகின்றார்:

“... எவ்விதத்திலும் குறையில்லாததும் எல் லாம் நிறைந்ததுமான மகாவம்சத்தைக்கூறத் தொடங்குகின்றேன்.

புராதன முனிவர்களால் தொகுக்கப்பெற்ற அது (மகாவம்சம்) இங்கே விரிவாகக் கூறப்பட்டுள் ளது. பழையநூல் சுருக்கமானது; பல இடங் களில் ஒரே விஷயம் திரும்பத்திரும்பச் சொல் லப்பட்டுள்ளது.

இப்போது சொல்வது அத்தகைய குறைகள் இல்லாதது.” - ப.9.

மகாவம்சம் முதல் ஐந்து இயல்களிலும் புத் தரின் மூன்று வருகை பற்றியும் பௌத்தமதம் பற்றியுமே கூறுகின்றது. ஆறாவது இயல் “விஜயன் வருகை” என அமைநதுள்ளது. தொடர்ந்து அரசர்கள் வரலாறும் பௌத்தசமய வளர்ச்சியும் கூறப்படுகின்றன. இந்நூலின் காவியநாயகர் துட்டகைமுனு (துட்டகா மணி). விஜயன் முதல் மகாசேனன வரை (கி.மு.543 - கி.பி.302) பதின்னான்கு அரசர் வரலாறு கூறுகின்றது. முதலாவது இயலில் ஈழத்தில் வாழ்ந்த தமிழர்கள் யார்கள், நாகர்கள் என்று கூறப்படுகின்றனர். விஜயன் இயக்கர் மரபைச் சேர்ந்த இளவரசி குவன்னா (குவேனி) என் பவளை மணந்து அரசனானான். பின் தமிழகப்பாண்டிய மன்னனுடைய மகளை மணந்தான். குவேனி கொல்லப்பட்டாள். புத் தர் நாகதீபம் வந்து பௌத்தக் கோட்பாட்டைப்



பரப்பியதும் கூறப்படுகின்றது. நாகதீபம் இலங் கையின் வடமேற்குப் பகுதி என்றும் யாழ்ப் பாணம் என்றும் வரலாற்று அறிஞர்களால் விளக்கப்படுகின்றது. மகாவம்சத்தின் காவிய நாயகர் துட்டகைமுனு (கி.மு.164 - 140) ஈழத்துத் தமிழ் அரசனான எல்லாளனை (கி.மு. 204 - 164) வென்ற செய்தி முதல் இயலில் பின்வருமாறு கூறப்படுகின்றது:

“துட்டகாமணி மன்னன் தமிழர்களுடன் போரிட்டபோது இந்த இடத்திற் தங்கியிருக்க நேரிட்டது.” - ப.14.

அசோகன் காலத்தில் ஈழத்தைத் தேவநம் பியதீசன் (கி.மு.307 - 266) ஆண்டான். புத்தர் காலத்தில் புத்தர் மூலமே பௌத்தம் ஈழத்திற்கு வந்தது என்று கூறப்பட்டபோதிலும் அசோகன் காலத்திலேயே பௌத்தம் இலங் கைக்கு வந்தது என்பது வரலாற்று அறிஞர் கருத்தாகும். இக்காலத்தில் வட இந்தியா விலும் தென்னிந்தியத் தமிழகத்திலும் தென் னிலங்கையிலும் நாகதீபத்திலும் பௌத்தம் பரவியது. இக்காலத்தில் பாளி மொழி மூலம் பௌத்தம் பரவியது. தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகிய பௌத்த நூல்கள் பாளி மொழியில் எழு தப்பட்டன. எனினும் தமிழகத் திலும் தமிழீழத்திலும் தமிழ் மூலமே பௌத் தம் பரவியது. மணிமேகலை நூல் இதற்குச் சான்றாகும்.

ஈழத்தில் இன்று தமிழ், சிங்களம் என்ற இருமொழிகள் வழக்கில் உள்ளன. எனினும் கி.மு.1000 ஆண்டளவில் ஈழத்தில் தமிழ் மொழியும் திராவிட மொழியும் இருந்தன. இதனைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பின் வருமாறு விளக்குகின்றார்:

“... தமிழ்க் குடியேற்றத்தின் பழைமை... தற் போதைய ஆய்வுகள், அதுவும் பன்முகப் பார் வையில் கிடைத்துள்ள சான்றுகள் இற்றைக் கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே, - சுமார் கி.மு.1000 ஆண்டளவில் ஈழத்தில் தமிழ்மொழி பேசுவோரும் தற்காலச் சிங்கள மொழி பேசுவோரின் மூதாதை மொழியாகிய தமிழின் கிளைமொழியாகிய எலுமொழி பேசு வோரும் வாழ்ந்ததை உறுதி செய்கின்றன. இன்னொரு கோணத்தில் நோக்கும்போது தொல்காப்பியர் காலத்தில் (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு) தமிழகத்தில் செந்தமிழும் கொடுந்தமிழும் காணப்பட்டதுபோன்றே ஈழத் திலும் தமிழ் (செந்தமிழ்), எலு (கொடுந் தமிழ்) ஆகிய மொழிகள் காணப்பட்டன எனலாம்.”

- பண்டைய ஈழத்தில் தமிழர் - ஒரு பார்வை, யாழ்.பல்கலைக்கழகம். 2000.ப.50.

தொல்காப்பியர் ஈழத்துத் தமிழறிஞர் என்ற கருத்து உள்ளது என்பதும் இங்கு கருதத் தக்கது.

ஈழத்து ஆதிக்குடிகள் பற்றிய கருத்துக்கள் வரலாற்று நெறியில் அண்மையிலேயே சரியா கக் கூறப்படுகின்றன. எனினும் மேலே கூறப் பட்ட பாளி நூல்கள் ஆரியக் குடியேற்றத்தை விஜயன் கதை மூலம் ஐதீகமாக உருவகப் படுத்தியுள்ளன. நவீன சிங்கள் வரலாற் றாசிரியர்கள் சிலர் விஜயன் கதையை ஏற்காது “இது தொடர்ந்து நிகழ்ந்த ஆரியர் குடியேற்றத் தைக் கற்பனை முறையில் கூறுவது” என நிராகரிப்பர். சிங்களம் ஆரிய மொழி என்ற கருத்தை நிரூபிப்பதே இதன் நோக்கம். ஆனால் சிங்களம் திராவிட மொழி என்பதே பன்மொழி ஆய்வாளர் கருத்தாகும். மொழி யியல் அறிஞரான முனைவர் கு.அரசேந்திரன் “உண்மையில் சிங்களம் என்பது தமிழின் எழுபது விழுக்காட்டுச் சிதைந்த வடிவமே” என்பார். அவர் மேற் குறிப்பிட்ட கட்டுரையில்

சில சிங்களச் சொற்களை விளக்கியதோடு, “தமிழால் தழைத்த சிங்களம்” என்ற ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட நூலில் இத்தொடர் ஆய்வை வெளியிடவிருப்பதாகவும் கூறியுள் ளார்.

- (ப. 81.)

ஈழத்திலும் தமிழகத்திலும் பௌத்தமதம் பரவியகாலம் “பெருங்கற் பண்பாட்டுக்காலம்“ எனத் தொல்லியல் ஆய்வாளர்களால் ஆய்ந்து



நிறுவப்பட்டுள்ளது. இக்கால ஈழச் சாசனங் களையும் தொல்பொருள்களையும் ஆராய்ந்த வரலாற்றுத் தமிழ் அறிஞர்களான சி.க.சிற்றம் பலம், பொ.இரகுபதி, செல்லையா கிருஷ்ண ராசா, பரமு புஷ்பரட்ணம் முதலியோரும் எஸ்.யூ.தெரணியகல முதலிய அறிஞர்களும் இவை தமிழ் சார்புடையவை என நிறுவியுள் ளனர். இக்கல்வெட்டுக்கள் பிராமிக் கல்வெட் டுக்கள் எனப்படுகின்றன. இவை பற்றிப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பின்வருமாறு விளக்கு கின்றார்:

“பௌத்த மதத்திற்குக் கொடுக்கப்பட்ட தானங் களை எடுத்தியம்பும் இவை சிங்கள் மக்களின் ஆதிக்குடியேற்றத்திற்கான சான்றுகளாக மட்டு மன்றி, இவற்றிற் காணப்படும் பிராகிருத மொழி (ஒரு மதத்தின் மொழி) ஈழத்து மக் களின் மொழி எனவும் தவறாகக் கருதப்பட்டு வந்தது. இப்பிராமிக் கல்வெட்டுக்கள் பெருங் கற்கால மையங்களுக்குக் கிட்டக்காணப் படுவது மட்டுமன்றி இவற்றில் காணப்படும் குறியீடுகள், பெருங்கற்கால மக்களின் பண் பாட்டில் இருந்த பானை ஓடுகளில் உள்ள குறியீடுகளை ஒத்துக் காணப்படுவதால் பெருங்கற்கால மக்களே பௌத்தமதத்தைத் தழுவினர் என்பது உறுதியாகிறது. இம்மக்கள் அளித்த தானங்கள் பௌத்தத்தின் மொழி யாகிய பிராகிருத மொழியிலே பதியப்பட் டதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.”

- பண்டைய ஈழத்தில் தமிழர்...., 2000.ப.47.

இச்சாசனங்களில் ஆரியப் பிராகிருத மொழி யும் திராவிடப் பிராகிருத மொழியும் உள்ளன. இச்சாசன வரிவடிவங்கள் பின்வரு மாறு பாகுபடுத்தப்பட்டுள்ளன:

1. பௌத்தத்துடன் வந்த வட இந்திய வரிவடி வத்திற்கு முன்னர் வழக்கில் இருந்த வரிவடி வம். இது திராவிட வரிவடிவம் ஆகும். தமி ழை எழுதப்பயன் பட்டதால் இது தமிழ்ப்பிராமி. இத்தகைய வரிவடிவமே தமிழகம், ஈழம் ஆகிய பகுதிகளில் பௌத்தத்துடன் வந்த வட இந்தியப் பிராமி வடிவத்துக்கு முன்னர் வழக்கிலிருந்தது.

2. பௌத்தத்துடன் ஈழம் வந்த வரிவடிவம். இதன் செல்வாக்கால் தமிழ்ப்பிராமி வழக் கொழிய (கி.பி. காலத்தில்) வட இந்தியப் பிராமி வரிவடிவமே தென் ஈழத்தின் ஆதிப்பிராமி வரிவடிவாக வளர்ச்சி பெற்றது.

இவற்றின் அடிப்படையில் தமிழ், சிங்கள் வேறுபாட்டிற்கு முந்திய நிலையை சி.க.சிற்றம் பலம் பின்வருமாறு முடிவுசெய்கிறார்:

“இப்பிராமி வரிவடிவத்தில் காணப்படும் குல் /குழுப்பெயர்களான வேள், ஆய், பத / பரத போன்றவையும் பருமக போன்ற பிற தமிழ்ப் பெயர்களும் தமிழை ஒத்த மொழி பேசியோரே இன்றைய தமிழ், சிங்கள மொழிகளின் மூதாதையினராக விளங்கினர் என்பதை உறுதி செய்கின்றன.”

தொன்மைத் தமிழில் வழங்கிய ஏழ் என்ற நாட்டுப்பெயரே பின் ஈழ , எல் என மாறின என்ற கருத்து உள்ளது. ஈழ கல என மாறிப் பின் கள் ஆகி, சிறீ என்ற சமஸ்கிருதச்சொல் சீ ஆகி சீகள் ஆனது என்றும் இதுவே பின் சிகள், சிங்கள என மாறியதாகவும் கருதப்படுகிறது. இதேபோலவே இலங்கை லங்கா ஆகிபின் சமஸ்கிருத சிறீயுடன் சேர்ந்து சிறீலங்கா ஆனது என்றும் கருதப்படுகிறது.

ஈழம் என்ற பெயர் தமிழின் தொன்மை இலக் கியங்களான சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றது. இக் காலத்திலும் தமிழகத் திற்கும் ஈழத்திற்கும் பல நெருங்கிய தொடர்புகள் இருந் தன. அவற் றுள் ஒன் று உண வு வணிகத் தொடர்பு. பட்டினப்பாலை என்ற சங் கத்தமிழ் நூலில்,

‘ஈழத் துணவும் காளகத் தாக்கமும்’

என்ற வரி உள்ளது. மேலும் நற்றிணை, குறந் தொகை, அகநானூறு ஆகிய சங்க நூல்களில் உள்ள ஏழு பாடல்களில் மதுரை ஈழத்துப் பூதன்தேவனார், ஈழத்துப் பூதன்தேவனார் என்ற சங்கப் புலவர் பெயர்களில் ஈழம் காணப் படுகின்றது. மேலே கூறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் ஈழம், குமரிக்கண்டம் என்ற குமரி நாடுகளில் ஒன்றாக இருந்தது என்பதும் தமிழ் நிலமாக இருந்தது என்பதும் பின் கடல்கோளால் ஈழம் என்ற பெரிய தீவாகி, பின் சிறிய தீவானது என்பதும் உறுதியாகின்றது. அதனோடு இன்றைய தென்னிலங்கைச் சிங் களம் ஆரியமொழியன்று என்பதும் அது பாளி மூலம் தொடர்பு கொண்ட முப்பது வீதம் ஆரிய மும் நிலையான மொழியான எழுபது வீதத் தமிழ் கொண்ட திராவிட மொழி என்பதும் உறுதியாகின்றது. எனவே, ஈழம் “திராவிட” நாடு என்பதும் உறுதியாகும்.

ஈழம் தமிழகமாகத் தொடர்ந்து இருந்ததனால் இங்கு தமிழ்க் கல்வி உயர்ந்த நிலையில் இருந்து பல புலவர்களும் பல நூல்களும் தோன்றியிருக்கும் என்பது உறுதி. ஆனால் இந்நூல்கள் எதுவும் இன்று எமக்குக் கிடைக்க வில்லை. தமிழகத்திலும் சங்ககாலத்தில் மிக அதிக நூல்கள் தோன்றியிருக்க முடியும் எனி னும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற பதி னெட்டு நூல்கள் மட்டுமே கிடைத்தன. ஈழத்து அ றி ஞ ர் க ளா ன ஆ று மு க நா வ ல ர் , சி.வை.தாமோ தரம்பிள்ளை, வி.கனகசபைப் பிள்ளை ஆகி யோரே இவை அச்சுவடிவு பெற்றுத்தப்ப மூலகாரணமாய் இருந்தனர். ஆனால், ஈழத்தில் தோன்றிய பழைய தமிழ் இலக்கியங்கள் தோன்றி அழிந்தன என்பதே பொருத்தமாகும். இது பற்றிக் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா பின்வருமாறு விளக்கம் தருகிறார்:

“தமிழ்நாட்டிற் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலகட்டத்திலே ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களும் இலக்கியங்களை ஆற்றியிருப் பார்கள். இப்புலவர்களின் ஆக்கங்கள் தொகுப் போர், தொகுப்பிப்போர் இன்றி நாளடைவில் அழிந்திருக்கலாம். நீண்ட நெடுங்காலமாகத் தாம் வாழ்ந்த சூழலிலே தம் பண்பாட்டுப் பின் னணியில் இலக்கியம் படைக்காத ஒரு சமூகத் தினைக் காண்பது அரிது. தமிழக உறவு களும் தொடர்புகளும் மிக்கிருந்த நிலையிலே சிறப்பானதோர் தமிழ் இலக்கியப் பாரம் பரியம் ஈழத்தில் நிலவியிருக்கும் என்று கருது” வது தவறாகாது.”

- ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, திரு நெல்வேலி தனலக்குமி புத்தகசாலை, 2001. பக்.5-6.

இதனை உறுதி செய்வதுதான் மேலே குறிப் பிடப்பட்ட ஈழத்துப் பூதன்தேவனாரின் சங்க இலக்கியக் கவிதைகள். எனினும், சிலர் இத னை ஏற்பதில்லை. அவருடைய பாடல்களில் “ஈழம்“ என்ற சொல் இல்லை என்பதே இவர் களுடைய கருத்துக்குக் காரணம். மேலே கூறப்பட்ட பேராசிரியர் மது.ச.விமலானந்தன் ”ஈழம் என்பது இலங்கையைத்தான் குறிக் கிறதா? இவர் பாட்டினுள் ஈழம் பற்றிய குறிப் பும் இல்லை. ஈழத் தமிழர் வரலாறு இவரி லிருந்தே தொடங்குகின்றது. தலைச்சங்க முரஞ்சியூர் முடிநாகராயர் ஈழநாட்டவர் நாகர் குடியினர். தொல்காப்பியரின் பிறப்பகம்கூட ஈழத்தில் உளது என்றொரு ஆய்வும் உளது. தமிழுணர்ச்சி குன்றிய காலத்தில் தமிழுக்கு அரும் பணியாற்றி, இலங்கைப் பழம் பெருமை வெளிகாட்டிய சிறப்பினர்.”

- மேலது ப.1862 - 1863.

தமக்கு ஏற்படும் ஐயத்தை அவர்களே மறுப் பதை இப்பகுதியிலேயே காணலாம். ஈழம் இலங்கையைத்தான் குறிக்கின்றது என்பது மேலே குறிப்பிட்ட சான்றுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளன. நாகதீவே நயினாதீவு என்ற கருத்தும், நாகதீவே யாழ்ப்பாணம் என்ற கருத்தும் உள். எனினும் முழு இலங் கையுமே நாகதீவு (நாகநாடு) எனப்பட்டிருக் கலாம் என்று கருதவும் இடமுளது. இது விரிவாக ஆராயப்படவேண்டும். குமரிநாடே நாகநாடு என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக் கலாம் என்பதற்கும் நாக“ என்ற பெயர் சான் றாகக்கூடும். ”ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்” என்ற பெருநூலைப் பேராசிரியர் ஆ.சதாசிவம் ஈழத்துப் பூதன்தேவனார் பாடல் களுடன் தொடங்குகின்றார். எனினும், முரஞ் சியூர் முடி நாகனாரை ஈழத்தவராக ஏற்று சங் ககாலப் பகுதியில் அவரைச் சேர்த்துக்கொள்ள வில்லை. ”வேறும் ஈழத்துப் புலவர் சங்கத் திலமர்ந்திருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.” (சாகித்திய மண் டலம், கொழும்பு, 1966, ப.1.)

சங்க இலக்கியங்களில் பூதன்தேவனார் என்ற பெயருடன் மூவர் இடம்பெற்றுள்ளனர். அவை வருமாறு:

1. மதுரை ஈழத்துப் பூதன்தேவனார்.
- நற்றிணை 366; அகநானூறு 231,307; குறுந்தொகை 189 , 360.
2. ஈழத்துப் பூதன்தேவனார்.
- அகநானூறு 88; குறுந்தொகை; 343.

3. பூதன்தேவனார்.
- நற்றிணை 80.

தமிழகத்திற் பூதன்தேவனார் என்று ஒரு புல வர் இருந்ததால் தமிழீழத்தில் இருந்து சென்ற கவிஞரை அவரிலிருந்து வேறுபடுத்த ஈழத்துப் பூதன் தேவனார் என அவருக்கு அடைமொழி வழங்கப்பட்டது என்பது அறிஞர்கள் கருத்து. ஈழத்துப்பூதன்தேவனர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்ததால் மதுரை ஈழத்துப்பூதன் தேவனார் எனப்பட்டார் என்பதும் அறிஞர் கருத்தாகும். எனினும் மூன்று பெயர் களையும் ஒப்பிடும்போது மூவரும் ஒருவர் என்று கருதுவதே பொருத்தமானது என்று தோன்றுகின்றது. இருவரும் ஒருவர் என் பதற்கு ஈழம் சான்றாக அமைந்தால் மூன்றாம வரை அவரிலிருந்து வேறுபடுத்த அவருக்கும் பெயர் முன் இடப்பெயர் சூட்டப்பட்டிருக்க வேண்டும். சாத்தனார் என்று சங்க இலக் கியத்தில் இரு புலவர்கள் உள்ளனர். ஒருவர் பேரி சாத்தனார் எனப்படுகிறார். மற்றவர் சீத்தலைச் சாத்தனர் எனப்படுகின்றார். இது வே, சங்ககால மரபானால் தமிழகத்தவர் என்று கருதப்படும் புலவருக்கும் அடை மொழிப் பெயர் ஒன்று சூட்டப்பட்டிருக்கும் என் பது உறுதி. மூவரும் ஒருவர் என்பதாலேயே இவ்வாறு மூவகைப் பெயர்களும் வழக்கில் இருந்தன என்பதே பொருத்த மானதாகத் தோன்றுகின்றது. இது மேலும் ஆய்ந்து உறுதி செய்யப்படவேண்டும்.

ஈழத்துப் பூதன்தேவனார் முதல் இன்றைய புதிய கவிஞர்கள்வரை, சங்ககாலம் முதல் இன்று வரை இடையீடற்ற இலக்கிய வளர்ச்சி ஈழத்தில் தொடர்ந்தது என்பது மேலே கூறப் பட்ட கருத்துக்கள் மூலம் உறுதி பெறுகின்றன.

ஈழத்தில் நிலையாக வாழ்ந்த தமிழர் எவரும் இருக்கவில்லை என்றும் சிங்கள அரசுகள்மீது படையெடுக்க வந்த சோழ , பாண்டியர் படை களுடனேயே தமிழ் மக்கள் ஈழத்தில் வந்து குடியேறினர் என்றும் பிற்காலத்தில் ஏற்பட்ட இத்தமிழர்களுடனான “நெருங்கி வாழ்ந்த தொடர்பே சிங்களத்தில் தமிழ்ச்சொற்கள் சேரக் காரணமானது என்ற கருத்தும் முழு இலங் கையிலும் சிங்களவரே வாழ்ந்தனர் என்ற கருத்தும் சில அறிஞர்களிடம் உள்ளது.
மேலே கூறப்பட்ட தொல்லியல் ஆய்வு அடிப் படையில் நோக்கும்போது இக்கருத்துத் தவ றானது என்பது தெளிவாகும். எனவே, உல களாவிய தொல்லியல் அறிஞர்கள் தமிழகத் திலும் ஈழத்திலும் தனித்தும் இணைந்தும் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் ஈழம் தொன்மையான தமிழகம் என்பதையும் சிங் களம் ஒரு திராவிட மொழி என்பதையும் ஐயத்திற்கிடமின்றி உறுதி செய்கின்றன. எனவே, ஈழத்தில் வாழும் தமிழர்கள் தொன் மையானவர்கள் என்பதில் ஐய மில்லை.

நன்றி: வெளிச்சம் கார்த்திகை - மார்கழி 2004

இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்

(சில உண்மை விளங்கங்கள்)

– தமிழீழ அரசியல் துறை –

இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்

கரவெிக்கை

எமது இயக்கத்தில் தொடக்க காலத்திலிருந்து இயக்கத்திற்கு ஏற்பட்ட இடர் இழப்புகளில் பங்கு கொண்டவரும், இயக்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவரும் குறிப்பாக திருகோணைமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்கி வளர்த்தவரும், திருகோணைமலை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்திற்கு எதிராக வெற்றிகரமாக நடவடிக்கைகள் பல எடுத்தவருமான லெப்டினண்ட் கேர்ணல் சந்தோசம் (உமைகநசன்) அவர்கள் இந்திய அரசு தமிழ் மக்களுக்குச் செய்த துரோகத்தை எதிர்த்துப் போராடிய வேளையில் வீரச்சாவு அடைந்தார். அந்த வீரமறவனுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறோம்.



லெப்.கர்ணல் சந்தோசம். (க. உமைநேசன்)

இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்
சில உண்மை விளக்கங்கள் (15.10.2021 தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தமானது இந்தியாவினதும் இலங்கையினதும் ஆளும் வர்க்க நலன்களை மட்டுமே பேணுவதால் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் ஒருவரை ஒருவர் புகழ்ந்துரைத்துக் கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஜெவர்த்தனாவைப் பொறுத்தவரை இது அவருக்குக் கிட்டிய ஒரு பெரிய இராஜதந்திர வெற்றியாகும். தமிழீழக் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, விடுதலைப் புலிகளை முழுமையாக நிராயுதபாணிகளாக்க இந்தியா முன் வந்தமை சிங்கள இனவாத ஆளும் வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

கோடி கோடியாகக் கொட்டி வளர்த்த சிங்கள இராணுவமும், மேற்கத்தைய நாசகார உளவு சக்திகளும், வெளிநாட்டுக் கூலிப்படைகளும் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை இந்திய அரசு சாதிக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை ஜெயவர்த்தனா அரவணைத்துக் கொண்டதில் ஆச்சரியம் இல்லை. இந்தியாவிற்கும் இந்த ஒப்பந்தம் பெரும் திருப்தியை அளித்திருந்தது. இலங்கையில் அந்நிய சக்திகளின் ஊடுருவல்களைத் தடுத்து, இலங்கைத் தீவைத் தனது வல்லாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தமை இந்திய பூகோள – அரசியல் வர்த்தக நலன்களைப் பேணுவதாக அமைவதால் இந்தியாவிற்கும் இது ஒரு இராஜதந்திர வெற்றிதான். ஆனால் ஜெயவர்த்தனாவின் இனவெறிக் கொள்கைக்கும், இந்திய வல்லரசின் பூகோள நலனுக்கும் பலிக்கடா ஆனவர்கள் தமிழீழப் பொதுமக்களும், விடுதலைப் புலிகளும் ஆவர். ஜெயவர்த்தனா அரசைத் தனது ஆதிக்க வலைக்குள் வீழ்த்துவதற்காக கடந்த நான்கு ஆண்டுகளாக இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்ட இந்த இராஜதந்திர சூதாட்டத்திற்கு 20,000 த்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் பலியாகி இருக்கின்றார்கள்.

2000 த்துக்கும் மேற்பட்ட போராளிகள் இறந்து இருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பல கோடிக்கணக்கான தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. எமது ஒடுக்கப்பட்ட மக்களின் இனப்பிரச்சனையை, அவர்களின் ஜீவாதாரப் பிரச்சனையை ஒரு யுத்தகளமாக மாற்றி, ஒரு ரத்தக்களரியாக மாற்றி அதன் மூலம் தனது தேசிய நலனை அடைந்து கொண்ட இந்தியாவின் இந்த இழிவான நடவடிக்கை, எமது மக்களுக்குச் செய்யப்பட்ட ஒரு மன்னிக்க முடியாத துரோகமாகும்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் அல்லது ராஜீவ்–ஜெயவர்த்தனா ஒப்பந்தம் தமிழீழ மக்களின் நலன்களையோ அன்றி அவர்களின் அரசியல் அபிலாசைகளையோ, பாதுகாப்பையோ பேணவில்லை. மாறாக, தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள இனவாத ஆட்சியின் கீழ் ஒடுக்கப்பட்டு வருவதற்கு இந்த ஒப்பந்தம் வழி கோலியுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் அடங்கி இருக்கின்றன.

(1) இந்திய – இலங்கை வெளிவிவகார உறவு பற்றியது,
(2) தமிழர் தேசியப் பிரச்சனையில் தீர்வு பற்றியது.

இந்தியா தென்னாசியாவில் ஒரு மாபெரும் வல்லரசு. இந்தியா தனது அயல்நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதையோ, தனது நாட்டின் ஸ்திர நிலைக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதைகயோ, தனது நாட்டின் பிரதேசப் பாதுகாப்பையும் சமாதானத்தையும் நிலைநிறுத்திக் கொள்வதையோ நாம் ஆட்சேபிக்கவில்லை. இலங்கையில் ஊடுருவிய அந்நிய நாசகார சக்திகள் வெளியேற்றப்படுவதையும் நாம் ஆதரிக்கின்றோம். இந்துமாசமுத்திரம் ஒரு சமாதான பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்படுவதையும் நாம் வரவேற்கின்றோம். ஆனால் இந்த ஒப்பந்தம் இந்தியாவின் பூகோள நலன்களைப் பேணுவதோடு நின்றுவிடவில்லை. இலங்கையில் சிங்களப் பெரும்பான்மை இனத்தவரின் நலன்களை மட்டுமே பேணும் இனவாத அரசியல் ஆட்சிமுறைக்கு முண்டு கொடுத்து, ஜெயவர்த்தனாவின் ஜனநாயக விரோத சர்வாதிகாரத்திற்கு வலுவூட்டி, தமிழரின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காணச் சில யோசனைகளையும் இந்த ஒப்பந்தம் முன் வைக்கிறது. இன்னுமொரு விதத்தில் சொல்லப்போனால், இந்த ஒப்பந்தம் இந்திய – இலங்கை வெளிவிவகார உறவுடன் நின்றுவிடாது, இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையிலும், தமிழரின் தேசியப் பிரச்சனையிலும் தலையிடுவதாக அமையப் பெற்றிருக்கிறது. சிங்கள மக்களையோ, தமிழ் மக்களையோ கலந்தாலோசிக்காது. அவர்களது அங்கீகாரம் பெறாது, ஜனநாயக முறையில் பொதுத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாத ஒரு அரசாங்கத்துடன் இந்தியா இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றது. ஆகவே, இந்த ஒப்பந்தம் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள தேசிய இனங்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தம் என்றே சொல்ல வேண்டும். தமிழீழ மக்களைப் பொறுத்தவரை இந்த ஒப்பந்தைமானது அவர்களது அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் பேணுவதாக அமையவில்லை.

இந்த ஒப்பந்மானது தமிழீழ மக்களை ஒரு தேசிய இனைமாக அங்கீகரிக்கவில்லை; இலங்கையில் வாழும் பல்லின மக்களின் ஒரு சமூகக் குழுவாகவே தமிழீழ மக்களை அங்கீகரிக்கின்றது.

இந்த ஒப்பந்தமானது தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை மறுக்கின்றது. பதிலாக, இலங்கையின் ஒற்றையாட்சி முறையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் வலியுறுத்துகின்றது.

இந்த ஒப்பந்தமானது தமிழர் தாயகத்தையும், அந்தத் தாயகத்தில் தமிழரின் ஒருமைப்பாட்டு உரிமையையும் அங்கீகரிக்கவில்லை. தற்காலிகமான வடக்கு கிழக்கு இணைப்புப் பற்றிக் குறிப்பிட்டபோதும் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மாநிலத்தைப் பிரிவுபடுத்தும் ஆபத்தான விதிகளையும் கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்த ஒப்பந்தம் தமிழரின் அடிப்படையான பிரச்சனைகளை அணுகாமல், தமிழரின் தாயகத்தையும், தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் ஆபத்தான அம்சங்களையும் உள்ளடக்கி இருக்கின்றது.

அடுத்ததாக ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சனையின் தீர்வுக்கு மாகாணசபைத் திட்டத்தையே இந்த ஒப்பந்தம் முன் வைக்கின்றது. இந்த மாகாணசபைத் திட்டத்திலும் அது வழங்கும் அரசியல் பரவலாக்கத்திலும் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எமது விடுதலை இயக்கம் ஏற்கனவே இம் மாகாணசபை யோசனைகளை நிராகரித்து உள்ளது.

மாகாணசபைத் திட்டத்தில் ஜனாதிபதிக்கு அளவிற்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதையும், அவசரகாலச் சட்டம்மதப் பிறப்பித்து, மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடம் கொடுபட்டு இருப்பதையும் ஒரு முக்கியக் குறைபாடாக நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். சட்டம் இயற்றும் அதிகாரம், நிறைவேற்றும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மட்டில் மாகாண சபை சட்ட மன்றத்திற்கு மிஞ்சிய வகையில் தேசிய பாராளுமன்றத்திற்குக் கூடிய அதிகாரங்கள் இருப்பதையும், நாம் குறிப்பிட்டிருந்தோம். மாகாண பொலிஸ் சேவை, தேசிய பொலிஸ் கமிசனுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட விவகாரத்தில் தமிழ் மக்களுக்கு நிர்வாக ஆட்சி அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் நாம் தெளிவுபடுத்தி இருந்தோம். அதிமுக்கியமாக தமிழ்ப்பிரதேச காணி உரிமை, குடியேற்றம் சம்பந்தப்பட்ட மட்டில் தமிழரின் நில உரிமை பேணப்படவில்லை என்பதையும், அத்துமீறிய சட்டரீதியற்ற சிங்களக் குடியேற்றங்களை அகற்றும் வழிமுறைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் எடுத்துரைத்தோம்.
ஒட்டுமொத்தத்தில் மாகாணசபைத் திட்டம் தமிழரின் உரிமைகளையும், நலன்களையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இந்தத் திட்டத்தை நாம் ஏற்கனவே நிராகரித்துள்ளோம். கடந்த சில வருடங்களாக கொழும்புக்கும் டெல்லிக்கும் காவடி எடுத்து, இந்த மாகாணசபைத் திட்டம்பற்றிப் பேச்சுக்களை நடத்தி, அத்திட்டத்திற்குச் சட்ட வடிவம் கொடுக்க உதவியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களே, அதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது சம்பந்மாகவும் சமீபத்தில்கூட இவர்கள் கொழும்பில் பேச்சுக்களை நடாத்தி இருக்கின்றார்கள். அப்படியிருந்தும், இன்று இந்தக் கூட்டணித் தலைவர்கள் மாகாணசபைத் திட்டத்தில் எந்தவித அதிகாரமும் இல்லை என இத்திட்டத்தைக் கண்டித்திருப்பதாகத் தெரிகின்றது. இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக ஆதரித்துக்கொண்டு, இந்த ஒப்பந்தத்தில் முக்கிய அம்சமானதும், தமிழரின் அடிப்படைப் பிரச்சினை சம்பந்தமானதுமான மாகாண சபைத் திட்டத்தைக் கண்டிக்கும் கூட்டணித் தலைமையின் துரோகத்தனமான அரசியலை எமது மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். கூட்டணித் தலைமையின் தூர நோக்கமற்ற, சந்தர்ப்பவாத, சுயநல அரசியல் கொள்கைதான் இன்று எமது மக்களின் துர்ப்பாக்கிய நிலைக்குக் காரணம்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை என்பதற்காகவே, நாம் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்க மறுத்தோம். எமது மக்களை நாம் நேசிப்பதாலும், எமது மக்களின் நலன்களில் உண்மையான அக்கறை எமக்குண்டு என்பதாலும் இந்த ஒப்பந்தம் எமது மக்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை அளிக்காது என்ற நிலைப்பாட்டை நாம் மேற்கொண்டோம். இந்த நிலைப்பாட்டில் என்ன தவறு இருக்கின்றது?

எமது மக்களின் அடிப்படைப் பிரச்சனை சம்பந்தமாக எமது கருத்தைத் தெரிவிக்கும் ஜனநாயக உரிமை கூட எமக்கு இல்லையா?

கருத்துச் சுதந்திரம்கூட எமக்கு இல்லையா? தர்மத்தின் இருப்பிடம் என்றும், ஜனநாயகத்

தின் பாதுகாவலன் என்றும் கூறிக்கொள்ளும் பாரதநாடு எமக்கு ஏன் இந்த ஜனநாயக உரிமையை -- கருத்துச் சுதந்திரத்தைத் தர மறுக்கின்றது?

எமது இயக்கத்தின் மீது எத்தனையோ நிர்ப்பந்தங்கள் இடப்பட்டன. அழுத்தங்கள் போடப்பட்டன. பயமுறுத்தல்கள் விடப்பட்டன. இறுதியில் எம்மீது ஒரு முழு அளவிலான யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. இராணுவப் பயங்கரவாத மூலம், ஆயுதமுனையில் நாம் அச்சுறுத்தப்படுகின்றோம்.

இதுதான் பாரத தர்மமா?
இதுதான் பாரத ஜனநாயகமா?

எமது பிரச்சனை சம்பந்தமாக பாரதநாடு நேர்மையுடனும், நீதியுடனும் நடந்துகொள்ளவில்லை. ஜனநாயகப் பண்புகளைப் பேணி மனித தர்மத்துடன் நடந்து கொள்ளவில்லை. மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளவில்லை. மாறாக, ஒரு வல்லரசுக் குரிய எதேச்சாதிகாரத்துடன், அகம்பாவத்துடன், எம்மை ஏதோ வேண்டப்படாத அந்நியர்கள் போல மிரட்டிப் பயமுறுத்தி, அடித்துத் துன்புறுத்தி, கொலை புரிந்து, கொள்ளையடித்து இராணுவப் பயங்கரவாதம் மூலம் எம்மை மிருகத்தனமாக நடத்துகின்றது. இந்தியா தொடுத்துள்ள இந்த அதர்மமான யுத்தம் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பறித்தெடுக்கும் அற்பமான நோக்கத்தைக் கொண்டது அல்ல. அப்படி இருந்தால் ஒன்றும் அறியாத அப்பாவிப் பொதுமக்களின் மீது இந்த இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட வேண்டிய அவசியமே இல்லை. இது தமிழீழ மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடாத்தப்படும் யுத்தம். தமிழீழ மக்களின் விடுதலை எழுச்சியை நசுக்கி, அவர்களை ஆயுதமுனையில் பயமுறுத்தி, ஜெயவர்த்தனாவின் நிரந்தரமான அரசியல் அடிமைகளாக்கும் நோக்கத்தைக் கொண்டதுதான் இந்த யுத்தம்.

அமைதி காக்கும் பணி என்ற பாசாங்கில், இந்திய இராணுவம் எமது தாய் மண்ணில் காலடி எடுத்துவைத்த காலத்தில் இருந்தே எம்மோடு ஒரு யுத்தத்தைத் தொடுத்து வடக்கையும் கிழக்கையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் ஒரு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து இருந்தது. இந்திய இராணுவம் இங்கு வந்து இறங்கியபோது ஒரு முழு அளவிலான யுத்தத்திற்குத் தயாரான முறையில் கனரக ஆயுதத் தளவாடங்களைக் கொண்டுவந்து சேர்த்தது. அமைதி காக்க வந்தவர்களுக்கு இத்தகைய ஆயுதங்களுக்கு அவசியமே இருந்திருக்காது.

தற்காலிக அரசு என்றும், தமிழ் பொலிஸ்படை என்றும் மாநில சுயாட்சி என்றும், நிரந்தரமான சமாதான சகவாழ்வு என்றும் இந்திய அரசு மேடையேற்றிய பொம்மலாட்டங்கள் எல்லாம் எம்மை ஏமாற்றுவதற்குக் கையாண்ட இராஜதந்திர யுக்திகளே அன்றி வேறொன்றுமில்லை. புலிகளிடம் தற்காலிக ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கும் நோக்கம் இந்திய அரசுக்கு இருந்திருந்தால், ஏனைய அமைப்புக்களுக்கு ஆயுதங்களை வழங்கி, இந்திய இராணுவத்தின் பாதுகாப்பில் அவரகளே இங்கு கொண்டுவந்து எம்மோடு மோதுவதற்குத் தூண்டி விட்டது ஏன்?

நாம் கணிசமான தொகையில் ஆயதங்களைக் கையளித்த பின்னரும் எமக்கு உறுதியளித்ததுபோல் இடைக்கால அரசை நிறுவாமல், சிங்களக் குடியேற்றத்தையும், சிங்கள அரச நிர்வாகத்தையும் வடக்கு கிழக்கில் இந்திய அரசு அனுமதித்தது ஏன்? இந்தப் பிரச்சனைகளை முன்வைத்து திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதம் அனுஷ்டித்த போது அவனது போராட்டத்தை ஆதரித்துத் தமிழீழம் அடங்கிலும் வெகுஜனக் கிளர்ச்சி வெடித்தது. தமிழீழ மக்களின் ஏகாகாபித்த அபிலாசையாகக் கிளர்ந்த அந்தச் சாத்வீகப் போராட்டத்தை இந்திய அரசு கொச்சைப் படுத்தியதுடன், வேண்டுமென்றே காலம் கடத்தி, திலீபனின் உயிரையும் குடித்தது. எமது மக்களின் நலன்களில் அக்கறை இருந்தால், உண்மையான கரிசனை இருந்தால் இந்திய அரசு எமது திலீபனைக் காப்பாற்றி இருக்கலாம் அல்லவா? எமது பிராந்தியத் தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோரையும் மற்றும் எமது மூத்த உறுப்பினர்களையும் இந்திய அரசு அநியாயமாக சாகவிட்டதன் அந்தரங்க நோக்கமென்ன? தமிழீழ மக்களின் நெஞ்சங்களை உலுப்பிய இந்த அகால மரண நிகழ்ச்சியை இந்திய அரசு நினைத்திருந்தால் தடுத்திருக்கலாம் அல்லவா? இந்த யுத்தத்திற்குக் காரணகர்த்தாக்கள் நாம்தான் என்று இந்திய அரசு இன்றும் எமக்கு எதிராக விசைப்பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாண மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டு வந்த திருகோணைலை மாவட்டத் தளபதி திரு. புலேந்திரன், மட்டக்களப்பு முன்னாள் தளபதி திரு. குமரப்பா ஆகியோர் அநியாயமாகக் கொல்லப்பட்டதன் எதிரொலியாக கிழக்கில் வன்முறை வெடித்து 100 க்கும் அதிகமான சிங்கள மக்கள் கொல்லப்பட்ட போது அந்த நிகழ்ச்சியை ஒரு அரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, எம்மீது இராணுவ நடவடிக்கை எடுக்க இந்தியா முடிவெடுத்தது. ஆனால், இந்தியாதொடுத்த இந்த யுத்தத்தால் உயிரிழந்த தமிழர்கள் எத்தனை பேர்? ஊனமடைந்தவர்கள் எத்தனை பேர்? வீடிழந்தவர்கள் எத்தனை பேர்? தமிழர்களின் இரத்தத்தால் சிங்கள இனவாத அரக்கனைத் திருப்திப்படுத்துவதற்கு இந்தியா இந்த அநியாயமான யுத்தத்தைத் தொடுத்து இருக்கின்றது.

கடந்த அக்டோபர் மாதம் 10ஆம் நாள் ஆரம்பமான இந்த யுத்தத்தில், இந்திய இராணுவம், பொதுமக்களின் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் போர்த் தருமங்கள் எதையும் பேணாது. மிகவும் மிலேச்சத்தனமான முறையில் நடந்துள்ளது. குடிமனைகள் மீது தொடர்ச்சியான பீரங்கி மோட்டார் "செல்" தாக்கு தல்களையும், ஆகாயக்குண்டு வீச்சுக்களையும் நடாத்தி ஏராளமான அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்தது. சிங்கள இராணுவத்தை மிஞ்சும் வகையில், இந்தியச் சிப்பாய்கள் வெறியாட்டம் ஆடி அப்பாவிப் பொதுமக்களைக் கண்டபடி சுட்டுக் கொலை செய்திருக்கின்றார்கள். தமிழ்ப்பெண்கள் மிருகத்தனமான முறையில் அவர்களால் கற்பழிக்கப்பட்டிருக்கின்றார்கள். வீடுகள் கடைகளில் கொள்ளையடித்தல், தீ வைத்தல் போன்ற பயங்கரவாதச் செயல்களில் இந்தியப் படைகள் ஈடு பட்டிருக்கின்றார்கள் மருத்துவமனைகளில் புகுந்து நோயாளிகளையும், காயைடைந்தவர்களையும் சுட்டுக் கொலை செய்திருக்கின்றார்கள் அகதி முகாம்கள், கோவில்களில் தஞ்ச மடைந்த அகதிகள் மீது குண்டும் பொழிந்திருக்கிறார்கள். இது வரைஇந்த யுத்தத்தில் 1000 -க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்களை இந்திய இராணுவம் கொன்று குவித்திருக்கின்றது. பல நூற்றுக்கணக்கானோர் படுகாயைடைந்துள்ளனர். இவர்களில் பலர் சிகிச்சை பெறமுடியாத நிலையில் செத்துப் போனார்கள்.

இந்த யுத்தமானது புலிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பிடுங்கும் நோக்கத்தை மட்டும் கொண்டதல்ல. இது பரந்து பட்ட வெகுஜனங்களுக்கு எதிராக நடத்தப்படும் அதர்மமான ஒரு யுத்தம். இராணுவப் பயங்கரவாதத்தின் மூலம் தமிழீழப் பொதுமக்களை மிரட்டி, பயமுறுத்தி அடக்குமுறைக்குள் வைத் திருப்பது தான் இதன் நோக்கம்.

இராணுவ நடவடிக்கையுடன் நின்றுவிடாது பொருளாதாரத் தடைகளையும் விதித்து, பொதுமக்கள் மீது தாங்கொணாத்துன்பங்களையும் விளைவித்து வருகின்றது இந்திய அரசு. மின்சாரத்தடை, தண்ணீர், வினியோகத்தடை, போக்குவரத்துத் தடை, மீன் பிடித்தடை. இப்படியாகப் பல தடைகளை விதித்து எமது மக்களின் நாளாந்த பொருளாதார சமூக வாழ்க்கையை இந்திய அரசு சீர்குலைத்துள்ளது. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப்போல ஏற்கனவே எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து வந்த எமது மக்கள் மீது பாரத அரசானது ஈவிரக்கமற்ற கொடுமைகளைப் புரிவது ஏன்?

விடுதலைப்போராளிகளைப் பொதுமக்களிடம் இருந்து அந்நியப்படுத்தும் பயங்கரவாத யுத்தியாகவே இந்திய அரசுஇந்தக் கொடுஞ் செயல்களைப் புரிந்து வருகின்றது என்பதை எமது மக்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தேசிய விடுதலைப்போர் நடைபெறும் நாடுகளில் ஆக்கிரமிப்பு வல்லரசுகள் இந்தப் பயமூட்டும் யுக்திகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை. சிங்களப் பேரினவாத அரசும் இப்படியான சில யுக்திகளை எமது மக்கள்மீது பரீட்சித்துப் பார்க்கவே செய்தது. இவை பற்றிச் சிறிது பார்ப்போம்.

1) பொது மக்களைத் தொடர்ச்சியாக இராணுவ அட்டூழியத்திற்கு இலக்காக்கி, மனோரீதியான அச்சத்தையும்விரக்தியையும் உண்டுபண்ணுவது. இதனால் பொது மக்களைப் போராட்டத்தின் மீதும், போராளிகள் மீதும் வெறுப்படையச் செய்வது. இப்படியாகப் பொது மக்களை போராளிகளிடம் இருந்து அன்னியப்படுத்துவது. இறுதியில் போராளிகளைக் காட்டிக்கொடுக்கப் பொதுமக்களை ஊக்குவிப்பது.

2) பொதுமக்களைத் தொடர்ச்சியாக பொருளாதார அழுத்தங்களுக்கு இலக்காக்கி வறுமையின் விழிம்பிற்குத் தள்ளுவது. பொதுமக்களின் துன்பங்களுக்கு எல்லாம் போராளிகள்மீது பழியைப் போட்டு, போராளிகள் மீது பொதுமக்களை வெறுப்படையச் செய்வது. பின்பு நிவாரண உதவிகளை வழங்கிப் பொதுமக்களைத் தம்வசப்படுத்துவது.

3) போராளிகளின் பொதுசனத் தகவல் தொடர்புகளை முற்றாகத் துண்டித்துவிட்டு பொதுமக்கள் மத்தியில் திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தைச் செய்வது. இந்தப் பொய்ப் பிரச்சாரம் மூலம் மக்களைக் குழப்பி, போராளிகளுக்கு எதிராக அவர்களைத் திருப்புவது.

இப்படியான நயவஞ்சக யுக்திகளையே இந்தியாவும் கடைப் பிடித்து வருகின்றது. ஆகவே எமது மக்கள் இந்த நாசகாரச் சதிகளுக்குப் பலியாகாமல் மிகவும் விழிப்பாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும்.

எமது அன்பார்ந்த மக்களே!

இந்திய அரசானது எம்மை ஆயுதங்களையும் ஒப்படைத்து விட்டுச் சரணாகதி அடையச் சொல்கிறது: இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிபந்தனை அற்ற முறையில் ஆதரிக்கச் சொல்கின்றது; ஜனநாயகப் பாதையைத தழுவி அரசியல் நீரோட்டத்தில் குதிக்கச் சொல்கிறது. இந்த நிபந்தனைகளையெல்லாம் இந்திய அரசு சமாதான வழியில் செல்ல வேண்டும் என்று எமக்கு அன்புக்கரங்களை நீட்டிச் சொல்லட்டும். நல்லெண்ணத்மத மனிதாபிமானக்கண்ணோட்டத்தோடு சொல்லட்டும். இந்தியப்படையினர் யாழ்ப்பாணத்தை ஒரு ரணகளமாக்கி தமிழரின் கல்லறைகள்மீது நின்று கொண்டு, இராணுவப் பயங்கர வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஆயுதமுனையில் சொல்கிறது. மிரட்டிப் பயமுறுத்தி அடிபணியச் சொல்கிறது.

நாம் ஆயுதத்தில் காதல் கொண்ட அராஜக வாதிகள் அல்லர். நாம் பலாத்காரத்தை வழிபடும் பயங்கரவாதிகள் அல்லர், நாம் யுத்தவெறி கொண்ட, இரத்தவெறி கொண்ட, வன்முறையாளர்கள் அல்லர். நாம் சமாதானத்தை விரும்புகிறோம். எமது மக்கள் சமாதானமாக, நிம்மதியாக, சுயகௌரவத்துடன், ஒடுக்கப்பட்ட எமது மக்களின் உரிமையை மீட்டெடுப்பதற்காகவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம். அந்த இலட்சியத்திற் காகவே நாம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகிறோம். அந்த இலட்சியத் ற்காகவே இதுவரை 1000-த் திற்கும் மேற்பட்ட எமது வீரர்கள் உயிரை அர்ப்பணித்துள்ளனர் எத்தனையோ மகத்தான தியாகங்களைப் புரிந்துள்ளனர் வியக்கத்தக்க வீரகாவியங்களைப் படைத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்ட வரலாறு என்பது. ஒடுக்கப்பட்ட எமது மக்களின் வீரசுதந்திரப் போராட்ட வரலாறே அன்றி வேறு ஒன்று மல்ல. எமது வீர வரலாற்றுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு எம்மைச் சரணாகதி அடையச் சொல்கிறது இந்திய அரசு. நாம் பாரத நாட்டுடன் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை; இந்திய இராணுவத்துடன் போர் புரிய விரும்பவில்லை. நாம் ஆயுதங்களை கீழே போட தயாராக இருக்கிறோம். ஆனால் நாம் ஆயுதங்களைக் கையளித்து விடுவதால் எமது மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு தரப்பட்டு விடுமா? எமது மக்கள் நிம்மதியாக, சுதந்திமைாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வழி பிறக்குமா?

நாம் ஆயுதங்களைக் கீழே போடத் தயாராக இருக்கிறோம். ஆனால் எமது மக்களின் பிரச்சனைகளுக்கு எத்தகைய தீர்வு முன்வைக்கப்படுகின்றது? மாகாணசபைத் திட்டத்தால் எமது பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்படுமா? மாகாண சபைத்திட்டம் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யுமா? அப்படியானால் எமது மக்களின் எதிர் காலம் என்ன?

எமது மக்களே நன்றாகச் சிந்தித்துப்பாருங்கள்!

நாம் கடந்த 40 ஆண்டுகளாக, இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து எமது அடிப்படை உரிமைகளுக்காக, அரசியல் சுதந்திரத்துக்காக, எமது கௌரவத்துக்காகக் கட்டியெழுப்பிய விடுதலைப் போராட்டத்தை 40 நாட்களுக்குள் குழிதொண்டிப் புதைக்க முயல்கிறது இந்திய அரசு.

நாம் ஆயுதங்களை கீழே போடத் தயாராக இருந்தோம். ஆனால் நாம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சரணாகதி அடைவது என்பது, எமது இனத்தின் சரணாகதிக்கு ஒப்பாகும் அல்லவா? விடுதலைப் போராட்டத்தின் இழப்புக்கு ஒப்பாகும் அல்லவா?

நாம் ஏற்கனவே இந்திய அரசின் உறுதி மொழிகளை நம்பி கணிசமான தொகை ஆயுதங்களை ஒப்படைத்தோம். அந்த ஆயுத ஒப்படைப்பின் போது எமது மக்களின் பாதுகாப்பு என்ற பாரிய பொறுப்பையும் இந்திய அரசிடம், இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்தோம் அல்லவா? இந்தத் தார்மீகப் பொறுப்பை இந்திய அரசு கடைப்பிடித்ததா? எமது மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து

மனிதாபிமானத்தோடு நடத்தியதா? இல்லவே இல்லை. மாறாக, எமது மக்களைக் கொன்று குவித்துக் கொடுமைப்படுத்தியது அல்லவா? அடித்து மிதித்து எம்மைத் துன்புறுத்தி அவ மானப்படுத்தியது அல்லவா? எமது பெண் களைக் கற்பழித்து எமது கௌரவத்துக்கு இழுக்குத் தேடித் தந்தது அல்லவா!

எமது ஆயுதங்களை நாம் கீழே போட தயாராக இருக்கிறோம். ஆனால் எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் என்ன? இந்திய இராணுவம் தனது கொடுமைகளை நிறுத்தி விடுமா? எமது மக்களை நிம்மதியாக வாழவிடுமா? எமது அரசியல் பொருளாதார வாழ்வில், சிவில் நிர்வாகத்தில் தலையீட்டை நிறுத்திக் கொள்ளுமா? சமூக விரோதக் கும் பல்களுக்கும், இனத் துகராகிகளுக்கும் அரசியல் மேட அமைத்துக்தகாடுத்துவரும் அதன் ஆத்திரமூட்டும் செயல்களைக் கை விடுமா? எமது ஆதரவாளர்களை அடித்துத் துன்புறுத்தி, தடுப்புக்காவலில் வைத்துக் கொண்டிருக்கும் அடாவடித் தனங்களைக் கைவிடுமா?

இந்திய அரசானது எம்மிடமிருந்து ஆயதங் களைப் பறித்ததெடுக்கக் கங்கணம் கட்டி நிற பது ஏன்? தமிழீழத்தின் சமாதானத்தையும், சகஜ நிலையையும் கொண்டு வருவதற் காகவா? எமது மக்களின் நலன்களைப் பேணுவதற்காகவா? இல்கேவ இல்லை. ஜெயவர்த்தனாவையும் சிங்கள ஆளும் கட்சி இன வெறிக்கூட்டத்தையும் திருப்திப்படுத்து வதற்காக அன்றி வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி தமிழர் சுதந்திர இயக்கம் நிராயுதபாணியாக்கப்பட வேண்டும், அல்லது நிர்மூலமாக்கப்பட வேண்டும். இதற்காகவெ ஜெயவர்த்தனா இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். இதற் காகவேதான் இந்திய அரசு எம்மீது ஒரு முழு அளவிலான யுத்தத்தைத் தொடுத்தது.

நாம் ஆயுதங்களை கீழே போட தயாராக இருக்கிறோம். ஆனால் எமது மக்களின் பாதுகாப்புக்கான உத்தாவாதம் அளிக்கப்பட வேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌர வமாக, நிம்மதியாக வாழ வழி வகுக்கப்பட வேண்டும். இந்திய அரசானது தனது இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு, புலிகளே வேட்டையாடுவதைக் கைவிட்டு, ஆயுதங்களைத் தேடி அலைவதைக் கை விட்டு எமது மக்களுக்கு சுமீட்சமான வாழ் வை, ஒரு நிரந்தரமான தீர்வைக் காண முயற்சியை எடுக்கவேண்டும். அப்பொழுது நாம் ஆயுதங்களைக் கையளிப்போம்.

எமது அன்பார்ந்த மக்களே!

இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங் களைக் கண்டு, நாம் அஞ்சி அடிபணிந்து போனால் நாம் ஜெயவர்த்தனா அரசுக்கு அடிமைகளாகப் போக நேரிடும். இத்தனை காலமாக நாம் இரத்தம் சிந்திப் போராடியதில் அர்த்தமில்லாமல் போய் விடும். எமது தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் எல்லாம் கடல் நீரில் எழுதிய கதையாகிப் போய்விடும். தமிழனின் வீரமரபில் எழுந்த ஒரு உன்னத வீர காவியம் மரணித்துக் குப்பைத் தொட் டிக்குள் மறந்துவிடும். நாம் அடிபணிந்து போனால் அடுத்த பரம்பரை எம்மை மன்னிக் கப் போவதில்லை. நாம் இந்திய இராணுவத் துக்கு அஞ்சவும் கூடாது. எந்த வகையிலும் ஒத்துழைக்கவும் கூடாது.

இந்தியா ஒரு அந்நிய நாடு. இங்கு வந்து எமது மண்ணை ஆக்கிரமித்துக்கொண்டு, இந்திய இராணுவம் எம்மை அடிமைப்படுத்துவதை நாம் அனுமதிக்க முடியாது. இந்த நடவடிக்கை யானது சர்வதேச தர்மங்களுக்கு முற்றிலும் முரணானதாகும். இந்தியாவின் இந்த ஆக்கி ரமிப்பு நடவடிக்கைக்கும், இராணுவ அட்டூ ழியங்களுக்கும் எதிராகப் பாரதத்திலேயே ஒரு பாரிய எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.

எமது மக்களுக்கு எதிராகத் தான் செய்யும் அட்டூழியங்களையும், அநியாயங்களையும் இந்திய அரசு இன்று உலக சமுதாயத்துக்கு இருட்டடிப்புச் செய்து வருகின்றது. அபாண் டமான பொய்களைத் திரித்து உலகத்தின் மனச்சாட்சியை ஏமாற்றி வருகின்றது. ஆனால் உண்மைக்கும், தர்மத்துக்கும், நீதிக்கும் கல்லறை கட்டிவிட முடியாது. பொய்மையின் திரைகளைக் கிழித்து கொண டு உண்மை ஒருநாள் வெளிவரத்தான் செய்யும். அப்பொழுது பாரதம் உலக மனச்சாட் சியின் முன் தலைகுனிந்து நிற்கும். அப்போது வரலாறு எமது பக்கம் திரும்பும். அன்றுதான் எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். அன்று வரை நாம் உண்மைக்காக, நீதிக்காக, தர்மத் துக்காக தொடர்ந்து போராடுவோம்.

எமது அன்பார்ந்த மக்களே!

உரிமைப் போராட்டத்தில் உறுதியும், நேர்மை யும், எதற்கும் அஞ்சாத திடமும் கொண்ட மக்கள் சமுதாயத்தை எந்த ஒரு வல்லரசும் அடிமை கொள்ள முடியாது என்பதே வரலாற் று உண்மை. இந்த வரலாற்று உண்மையை எமது மக்கள் பாரத நாட்டுக்குப் புகட்டிக்காட்ட வேண்டும்.


அரசியல் பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகள்
டிசம்பர், 1987
தியாக தீபங்கள்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு களங்களில் வீரப்போர் புரிந்து சாதனை பல படைத்த இந்த மாவீரர்கள் இந்திய அரசின் ஒருதலைப் பட்சமான, ஓரவஞ்சனையான நடவடிக்கைகளை எதிர்த்து இந்திய அரசின் துரோகத்தனத்தை உலக அரங்குக்குத் தோலுரித்துக் காட்ட தம்மைத்தாமே அழித்து தியாக தீபங்களாகச் சுடர்விட்டுக் கொண்டிருக் கின்றனர்.

லெப்டினண்ட் கேர்ணல் திலீபன் (பார்த்திபன்)
லெப்டினண்ட் கேர்ணல் திலீபன் அவர்கள் இயக்கத்தின் யாழ்மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றியபோதிலும், சிங்கள இராணுவத்தை எதிர்த்து இயக்கம் நடத்திய போராட்டக் களங்களில் இறங்கி விழுப்புண்கள் பல ஏற்றவர். வடமராட்சிச் சமசரில் சிங்கள இராணுவத்தின் துப்பாக் கிக்குண்டு தாக்கியதில் தனது குடலில் ஒரு பகுதியை இழந்தவர்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய மிகப்பெரிய ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், மறியல்கள் என்பவற்றை குறுகிய கால அவகாசத்துக்குள் ஒழுங்கு செய்து வெற்றிகமாக நடத்தியவர் லெப் டினண்ட் கேர்ணல் திலீபன். இந்திய அரசின் ஓர வஞ்சனைப் போக்கை உலகுக்கு அம்பலப் படுத்த சாகும்வரை உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை மாய்த்தவன் மாவீரன் திலீபன்.



மாவீரன் திலீபன் சரித்திரம் படைத்த வீரச் சாவின் மூலம் இந்திய அரசின் கபடத் தனத்தை, ஓரவஞ்சனையைத் தோலுரித்துக் காட்டினான்.

லெப்டினண்ட் கேர்னல் குமரப்பா (இரத் தினபாலா)

எமது இயக்கம் சிங்களப் பொலிஸ் நிலையங் கள் மீது நடத்திய பெரிய அதிரடித்தாக்குதல்கள் அனைத்திலும் கலந்து கொண்ட இயக்கத்தின் மூத்த உறுப்பினரான லெப்டினண்ட் கேர் ணல் குமரப்பா (இரத்தினபாலா) மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளராக இருந்து ஆற்றிய இராணுவ, அரசியல் இயக்கப்பணிகள் மட்டக் களப்புப் பகுதியில் குறிப்பாக இசுலாமியத் தமிழர்கள் மத்தியில் இயக்கம் வளர்ச்சி பெறக் காரணமாக இருந்தன.

லெப்டினண்ட் கேர்ணல் குமரப்பா
மட்டக்களப்பில் அவர் இருந்த முகாமைக் குறிவைத்து 6 முகாம்களிலிருந்து சென்று முற்றுகையிட்ட ஆயிரத்துக்கும் அதிகமான சிங்களப் படைகளைத் தாக்கி, பல கவச



இந்திய அரசின் நயவஞ்சகத்தால் குமரப்பா, புலேந்திரனுடன் சயனைட் அருந்தி உயிர் நீத்த ஏனைய பத்து வீரர்கள்.


மேஜர் அப்துல்லா
தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மேஜர்



வாகனங்களை அழித்து 60 இராணுவத் தினரைக் கொன்றதுடன் இயக்க வீரர்கள் எவருக்கும் எதுவும் ஏற்படாத வகையில் முற்று கையை உடைத்து மீண்ட குமரப்பா யாழ்ப் பாண மாவட்டப் பொறுப்பாளராக பணியாற் றிய வேளையில் இந்திய-இலங்கை அரசு களின் நயவஞ்சக ஒப்பந்தத்தால் அநியாயமாக உயிரிழந்தார்.

அப்துல்லா தலைவர் பிரபாகரனின் மெய்க் காப்பாளராக நீண்டகாலம் கடமையாற் றியவர். அவரது செயற்திறன் காரணமாக கடற் புலிகள் அமைப்பில் பொறுப்பான பணியில் அமர்த்தப்பட்டார்.

காப்டன் நளன்
பருத்தித் துறையைச் சேர்ந்த காப்டன் நளன்



இயக்கத்தின் தொலைத்தொடர்புப் பிரிவில் நீண்ட காலம் பணியாற்றியவர்.


லெப்டினண்ட் கேர்ணல் புலேந்திரன் (தர் மராசா)

இயக்கத்தின் மூத்த உறுப்பினரான லெப் டினண்ட் கேர்ணல் புலேந்திரன் (குண நாயகம் தர்மராசா) இயக்கத்தின் ஏராளமான உறுப் பினர்களுக்குப் பயிற்சியாளராக இருந்து அவர்களைச் சிறந்த போர் வீரர்களாக உரு வாக்கியவர்.

இயக்கம் வெற்றிகரமாக நடத்திய பல தாக் குதல்களில் முக்கிய பங்கு வகித்ததுடன், 1985 ஜனவரியில் அச்சுவேலியில் காப்டன் பண்டிதரின் முகாமைச் சுற்றி வளைத்து 500க்கு மேற் பட்ட சிங்கள இராணுவத்தினர் மேற் கொண்ட முற் றுகையை வெற்றிகரமாக உடைத்துக்கொண்டு தப்பிய லெப்டினண்ட கேர்ணல் புலேந்திரன் இந்திய-இலங்கை அரசுகளின் நய வஞ்சக ஒப்பந்தத்தால் அநியாயமாக உயிரிழந்தார்.

14th Year veeravanakkam

14ஆம் ஆண்டு வீரவணக்கம்


மாவீரர்
மாவீரர்
மாவீரர்


தமிழீழ
மாநில மாதம்
'கார்த்திகை'
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்

தமிழீழத் தேசிய மாவீரர் நாள்

நவம்பர் 27
2021

TAMILEELAM
"MAAVEERAR NAAL"
NOVEMBER 27

தமிழீழ மக்களுக்காகவும்,
தமிழீழ மண்ணுக்காகவும்,
தமிழ் தேசியத்திற்காகவும்
தம் இன் உயிர்களை ஈந்த
மாவீரர்களின்
வீர வணக்க நாள்
மாவீரர் நாள்



In remembrance of Our Heroes
Who Sacrificed their lives for us,
for Our Homeland and for our Tamil Nationalism

சங்கத்தமிழ்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
The Thirst of Tamils is the Homeland of Tamileelam